சபை வெளியீடு--5

॥ श्रीः ॥

॥ ब्रह्मविदाप्नोति परम् ॥

# ஸ்ரீ வித்யாஸபர்யர்வாஸனை

அல்லது

# ஸபர்யாபத்ததிவாஸனு விமர்சம்

ஸ்ரீபிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபையின்
அக்ராஸனரும் ஸ்தாபகருமாகிய
பிரஹ்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமணிய அய்யர்
அவர்களால் இயற்றப்பட்டு

ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபையாரால்
வெளியிடப்பட்டது.

சென்னை.

உரிமையுள்ளது ] 1940 [ விலை ரூ. 3.

PRINTED AT THE
SRI BALAMANORAMA PRESS,
MYLAPORE, MADRAS.

மஹாமஹோபாத்தியாய-தாக்ஷிணாத்யகலாநிதி
டாக்டர்-உ-வே-ஸ்வாமிநாத அய்யர்
அவர்கள் அளித்த

## சிறப்புப்பாயிரம்.

உ

சிவமயம்.

ம-ா-ா-ஸ்ரீ ந. சுப்பிரமணிய ஐயரவர்கள் இந்நகரத்தில் பள்ளிக்கூட உபாத்தியாயராகப் பல வருஷங்கள் இருந்தவர். இவருடைய பழக்கம் நெடுங் காலமாக எனக்கு உண்டு. இவர் வேதாந்த நூல்களிலும், தேவீசம்பந்தமான சாஸ்திரங்களிலும் தக்க பயிற்சியுடையவர். தேவீ உபாஸகர். தாம் அறிந்த விஷயங்களைப் பிறருக்கும் தெரிவிக்கும் நல்ல நோக்கமுடையவர். பலர்க்கு வேதாந்த நூல்களையும் தேவீசம்பந்தமான நூல்களையும் பாடஞ் சொல்லிக் கொண்டு வருகிறார்.

இவர் இயற்றி வெளியிட்டுள்ள ஞானப் பிரகாசம் முதலிய புஸ்தகங்களால் இவருடைய உபாஸனா விசேஷமும் சாஸ்திரப்பயிற்சியும் விளங்கும்.

இப்போது இவர் வெளியிடும் ஸ்ரீவித்யாஸபர்யா வாஸனை என்னும் புஸ்தகத்திற் சிலபகுதிகளைப் படிக்கச் செய்து கேட்டேன். ஸ்ரீவித்யா உபாஸனையின் பெருமையையும், அந்த உபாஸனை அத்வைதக் கொள்கையுடைய

தென்பதையும், அதன் கிரமங்களையும் பல சாஸ்திர மேற்கோள்களோடு இதில் புலப்படுத்தியிருக்கிறார்.

தேவீபக்தர்களும், இந்தத்துறையில் அன்புடையவர்களும் இவருடைய வெளியீடுகளை ஆதரித்துப் பாராட்டுவார்களென்று நம்புகிறேன்.

தியாகராஜவிலாஸ்,
திருவேட்டீஸ்வரன்பேட்டை,
24–1–1940.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# முகவுரை.

ஸ்ரீவித்யாஸபர்யாவாஸனை அல்லது பராபூஜாவாஸனை விமர்ஶமென்னும் இந்நூல் ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததியின் வியாக்கியானரூபமாய் இருக்கின்றது. ஆதலினால்தான் இக்கிரந்தத்திற்கு ஆரம்பத்தில், ஸ்ரீவித்யாஸபர்யாவாஸனை யென்னும் பெயர் கொடுக்கப்பட்டுப் பின், ஸபர்யாபத்ததி வாஸனா விமர்ஶமென்னும் நாமாந்தரம் கொடுக்கப்பட்டது.

ஸபர்யாபத்ததிவாஸனாவிமர்ஶ மென்றால், ஆத்மா பின்ன சித்சக்தியாகும் மஹாத்ரிபுரஸுந்தரியின் ஆராதனைக்கிரமத்தின் தத்துவவிமர்ஶம் என்பதாகும். வாஸனை யென்னும் பதம் சாக்ததந்த்ரங்களின் பரிபாஷாபதமாகும். தத்துவம், அந்தரார்த்தம், ரஹஸ்யார்த்தம் என்பன வாதிகள் வாஸனையென்னும் பதத்தின் பொருள்களா மென்று தந்த்ர சாஸ்திரங்கள் கூறுகின்றன.

பரதேவதையின் ஆராதனைக்கிரமம் பலதந்த்ரங்களில் பலப்பிரகாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றுள் சிறந்துவிளங்குவன ஸ்ரீபரசுராம கல்பஸூத்ர பத்ததி, ஸ்ரீஸௌபாக்கியரத்னாகரபத்ததி, ஸ்ரீஸௌபாக்கியசிந்தா மணிபத்ததி யென்பனவாம். இவற்றுள், பிரதானமாய், ஸூத்திரபத்ததியையும் ஆங்காங்கு அவஶ்யமான விடங்களில் ரத்னாகர சிந்தாமணி பத்ததிகளையும் தழுவிக்கொண்டு இந்நூல் விளங்குகின்றது. ஸ்ரீஉமாநந்தநாதரது நித்யோத்ஸவ நிபந்தத்தின்படி பரதேவதாஸபர்யை பதினொரு கண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ள விஷயம் மிகப் பிரஸித்தமே. அப்பாகுபாட்டை யநுஸரித்தே இந்நூலும் பதி

ஞேருகண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பலதந்த்ரங்களின் வாஸனுபடலங்களில் கூறப்பட்டுள்ள ஸங்கேதத்திரயம் அதாவது மந்த்ர, சக்ர, பூஜா ஸங்கேதங்களின் பரம ரஹஸ்யமும், தீக்ஷாக்கிரமத்தின் தத்துவமும் இதன் பூமிகையில் அதிஸங்கிரகமாக விமர்சிக்கப்பட்டுள்ளன.

ஏகாதசக்ண்டாத்மகமாய் விளங்கும் மேற்கூறிய ஸூத்திரபத்ததியும், மற்றும் இதரபத்ததிகளும் பற்பல பிரகாரங்களாக விமர்ஸிக்கப்படும் அத்வைதசாஸ்திர ஸித்தாந்தத்திற்குத் துல்யமாயிருக்கின்றனவென்று ஶ்ருதி யுக்தி அநுபவங்களைக்கொண்டு நிரூபிப்பதே இந்நூலின் முக்கியோத்தேசமாகும்.

இந்நிரூபணரூப விமர்ஶமானது அடியேனது ஆராத்ய சரணுநுக்கிரஹத்தினல், யான் சுமார் இருபது இருபத்தைந்துவருஷகாலமாய்ச் செய்த ஆராய்ச்சியின் பயனுய்த் தோன்றியுள்ளதெனக் கூறத்தகும்.

சுமார் இருபது இருபத்திரண்டுவருஷங்களுக்குமுன், யான் "ஸோபாதிக பிரஹ்மவித்யாதர்ப்பணம் என்னும் பெயரிய ஒரு நூலைப்பார்த்தேன். அதில் உத்தரபாகத்தில் 222ம் பக்கத்தில் 26-வது விஷயமாக ஶ்ரீவித்யோபாஸ்தியின் நிஷேதத்துவம் காணப்பட்டது. அதன் சுருக்கமாவது :—

ஶ்ரீவித்யோபாஸ்தியானது ஜடமான பிரக்ருதியுபாஸனையென்றும், அந்தப் பிரக்ருதியானது பிரஹ்மத்தில் ஆரோபிதமாயுள்ள காரணத்தால் அத்தியஸ்தசக்தியையுபாஸிப்பது வைதிகமல்லவென்றும்,

**देवात्मशक्तिं स्वगुणैर्निगूढाम् । परास्यशक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च ।**

முதலிய உபநிஷத் பிரமாணங்கள் உபாஸனையின் பொருட்டுக் கூறப்பட்டவையல்லவென்றும் பல ஆக்ஷேபணைகள் கூறப்பட்டு நிஷேதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாக்ஷேபங்களின் உண்மையைக் கூலங்கஷமாய் அறியும் ஜிக்ஞாஸையோடு எனது ஆராய்ச்சி தொடங்கியது. பின்னர், யான் உபநிஷத்துக்கள், தந்த்ரங்கள், ஆகமங்கள், நிபந்தபத்ததிகள் முதலியவற்றையும், அத்வைத சாஸ்திர பிரஸ்தானத்திரய பாஷ்யங்களையும், ஞானவாஸிஷ்டம், விசாரஸாகரம், தத்துவாநுஸந்தானம், வ்ருத்திப்பிரபாகரம், ஸ்வாராஜ்யஸித்தி, நைஷ்கர்ம்யஸித்தி முதலிய சிறந்த அத்வைத பிரகரணங்களையும் பார்க்க நேரிட்டது. இவ்வாராய்ச்சியில் அடியேனது ஸத்குருகடாக்ஷத்தினல் எனக்கு ஏற்பட்டமுடிவான ஸித்தாந்தந்தான் இந்நூலிற் கூறப்பட்டுள்ள விஷயங்களாகும்.

ஸ்ரீவித்தையானது ஸ்தூலதிருஷ்டிக்கு உபாஸனை போலத் தோன்றினும் அது ஞானகாண்டஸாதனங்களான மனன நிதித்தியாஸன ஸமாதிவடிவமாய் இருக்கின்றதென்னும் விஷயம் கரதலாமலகம் போல் இதில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வாஸனுபடலங்களில் நவாவரணபூஜாவடிவ பாஹ்ய ஸபர்யைக்கும், ஆந்தரஸபர்யையாகும் உபாஸ்திக்கும் பற் பலவிதமான வாஸனைகள் கூறப்பட்டிருப்பினும் உத்தமாதிகாரிக்கு எந்தவிதமான வாஸனை (தத்துவார்த்தம்) ஶ்ரௌதாகண்டார்த்தஸித்தியாகும் ஜீவப்பிரஹ்மைக்கியத்திற்கு அநுகூலமாயிருக்கின்றதோ அந்த அர்த்தமே சிரேஷ்டமும் கிராஹ்யமுமாகுமென்று பெரியோர் கூறுவர். இவ்விஷயம்,

द्वितीया(उत्तमा)धिकारिणामपि शक्तितारतम्येनानेकविधत्वात् वासनाविकल्पाः कथ्यमाना नानुपपन्नाः । तस्माद्यो यो यादृशोपास्तावधिकारी स तादृशीमेव गुरुमुखाद्विज्ञाय आसुप्तेरामृतेर्दृढतरमभ्यस्येदिति सिद्धम् । अधिकं पूर्वोत्तरमीमांसान्यायविद्भिरूहनीयमिति दिक् ॥

என்று யோ-ஹ்ரு-6-23. ஸேதுபந்த வியாக்கியானத்தில் ஸ்ரீபாஸ்கரராயரால் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆதலின் இந்நூலிற் கூறப்பட்டுள்ள வாஸனை ஸ்வகபோல கல்பிதமல்லாது ஸப்பிரமாணமாகவே நிரூபிக்கப்பட்டுள்ளதென விவேகிகளுக்குப் புலப்படாமற் போகாது.

இந்நூலியற்றுகையில் யான் பிரமாணமாய் எடுத்துக் கொண்ட நூல்கள் பல. அவற்றுள் முக்கியமானவை—1. பிரஸ்தானத்திரய அத்வைத ஆசார்யபாஷ்யம், 2. பாவனோபநிஷத்து, த்ரிபுரோபநிஷத்து முதலிய தேவீ உபநிஷத்துக்கள், 3. ஸ்ரீகௌடபாதாசார்யாளியற்றிய ஸ்ரீ வித்யாமந்த்ரரத்ன ஸூத்திரங்கள், 4. காமகலாவிலாஸம், 5. பரசுராமகல்பஸூத்ரம், 6. ஸேதுபந்தம், 7. யோகினீ ஹ்ருதய அம்ருதாநந்த வியாக்கியானம், 8. ஸூதஸம்ஹிதை, 9. பிரத்யபிக்ஞாஸூத்திரவியாக்கியானம், 10. தத்துவஸாராயண உபாஸனகாண்டம், 11. சிவத்ருஷ்டி, 12. ஞானார்ணவம், 13. குளார்ணவம், 14. தந்த்ரராஜம், 15. ஸுபகோதயஸ்துதி, 16. ஸௌந்தர்யலஹரீ, 17. கோடகநல்லூர் ஸுந்தரஸ்வாமிகளியற்றிய ஸ்வாநுபூதி ரஸாயனம், 18. ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாம, த்ரிசதீ பாஷ்யங்கள், 19. விவேகசூடாமணி, வேதாந்த பஞ்சதசீ முதலிய அத்வைதப் பிரகரணங்கள் முதலியனவாகும்.

ஆயினும், இந்நூலியற்றுதற்கு மூலபூதமாயும், எனது விக்ஞானஸ்புரணத்திற்கு நிமித்தமாயும் இருந்தவை *"சிவத்ருஷ்டி" யென்னும் சிறந்த கிரந்தத்திலுள்ள கீழ்க் குறித்த ஶ்லோகங்களேயாகும்; அவை ஐந்தும் பஞ்ச திவ்யரத்னங்களெனக் கூறத்தகும். அவையாவன :—

बिन्द्वादिभूपुरान्तानि नवचक्राणि भैरवि ।
ईक्षणादिप्रवेशान्ता सृष्टिरीशेन निर्मिता ॥

चतुरश्रादिबिन्द्वन्तनवचक्राणि सुन्दरि ।
जाग्रदादिविमोक्षान्तः संसारो जीवकल्पितः ॥

भूपुरादित्रिभिश्चक्रैर्विश्वतैजसप्राज्ञयोः ।
धामत्रयं विभाव्यं तदूर्ध्वे तत्पदमैश्वरम् ॥

ततो बहिर्दशारे तु गुरूपसदनं स्मृतम् ।
अन्तर्दशारचक्रे तु श्रवणं च विभावयेत् ॥

वसुकोणे तु मननं निदिध्यासं त्रिकोणके ।
बिन्दौ तु शिवजीवैक्यं भावनीयं बुधैः सदा ॥

இந்த ஐந்து ஶ்லோகங்களுங் குறிக்கப்பட்ட ஒரு துண்டுக் கடிதம், சென்னை கவர்ன்மெண்ட் Manuscript Library யில் ஸௌபாக்யரத்னாகரக் கிரந்தத்தைப் பார்க்கும் போது, அதிலிருந்து எனக்குப் புலப்பட்டது. அவற்றை

---

* இந்நூல் காஶ்மீரப்பதிப்பில் 54-வது மலராக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. அதில் இந்த ஶ்லோகங்களுங் கிடையாது; ஸ்ரீவித்யாப்பிரகரணமும் இல்லை. கிரந்தம் பூர்த்தியாய்க் கிடைக்கவில்லையென்று பதிப்பாசிரியர் கூறுகின்றார்.

யெழுதிக் கொண்டுவந்தேன். அந்த ஶ்லோகங்களுக்கு அடியில் சிவத்ருஷ்டியென எழுதியிருந்தது. இந்த ஐந்து ஶ்லோகங்களின் ஆதாரத்தின்மேல்தான் ஸ்ரீவித்யாதத்துவ விமர்ஶமும் ஆராய்ச்சியும் துவக்கப்பட்டன. எனது ஆராய்ச்சியானது நூலியற்றுவதற்காகச் செய்யப்பட்டதன்று. "யான் பெற்றவின்பம் பெறுக வெவ்வையகமும்" என்னும் முதுரையை அநுஸரித்து எனது சிற்றாராய்ச்சியை உலகத்திற்கு நிவேதிக்கின் நலமெனவெண்ணிப் பலரிடத்திலும் பிரஸ்தாபித்தேன். சிரத்தையுடன் செவி கொடுத்துக்கேட்ட பலரும் மனப்பூர்வமாய் ஆமோதித்ததோடு கிரந்தரூபமாய் வெளியிடவேண்டுமென்றும் அடியேனை வற்புறுத்தினார்கள்.

அவர்களின் விருப்பத்தின்படி "ஸ்ரீவித்தையே பிரஹ்மவித்தை" யென்னும் உண்மையை விமர்சிக்கும்பொருட்டு "ஸ்ரீபிரஹ்மவித்யா விமர்சினீ" யென்னும் பெயருள்ள ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. அதன் அங்கத்தினர் யாவரும் உபாஸகர்களே. அச்சபையில் சுமார் ஒன்றரை வருஷகாலம் பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும், இந்நூலிற் கூறப்பட்டுள்ள விஷயங்கள்யாவும் உபந்நியஸிக்கப்பட்டவையே யாகும்.

அங்ஙனம் உபந்நியஸிக்கும்போது விஷயஸங்கிரஹக் குறிப்பு ஒன்று மேற்படி ஸபையின் கார்யதர்சியும், பிரஹ்மவித்தை ஸ்ரீவித்தைகளின் ஐக்கியத்தையறிய வேண்டுமென்னும் பேர்வாக் கொண்டவருமாகிய பிரஹ்மஸ்ரீ A. நடராஜய்யர் B. A. அவர்களால் ஒவ்வொரு உபந்நியாஸதினத்திலும் தயாரிக்கப்பட்டிருந்தது. அங்ஙனம் தயாரிக்கப்பட்ட குறிப்புக்கள் எனக்கு இக்கிரந்த நிர்

மாணத்தில் மஹோபகாரிகளாய் இருந்தன. ஆதலின் யான் அவர்மாட்டு நன்றியறிதலுள்ளவனாய் இருப்பதோடு அவர்க்கு ஶ்ரேயஸ்ஸூம் ப்ரேயஸ்ஸூம் உண்டாமாறு ஸதா பரதேவதையைப் பிரார்த்திக்கின்றனன்.

அன்றியும், இந்நூல் அச்சிலுள்ளபோது, வெகு ஸாவதானத்துடன் அச்சுப்பிழைகளைப் பரிசோதித்தும், விஷயங்களின் தொடர்ச்சி முன்பின் முரணின்றியிருக்கும்படி அவ்வப்போது எச்சரிக்கை செய்தும் இதனைச் சிறக்குமாறுசெய்த பிரஹ்மஸ்ரீ S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுக்கும், இந்நூலைத் தமது சொந்தப் பிரசுரம் போல் பாவித்து எல்லாச் சிறப்புக்களும் நன்கமைய என்னிஷ்டம்போல் அச்சிட்டுத்தந்த சென்னை, மைலாப்பூர், ஸ்ரீபாலமனோரமா முத்ராலய சொந்தக்காரரும், எனது ஆப்தருமாகிய பிரஹ்மஸ்ரீ C. சங்கரராம சாஸ்திரிகள் M. A. B. L. அவர்களுக்கும் நீரோகத்ருடகாத்திரமும், மற்றெல்லா நலங்களுமுண்டாமாறு எல்லாம்வல்ல சித்சக்தி யருள் புரிவாளாக.

மேலும், இந்நூலின் வெளியீட்டிற்கு அவஶ்யமான பொருளை நல்லுபகாரசிந்தையோடும் பாரமார்த்திக தர்ம புத்தியோடும் அளித்துதவிய பலகனவான்கள் உளர். அவர்கட்கு யான் எக்காலும் மறவாத நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மற்றும், இத்தகைய வித்யாவிஷயங்களை விமர்ஶம் செய்வதற்கு ஒருஸபை யத்தியாவஶ்யமென நினைத்து ஷஷ்டி ஸபாஸ்தாபனத்திற்குவேண்டிய முயர்ச்சிகளைச் செய்த ஸ்ரீமான் E. R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும்,

இக்கிரந்தரசனைக்கும், பிரசுரத்திற்கும் ஒரு சிறந்த தூண்டுகோலாயிருந்த ஸ்ரீமான் டாக்டர் K. S. அநந்தய்யர் அவர்களும் பரதேவதாநுக்கிரஹத்திற்குப் பாத்திரர்களாய் ஸகலபுருஷார்த்தங்களையும் அடைவார்களாக.

அன்றியும், அடியேனுடைய வேண்டுகோளுக்கு உடனே இணங்கி இந்நூற்கு ஒரு சிறப்புப்பாயிரந்தந்தருளிய மஹாமஹோபாத்தியாய - தாக்ஷிணாத்யகலாநிதி - டாக்டர்- உ-வே-ஸ்வாமிநாத அய்யர் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனங்களை யளிக்கின்றனன்.

இதில் அடியேனது பிரமாதாதி தோஷங்களாலும் ஆராய்ச்சிக்குறைவினாலும் சாஸ்திரவிருத்தமான பல பிழைகள் நேரிட்டிருக்கக்கூடும். அவைகளை முற்றறிவுள்ள முதுஞானிகள் அடியேன்மீது கருணைபுரிந்து தெரிவிப்பார்களேயாயின், யான் அவற்றை வந்தன பூர்வகமாய் ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் திருத்தி வெளியிடுதற்குச் சித்தமாயிருக்கின்றனன்.

இவ்வரிய காரியத்தில் அடியேனை யீடுபடும்படி தூண்டிய ஸத்குருநாதருடைய பாதுகைகள் ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குக.

ओं नमो ब्रह्मादिभ्यो ब्रह्मविद्यासंप्रदायकर्तृभ्यो वंशऋषिभ्यो नमो गुरुभ्यः ॥

श्रीगुरुचरणारविन्दार्पणमस्तु ॥

इति शिवम् ॥

ஸ்ரீபிரஹ்மவித்யா
விமர்ஶினீஸபை
சென்னை.
15-2-1940.

ந. சுப்பிரமணிய அய்யர்.

# விஷயஸூசிகை.

——:o:——


| விஷ்யம்— | பக்கம். |
|---|---|
| பூமிகை | |
| பரா, அபரா, பராபராபூஜைகளின் லக்ஷணம் | 1 |
| மந்த்ரஸங்கேதம் | 4 |
| சக்ரஸங்கேதம் | 7 |
| பூஜாஸங்கேதம் | 12 |
| தீக்ஷாதத்துவம் | 20 |
| த்ரைபுரஸித்தாந்தம் | 25 |
| வாஸனை, முதல் கண்டம். | |
| யாகமந்திரப் பிரவேசம் | 42 |
| தத்வாசமனம், குருபாதுகாமந்த்ரம் | 48 |
| கண்டா பூஜை | 49 |
| ஸங்கல்பம் | 50 |
| ஆஸன பூஜை | 51 |
| தேஹரக்ஷை | 53 |
| யோகினிகளின் தத்துவம் | 54 |
| ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மந்த்ரார்த்தவிசாரம் | 56 |
| பிராணப் பிரதிஷ்டா மந்த்ரார்த்தவிசாரம் | 58 |
| மந்திர பூஜை | 69. |
| முதல்கண்டத்தின் ஸாராம்ஸங்கள் | 70 |
| இரண்டாவது கண்டம். | |
| பூதசுத்தி | 72 |

| | பக்கம். |
|---|---|
| ஆத்மப்பிராணப் பிரதிஷ்டை | 74 |
| பிராணயாமம் | 75 |
| விக்னோத்ஸாரணம், சிகாபந்தனம் | 76 |
| இரண்டாவது கண்டத்தின் ஸாராம்ஸங்கள் | 77 |
| **மூன்றாவது கண்டம்.** | |
| நியாஸங்கள் | 78 |
| மாத்ருகா நியாஸம் | 80 |
| கரசுத்தி நியாஸம் | 82 |
| ஆத்மரக்ஷா, பாலாஷடங்க, சதுராஸன நியாஸங்கள் | 83 |
| வாக்தேவதா, காமேஸ்வர்யாதி நியாஸங்கள் | 85 |
| மூலவித்யா, ஸ்ரீஷோடசாக்ஷரீ நியாஸங்கள் | 86 |
| ஸம்மோஹந நியாஸம் | 89 |
| லகுஷோடா நியாஸம் | 90 |
| மஹாஷோடா நியாஸம் | 91 |
| நியாஸகண்ட ஸாராம்ஸங்கள் | 92 |
| முத்திரைகளின் தத்துவம் | 93 |
| **நான்காவது கண்டம்.** | |
| பாத்ரா ஸாதனம் | 94 |
| ஸாமான்யார்க்கிய விசேஷார்க்கிய விமர்ஸம் | 98 |
| மண்டலநிர்மாணம், மத்ஸ்யமுத்ராஸ்வரூபம் | 100 |
| மும்மண்டல விளக்கம் | 102 |
| விசேஷார்க்கியபாத்ரம்; சித்கலாப் பிரார்த்தனை | 106 |
| ஸுதாதேவீ ஸ்வரூபாநுஸந்தானம் | 111 |
| மபஞ்சக தத்துவம் | 113 |
| சுத்திபாத்ரம், சுத்திஸம்ஸ்காரம் | 118 |
| குருபாத்ரம், ஆத்மபாத்ரம், பலிபாத்ரம் | 121 |

| | பக்கம். |
|---|---|
| ஸூதாதேவீ பிரார்த்தனுமந்த்ரங்கள் | 122 |
| குருயஜனம் | 125 |
| ஆத்மபாத்ரஸ்வீகாரம் | 126 |
| நான்காவது கண்ட ஸாராம்ஸங்கள் | 129 |
| **ஐந்தாவது கண்டம்.** | |
| அந்தர்யாகம், ஸாதாரநிராதார பூஜைகள் | 130 |
| முத்திரைகளின் தத்துவார்த்தம் (வாஸனை) | 137 |
| ஆவாஹனம் | ,, |
| சதுஷ்ஷஷ்டி உபசாரபூஜை | 140 |
| ஆயதன பூஜை | 142 |
| ஷடாம்நாய, ஆதார, தர்ஸன, பூஜைகள் | 145 |
| லயாங்க பூஜை | ,, |
| ஐந்தாவதுகண்டத்தின் ஸாராம்ஸங்கள் | 152 |
| **ஆருவது கண்டம்.** | |
| நவாவரண பூஜை | ,, |
| பூபுரம் முதலிய ஒன்பதுசக்ரங்களின் வாஸனை | 154 |
| முதலாவது ஆவரணம் | 158 |
| இரண்டாவது ,, | 160 |
| மூன்ருவது ,, | 162 |
| நான்காவது ,, | 165 |
| ஐந்தாவது ,, | 169 |
| ஆருவது ,, | 175 |
| ஏழாவது ,, | 179 |
| எட்டாவது ,, | 188 |
| ஒன்பதாவது ,, | 193 |
| துரீயவித்யை | 197 |

| | பக்கம். |
|---|---|
| பஞ்சபஞ்சிகா பூஜை | 199 |
| ஷட்தர்ஶந, ஆதார, ஆம்நாய பூஜைகளின்வாஸநை | 202 |
| தண்டநாதாதி நாமாவளி யர்ச்சனம் | 202 |
| ஸஹஸ்ரநாமம், த்ரிஶதீ | 205 |
| தூப தீப நைவேத்தியாதிகள் | ,, |
| குலதீபம் | 210 |
| கற்பூர நீராஜனம் | 211 |
| மந்த்ரபுஷ்பம் | 212 |
| **ஏழாவது கண்டம்.** | |
| காமகலாத்தியானம் | 214 |
| **எட்டாவது கண்டம்.** | |
| ஹோமம் | 221 |
| **ஒன்பதாவது கண்டம்.** | |
| பலிதானம் | 227 |
| பிரதக்ஷிண, நமஸ்கார, ஜபங்கள் | 231 |
| ஸ்தோத்ரம் | 232 |
| ஸுவாஸினீ பூஜை, அளிபாத்ரதானம் | 233 |
| அளிபாத்ரதான மந்த்ரார்த்தம் | 234 |
| ஸாமயிகபூஜை, தத்துவசோதனம் | 235 |
| **பத்தாவது கண்டம்.** | |
| பூஜாஸமர்ப்பணம் | 237 |
| தேவதோத்வாஸனம் | 238 |
| **பதினோராவது கண்டம்.** | |
| ஶாந்திஸ்தவம், விசேஷார்க்கிய உத்வாஸனம் | 240 |
| கிரந்த ஸமாப்தி | 242 |
| கிரந்தாந்த மங்களாசரணம் | 243 |



பிரஹ்மஸ்ரீ ந. சுப்ரமணிய அய்யர்

श्रीगुरुचरणारविन्दाभ्यां नमः ।

श्रीमहागणपतये नमः ।

# ॥ श्रीविद्यासपर्यावासना ॥

# ஸ்ரீவித்யாஸபர்யாவாஸனா.

———:o:———

## भूमिका ।

ஸ்ரீவித்யாஸபர்யா தத்துவமாகும் பராபூஜாவாஸனு விமர்ஶமென்பது மேலாகிய பூஜையென்னும் பிரஹ்மாத் மைக்கியாநுஸந்தானத்தின் விளக்கமாகும்.

பூஜை மூன்று வகைப்படும்.

**परा चाप्यपरा गौरि तृतीया च परापरा ।**

**प्रथमाऽद्वैतभावस्था सर्वप्रचयगोचरा ॥**

(योगिनीहृदयं ८ विश्रामः २–३)

**द्वैतभानसामान्याभावे परा, अद्वैतभानसामान्याभावे त्वपरा, द्वैतविलयाभ्यासदशायां परापरेति पूजात्रयलक्षणानि ।**

துவைதத்தோற்றம் முற்றுமில்லாத நிலை பரையென் றும், அத்வைதஞானம் முற்றுமில்லாதது அபராவென் றும், தோற்றும் துவைதஞானத்தை அத்வைதத்தில் லயம் செய்யும் அப்பியாஸஸ்திதி பராபரை யென்றும் கூறப்படும். மேலும்,

सपर्या सर्वभावेषु सा परा परिकीर्तिता ।
अपरा तु बहिर्वक्ष्यमाणचक्रार्चनाविधिः ॥
परापरास्य बाह्यस्य चिद्व्योम्नि विलयः स्मृता ।
इत्थं त्रिधा समुद्दिष्टा बाह्याभ्यन्तरभेदतः ॥

தான் இயற்றும் ஸர்வகாரியங்களையும் பூஜாரூபமாய்ப் பாவித்தல் பராபூஜையாகும். இது எங்ஙனமெனின்?

आत्मा त्वं गिरिजा मतिः सहचराः प्राणाः शरीरं गृहं
पूजा ते विषयोपभोगरचना निद्रा समाधिस्थितिः ।
संचारः पदयोः प्रदक्षिणविधिः स्तोत्राणि सर्वा गिरो
यद्यत्कर्म करोमि तत्तदखिलं शम्भो तवाराधनम् ॥

என்றும்,

जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्यक्रमणमशनाद्याहुतिविधिः ।
प्रणामः संवेशः सुखमखिलमात्मार्पणदृशा
सपर्यापर्यायस्तव भवतु यन्मे विलसितम् ॥ என்றும்,

ஸ்ரீபகவத்பாதாள் அருளிச்செய்தபடி, நிரந்தரமாய்ச் சிவோஹம்பாவனை செய்யும் ஒருவன் எந்தக்காரியத்தைச் செய்யினும் அது பூஜையேயாகுமென்பது ஸித்தாந்தமாம். ஒருவன் தனது மனோவாக்காயங்களாலியற்றும் நினைத்தல் பேசுதல் ஒரு காரியத்தைச்செய்தல் முதலிய யாவும் பரமேஶ்வரனது பூஜையாகப் பாவிப்பின், அந்த பாவனையால் "ஸோஹம்பாவனை" திடப்படுகின்றது. ஆதலின் "**उत्तमा सा परा ज्ञेया**" பராபூஜையே மிகசிரேஷ்டமானதென்றறிதல் வேண்டும்.

**सर्वेन्द्रियजन्येषु ज्ञानेषु ये विषयास्तेषु सच्चिदानन्दांशस्यानुगतस्य भानं, न त्वनुगतयोर्नामरूपयोः । इदम् ऋतंभराज्ञानमिति प्रसिद्धम् । सा पूजा परानाम्नीति कथ्यते ।**

கண் காது முதலிய பஞ்சஞானேந்திரியங்களாலறியப் படும் விஷயங்களின் நாமரூபங்களை நீக்கி அஸ்திபாதி பிரியங்களை நாடும் ஒரு அறிவே ருதம்பரையென்று கூறப் படும். இந்த நாட்டம்தான் பராபூஜையாகும்.

பராபராபூஜையோவெனின், பாஹ்யமாகவும் ஆந்தர மாகவும் தோற்றும் துவைதவிருத்திகளைச் சிதாகாசத்தில் விலயம் செய்வதாகும். இது மத்யமாதிகாரிகளுக்குரித் தானது. இது,

**प्रकाशैकघने धाम्नि विकल्पान्प्रसवादिकान् ।**
**निक्षिपाम्यर्चनद्वारा वह्नाविव घृताहुतीः ॥**

"பிரகாசமே ஸ்வரூபமாயுள்ள பரப்பிரஹ்மத்தில் மாயையால் தோன்றும் ஸமஸ்த விகல்பங்களையும் அர்ச்சனை, ஸபர்யை, பூஜை என்னும் ஒரு நிமித்தத்தினால் அதிஷ்டானத்தில் லயம் செய்கின்றேன். அக்கினியில் நெய்யை ஆஹுதிசெய்வதைப் போல்" என்னும் பிர மாணத்தால் ஏற்படுகின்றது.

அபரா பூஜையாவது:—

**अपरा तु बहिर्वक्ष्यमाणचक्रार्चनाविधिः ॥**

என்னும் பிரமாணத்தின்படி பூஜாதிரவியங்கள் பலவற்றை யும் சேகரித்துக்கொண்டு பாஹ்யத்தில் செய்யும் பூஜையே யாகும். இது மந்தாதிகாரிகளுக்கு ஏற்பட்டதாகும்.

இப்பொழுது இங்கே உத்தமாதிகாரி விஷயமான பராபூஜையே விமர்ஶிக்கப்படுகின்றது. இந்த விமர்ஶமே

ஸபர்யாவாஸனை அல்லது பராபூஜாவாஸனாவிமர்ஶமெனப் படும். பூஜையென்பது யாகம் அல்லது ஸபர்யையாகும். இதுதான் உபாஸனையுமாகும். பிரஹ்மாத்மைக்கிய **चिदु-पास्ति** யென்று பிரஸித்திபெற்ற ஸ்ரீவித்யோபாஸனைக்கு மந்த்ரம், சக்ரம், பூஜையென்று கூறப்படும் மூன்று அங்கங்களுண்டு. எங்ஙனம் பதார்த்தஞானமின்றி வாக்யார்த்த ஞானமுண்டாகாதோ அங்ஙனமே, அங்கத்தின் ஞான மின்றி அங்கியின் ஞானமுண்டாகாது. ஆதலின் மந்த்ரம், சக்ரம், பூஜையென்னும் அங்கங்களின் அத்தியாத்ம தத்வ ஞானமானது அங்கியாகும் பராபூஜாவாஸனையென்னும் அகண்டாநுஸந்தானத்திற்கு அத்தியாவசியமாய் வேண் டப்படுகின்றது. அங்கங்களின் உண்மையான ஞானத் திற்கு ஸங்கேதம் என்று பெயர். மந்த்ரஸங்கேதம், சக்ர ஸங்கேதம், பூஜாஸங்கேதம் என்னும் ஸங்கேதத்திரயங்கள் ஸ்ரீவாமகேஶ்வரதந்திரத்தின் கடைசியிலுள்ள யோகினீ ஹ்ருதயத்தில், முறையே, 6, 7, 8 விஶ்ராமங்களில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

## मन्त्रसंकेतः ।

ஸ்ரீபிரஹ்ம வித்யோபாஸ்திக்கு அங்கமாயுள்ள மந் த்ரம் ஸ்ரீவித்யாபஞ்சதஶாக்ஷரியாகும். இது மிகவும் ரஹஸ்யமானது. ஸச்சிதாநந்த பிரஹ்மத்தைத் தனக் கபேதமாய் அறிவதற்குப் பரமேஶ்வரனால் நான்கு வேதங் கள், ஆறங்கங்கள், நியாயம், மீமாம்ஸை, புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் என்னும் பதினான்கு வித்தைகள் அரு ளப்பட்டன. இப்பதினான்கு வித்தைகளில் சிறந்தவை வேதங்கள்; வேதங்களிலும் ஸாரமானது ஸ்பஷ்டாஸ்ப ஷ்டரூபமாகும் காயத்ரீ ஒன்று; மிகவும் மேலானதாயும்

அதிரஹஸ்யமாயுமுள்ள ஸ்ரீவித்தை மற்ருென்று. வேத புருஷன் ஸ்ரீவித்தையைக் காயத்ரியைப் போல் வெளிப் படையாய்க் கூருமல் **कामः योनिः कमला** என்னும் ஸங்கேத பதங்களிஞல் கூறியிருக்கின்றனன். ஆதலின் ஸ்ரீவித்தை மிகவும் ரஹஸ்யமானது. '**चत्वार ईं बिभ्रति क्षेमयन्तः**' என்று ஶ்ருதியும்,

**त्रिकलाढ्यां त्रिहृल्लेखां द्विहसस्वरभूषिताम् ।**

**यो जपत्यम्ब ते विद्यां सोऽक्षरः परमः स्वराट् ॥**

"ககாரங்கள் மூன்று, லகாரங்கள் மூன்று, ஹ்ரீங்காரங் கள் மூன்று, இரண்டு ஹகாரங்கள், இரண்டு ஸகாரங்கள், ஏ, ஈ என்னும் இரண்டு உயிரெழுத்துக்கள் கூடிய உன் னுடைய வித்தையை, ஓ தாயே! யார் ஜபம் செய்கின்ருர் களோ அவர்கள் நாசமின்றிய பரமாத்மஸ்வரூபரே யாவர்" என்று ஸ்ரீசங்கரபகவத்பாதாள் கூறியுள்ளார். ஆதலின் ஸ்ரீ வித்யாபஞ்சதசாக்ஷரியானது மோக்ஷவித்யை யென்றேற் படுகின்றது. இந்த மஹாவித்தையின் பதினைந்து வர்ணங் களின் ஸ்வரூபம், அவற்றின் உத்பத்தி, உச்சாரணைகாலம், அவஸ்தை, ஶூன்யம், விஷூவம் முதலிய பாவனைகள், அர்த்த பேதங்கள் முதலியவற்றை நன்கு அறிதலே மந்த்ர ஸங்கேதமாகும். இந்த மந்த்ரஸங்கேதம், * ஸ்ரீவரிவஸ்யா ரஹஸ்யத்திலும், யோகினீஹ்ருதயம் 7-வது விஶ்ராமத்தி லும், மற்றும் இதர வாஸனுக்ரந்தங்களிலும் கூறப்பட்டி ருக்கின்றது. அங்கே விஸ்தாரமாய் அறியவும். தற்போது இங்கு மஹாவித்தையின் ஸங்கிரஹமான அர்த்தவிசாரம்,

---

* இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஸ்ரீபிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபையாரால் வெளிப்படுத்தப்பட்டிருக் கின்றது; விலை ரூ. 1.

மாத்திரம் செய்யப்படுகின்றது. ஸ்ரீபஞ்சதசீ வித்தையானது, தத்துவமஸி, அஹம் பிரஹ்மாஸ்மி முதலிய மஹா வாக்கியங்களைப் போன்றதே யாகுமென்பது அதன் அர்த்த விசாரத்தால் நன்கு ஏற்படுகின்றது.

ए = ஹே மாயாதீதஸ்வரூப சித்சக்தியே!
क = பிரஹ்மத்தில் கற்பிக்கப்பட்ட அவித்யையால் [ஏற்படும்
ह्रीं = (பேத) வ்ருத்திகளை
ईल = நிவர்த்தி செய்வாயாக.

எந்த அவித்தியாவிருத்திகளால் எனக்கு ஜீவபாவமேற்பட்டதோ அந்தபேதரூப அவித்யாவிருத்திகளை நாசம் செய்வாயாக. இதனால் துவம்பதவாச்சியமான ஜீவனது உபாதியை யொழித்து லக்ஷ்யமான கூடஸ்த நிலையையடைதல் தொனிக்கின்றது.

हल (स्य) = வியாபகமாயுள்ள
क (स्य) = பரப்பிரஹ்மத்தினுடைய அதாவது பிரஹ்[மாகாரமாகும்
ह्रीं = விருத்தியை
हस = அடைவிப்பாயாக.

எந்த மாயோபாதியால் ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு ஐக்கியம் உண்டாகாதோ அந்த உபாதியைத் தத்பதவாச்சியார்த்தத்தினின்றும் நீக்கி "**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म; आनन्दो ब्रह्म**" என்னும் நிலையையும் ஞானத்தையும் அடைவிப்பாயாக. இதனால் தத்பதார்த்த சோதனம் தொனிக்கின்றது.

**सकलह्रीं** = அகண்டாகாரவிருத்தியை அதாவது

"**अयमात्मा ब्रह्म; अहं ब्रह्मास्मि; सर्वं खल्विदं ब्रह्म**"

என்னும் ஜக, ஜீவபரர்களின் அபேததர்ஸன அகண்ட நிலையை (**हस**) = அடைவிப்பாயாக. இதனால் அஸிபதம் கூறப்பட்டது. இங்ஙனங் கூறுவது ஸ்ரீபஞ்சதசீ மஹா

வித்தையின் ரஹஸ்யார்த்தமாகும். ஆதலின் ஸ்ரீபஞ்சதசீ மஹாவித்தையானது மஹாவாக்கிய ஸ்வரூபமாகவேயுள்ள தென்பதுசிதையாத ஸித்தாந்தமாம்.

**मन्त्रसंकेतस्य वेत्ता श्रीविद्यामन्त्ररहस्यभूतपरभावना-प्रणाशितमोहजालः, परमशिव एव भवति ।**

ஸ்ரீவித்தையின் ரஹஸ்யார்த்தத்தை யறிந்தவன் பிரஹ்மாத்மைக்கிய சிவோஹம் பாவனையால் பிரஹ்மமேயாகின்ருன். "**ब्रह्मविद्ब्रह्मैव भवति**" யென்பது தான் மந்த்ர ஸங்கேதஞானத்தின் மஹாபலன்.

## चक्रसंकेतः ।

**चक्रं=शक्तिसमूहः ; तस्य संकेतः रहस्यं रूपम् ;**

சக்திஸமூஹங்களின் ரஹஸ்யார்த்தத்தை யறிதலே சக்ரஸங்கேதமாகும். எதனுடைய சக்திகள்? எனின்,

**"परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलाक्रिया च"**

என்பது ஸ்ருதி ;

**नैसर्गिकी स्फुरत्ता विमर्शरूपाऽस्य वर्तते शक्तिः ।**

என்பது வரிவஸ்யா ரஹஸ்யவசனம்.

**यदा सा परमा शक्तिः स्वेच्छया विश्वरूपिणी ।**
**स्फुरत्तामात्मनः पश्येत्तदा चक्रस्य संभवः ॥**

யோகினீ ஹ்ருதயம்.

**देवी ह्येकाग्र आसीत् सैव जगदण्डमसृजत ।**

என்னும் ஸ்ருதிப்படி பரதேவதையே தனது ஸ்வபாவமான ஸ்புரணத்தை எந்தக் காலத்தில் எதிரிட்டுப் பார்க்கின்ருளோ அந்தக் காலத்தில் பிரபஞ்சவடிவ, அதாவது

ஜகத்—ஜீவ—பர—ரூபமான சக்கிரம் உண்டாயிற்று. இங்ஙனம் சிருஷ்டமான ஜகத் ஜீவரூப பிரபஞ்சவடிவ ஸம்ஸார **சக்கிர** மானது பிரளயபரியந்தம் இருந்து, பிரளயத்தில் பரதேவதை யினிடத்தில் லயமாகின்றது.

**तत्र प्रलयो नाम—अनन्तशक्तिकस्य ब्रह्मणः स्वरूपमात्रेण कंचित्कालमवस्थानम् ।**

இங்ஙனம் பிரளயத்தில் அதிஷ்டானரூப சித்சக்தியில் லீனமாயுள்ள பிரபஞ்சமானது மறுபடியும் ஏன் சிருஷ்டிக்கப் படுகின்றது? எனின், ஜீவர்களின் அத்ருஷ்டரூப தர்மாதர்மங் களின் நிமித்தத்தினுலென்று **சாஸ்திரங்கள்** கூறுகின்றன.

**पुनश्च जन्मान्तरकर्मयोगात्स एव जीवः स्वपिति प्रबुद्धः ।**

இங்கே பிரபோதமென்பது அஹந்தாஸ்புரணமேயாகும். இந்த அஹந்தாஞானமானது இதந்தையுள்ள போது தான் ஏற்படுவதாகும். ஆதலின் ஸவிகல்பகமாம். எனவே **चक्र** மென்பது **अहमिदमाकारस्वरूप** மே யாகும்.

பரமேஸ்வரனது ஆத்மஸ்புரணத்தால் ஜீவர்களின் தர்மா தர்மங்களுக்கேற்ப அவரவர்களின் அநுபவத்தின் பொருட்டு போக்கியரூப பிரபஞ்சமும், போகாயதனரூப ஸ்தூலஸூக்ஷ்ம காரண சரீரங்களும் சிருஷ்டிக்கபட்டுப் பரமேஸ்வரன் அவற் றில் அநுப்பிரவேசம் செய்கின்ருன். ஈக்ஷணுதிப்ரவேசாந்த மாயுள்ள ஸகல ஶ்ருதிகளும் இதில் பிரமாணங்களாம்.

**"इच्छामात्रं प्रभोः सृष्टिः"** என்னும் வசனத்தின்படி ஸர்வப் பிரபஞ்சரூபசக்கிரமானது இச்சாரூப மனோமயமாகவே யிருக் கின்றது.

இங்ஙனம் சப்தரூபமாயும் அதாவது பரா, பஶ்யந்தீ, மத்யமை, வைகரீயென்னும் நான்குவிதமாயுள்ள வாக்குகளா யும், அர்த்தரூபமான நாநாவித விசித்திரப் பொருள்களாயு

முள்ள சக்கிர சிருஷ்டியின் விமர்சம் ஸ்ரீகாமகலாவிலாஸத்தில் மிகு விரிவாய்ச் செய்யப்பட்டிருக்கின்றது. அன்றியும், யோகினீ ஹ்ருதயம் சக்கிர ஸங்கேதத்திலும் நன்கு கூறப்பட்டுள்ளது. ஸ்ரீபாவனோபநிஷத்திலும் சக்கிரத்தின் அத்யாத்ம பாவனை ஸூசிப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றிலெல்லாம் பிரபஞ்சமே சக்கிரமென்றும், சரீரமே சக்கிரமென்றும் தான் கூறப்பட்டிருக்கின்றது. இது மிகவும் ஸ்தூலபாவனையேயாகும். மனமே ஸ்ரீசக்கிரமேன்பது தான் அதிஸூக்ஷ்மமும் பரமரஹஸ்யமுமாகும்.

மனமே ஸ்ரீசக்ரம் என்பதன் விமர்சமாவது :—

**निरुपाधिकसंविदेव कामेश्वरः सदानन्दपूर्णः स्वात्मैव परदेवता ललिता ॥**

என்னும் பாவனோபநிஷத்தின் வாக்கியப்படி பிந்துவில் அதிஷ்டிதராயுள்ள காமகாமேஶ்வரர்கள், முறையே, நிர்விசேஷப்பிரஹ்மமும் அதன் விமர்சரூப ஸச்சிதாநந்தவடிவ ஆத்மஸ்வரூப லலிதாபரதேவதையுமாவார்கள். பிரகாசவிமர்சரூப காமகாமேஶ்வரர்களின் ஸாமரஸ்யமாகும் அபேத யோகத்தினுல் காமகலை ஏற்பட்டது. இதனுல் மிஶ்ரபிந்து உண்டாயிற்று. இம்மிஶ்ரபிந்துதான் அபராபிந்து. இவ்வபராபிந்துவிலிருந்துதான் த்ரிகோணம், அஷ்டகோணம், ஆந்தரபாஹ்யதசகோணங்கள், சதுர்த்தசகோணம், அஷ்டதளகமலம், ஷோடசதளகமலம், த்ரிவலயங்கள், பூபுரம் முதலிய பிரிவுகளையுடைய ஸ்ரீசக்கிரம் ஏற்பட்டது. பரமேஶ்வரன் தனது ஜடசக்தியாகும் மாயையால் ஜடசேதனுத்மக ஸர்வப்பிரபஞ்சத்தையும் சிருஷ்டித்தானென்பது சிருஷ்டி திருஷ்டிவாதமாம்.

காரியரூபமாய்த் தோன்றும் ஜடசேதனவடிவ ஸர்வப்பிரபஞ்சமும் ஜீவனுக்குத் தோற்றும் அந்த க்ஷணத்தில்தான்

உண்டாகின்றது; கயிற்றில் தோன்றும் பாம்பைப்போல. என்பது திருஷ்டி சிருஷ்டி வாதமாகும். இந்த திருஷ்டி சிருஷ்டி வாதந்தான் அத்வைத சாஸ்திரங்களில் உத்தமாதிகாரிகளுக்குக் கூறப்படுவது.

இங்ஙனம் ஏற்பட்ட சக்கிரம் அண்டமாயினுமாகுக—பிண்டமாயினுமாகுக. இவ்வண்டமும் பிண்டமும் திருஷ்டி சிருஷ்டிவாதப்படி மனத்தினல் கற்பிக்கப்பட்டவையேயாகும். மனம் எங்கேயுண்டோ அங்கேதான் சரீரமும் பிரபஞ்சமும் உண்டு; மனமில்லாதபோது சரீரமுமில்லை—பிரபஞ்சமுமில்லை. ஜாக்கிரத்திலும் ஸ்வப்நத்திலும் மனமுண்டு; ஆதலின் இவ்விரண்டவஸ்தைகளிலும் போக்கியவுலகும், போகாயதன சரீரமும், போக்தாவாகும் ஜீவன் நான் என்னும் எண்ணமும் உண்டு. மனமற்ற ஸுஷுப்தி தசையில் மேற்கூறிய யாவுமில்லை.

**बिन्द्वधिष्ठितनिरुपाधिकसंविद्रूपकामेश्वर** னென்றும், **सदानन्दपूर्णः स्वात्मैव** பரதேவதையென்றுங் கூறப்பட்டதனுல், பிந்து சக்கிரமே உபாதியென்றும் அநாத்மாவென்றும் ஏற்பட்டன. ஆதலின் பிந்துமுதல் பூபுரமீருகவுள்ள சக்கிரங்கள், முறையே, மனமும், மனத்தின் ஞானரூபபரிணமமென்னும் விருத்திகளுமாகும். இது,

**विश्वविषयकस्फूर्तिजनिका याः मनोवृत्तयस्ता एव क्रमेण चतुरश्रादिबिन्दुचक्रान्तक्रमेण विद्यमानाः शक्तयो ज्ञेयाः ।**

என்னும் பிரமாணத்தினல் நன்கு விளங்குகின்றன. மேலும்,

**करणेन्द्रियचक्रस्थां देवीं संवित्स्वरूपिणीम् ।**
**विश्वाहंकृतिपुष्पैस्तु पूजयेत्सर्वसिद्धये ॥**

என்று வாமகேஶ்வரதந்த்ரம் 5—வி—44 வது ஶ்லோகத

தில் கூறப்படும் அர்த்தம் மேற்படி கொள்கையை ஆமோதிக்கின்றதல்லவா?

பிரபஞ்சமும் சரீரமுமே சக்கிரத்தின் ரஹஸ்யார்த்தரூப ஸங்கேதமாகுமெனின், இவையிரண்டும் பரமேஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டனவாகும்; ஆதலின் இவை பிரளயம் வரை நாசமாகாது; பிரளயத்திலும் இவற்றின் ஆத்தியந்திக நாசமேற்படுவதில்லை; மற்றோ லயரூபநிவர்த்தியே யுண்டாகின்றது.

தீவிரதரமுமுக்ஷுவுக்கு ஸர்வப் பிரபஞ்சமும் துக்கரூபமாயும், சரீரம் அருவருப்பாயும் இருக்கின்றன. இங்ஙனம் தோன்றுவது மனத்தினாற்றான் என்பது ஸர்வசாஸ்திரங்களின் சித்தாந்தமாம்.

ஜீவனுக்குச் சரீரத்தில் "தான்" என்னும் அத்தியாஸமும், பிரபஞ்சத்தில் "தனது" என்னும் அத்தியாஸமும் ஏற்படுவது மனத்தினாலேதான். இதுதான் ஜீவஸ்ருஷ்டி. அஹந்தை-மமதை வடிவ அத்தியாஸமுள்ளவரை ஜீவனுக்குத் துக்கமுண்டு. துக்கம் நீங்கவேண்டுமாயின் அத்தியாஸம் நீங்கவேண்டும். அத்தியாஸநீக்கமும் மனோவிருத்தியினால் தான் ஏற்படவேண்டும். "**मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः**" என்பது பிரமாணமல்லவா? பந்தமானது பஹிர்முகப் பிரவ்ருத்தியையுடைய அசுத்தமனத்தாலும், பந்தநீக்கமானது அந்தர்முகப் பிரவிருத்தியையுடைய சுத்தமனத்தினாலும் ஏற்படுகின்றன. "**तरति शोकमात्मवित्**" என்னும் பிரமாணத்தின் படி முமுக்ஷுவானவன் பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூபத்தை யறிதல் வேண்டும்.

இங்ஙனமறிதற்கு அத்யாத்ம சாஸ்திரவிசாரம் அத்தியாவசியம். ஜகத்-ஜீவ-பரர்களின் விசாரணையே ஆத்மவிசாரமாகும்.

பிண்டாண்டமாகும் சரீரத்தில், அவஸ்தாத்திரயங்களை யும், பஞ்சகோசங்களையும் விசாரித்துப் பிரத்யகாத்ம ஸ்வ ரூபத்தை யறிதல் வேண்டும்.

**जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते सैवाहं—**

என்னும் பிரமாணம் இங்கறியத்தக்கது. அண்டமாகும் பிரபஞ்சத்தில் எறும்புமுதல் எண்பத்திநான்குலக்ஷம் ஜீவ ராசிகளிலும், பஞ்சபூதங்களிலும் ஸூர்ய சந்திரர்களிலும் அறியத்தக்கது பரமாத்ம ஸ்வரூபமாகும். இது,

**"या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी सैवाहं न च दृश्यवस्तु—"**

என்னும் பிரமாணத்தால் சித்திக்கின்றது

இங்ஙனம் துவம்பத-தத்பத-அர்த்தத்தை விசாரித்தறி தற்கு சுத்தஸத்துவப் பிரதான அந்தர்முக மனோவிருத்தி வேண்டும். இத்தகைய மனந்தான் சக்கிரத்தின் ரஹஸ்யார் த்தமாகும்.

**एवमेव महाचक्रसंकेतः परमेश्वरि ।**
**कथितस्त्रिपुरादेव्या जीवन्मुक्तिप्रवर्तकः ॥**

யோகினீஹ்ருதயம் 6-86.

இங்ஙனம் மஹாசக்கிரத்தின் ரஹஸ்யார்த்தத்தை யறிந்த வன் ஜீவன்முக்தியையடைகின்றான். என்று கூறப்பட்டிருப் பதனால் அந்தர்முகப்பட்ட சுத்தமனமே ஸ்ரீசக்கிரமென்பதில் யாதும் ஆக்ஷேபணையின்று. **अन्तर्मुखसमाराध्या बहिर्मुखसुदुर्लभा ।**

## पूजासंकेतः ।

மந்த்ரம் மஹாவாக்கியரூப சிரவணமனனங்களாகவும், சக்கிரம் அந்தர்முகப்பட்ட சுத்தாந்தக்கரணமாகவும், ஆவரண தேவதைகள் மேற்படி சுத்தமனத்தின் அத்தியாத்ம விருத்தி

களாகவும் இருக்கின்றனவென்பது இதுவரையில் சித்தித்த விஷயமாகும். ஆதலின் பூஜையின் தத்துவம் எங்ஙனமிருக்கலாமென்று நாம் ஊகிக்கலாம். பூஜையென்பது நிதித்யாஸனமும் ஸவிகல்பஸமாதியுமே யாகும்.

**यत्र यत्र मनो याति बाह्ये वाऽभ्यन्तरे प्रिये ।**
**तत्र तत्राक्षमार्गेण चैतन्यं व्यज्यते प्रभोः ॥**

யோகினீ ஹ்ருதயம் 8-4-வ்யாக்யானம்.

**ज्ञातृज्ञानज्ञेयानामभेदभावनं श्रीचक्रपूजनम् ॥**

பாவனோபநிஷத்து—

பூஜை அல்லது ஸபர்யை யென்பது தியானம், ஆவாஹனம் முதல், ஸ்தோத்திரம், ஜபம், உத்வாஸனம் வரையுள்ள பற்பல பாவனைகளையும் கிரியைகளையும் உபசாரங்களையும் குறிக்கும் ஒரு ஸமஷ்டியான அர்த்தத்தைத்தரும் பதமாகும்; ஆனால் பூஜைசெய்வதென்றால் புஷ்பங்களால் ஈச்வர நாமாவை நான்காவது வேற்றுமை யுருபோடு "**नमः**" என்பதைச் சேர்த்து, ஆவாஹனம் செய்யப்பட்டுள்ள மூர்த்தியையோ அல்லது யந்த்ரத்தையோ பூஜிப்பதாகும். இது ஸாமான்யமாய் யாவராலும் ஒப்பப்பட்ட விஷயமாகும்.

பூஜையின் விசேஷார்த்தமாவது ஜீவப் பிரஹ்மைக்கிய அநுஸந்தானமே. "**नमः**" என்னும் பதத்தினால் துவம்பத வாச்சிய ஜீவனும், ஈச்வரவாசகத்தினால் தத்பதவாச்சிய பரமேச்வரனும், நான்காம் வேற்றுமையின் உருபால் ஜீவேச்வரர்களின் அகண்டார்த்தமும் குறிப்பிடப்படுகின்றன.

**शिवाय नमः ; नारायणाय नमः ; कुमाराय नमः ; आदित्याय नमः ; गणपतये नमः ; मात्रे नमः ;**

என்பவை மஹாமந்த்ரஸ்வரூபங்கள். ஆதலின் மஹா வாக்கியங்கள். இவைகளால்தான் பூஜைசெய்யப்படுகின்றது.

பூஜையின் தத்துவம் ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளால் கீழ்க்குறித்துள்ளபடி கூறப்பட்டிருக்கின்றது.

पूर्णस्यावाहनं कुत्र सर्वाधारस्य चासनम् ।
स्वच्छस्य पाद्यमर्घ्यं च शुद्धस्याचमनं कुतः ॥

निर्मलस्य कुतः स्नानं वस्त्रं विश्वोदरस्य च ।
निरालम्बस्योपवीतं पुष्पं निर्वासनस्य च ॥

निर्लेपस्य कुतो गन्धो रम्यस्याभरणं कुतः ।
नित्यतृप्तस्य नैवेद्यं ताम्बूलं च कुतो विभो ॥

प्रदक्षिणाद्यनन्तस्य ह्यद्वयस्य कुतो नतिः ।
वेदवाक्यैरवेद्यस्य कुतः स्तोत्रं विधीयते ॥

स्वयंप्रकाशरूपस्य कुतो नीराजनं विभो ।
अन्तर्बहिश्च पूर्णस्य कथमुद्वासनं भवेत् ॥

एवमेव परापूजा सर्वावस्थासु सर्वदा ।
एकबुद्ध्या तु देवेश विधेया ब्रह्मवित्तमैः ॥

ஆத்மஸ்வரூப பிரஹ்மாபின்ன சித்சக்தியானது உள்ளும் வெளியும் வியாபித்து பரிபூர்ணமாயிருக்கின்றது. இதை யெங்ஙனம் ஓரிடத்தில் ஆவாஹனம் செய்யமுடியும்? ஸர்வத்திற்கும் ஆதாரமாயுள்ளதற்கு எது ஆஸனமாகும்? ஸ்வச்சமாயுள்ள ஒன்றிற்கு அர்க்ய பாத்யங்களேன்? சுத்தத்திற்கு ஆசமனத்தினல் யாது பயன்? எப்பொழுதும் நிர்மலமாயுள்ள பிரஹ்மத்திற்கு ஸ்நான

மேன்? ஆயிரத்தெட்டு பிரஹ்மாண்டங்களையும் தன்வயிற்றுக்குள் அடக்கிவைத்துள்ள விராட்ஸ்வரூபத்திற்கு எங்ஙனம் வஸ்திரம் சாத்த முடியும்? நிராலம்பத்திற்கு உபவீதமும், நிர்வாஸநாஸ்வரூபத்திற்குப் புஷ்பாலங்காரமும், நிர்லேபனுக்குச் சந்தனப்பூச்சும் ஏன்? ஸ்வபாவமாகவே ரம்மியமாயுள்ள ஆநந்தஸ்வரூபத்திற்கு ஆபரணங்களாலென்ன பயன்? நைவேத்தியாதிகளும் தாம்பூலமும் நித்தியதிருப்தனும் அநந்தனுமான ஒன்றற்கு என்ன பயன் தரும்? காலதேசவஸ்து பரிச்சேதமற்ற அநந்த ஸ்வரூபத்தை யெங்ஙனம் பிரதக்ஷிணம் செய்ய முடியும்? அத்வயனுக்கு நமஸ்காரம் யார் செய்வது? வேதவாக்கியங்களும் அறியாத வொன்றை எங்ஙனம் துதிப்பது? எல்லாப் பிரபஞ்சத்தையும் தனது பிரகாசத்தால் பிரகாசிப்பிக்கச் செய்யும் மஹாப்பிரகாசத்திற்கு நீராஜனமும், ஸர்வவியாபக பூமாஸ்வரூபத்திற்கு உத்வாஸனமும் எங்ஙனம் பொருந்தும்? ஆதலின் பூர்ணன், ஸர்வாதாரன், ஸ்வச்சன், சுத்தன், நிர்மலன், விஶ்வோதரன், நிராலம்பன், நிர்வாஸனன், நிர்லேபன், ரம்மியன், நித்தியதிருப்தன், அநந்தன், அவேத்தியன், ஸ்வயம்பிரகாசன், வியாபகன், முதலிய லக்ஷணங்களால் தனக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்கியத்தை அநுஸந்தானம் செய்வதே பராபூஜையாகுமென்றும், இந்த பூஜை எப்பொழுதும், எல்லா அவஸ்தைகளிலும், ஏகாக்கிரவிருத்தியோடு செய்யப்படுதல் விதியென்றும், சிரேஷ்டர்களான பிரஹ்மஞானிகள் இந்த பூஜையைத்தான் செய்வார்களென்றும் கூறப்பட்டது.

ஸ்ரீபாவநோபநிஷத்திலும் இப்பராபூஜையின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

1. अपरिच्छिन्नतया भाविताया ललितायाः स्वे महिम्न्येव प्रतिष्ठितं **आसनम्** ।

"தேசகாலவஸ்து பரிச்சேதமற்ற ஸச்சிதாநந்தரூப சித்சக்தியாகும் லலிதை, தனது மஹிமையிலேயே நிலை பெற்றிருக்கின்றனள்" என்னும் பாவனையே ஆஸன கற்பனையாகும்.

2. वियदादिस्थूलप्रपञ्चरूपपादगतस्य नामरूपात्मकमलस्य सच्चिदानन्दैकरूपत्वभावनाजलेन क्षाळनं **पाद्यम्** ।

ஆகாசாதி பாஞ்சபௌதிகஸ்தூலப் பிரபஞ்சமாகும் பாதத்திலுள்ள நாமரூபமென்னும் அழுக்கை ஸச்சிதாநந்த நாட்டமென்னும் ஜலத்தால் அலம்புதல் பாத்திய மாகும்.

3. वियदादिसूक्ष्मप्रपञ्चरूपहस्तगतस्य नामरूपात्मकमलस्य सच्चिदानन्दैकरूपत्वभावनाजलेन क्षाळनं **अर्घ्यम्** ।

ஆகாசாதிஸூக்ஷ்ம பிரபஞ்சரூப ஹஸ்தத்தில் உள்ள மலத்தை மேற்கூறிய ஸச்சிதாநந்தபாவனா ஜலத்தால் அலம்புதல் அர்க்கியமாகும்.

4. भावनारूपाणां अपामपि कबळीकाररूपं **आचमनम्** ।

ஸச்சிதாநந்தபாவனாரூப அந்த ஜலத்தையும் உட்கொள்ளுதல் ஆசமனமாகும்.

5. सत्त्व-चित्त्व-आनन्दत्वाद्यखिलावयवावच्छेदेन भावना-जलसंपर्करूपं **स्नानम्** ।

ஸத்து, சித்து, ஆநந்தம் முதலிய எல்லாலக்ஷணங்களையும் தனித்தனியாய் ஜலரூபமாய்ப் பாவித்து அதனை ஸ்வரூபத்தோடு சேர்த்தல் ஸ்நானமாம்.

6. **तेष्वेवावयवेषु प्रसक्ताया भावनात्मकवृत्तिविशेष्यतायाः वृत्तिविषयत्वभावनेन च वस्त्रम् ।**

ஸத்து சித்து ஆநந்தங்களென்னும் ஸ்வரூபத்தில் ஆழ்ந்துள்ள பாவனுவடிவவிருத்திக்கு விசேஷ்யமாயும் அவ்விருத்திகளுக்கு விஷயமாயுமுள்ள தன்மையைப் பாவித்தலே வஸ்திரமாகும்.

7. **निर्विषयत्व–निरञ्जनत्व–अशोकत्व–अमृतत्वाद्यनेकधर्मरूपाणि आभरणानि धर्म्यभेदभावनेन ।**

நிர்விஷயத்துவம்-நிரஞ்ஜனத்துவம்-அசோகத்துவம்-அம்ருதத்வம் முதலிய. தர்மங்களைத் தர்மியாகும் ஸ்வரூபத்திற்கு அபேதமாய்ப் பாவித்தலே ஆபரணங்களாம்.

8. **स्वशरीरघटकपार्थिवभागानां जडताऽपनयेन चिन्मात्रतावशेषरूपो गन्धः ।**

தனது சரீரத்திலுள்ள பார்த்திவ அதாவது பூமியம் சமான பாகங்களின் (நாமரூப) ஜடத்தன்மையை யொழித்துச் சின்மாத்திர நாட்டத்தோடு நிற்றல் கந்தஸமர்ப்பணமாகும்.

9. **आकाशभागानां तथा भावनेन पुष्पम् ।**

சரீரத்திலுள்ள ஆகாசபாகத்தின் ஜடத்தன்மையை நீக்கிச் சின்மாத்திரமாய் நிற்றல் புஷ்பஸமர்ப்பணமாம்.

10. **वायव्यभागानां तथा भावनया धूपः ।**

இங்ஙனமே வாயவ்யபாகத்தின் சின்மாத்திரபாவனை தூபமாகும்.

11. **तैजसभागानां तथा करणेन दीपः ।**

தைஜஸபாகத்தைச் சேதனஸ்வரூபமாய்ப் பார்த்தலே தீபதர்சனமாம்.

12. **अमृतभागांस्तथा विभाव्य निवेदनम् ।**

ஜலமென்னும் அம்ருத (பூத) த்தின் நாமரூபாத்மக ஜடத்தன்மையை யொழித்து அஸ்திபாதிபிரியஸ்வரூப மாய் நாடும் நாட்டமே நைவேத்தியமாம்.

13. **षोडशान्तेन्दुमण्डलस्य तथा भावनेन ताम्बूलम् ।**

ஷோடசாந்தமாகும் * சந்திரமண்டலத்தின் ஜடத் தன்மையை நீக்கிச் சின்மாத்திரமாய்ப் பார்ப்பது தாம் பூலமாகும்.

14. **परापश्यन्त्यादिनिखिलशब्दानां नादद्वारा ब्रह्मण्युपसंहारचिन्तनेन स्तोत्रम् ।**

பரை பஶ்யந்தி முதலிய சப்தங்களை நாதத்தின் மூல மாய்ப் பிரஹ்மத்தில் லயஞ்செய்தல் ஸ்தோத்திரமாகும்.

15. **विषयेषु धावमानानां चित्तवृत्तीनां विषयजडतानिरासेन ब्रह्मणि विलापनेन प्रदक्षिणम् ।**

விஷயங்களில் பிரவ்ருத்தித்தோடும் அந்தக்கரண விருத்திகளுக்கு விஷயமாகும் ஜடத்தன்மையை நிவ்ருத்தி செய்து பிரஹ்மத்தில் பிரவிலாபம் செய்தல் பிரதக்ஷிண மாம்.

16. **तासां विषयेभ्यः परावर्तनेन ब्रह्मैकप्रवणतया प्रणामः ।**

அவ்விருத்திகளை விஷயங்களினின்றும் திருப்பிப் பிரஹ்மஸ்வரூபத்தையே நாடுதல் நமஸ்காரமாம்.

**इति षोडशोपचाराः ।**

---

* ஷோடசாந்த சந்திரமண்டலமாவது பதினாறு வகைகளாய்ப் பரிணமித்த விருத்திகளே ஸ்வரூபமா யுடையதும், சந்திரனை யதிதேவதையாகவுடையதுமான அந்தக்கரணமேயாகும்.

இங்ஙனம் ஷோடசோபசாரரூப பராபூஜையானது கூறப்பட்டது. இந்த பராபூஜையே மஹாயாகமெனப் படும். எந்த எந்த இந்திரியத்திற்கு எது எது விஷயமோ அந்த அந்த விஷயத்தைத் தனது ஆத்மஸ்வரூபமாகும் தேவதைக்கு அர்ப்பணம் செய்து நிர்விஷயமாய் நிற்றலே மஹாயாகமாகும். பஞ்சஞானேந்திரியங்களுக்கு விஷய மான சப்தஸ்பர்ஶாதிகளால் ஏற்படும் விஷயாநந்தத்தை ஆத்மாநந்தத்தில் லயிப்பிக்கின், உபாதியொழிந்து அது ஸமரஸமாகின்றது. இவ்விஷயம் கீழ்க்கண்ட பிரமா ணங்களால் நன்கு விளங்குகின்றது.

'इन्द्रियप्रीणनद्रव्यैर्विहितस्वात्मपूजनः ।' इन्द्रियाणि श्रोत्रादीनि, तेषां प्रीणनानि, द्रव्याणि विशिष्टशब्दस्पर्शरूपरस-गन्धाः, तैर्विहितं स्वात्मदेवतायाः पूजनं येन तथाविधः ॥

तदुक्तं मुख्याम्नायरहस्यविधौ—
इन्द्रियद्वारसंग्राह्यैर्गन्धाद्यैरात्मदेवता ।
स्वभावेन समाराध्या ज्ञातुः सोऽयं महामखः ॥ इति ।

யோகினீஹ்ருதயம் 8-8.

श्रोत्रादीन्द्रियविषयशब्दाद्यनुभवजनितेन महदानन्देन समरसीकरणं परापूजा इत्यर्थः । (अमृतानन्दनाथः ।)

शिरस्स्थितगुरोः दहरस्थनादविद्यायाः सर्वावसायिचित्कला-रूपदेव्यात्मनश्च अद्वैतभानसमकालं सकलेन्द्रियैः विषयान् भुञ्जानः तज्जन्यानन्दधारामात्रविषयकनिर्विकल्पकज्ञानैकसारतया इतरनिखिलविषयप्रमोषेण कंचित्कालमवस्थानं परापूजेति ज्ञेयम् ।

इति भास्कररायेण सेतुबन्धे ८–८–व्याख्यायाम् ।

இங்ஙனம் பூஜாஸங்கேதம் ஸங்கிரஹமாய்க் கூறப்பட்டது. இந்த பூஜாஸங்கேதத்தை யறிந்தவன் பிரஹ்மாத்மைக்கிய அபரோக்ஷஞானத்தை யடைந்து பிரஹ்மமேயாகின்றான்.

இதுகாறும் விமர்சம் செய்யப்பட்ட ஸங்கேதத்திரயங்களினால் என்ன ஏற்படுகின்றதெனின், மந்த்ர ஸங்கேதத்தினால் மஹாவாக்கிய சிரவணமும், சக்ரஸங்கேதத்தினால் சுத்தஸத்துவப்பிரதான அந்தக்கரணமும் அதனாலுண்டாகும் ஆத்மகோசரவிருத்திகளின் எழுச்சிக்கு அநுகூலமாகும் மனனமும், பூஜாஸங்கேதத்தினால் ஜகஜ்ஜீவபரங்களின் ஐக்கியாநுஸந்தானரூப நிதித்தியாஸனமும் குறிப்பிடப்படுகின்றனவென்பது புலப்படுகின்றது.

# दीक्षातत्त्वम् ।

## தீக்ஷாதத்துவம்.

### अथ शाक्तमन्त्रागमाभिजिज्ञासा ।

இது ஸ்ரீகௌடபாதாசார்யாளால் இயற்றப்பட்ட ஸ்ரீவித்தியாமந்த்ரரத்னஸூத்ரங்களில் முதலாவதாகும். இங்கே **अथ** என்னும் சப்தத்திற்கு "பிறகு" என்பது பொருளாம். எதற்குப்பிறகெனின், விவேகம் வைராக்கியம் முதலிய ஸாதனசதுஷ்டயங்களின் அடைவிற்குப் பின். இங்ஙனம் கூறுவோமாயின், **अथातो ब्रह्मजिज्ञासा** என்னும் உத்தரமீமாம்ஸாஸூத்திரத்தினால் ஸாதன சதுஷ்டயஸம்பத்திக்குப்பின் என்பது ஸித்திக்கின்றது.

ஆதலின இந்த ஸூத்திரங்களைக் கூறுதல் பயனற்றதாக முடியும்; ஆயின், ஸகலவேத வேதாங்க அத்தியயனத்திற்குப்பின் என்று பொருள் செய்யின், **अथातो धर्मजिज्ञासा** என்னும் பூர்வமீமாம்ஸா ஸூத்திரங்களினல், வேத வேதாங்க அத்தியயனத்தின் பின்னர் தர்மசோதனம் அவசியம் செய்தல்வேண்டுமென்று சித்திக்கின்றது. "உத்தரமீமாம்ஸா ஸூத்திரத்தினல் ஸாதன சதுஷ்டய ஸித்திக்குப்பின் ஸ்திதியும், பூர்வமீமாம்ஸா ஸூத்திரத்தினல் அத்தியயனத்திற்குப்பின் ஸ்திதியும் ஸித்திப்பதாயிருத்தலின், ஸ்ரீவித்யா மந்த்ரரத்தின ஸூத்திரங்களாகும் இக்கிரந்தத்தின் ஆரம்பம் நிஷ்பிரயோஜனமாம்" என்னும் பூர்வபக்ஷத்திற்குச் சித்தாந்தமாவது:

மந்த்ரரத்தின ஸூத்திரத்தின் **अथ** சப்தத்திற்கு விவேகாதி ஸாதனசதுஷ்டயஸம்பத்தியின் பிறகு முமுக்ஷுவானவன் ஸற்குருவையடைந்து, அவரது கிருபையைப் பெற்று, அவரால் ஸ்ரீபிரஹ்மவித்யாஸ்வரூப மஹாவாக்கியோபதேசத்தைப் பெற்றபின்னரும் ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படாவிடின், அங்ஙனம் ஏற்படாமைக்குக் காரணம் பல பிரபலமான பிரதிபந்தகங்களேயாமென அநுமானிக்கத்தக்கது. அத்தகைய தடைகளின் நிவர்த்தியின் பொருட்டு சாக்தமந்த்ராகமமாகும் ஸ்ரீவித்தையில் ஜிக்ஞாஸை கொள்ளல் தகுதியென்று பொருள் செய்தல் வேண்டும். ஆதலின் உபநிஷத் ஸித்தாந்தத்தைத்தக்க ஆசார்யன் மூலமாய்ச் சிரவணம் செய்து சற்குருமுகமாய் மஹாவாக்கியோபதேசம் பெற்றும் தனது பிரபல பிரதிபந்தகங்களினல் அபரோக்ஷ ஸாக்ஷாத்கார மேற்படாதுள்ள தீவிரதரமுமுக்ஷுவே ஸ்ரீவித்தைக்கு முக்கியாதிகாரியாவன்.

இவ்வித்யோபாஸ்தியின் பயன், பிரதிபந்தகங்களின் நிவ்ருத்தியின் மூலமாய், பிரஹ்மாத்மைக்கிய ஸாக்ஷாத்காரமேயாகும். ஆகவே ஸ்ரீவித்யோபாஸ்தியானது ஸம்சயவிபரீதங்களைப் போக்கும் மனன நிதித்தியாஸன ரூபமாயும், அபாணுபாதக ஆவரண நிவ்ருத்திஸ்வரூப அபரோக்ஷ ஸாக்ஷாத்காரஸமாதிவடிவமாகவும் இருக்கின்றது. இது ஸகலஶ்ருதிஸ்ம்ருதிகளின் ஸித்தாந்தமாம்.

இத்தகைய மஹிமை வாய்ந்த ஸ்ரீவித்யோபாஸ்தியானது குருபாரம்பராகதமாய்ச் சித்திக்கவேண்டும்.

**कर्णात्कर्णोपदेशेन संप्राप्तमवनीतलम् ।**

என்றபடி இது பரம்பராகதமாய்த்தான் வந்து கொண்டிருக்கின்றது. ஆதலின் ஶ்ரேயஸ்ஸாகும் ஆத்மஞானத்தையடைய முயலும் ஒவ்வொருவனும் சற்குருவையடைந்து ஸ்ரீவித்தையை உபதேசரூபமாய்ப் பெறல் வேண்டும். இத்தகைய உபதேசத்திற்குத் தீக்ஷையென்று பெயர்.

**तत्र सर्वथा मतिमान्दीक्षेत ।**

என்பது கல்பஸூத்திரம்.

**मुक्तिसौधस्य सोपानं प्रथमं दीक्षणं भवेत् ।**

முக்தியாகிற மேல்மாடிக்குச் செல்வதற்கு முதற்படியாயுள்ளது தீக்ஷையேயாகும். தீக்ஷையின் பரமதாத்பர்யம் சற்குருவின் கடாக்ஷத்தைப் பெறுதலேயாகும்.

**सुखसाधनगुरुकृपापाङ्गावलोकनरूपदीक्षावशेन प्रतिबन्धकदुरितापगमे परदेवतारूपह्रींकारः, चिरकालनैरन्तर्यभावनाप्रकर्षेण तस्मिन्नभिमुखे सति तल्लक्ष्यार्थरूपपरमानन्दचित्कला स्वयमेवाभिव्यक्ता सती आनन्दानुभवामृतेन सुखयति ।** என்று

**ஸ்ரீ** சங்கரபகவத்பாதாள், த்ரிசதீபாஷ்யத்தில் 207 வது **ह्रींकारभास्कररुचये नमः** என்னும் நாமாவில் கூறியுள்ளார்.

இதன் தாத்பர்யமாவது :—சற்குருவின் கிருபாகடாக்ஷவீக்ஷணமென்னும் தீக்ஷையினால் பிரதிபந்தகங்களாகும் ஸகலதுரிதங்களும் நாசமாகின்றன. பின்னர் குருமுகமாய்ப்பெற்ற "ஹ்ரீம்" என்னும் மஹாமந்த்ரத்தின் வாச்சியையாகும் பரதேவதையை நெடுநாள் இடைவிடாது சிரத்தையோடு அபேதமாய் உபாஸித்துவரின், அந்த ஸாதகன் ஸகலசோகங்களையுங் கடந்து ஆநந்த ஸ்வரூபதன்மயமே யாகின்றான் என்பதாகும்.

## दीक्षाशब्दनिर्वचनम् ।

### தீக்ஷையின் பொருள்.

**दीयते शिवसायुज्यं क्षीयते पाशबन्धनम् ।**
**अतो दीक्षेति कथितं बुधैः सच्छास्त्रवेदिभिः ॥**

என்னும் பிரமாணத்தின்படி, ஸகலபாசபந்தங்களையுமொழித்துச் சிவஜீவைக்கியத்தைத் தருவதே தீக்ஷையாகுமென்று விதித்திக்கின்றது. மேலும் **ஸ்ரீ** தத்தாத்திரேய ஸம்ஹிதையிலும்,

**आचार्यानुग्रहादित्थं दीक्षितः साधकोत्तमः ।**
**अवश्यं महतीं सिद्धिं प्राप्नोत्यत्र न संशयः ॥**

"ஆசார்யரது அநுக்கிரஹத்தினால் இங்ஙனம் தீக்ஷையைப் பெற்ற ஸாதகோத்தமன் மேலாகிய பிரஹ்மாத்மைக்யமென்னும் ஸித்தியைத் தடையின்றி யடைகின்றான். இதில் ஸந்தேகமில்லை" என்று கூறப்பட்டுள்ளது இங்கறியத்தக்கது.

குருவரணம்.

"तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ।" "आचार्यवान् पुरुषो वेद"

*என்னும் ஶ்ருதிகளின்படியும்,*

ऐक्यपरैः श्रुतिवाक्यैरात्मा शश्वत्प्रबोध्यमानोऽपि ।
देशिकदयाविहीनैरपरोक्षयितुं न शक्यते पुरुषैः ॥
विरहितकाम्यनिषिद्धो विहितानुष्ठाननिर्मलस्वान्तः ।
भजति स्वयमिव बोधं गुरुणा किमिति त्वया न मन्तव्यम् ॥
कर्मभिरेव सुबोधः प्रभवति गुरुणा विना दयानिधिना ।
आचार्यवान्हि पुरुषो वेदेत्यर्थस्य वेदसिद्धत्वात् ॥

(आत्मानुभवतारावली)

*என்னும் ஸ்ரீஶங்கரபகவத்பாதாளின் வாக்கிஞலும்,*

यस्य संदर्शनादेव कामक्रोधकुलक्षयम् ।
सर्वमङ्गळमप्येति तस्मै श्रीगुरवे नमः ॥
यस्याभिवादनादेव भवबन्धभयक्षयम् ।
सर्वमर्माणि पश्यन्ति तस्मै श्रीगुरवे नमः ॥
यस्यानुग्रहमात्रेण जीवन्मुक्तो भवेन्नरः ।
ब्रह्मात्मज्ञानसंसिद्धस्तस्मै श्रीगुरवे नमः ॥
यदबोधादिदं भाति यद्बोधाद्विनिवर्तते ।
स्वप्नवत्सकलं विश्वं तस्मै श्रीगुरवे नमः ॥ (गुरुगीता)
गुरूपदेशशास्त्रार्थैर्विना नात्माऽवबुध्यते ।
एतत्संयोगसत्त्वैव स्वात्मज्ञानप्रकाशिनी ॥

गुरुशास्त्रार्थशिष्याणां चिरसंयोगसत्तया ।
अहनीव जनाचार आत्मज्ञानं प्रवर्तते ॥
दुर्लभो विषयत्यागो दुर्लभं तत्वदर्शनम् ।
दुर्लभा सहजावस्था सद्गुरोः करुणां विना ॥
श्रीगुरुकृपया नावा प्राक्तनभाग्यप्रवृद्धमारुतया ।
दुस्सहदुःखतरङ्गस्तुङ्गः संसारसागरस्तीर्णः ॥
तस्माद्गुरुं प्रपद्येत जिज्ञासुः श्रेय उत्तमम् ।
शाब्दे परे च निष्णातं ब्रह्मण्युपशमाश्रयम् ॥

என்னுங் குருகீதை, ஞானவாஸிஷ்டம், ஸ்ரீபாகவதம் முதலியவற்றின் பிரமாணங்களாலும் குரு அத்தியாவஶ்யமென்பது சித்திக்கின்றது. இங்ஙனம் குருவின் ஆவஶ்யகத் தன்மையை யுணர்ந்தவனுய் ஸ்ரீவித்யாதீக்ஷையைப் பெறுதற்குத் தீர்மானித்து, ஸத்குருவின் பாலணுகி ஸாஷ்டாங்கமாய்ப் பிரணமம் செய்து அவரைக் குருவாக வரித்தல் வேண்டும்.

குருவானவர் சிஷ்யனை அங்கீகரித்தபின்னர், முதலில், திரைபுரஸித்தாந்தத்தைச் சிஷ்யனுக்குச் சிரவணம் செய்வித்தல் வேண்டும்.

## तत्रायं सिद्धान्तः ।

என்பது பரசுராமகல்பஸூத்திரம். த்ரைபுரஸித்தாந்தமென்பது சாரீரகமீமாம்ஸையேயாகும். ஸ்தூல ஸூக்ஷ்ம காரணசரீரங்களில் எந்த ஸம்வித்தானது ஸாக்ஷிரூபமாய் விளங்குகின்றதோ அதுதான் த்ரைபுரமென்பதாகும்; சாரீரகமென்பதன் பொருளுமிதுவேயாம்.

**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म ; एकमेवाद्वितीयं ब्रह्म ; आनन्दो ब्रह्म**

என்னும் ஶ்ருதிகளாலும்,

**नित्यं निर्दोषगन्धं निरतिशयसुखं ब्रह्मचैतन्यमेकम् ।**

என்னும் பிரமாணத்தினாலும் உள்ளது ஒரே வஸ்து. அதுதான் பிரஹ்மமென்றும், சிவமென்றும், ஆத்மாவென்றும், பரவாஸுதேவனென்றும், தேவியென்றும், பிரகாசமென்றுங் கூறப்படும். **सदेव सोम्येदमग्र आसीत् ।** இத்தகைய சிவம்தான் பிரபஞ்ச சிருஷ்டிக்கு முன்னர் இருந்தது. சிருஷ்டியாதற்குமுன் இப்பிரபஞ்சம் பிரகாச வடிவ சிவத்தில் அடங்கியிருந்தது. பிரபஞ்சம் லீனமாயுள்ள அவஸ்தைக்குப் பிரளயமென்று பெயர். இவ்வவஸ்தையைச் சாஸ்திரப் பிரமாணமொன்றினாற்றான் அறியமுடியும். எங்ஙனம், ஜீவன், பிராக்ஞரூபனாய் ஸம்பிரஸாதமென்று கூறப்படும் ஸுஷுப்தியவஸ்தையில், காணப்படுவதும் காட்சியுமற்றுத் தான்மாத்திரமாய் விளங்குகின்றானோ, அங்ஙனமே, பிரளயத்தில் பரப்பிரஹ்மம் கேவல நிஜரூபத்தோடு விளங்குகின்றது. பிரளயத்தில் ஜீவராசிகளும் அவற்றின் தர்மாதர்மரூப அத்ருஷ்டமும், பஞ்சபூதங்களும் ஆலம்விதையிலடங்கியுள்ள ஆலமரம் போல் பரமேஶ்வரனிடத்தில் அதிஸூக்ஷ்மமாயடங்கியிருக்கின்றன.

இங்ஙனமிருக்க, அநாதியாயுள்ள ஜீவர்களின் தர்மாதர்மரூப அத்ருஷ்டம் பலன்தர ஸம்முகமானபோது பரமேஶ்வரனுக்கு ஜகத்தைச் சிருஷ்டிக்கவேண்டுமென்னு மெண்ணமுண்டாகின்றது. **तदैक्षत बहु स्यां प्रजायेय ।** இந்த எண்ணத்திற்குத்தான் ஈக்ஷணம், காமம், தபஸ், விசிகீர்ஷையென்னும் பெயர்கள் அமைந்துள்ளன. இது,

**स ईक्षत लोकान्नु सृजा इति । सोऽकामयत । बहु स्यां प्रजायेयेति । तपसा चीयते ब्रह्म ।**

என்னும் ஶ்ருதிகளால் ஏற்படுகின்றது. பரமேஶ்வரனுடைய ஈக்ஷணம் காமம் முதலியவற்றிற்குச் சாந்தா சக்தியென்று மற்றொரு பெயருண்டு. இந்த சாந்தா சக்தியானது இச்சா-ஞான-க்ரியைகளின் ஸமஷ்டி வடிவமாகும். இவ்விச்சா-ஞான-க்ரியாசக்திகளின் காரியமே இப்பிரபஞ்சமாகும். **षट्त्रिंशत्तत्वानि विश्वम् ।** சிவதத்வம் முதல் ப்ரிதிவீ தத்வமீறாகவுள்ள முப்பத்தாறு தத்வஸ்வரூபமே இப்பிரபஞ்சமாகும்.

தத்வசப்தார்த்த நிரூபணம்.

**आप्रळयं यत्तिष्ठति सर्वेषां भोगदायि भूतानाम् ।**
**तत्तत्त्वमिति प्रोक्तं न शरीरघटादि तत्वमतः ॥**

ஸூதஸம்ஹிதை.

எவை, போக்தாக்களான ஜீவர்களுக்குப் போகஸாதனங்களாயும், போக்கியமாயும், போகநிமித்தங்களாயும், போக்த்ருதர்மமாயும் இருந்து பிரளயம்வரை விளங்குகின்றனவோ அவற்றிற்குத் தத்துவங்கள் என்றுபெயர்.

சிலசாஸ்திரங்களி லிவை மேற்கூறியபடி, பூமி முதல் சிவமீறாகவுள்ள முப்பத்தாறு தத்வங்களென்றும், சில சாஸ்திரங்களில் இருபத்தினான்கென்றும் கூறப்படுகின்றன. இங்ஙனம் பற்பலவகையாய்க் கூறப்படினும், இவை ஆத்மதத்துவம், வித்யாதத்வம், சிவதத்வம் என மூன்று பெரும் பிரிவுகளையுடையனவாகும். தத்துவங்கள் முப்பத்தாறெனக்கூறும் சைவ சாக்த சாஸ்திரங்கள், பூமி முதல் ப்ரக்ருதிவரையுள்ள இருபத்தினான்கை ஆத்மதத்வமென்றும், புருஷன் முதல் மாயைவரையிலுள்ள ஏழு

தத்துவங்களை வித்தியா தத்துவமென்றும், சுத்தவித்தை முதல் சிவம்வரையிலுள்ள ஐந்து தத்வங்களைச் சிவதத்வ மென்றும் கூறுகின்றன. இவற்றில் ஆத்மதத்வம் ஜடஸ்வ ரூபமானவை; வித்யாதத்துவம் சுத்தமாகவுள்ள ஜடத் துவமும், ஸ்வச்சமாயிருக்குங்காரணத்தால் அதில் பிரதி பலிக்கும் பிரகாசம் அல்லது சேதனத்துவமுமாகும் இவற்ரோடு கூடியுள்ளது. சிவதத்துவமோவெனின் சேதன ஸ்வரூபமேயாகும். இவற்றைப் பற்றிய விரிவான விமர் சம் இந்நூலாசிரியராலியற்றப்பட்ட குருதத்துவ விமர் சத்தில் காண்க.*

### முப்பத்தாறு தத்வங்களின் விளக்கச் சுருக்கம்.

ப்ரிதிவிமுதலிய பூதங்கள் ஐந்து; கந்தம் முதலிய தன்மாத்திரைகள் ஐந்து; வாக்கு பாணி முதலிய கர்மேந் திரியங்கள் ஐந்து; கண் காது முதலிய ஞானேந்திரியங் கள் ஐந்து; (ரஜோகுணப் பிரதான அஹங்கார விருத்தி யொன்று; ஸத்துவகுணரூப புத்திவிருத்தியொன்று; தமோகுணப்பிரதான மனோவிருத்தியொன்று, ஆக) அந்தக்கரணவிருத்திகள் மூன்று; குணஸாம்மிய ரூப ப்ரக்ருதியொன்று; ஆக இருபத்திநான்கும் ஜடஸ்வரூப ஆத்மதத்துவமெனப்படும். இதுதான் போகாயதன சரீர வடிவமாகும். சித்தத்தோடுகூடிய புருஷனே ஜீவனுவன். இவனே கர்த்தாவும்போக்தாவுமாவன். அகர்த்தாவாயும் அபோக்தாவாயுமுள்ள ஆத்ம ஸ்வரூபத்திற்குக் கர்த்ருத் துவமும் போக்த்ருத்துவமும் மாயையாலேற்பட்டன வாகும். ஆதலின் இவை கற்பிதம். ஜகத் ஜீவ பரர்களுக் குப் பரஸ்பரம் பேதமுண்டென்னும் மயக்கம் மாயையா

* இது சென்னை பிரஹ்மவித்தியா விமர்சினீ ஸபை யாரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

லேற்பட்டதேயாகும். கலை, அவித்தை, ராகம், காலம், நியதியென்னும் ஐந்து தத்துவங்களும், பிரக்ருதியை விடப் பின்னனுயும், சித்து, ஆநந்தம், இச்சை, ஞானம், கிரியையென்னும் ஐந்தும் பரிபூர்ணமாய் விளங்கும் ஸ்வபாவமுடையவனுயுமுள்ள புருஷனை மறைக்கின்றன.

1. ஸர்வ கர்த்ருத்வரூப கிரியாசக்தியைக் குறைப்பது கலாதத்துவமாகும்.

2. ஸர்வக்ஞரூப ஞானசக்தியைக் குறைப்பது அவித்யா தத்துவமாம்.

3. நித்யதிருப்தி வடிவ இச்சாசக்தியை ஸங்கோசப்படுத்துவது ராகமென்பதாம்.

4. நித்தியத்துவஸ்வரூப சித்சக்தியை அபிபவப்படுத்துவது காலதத்துவமாகும்.

5. ஸ்வதந்த்ரரூப ஆநந்தசக்தியை மறைப்பது நியதி தத்துவமாகும்.

ஜகத் ஜீவ பரர்களின் பரஸ்பரபேதத்தை யொழிப்பது சுத்தவித்தையாகும். நாமரூபபேதத்தோடு தோற்றும் இப்பிரபஞ்சாதாரமாகும் ஸாமான்யசேதன இதந்தாரூப ஞானமே ஈஸ்வரதத்துவமாம். இந்த ஸத்தாஸாமான்யரூப இதந்தை ஏகமும் வியாபகமுமாகும். இவ்விதந்தாரூப ஆதாரத்திற்றான் நாமமும் ரூபமும் கற்பனையாய்த் தோன்றுகின்றன. பிரபஞ்சாதாரரூப ஸாமான்ய சேதனத்தில் ஸத்து, சித்து, ஆநந்தவடிவ அஹந்தாரூப ஞானம் ஸதாசிவ தத்துவத்தினுலேற்படுகின்றது; என்றால் "எல்லாம் என்வடிவமே" யென்னும் உணர்ச்சி ஸதாசிவதத்துவமாகும். பரசிவஸ்வரூபத்திலுள்ள ஜகத்ஸிஸ்ருக்ஷையே சக்தி தத்துவமாகும். ஸிஸ்ருக்ஷாரூபஜடோபாதிவிசிஷ்ட சித்சக்தியபின்ன பரசிவஸ்வரூபமே சிவதத்துவமாகும்.

குறிப்பு:—ஆத்ம மாயா (கற்பித) ஸம்பந்தத்தினுல் பர சிவனுக்கும் ஜீவ சிவனுக்கும் பேதமேற்பட்டுப் பர சிவத்தின் தர்மங்களான ஸ்வாதந்த்ர்யம், நித்தியத்துவம், நித்தியதிருப்தி, ஸர்வக்ஞத்துவம் ஸர்வகர்த்ருத்துவம் என்பவை அபிபவமடைந்து (மழுங்கி) முறையே, நியதி, காலம், ராகம், அவித்யை, கலையென்னும் தத்துவங்கள் ஏற்படுகின்றன. இவைகளுக்குக் கஞ்சுகங் (மறைப்பு) களென்று பெயர். இக்கஞ்சுகங்கள் கற்பனை — மாயா காரியங்களாதலின்—இவற்ருல்தான் ஜீவன் ஜனனமரண ஸம்ஸாரரூப பந்தங்களால் மொத்துண்டு வருந்துவது. இவற்றைச் சுத்தவித்தையாகும் தத்துவஞானத்தினுல் நிவர்த்தித்துக் கொண்டபோது பரசிவமாகவே ஜீவன் விளங்குகின்ருன்.

## शरीरकञ्चुकितः शिवो जीवो निष्कञ्चुकः परशिवः ।

### ஜீவேஶ்வரஸ்வரூபம்.

சிவாதி அவனிபர்யந்தமான தத்துவக்கூட்டங்களில் புருஷரூப ஜீவனும் சிவமும் உள்ளடங்கினவர்களாதலின் இவர்களுக்குப் பரஸ்பரம் பேதமேற்படுகின்றது. இங்ஙன மாயின், அத்வைத ஸித்தாந்தத்திற்கு ஹாநி ஏற்படு மல்லவா? எனின், அங்ஙனமன்று. ஸச்சிதாநந்த அநந்த சுத்தஸ்வதந்த்ரஸ்வரூப பரசிவமானது தனது துர்க்கட மான மாயையால் தனது பூர்ணத்துவத்தையும் ஸ்வதந் திரத்தையும் மறைத்துக்கொள்ளுகின்றது. ஸ்வாதந்த்ர்யம் மறைக்கப்பட்டுள்ள நிலைக்கு ஆணவமல மென்று பெயர். "பரசிவம் தனது பூர்ணஸ்வாதந்த்ர்யத்தைத் தனது மாயை யாலெங்ஙனம் மறைத்துக்கொள்ள முடியுமெனின் அது கூறப்படுகின்றது. சூரியன் தனது கிரணங்களாலுண் டான மேகங்களால் மறைக்கப்படுவதுபோல வாகும்.

மேகங்கள் ஸூர்யனை மறைத்தாலும் சூரியனுடைய பிரகாசத்திற்கு யாதொரு ஹாநியுமின்றல்லவா? அங்ஙனமே மாயையால் பரசிவத்தின் பூர்ணஸ்வாதந்த்ர்யம் மறைக்கப்படினும் சிவஸ்வரூபத்திற்கு யாதொரு ஹாநியுமில்லை. மேகமும் மாயையும் உபாதிகள். உபாதிகள் வாஸ்தவமன்று. மாயை அத்தியஸ்தமாயினும் அது அபாரஸாமர்த்தியமுடையதாகும். **अघटितघटनापटीयसी माया** என்பது பிரமாணமாகும். ஸர்வவியாபகத்துவம் மறைபட்டுப் பரிச்சின்னத்துவம் ஏற்படுகின்றது. இதற்கு மாயிகமலமென்று பெயர். பரிச்சின்னபாவம் ஏற்பட்டு அதனால் பேதவுணர்ச்சியும், அதனால் அநுகூலப் பிரதிகூல பாவமும், அதனால் பிரவ்ருத்தி நிவ்ருத்திரூப சுபாசுபகர்மகர்த்ருத்துவமுமுண்டாகின்றன. இதற்குக் கார்மிகமலமென்று பெயர். ஆணவம், மாயிகம், கார்மிகமென்னும் மும்மலங்களே சரீரத்திரயங்களாகும். மறைப்புக்களாகும் சரீரங்களோடு கூடிய சிவமே ஜீவனெனப்படுவன்; மறைப்புக்களற்றவன் பரசிவன்.

## स्वविमर्शः पुरुषार्थः ।

பரசிவஸ்வரூப தன் யதார்த்தஞானமே பரமபுருஷார்த்தமாம். இது "ஸோஹ" மென்னும் பிரத்தியபிக்ஞையேயாகும். இது, தன் கழுத்திலணிந்துள்ள ஹாரத்தை மறந்து அதை எங்கேயோ வைத்துவிட்டதாகப் பிரமித்து அங்குமிங்கும் தேடியலையும்போது, ஒரு ஆப்தனால், கழுத்திலிருப்பதாக நினைப்பூட்டப்பட்டபோது கழுத்தைத் தொட்டுப் பார்த்து, மாலையிருப்பதாக அறிவது போல, மறந்துள்ள தனது நிஜவடிவத்தை ஞாபகப்படுத்திக்கொள்வதாகும். இதுதான் பரம புருஷார்த்தமாம்.

இது அக்ருத்ரிமம். இத்தகைய புருஷார்த்தத்தினடைவு ஈஸ்வராநுக்கிரஹமின்றி யேற்படாது.

ईश्वरानुग्रहादेव पुंसामद्वैतवासना ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ।

என்பவை ஸ்மிருதிப் பிரமாணங்களாம். ஈஸ்வராநுக்கிரஹம் ஈஸ்வர உபாஸனையாலுண்டாகின்றது. ஆதலின் ஈஸ்வரோபாஸ்தியானது, மோக்ஷமாகும் பரம புருஷார்த்தலாபத்திற்குச் சிறந்த ஸாதனமாயிருக்கின்றது.

உபாஸனையின் ஸ்வரூபம்.

உபாஸனை யென்பது ஈஸ்வரப்பிரணிதான மெனப்படும். பரமேஸ்வர வாசகங்களாகும் பிரணவம், காயத்ரி முதலிய மஹாமந்த்ரங்களை ஜபித்து, அவற்றின் அர்த்தத்தை அநுஸந்தானம் செய்தலும், ஸர்வப் பிரபஞ்சத்தையும் ஈஸ்வர வடிவமாய்ப் பார்த்தலும், பஞ்ச ஞானேந்திரியங்களால் அநுபவிக்கப்படும் ஸர்வ விஷயங்களையும் சிவாராதனமாய்க் கருதுதலும் ஈஸ்வரப் பிரணிதானமாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. पूजा ते विषयोपभोगरचना என்பது பிரமாணம். ஈஸ்வரப் பிரணிதானத்தில் மந்த்ரஜபமும் அதன் அர்த்தாநுஸந்தானமும் முக்கியமானவை. மந்த்ரங்கள் ஈஸ்வர வாசகங்கள். அவை வர்ணாத்மகமானவை.

वर्णात्मका नित्याः शब्दाः । मन्त्राणामचिन्त्यशक्तिता ।

அகாராதி க்ஷகாராந்த வர்ணரூப சப்தங்கள் நித்தியமானவை; ஆதலாற்றான் அவற்றிற்கு அக்ஷரங்களென்னும் பெயர் வழங்குகின்றது. மந்த்ரங்களுக்குள்ள ஸாமர்த்தியம் இத்தகையதென்று மனத்தினாலும் நினைத்தற்கரியது. மாயை அல்லது அவித்தை யெங்ஙனம்

ஸம்பவிக்கக்கூடாதவற்றை யெல்லாம் ஸம்பவிக்கும்படி செய்கின்றதோ, அங்ஙனமே, அம்மாயை அல்லது அவித்தையை யொழிக்க வல்ல மஹாமந்த்ரங்களுக்கு அபார சக்தியுண்டு. இத்தகைய அபாரசக்தியுள்ள மந்த்ரஸித்தி யாருக்குண்டாகும்? எனின்,

**संप्रदायविश्वासाभ्यां सर्वसिद्धिः ।**

குருபரம்பரையில் தொன்றுதொட்டு ஆசரித்து வந்த ஆசாரங்களை யநுசரித்து நடந்து கொள்வதனுலும், குருமுகததினுலும் சாஸ்திர மூலமாயும் மந்த்ரங்களுக்கு அளவிடமுடியாத சக்தியுண்டெடன அறிந்து அதை விஸ்வாஸத்தோடு நம்பி யுபாஸிப்பதனுலும், ஸர்வஸித்தியென்னும் ஆத்மஸ்வரூப ஸித்தியுண்டாகின்றது. இதற்குப் பிரமாணம் யாது?

**विश्वासभूयिष्ठं प्रामाण्यम् ।**

ஒருவிஷயத்தில் இதரர்களால்பேதிக்கமுடியாத திடமான விஸ்வாஸம்தான் பிரமாணத்தன்மையின் லக்ஷணமாகும்.

**शास्त्रैकगम्या ये ह्यर्था न तांस्तर्केण दूषयेत् ।**

என்பது சாஸ்திரம். இங்ஙனம் குருபரம்பராதர்மசீலனுய்த் திடமான விஸ்வாஸத்தோடு மந்த்ரோபாஸனை செய்யுங்கால் அவ்வுபாஸ்திக்கு முக்கிய ஸஹகாரியாயுள்ளதெது வெனின் அது கூறப்படுகின்றது.

**गुरुमन्त्रदेवतात्ममनःपवनानामैक्यनिष्फालनादन्तरात्मवित्तिः।**

குரு, மந்த்ரம், தேவதை, உபாஸகனுனதான், தன் மனம், தனது பிராணன் இவற்றின் ஐக்கியபாவனையால் பிரத்தியகாத்மாவின் அபரோக்ஷ ஞானமுண்டாகின்றது.

"तरति शोकमात्मवित्" ஆத்ம ஞானத்தினால்தான் சோக நிவ்ருத்திரூபமோக்ஷம் அடையப்படுகின்றது. பின்னமாய்த் தோன்றும் வஸ்துக்களுக்குத்தான் ஐக்கியம் கூறுதல் வேண்டும். பேதம் வாஸ்தவமாயின் ஐக்கியரூப அபேதம் பொருந்தாது. ஆதலின் பேதம் மித்தியை. பரிச்சின்னப் பொருள்களிற்றான் பேதம் தோன்றுகின்றது. பரிச்சேதத்தையுடையது பரிச்சின்னமெனப்படும். பரிச்சேதம் மூன்றுவகைப்படும். அவை கால, தேச, வஸ்து பரிச்சேதங்களாகும். என்றும், எங்கும், எல்லாமாயுமுள்ள ஆத்மா அல்லது பிரஹ்மமே எவ்வகை பரிச்சேதமுமற்ற தாகும். இதுதான் அபேதஸ்வரூபம்.

தோன்றி, இருந்து, அழியும் பொருள் காலபரிச்சேதமுடையதாம். அவயவங்களோடு கூடி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திலில்லாதபொருள் தேசபரிச்சேதத்தோடு கூடியதாகும். "கடம் படமன்று" என்னும் அந்யோந்யாபாவத்தோடுகூடியவை வஸ்துபரிச்சேதமுடையனவாகும். இவ்வஸ்துபரிச்சேதமும் ஸஜாதீயம், விஜாதீயம், ஸ்வகதம் என்னும் பாகுபாட்டால் மூன்று பிரிவுகளை யுடையதாகும். மனிதனுக்கு மனிதனோடுள்ள பேதம் ஸஜாதீய பேதமென்றும், மனிதனுக்கு மிருகத்தோடுள்ள பேதம் விஜாதீய பேதமென்றும், மனிதனது அவயவங்களுள் ஒன்றற்கு மற்றொன்றோடுள்ளபேதம் ஸ்வகதபேதமென்றுங் கூறப்படும். இவை யாவும் மனோகற்பிதங்களே யாகும். அபரிச்சின்ன (அபேத) ஸ்வப்பிரகாச சிவஸ்வரூப ஆத்மாவினிடத்தில் பரிச்சின்ன(பேத)ங்கள் மனத்தினாலும் பிராண சலனத்தினாலும் கற்பிக்கப்பட்டனவென்பது மறுக்கமுடியாத ஸித்தாந்தமாம்.

## காலதேசங்களின் கற்பனையின் விவரம்.

புருஷனது இச்சையால் வாயு சலிக்க ஆரம்பிக்கின்றது. சலனமற்ற சப்தப் பிரஹ்மம் பராஸ்தானத்திலுள்ளது. பிராணஸ்பந்தவடிவ சலனமேற்படும்போது காலம் அறியப்படுகின்றது. அப்போதே மனமும் உண்டாகின்றது. இது நாபிஸ்தானத்தில் விளங்குவதாகும். தேச வியவஸ்தா ஞானமும் இங்கேதான் கற்பிக்கப்படுகின்றது. இங்ஙனம் காலமும் தேசமும் கற்பிக்கப்படுவதற்கு ஆதாரமாயுள்ளவை வர்த்தமானமாகும் பிராணசலனமும் மனோஸங்கல்பமுமேயாகும். பிராணஸ்பந்தத்தோடு கூடிய மனோவ்ருத்தியுள்ளபோதுதான் காலதேசவர்த்தமான ஸ்வரூப(காலதேசவஸ்து)பரிச்சேதங்கள் தோன்றும். இதைப் பற்றிய விசேஷவிசாரம் ஸூதஸம்ஹிதை சக்திபூஜாத்தியாயத்தில் நன்கு செய்யப்பட்டுள்ளது. அதைக் கண்டு தெளிக. மனத்தையும் பிராணனையும் அசையவொட்டாமல் பராஸ்தானத்தில் நிறுத்தி, மனோவிருத்திகளை நிரோதித்துப் பிராணனைக் கும்பகம் செய்யின், தேசகாலவஸ்து பரிச்சேத அநாத்ம விருத்திகள் ஒழிந்து அபேதஸ்வரூப அந்தராத்மா அபரோக்ஷமாகும். பரிச்சின்ன பேததர்சனாபாவத்தால் இங்ஙனம் அபரோக்ஷமா யறிந்த தன் நிஜ ஸ்வரூபத்தோடு குரு, மந்த்ரம், தேவதை யென்பவையும் அபேதமாய்ப் புலப்படும்.

இதுகாறும் மந்த்ரோபாஸனை கூறப்பட்டது. இனி பூஜாரூப உபாஸனை கூறப்படுகின்றது.

**आनन्दं ब्रह्मणो रूपं तच्च देहे व्यवस्थितम् ।**
**तस्याभिव्यञ्जकाः पञ्च मकाराः ।**
**तैरर्चनं गुप्त्या । प्राकट्यान्निरयः ।**

" विज्ञानमानन्दं ब्रह्म " என்னும் ஶ்ருதிப் பிரமாணப்படி பரசிவம் அறிவாநந்தவடிவினதாகும். அது அஞ்ஞானத்தால் ஆவரிக்கப்பட்டபோது சித்ரூபமும், துக்கத்தினல் ஆவரிக்கப்பட்டபோது ஆநந்தமும் அறியப்படுவதில்லே. ஆணவம், மாயிகம், கார்மிகமென்னும் மும்மல வடிவ ஸ்தூலஸூக்ஷ்ம காரணசரீரங்களால் பரசிவம் பரிச்சின்னப் பட்டதுபோல் தோன்றும்போது அதன் நிஜஸ்வரூபமாகும் சிதாநந்தங்கள் தோற்றுவதில்லே.

அப்பொழுது அச்சிதாநந்தங்களின் அபிவியஞ்சகங்கள் ஐந்து மகாரங்களாகும். மகார பீஜமானது புருஷன் அல்லது ஜீவஸ்வரூபத்தைக் குறிப்பிப்பதாகும். கண் காது முதலிய பஞ்சேந்திரியங்களால் அறியப்படும் சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தவடிவ பிரபஞ்சமே ஜீவபோக்கியமெனப்படும். பஞ்ச தன்மாத்திரைகளாகும் போக்கியங்களே பஞ்சமகாரங்களாமேன்பது பரம ரஹஸ்யார்த்தமாம். போக்கியங்களாகும் பாஞ்சபௌதிக பஞ்சமகாரங்களே பூஜாத்திரவியங்களாம். எந்த எந்த இந்திரியத்திற்கு எந்த எந்த விஷயம் யோக்கியமோ, அந்த அந்த விஷயத்தை அந்த அந்த இந்திரியத்தாலுணர்ந்து மனத்தாலநுபவித்துக் கொண்டு பாஹ்யவிருத்தியற்றுச் சொக்கி நிற்கும் நிலேயில் சிவாநந்தம் ஸ்புரிக்கும். இது தான் பராபூஜை.

**श्रोत्रादीन्द्रियविषयशब्दाद्यनुभवजनितेन महदानन्देन समरसीकरणं परापूजेत्यर्थः ।**

(யோகினீ ஹ்ருதயம், அம்ருதாநந்த வ்யாக்கியானம்)

பரசிவத்தின் சிதாநந்தங்களின் ஸ்புரணத்திற்குப் பேதத் தோற்றமாகும் திரிபுடியற்று ஏகரஸமாய் விளங்கும் ஸாமரஸ்யவ்ருத்தியே காரணம்—**महदानन्देन समरसीकरण**

மென்று மேலே கூறப்பட்டது மிதுவே. பேதகாரணமாகும் நாமரூப நாட்டத்தையொழித்து அபேத தர்சன அகண்டாகாரவிருத்தியாலேற்படும் ஸாமரஸ்யமே அர்ச்சனையென்பதாம். இவ்வர்ச்சனை மிகவும் குப்தமானது; என்றால் மிகவும் ரஹஸ்யமானது. பரம ரஹஸ்யமான பிரத்தியகாத்ம ஸ்வரூபத்தில், விஷயங்களென்னும் உபாதிகளையொழித்து நிருபாதிக ஆநந்தத்தை ஐக்கியப் படுத்துதலால் அவ்வைக்கியத்திற்கு ரஹஸ்யம், கோப்பியம் என்னும் பெயர்கள் சாஸ்திரங்களில் கேழ்க்கப்படுகின்றன.

இங்ஙனம் விஷயாநந்தங்களை யுபாதிரஹிதமாக்கி ஆத்மாநந்தத்தோடு ஸமரஸப்படுத்தாது, பாஹ்ய பேத விருத்திகளோடுள்ள நிலைக்குப் பிராகட்யபாவ மென்று பெயர். பிரகடமாயுள்ள இப்பேத நாட்டத்தால் ஜனன மரண ஸம்ஸாரரூப நரகமே ஸித்திக்கின்றது. **"गुप्तो मुक्तः, प्रकटो भ्रष्टः"** என்னும் வாக்கியங்கள் இதற்குப் பிரமாணங்களாம்.

இங்ஙனம் உபாஸனையின் ஸ்வரூபம் கூறப்பட்டது. இனி உபாஸகனது தர்மங்கள் கூறப்படுகின்றன.

## भावनादार्ढ्यादाज्ञासिद्धिः ।

ஸச்சிதாநந்த ஆத்மாநுஸந்தானத்தின் தார்ட்டியத்தினால் நாமரூபபேத நிக்கிரகமும், ஸச்சிதாநந்த ஆத்மஸாக்ஷாத்காரலாபவடிவ அநுக்கிரகமும் உண்டாகின்றன. அத்தியாஸ நிவ்ருத்தியை நிக்கிரஹமென்றும், பாதிதாநுவ்ருத்திரூபமாய்த் தோற்றும் உலகத்தை அதிஷ்டானரூபமாய்ப் பார்க்கும் ஜீவன்முக்தி தசையை அநுக்கிரஹமென்றும் பெரியோர் கூறுவர். ஆதலின் உபாஸகன் நெடுநாள் இடைவிடாது விஸ்வாஸத்தோடு ஆத்மாநுஸந்தானம் செய்தல் அவசியம்.

सदा विद्यानुसंहतिः । सततं शिवतासमावेशः ।

மேலும், அவன் ஆத்மவித்யாஸ்வரூப மஹாவாக்கிய வடிவ பஞ்சதசீ மஹாமந்த்ரத்தை ஸதா ஜபித்துக் கொண்டு அதன் அர்த்தத்தை யநுஸந்தானம் செய்தல் அவசியமானது.

எப்பொழுதும் சிவத்தோடு தன்னை ஐக்கியஞ் செய்தல் அத்தியாவஶ்யமாகும்; என்றால் ஜீவப் பிரஹ்மைக்கிய வடிவ சிவோஹம் பாவனையை எப்போழுதும் செய்தல் வேண்டுமென்பது கருத்தாம்.

अगणनं कस्यापि । सर्वदर्शनानिन्दा ।

ஜீவப் பிரஹ்மைக்கியப் பிரதிபாதகங்களாகும் அத்யாத்ம ஞானசாஸ்திரத்திற்கு முரணுயுள்ள பேத (அநாத்ம) சாஸ்திரங்களையும், அவற்றைப் போதிப்பவரையும் பாராட்டுதல் கூடாது.

பேதத்தை யொழிப்பதையே பரமஸாதனமாயுடைய உபாஸகன் எந்த சாஸ்திரத்தையும் நிந்தித்துத் தாழ்த்திக் கூறுதல் கூடாது. நிந்தனை பேதவிருத்தியாலேற்பட்டதன்றோ? ஆதலின் எல்லாச் சாஸ்திரங்களிலும் பரசிவாபின்ன ஆத்ம ஸ்வரூபமே அதிஷ்டானமாயிருத்தலின், ஆத்ம திருஷ்டியில் எதுவும் ஹேயமல்லவென்றுணர்தல் அவஶ்யம்.

सच्छिष्ये रहस्यकथनम् ।

மபஞ்சகங்களாகும் விஷயாநந்தங்களின் ஸாமரஸ்ய வடிவ மஹா ரஹஸ்யத்தை, விவேக வைராக்கியாதி ஸாதனங்களைப் பெற்று, வேதாந்த சாஸ்திரங்களைச் சிரவணித்தவர்களாயுள்ள ஸச்சிஷ்யர்களுக்கே வெளியிடுதல் வேண்டும். மற்றவர்க்குரைத்தல் கூடாது.

## फलं त्यक्त्वा कर्मकरणम् । अनित्यकर्मलोपः ।

பயனைக் கருதாது ஸகலகர்மங்களையும் செய்தல் வேண்டும். நித்தியகர்மங்களைச் செய்யாமல் இருத்தல் கூடாது; என்றால், வர்ணாஶ்ரமங்களுக்குரித்தான நித்திய கர்மங்களை யவசியம் செய்தல் வேண்டுமென்பது கருத்தாம்.

இத்தகைய தர்மங்களை யுடையவனாய் காமக்குரோதாதி துர்க்குணங்களை யறவே விட்டொழித்து, விஷயப் பற்றையுமொழித்து, ஸர்வக்ஞனை ஒரொப்பற்ற குருவை யாஶ்ரயித்து, அவரைப் பரசிவ ஸ்வரூபமாய் உபாஸித்தல் அவசியம். உபாஸகனுக்குச் சிறந்ததாயுள்ள தர்மங்களி லெல்லாம் இது மிகச் சிறந்ததாகும்.

ஸர்வ ஸாரமாயுள்ள தர்மங்கள்.

## सर्वं वेद्यं हव्यम् । इन्द्रियाणि स्रुचः । शक्तयो ज्वालाः । स्वात्मा शिवः पावकः । स्वयमेव होता ।

அந்தக்கரணவிருத்தியினால் எவை யெவை அறியப் படுகின்றனவோ அவையாவும் ஹோமம் செய்தற்குரிய ஹவிஸ்ஸாகும். கண் காது முதலிய இந்திரியங்களே ஹவிஸ்ஸை அக்னியில் ஹோமம் செய்தற்கு ஆதாரமாயுள்ள ஸ்ருக் என்னும் பாத்திரவடிவினவாம். ஜீவபாவத்தில் அடங்கியுள்ள இச்சா ஞானக்கிரியா சிதாநந்த சக்திகளின் விஜ்ரும்பணமே (கிளர்ச்சியே) ஜ்வாலைகளாகும். சுத்த சைதன்னியப் பிரகாசரூப சிவாபின்ன விமர்சரூப் ஆத்மாவே அக்கினியாகும். பரிச்சின்ன சித்ரூப ஜீவ (உபாஸக)னே ஹோமம் செய்பவன். இங்ஙனம் ஸாதகன் ஸதாபாவித்தல் அவசியம்.

இங்ஙனம் கூறப்பட்டபடி பாவித்தலினுல் என்ன பயனுண்டாகுமெனின் அது கூறப்படுகின்றது.

निर्विषयचिद्विमृष्टिः फलम्। आत्मलाभान्न परं विद्यते।

நிருபாதிக சைதன்யவடிவ ஆத்மாபரோக்ஷமே இவ் வித்யோபாஸனையின் முக்கியப் பயனுகும். ஆத்மலாபத்தை விடச் சிறந்த மற்ரொருபயன் இருப்பதாகச் சாஸ்திரங் களில் எங்கும் அறியப்படவில்லை.

सैषा शास्त्रशैली।

இதுகாறுங் கூறப்பட்ட இவ்விஷயங்கள்தாம் த்ரை புரமென்னும் சாரீரக சாஸ்திர ஸித்தாந்தமாகும்.

இவ்வாறு ஸற்குருவானவர் சிஷ்யனுக்குத் த்ரைபுர ஸித்தாந்தத்தை யுரைத்துணர்த்தி ஸ்ரீவித்தையை உபதே சித்தல் அவஶ்யம். இங்ஙனம் தீக்ஷாதத்துவம் கூறப்பட் டது.

ஸங்கேதத்திரய தீக்ஷாதத்துவரூப பூமிகை முற்றிற்று.

## ॥ नवावरणपट्टिका ॥

| संख्या | आकृतिः | प्रकृतिः | बीजं | चक्रं | चक्रेश्वरी | योगिन्यः | देवताः | सिद्धिः | मुद्रा | | वासना |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | भूपुर | लं<br>पृथ्वीबीज | अं आं सौः | त्रैलोक्यमोहन | त्रिपुरा | प्रकट- | अणिमादि १०<br>ब्राह्म्यादि ८<br>सर्वसंक्षोभिण्यादि १० | अणिमा | सर्वसंक्षोभिणी | अज्ञानावस्थाः | जाग्रत् |
| II | षोडशदल | सं<br>चन्द्रबीज | ऐं क्लीं सौः | सर्वाशापरिपूरक | त्रिपुरेशी | गुप्त- | कामाकर्षिण्यादि १६ | लघिमा | सर्वविद्राविणी | | स्वप्नः |
| III | अष्टदल | हं<br>शिवबीज | ह्रीं क्लीं सौः | सर्वसंक्षोभण | त्रिपुरसुन्दरी | गुप्ततर- | अनङ्गकुसुमादि ८ | महिमा | सर्वाकर्षिणी | | सुषुप्तिः |
| IV | चतुर्दशार | ईं<br>कामकला | हैं हक्लीं ह्सौः | सर्वसौभाग्यदायक | त्रिपुरवासिनी | संप्रदाय- | सर्वसंक्षोभिण्यादि १४ | ईशित्व | सर्ववशङ्करी | ज्ञानभूमिकाः | शुभेच्छा – ईश्वरविचारः |
| V | बहिर्दशार | एं<br>विष्णवात्मक | ह्सैं ह्स्क्लीं ह्स्सौः | सर्वार्थसाधक | त्रिपुराश्री | कुलोत्तीर्ण-<br>(कुलकौलिक) | सर्वसिद्धिप्रदादि १० | वशित्व | सर्वोन्मादिनी | | ,, गुरूपसदनं |
| VI | अन्तर्दशार | रं<br>अग्निबीज | ह्रीं क्लीं ब्लें | सर्वरक्षाकर | त्रिपुरमालिनी | निगर्भ- | सर्वज्ञादि १० | प्राकाम्य | सर्वमहाङ्कुशा | | विचारणा श्रवणं |
| VII | अष्टकोण | कं<br>कामेश्वरबीज | ह्रीं श्रीं सौः | सर्वरोगहर | त्रिपुरासिद्धा | रहस्य- | वशिन्यादि ८ | भुक्ति | सर्वखेचरी | | तनुमानसी मननं |
| VIII | त्रिकोण | नाद<br>त्रिशक्तिबीज | ह्स्रैं ह्स्क्लरीं ह्स्रौः | सर्वसिद्धिप्रद | त्रिपुराम्बा | अतिरहस्य- | बाणादि ४<br>महाकामेश्वर्यादि ४ | इच्छा | सर्वबीज | | सत्त्वापत्तिः<br>असंसक्तिः } निदिध्यासनं |
| IX | बिन्दु | बिन्दु<br>परब्रह्मात्मक | पञ्चदशी | सर्वानन्दमय | महात्रिपुरसुन्दरी | परापराति-<br>रहस्ययोगिनी | महात्रिपुरसुन्दरी | प्राप्ति | सर्वयोनि | | पदार्थाभावना सविकल्पसमाधिः<br>तुर्यगा |
| | | | तुरीयविद्या | | समस्तचक्रेश्वरी | | तुरीयाम्बा | सर्वकाम | सर्वत्रिखण्ड | | सापेक्षिकनिर्विकल्पसमाधिः |

दृकादृष्टा दोषनिरसनं

1 ओं ऐं ह्रीं श्रीं ऐं क्लीं सौः

1\. हसखफ्रें पार्थिव देवताभ्यो
हुं फट् स्वाहा

2 ग्राम चण्डालिनी हुंफट् "

3 क्रोध चण्डालिनी – "

4 दृष्टि " " "

5 स्पर्श " " "

6 सृष्टि " " "

7 घट " " "

8 तपनवेद " " "

9 निर्देश " " "

10 सर्वजन दृष्टि स्पर्श दोष "

11\. पशु पाश चण्डालिनी "

इत्येकादश दोषापनिरस्य
क्रां क्रीं क्रूं क्रैं क्रौं क्रः
विकारश्चोषाणि. अस्य
विकारान् हन हन स्वाहा.

2 दिग्बन्धनम्

ऐं ह्रीं दशासबन्धेन नमः
चक्राय स्वाहा

आग्नेयी " " "
याम्यौ " " "
नैर्ऋती " " "
वारुणी " " "
वायवी " " "
कौबेरी " " 7
ईशानी " " "
ऊर्ध्वं " " "
अधरं " " "

Colours for
Sri Chakra by Arthur Avalon

1. Bindu — red
2. Trikona — white
3. Ashtakona - 8 red Δs.
   apurnam manyatha
   – lack of wholeness.
4. Antardasara - 10 blue Δs.
5. Bahirdasara - 10 red Δs.
6. Manvasra - 14 blue Δs
7. Ashtadala - 8 red petals
8. Shodasadala - 16 blue petals.
9. Bhupura - yellow surround

ॐ

श्रीपराभट्टारिकायै नमः ।

# ஸ்ரீவித்யாஸபர்யாவாஸனை.

श्रीविद्यामखिलागमान्तविदितब्रह्मस्वरूपां शिवां
सत्यज्ञानसुखां विशेषरहितामाद्यन्तहीनां पराम् ।
आत्मत्वेन विभावयन्नरवरः सद्यो विमुक्तिं गतोऽ-
प्यादेहान्तमुपासनैकरसिकः श्रौतं विधिं मानयेत् ॥

अथ वेदान्तसंसिद्धां ब्रह्मविद्यास्वरूपिणीम् ।
संविदाख्यां परां शक्तिं प्रज्ञानघनलक्षणाम् ॥
निष्कळां निष्क्रियां शान्तां निरवद्यां निरञ्जनाम् ।
दिव्याममूर्तचैतन्यस्वरूपां चित्सुखात्मिकाम् ॥
महावाक्यानुरोधेन ज्ञात्वा निस्संशयं ततः ।
साऽहमस्मीत्यभेदेन विविक्तस्था उपासते ॥

ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததியென்னும் நூலின் அத்வைத வியாக்கியானரூப வாஸனை விமர்சிக்கப்படுகின்றது.

முதல் கண்டம். (१–१०)*

यागमन्दिरप्रवेशादि चक्रपूजान्तम् ।

---

* இந்த எண்கள் ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததியில் இந்த விஷயமுள்ள பக்கங்களைக் குறிப்பிடுகின்றனவென்று அறியவும்.

பிரஹ்மவித்யா ஸம்ப்ரதாய குருஸ்தோத்திரம். (௧)

முன், தீக்ஷாதத்துவத்தில் கூறப்பட்டபடி, ஸ்ரீவித்தையே பிரஹ்மவித்தை யாதலின் பிரஹ்மவித்யா ஸம்பிரதாயமே ஸ்ரீவித்யாஸம்பிரதாயமாகும். ஸம்ப்ரதாய பாரம்பர்யகுரூபாஸ்திதான் ஸ்ரீவித்தையின் பிராணரூபமானது. இவ்விஷயம் ஸ்ரீகுருதத்வ விமர்சத்தில் நன்கறிக.

யாகமந்திரப் பிரவேசம். (௨)

**अथ मौनवान् यागमन्दिरमागत्य ।**

"பின்னர் ஸாதகனான முமுக்ஷுவானவன், மௌனத்தோடு யாகமந்திரத்தை யடைந்தவனாய்" என்பது நித்தியோத்ஸவகாரரது வாக்கியமாகும்.

**अथ**=பின். எதற்குப் பிறகு? எனின், ஆத்மாபரோக்ஷத்தில் ஜிக்ஞாஸையையுடைய தீவிரதரமுமுக்ஷுவானவன் பிரஹ்மாத்மைக்கிய அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தில் தனக்குள்ள பிரபல பிரதிபந்தகங் (தடை) களை நிவர்த்தித்துக் கொள்ளுதற்குப பிரஹ்மவித்தையென்னும் ஸ்ரீவித்தியோபதேஷ்டாவாகிய பிரஹ்மநிஷ்டகுருவை யடைந்து, அவரது அநுக்கிரஹத்தைப் பெற்று மஹாவித்தையை ஸ்வீகரித்துக்கொண்டதற்குப் பின் என்பதாகும்.

**मौनवान्** = மௌனத்தோடு கூடியவனாய்.

மனோவாக் காயமென்னும் திரிகரணங்களையும் அடக்கி அவற்றை அவற்றின் வியாபாரங்களினின்றும் திருப்பி, அதாவது, சரீரம் சேஷ்டிக்காமலும், வாய் பேசாமலும், மனம் அநாத்மப் பிரபஞ்சத்தை நினைக்காமலும் அவற்றைத் தடுத்து பிரஹ்மாபின்ன பிரத்யகாத்மாவை நாடுதலே மௌனமாகும்.

மௌன லக்ஷணம்:

**यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेत् ज्ञान आत्मनि ।**

**ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥**

என்பதும்,

**कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन् ।**

என்பதும் மௌன நிலையை நன்கு விளக்கும் பிரமாணங்களாம்.

**यागमन्दिरमागत्य** = யாகசாலையை அடைந்து.

யாகசாலையென்பது ஜீவப்பிரஹ்மைக்கிய அநுஸந்தானம் செய்தற்குரிய அகண்டாகார விருத்தியோடு கூடிய சுத்தமனமேயாகும்; அல்லது, இவ்வகண்டாகார விருத்திக்கு விஷயமான திரிசிய (போக்கிய) ப்பிரபஞ்சமும், விஶ்வ, தைஜஸ, பிராக்ஞனென்னும் போக்தாக்களும், ஸ்தூலம், பிரவிவிக்தம், ஆநந்தம் என்னும் போகங்களும் கூடிய திரிபுடியே யாகமந்திரமா மென்று கூறுதலுமுண்டு. நமது சரீரமே யாகசாலையாகுமெனினும் பொருந்தும்.

யாகம், யக்ஞம், அத்வரம். என்பன பரியாய நாமாக்களாம்.

**यज देवपूजासंगतिकरणदानेषु ।**

**अध्वानं वैदिकमार्गं राति ददातीति अध्वरः ।**

என்பனவற்றால், வேதங்களின் பரம தாத்பர்யமாகும் ஜீவப் பிரஹ்மைக்கிய அத்வைதரூப அபயஸ்வரூபத்தை யடைதற்கு, ஸ்வயம்பிரகாச ஆத்மாபின்ன பிரஹ்மத்தைக் குருபதேசத்தாலும், ஶ்ருதி யுக்திகளாலும் விசாரித்து அத்தியாஸவடிவ ஸகல அநர்த்தங்களையும் சிதக்னியில் ஹோமம் செய்வதே யாகமெனப்படும்.

இது ஞானயக்ஞமெனப்படும். யக்ஞம் இரண்டு வகையாகும். கர்மயக்ஞம் ஒன்று ; ஞானயக்ஞம் மற்றொன்று. இவற்றுள்,

**श्रेयान्द्रव्यमयाद्यज्ञात् ज्ञानयज्ञः परंतप ।**

என்னும் பகவத்கீதா வசனத்தின்படி ஞான யக்ஞமே மேலானது.

**अथेदानीं प्रवक्ष्यामि ज्ञानयज्ञस्य वैभवम् ।**
**ज्ञानयज्ञात्परो यज्ञो नास्ति विप्राः श्रुतौ स्मृतौ ॥**

என்னும் ஸூதஸம்ஹிதாவசனமும் இங்கு அறிதற்குரியதாகும்.

**इत्थं कायिकवाचिकमानसिकैः कर्मभिः प्रक्षीणकल्मषस्य मुमुक्षोः परशिवस्वरूपावगमाय ज्ञानयज्ञं प्रस्तौति ।**

என்னும் பிரமாணத்தினல், நிஷ்காம கர்மத்தினல் சித்த சுத்தியையுடைய முமுக்ஷுக்களே இந்த ஞான யாகத்திற்கு அதிகாரிகளாவரென்பதும், ஜீவப் பிரஹ்மைக்கியரூப பரசிவ நிலையே இந்த யாகத்தின் பலமென்பதும் ஸித்திக்கின்றன.

**अद्वैतज्ञानयज्ञेन न तुल्यो विद्यते क्वचित् ।**
**आत्मयाथार्थ्यविज्ञानयज्ञं मुक्त्वा नराधमाः ।**
**क्रियारूपेषु यज्ञेषु यतन्ते मायया वृताः ॥**
**ये लङ्घयन्ति संसारसमुद्रं कर्मयज्ञतः ।**
**ते महातमसा सर्वं पश्यन्त्येव रविं विना ॥**
**ज्ञानयज्ञोडुपेनैव ब्राह्मणो वाऽन्त्यजोऽपि वा ।**
**संसारसागरं तीर्त्वा मुक्तिपारं हि गच्छति ॥**

என்னும் ஸூதஸம்ஹிதாப் பிரமாணத்தால் ஞான யாகத்தின் பெருமை நன்கு விளங்குகின்றது. ஜீவனது சரீரத்தையே யாகசாலையாக தைத்திரீய நாராயணீய உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அது எங்ஙனமெனின், ஞான யாகத்திற்கு,

யஜமானன்—ஆத்மா
பத்தினி—சிரத்தையென்னும் சித்தவ்ருத்தி
இத்மம் (ஸமித்துக்கள்)—சரீரம்
வேதிகை—மார்பு
தர்ப்பைகள்—சரீரத்தின் மேலுள்ள மயிர்கள்
வேதம் (தர்ப்பமுஷ்டி)—சிகை
யூபஸ்தம்பம்—ஹ்ருதயம்
ஆஜ்யம் (நெய்)—காமனைகள் (ஆசைகள்)
பசு—கோபம்
அக்கினி—தபஸ் அல்லது ஆத்மவிசாரம்
தக்ஷிணை—சாந்திக்குக் காரணமான "ஸர்வம் பிரஹ்ம" மென்னும் விருத்தி
ஹோதா—வாக்கு
உத்காதா—பிராணன்கள்
அத்வர்யு—சக்ஷுஸ் (கண்) கள்
பிரஹ்மா—மனம்.

மற்றவை மற்றவையாம். இதன் பிரமாணமாவது:—

**तस्यैवं विदुषो यज्ञस्यात्मा यजमानः, श्रद्धा पत्नी, शरीरमिध्मं, उरो वेदिः, लोमानि बर्हिः, वेदः शिखा, हृदयं यूपः, काम आज्यं, मन्युः पशुः, तपोऽग्निः, शमयिता दक्षिणा, वाग्घोता, प्राण उद्गाता, चक्षुरध्वर्युः, मनो ब्रह्मा, श्रोत्रमग्नीद्यावद्ध्रियते सा दीक्षा ।**

தை-4 பிரஶ்-52 அநுவாகம்.

இதனுல் ஜீவனது சரீரமே யாகசாலையாகுமென்பது வித்திக்கின்றது. அந்நமயம், பிராணமயம், மனேமயம், விக்ஞானமயமென்னும் கோசங்கள் வடிவமாயுள்ள யாகமந்திரத்தில் அதிஸூக்ஷ்மமாயுள்ள சுத்தவிக்ஞான வ்ருத்தியினுல் பிரஹ்மாபின்ன பிரத்யகாத்மாவை யறிதலே ஞான யாகமாகும்.

**तस्य पश्चिमद्वारे तिष्ठन् तस्य दक्षवामशाखयोः ऊर्ध्वे च क्रमेण भद्रकालीभैरवलम्बोदराख्यद्वारदेवताः संपूज्य ।**

யாகசாலையின் மேற்கு துவாரத்தில் நின்றுகொண்டு அத்துவாரத்தின் வலது, இடது, (ஊர்த்வ) மேல் பக்கங்களில் முறையே துவாரபாலகர்களாகும் பத்ரகாளி, பைரவன், லம்போதரன் என்னும் மூவரையும் நன்கு பூஜித்தல் வேண்டும். யாகமந்திரமாகும் சரீரத்திற்கு எதிர்ப் பக்கம் கிழக்கு; வலமும் இடமும் முறையே தெற்கு வடக்குகளாகும்; பின்பக்கம் மேற்கு.

**पुरुषार्थाः सागराः** என்னும் பாவனேபநிஷத்துப் பிரமாணத்தின்படி, தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களும், முறையே, சரீரத்தின் மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்குத் திசைகளாகுமென்பது வித்தாந்தமாம். ஆகவே சரீரமாகும் யாகசாலையின் மேற்குத்துவாரம் தர்ம வடிவமாகும். “மேற்குத்துவாரத்தில் நின்றுகோண்டு” என்பதன் அர்த்தம் தர்மமார்க்கத்தில் நிஷ்டை யுடையவனுய் என்பதாம். தர்மந்தான் மோக்ஷதுவாரம் (ஸாதனம்). அர்த்தகாமங்கள் தர்மத்தின் ஸஹகாரிகள்.

மோக்ஷதுவாரத்தின் காவலாளிகள் :—

(1) பத்ரகாளி—(2) பைரவன்—(3) லம்போதரன்.

(1) பத்ரகாளியென்பது ஜீவப் பிரஹ்மைக்ய அபய ஸ்வரூபத்தை யடைவிக்கும் வேதாந்த விசாரணையோடு கூடிய சித்த வ்ருத்தியாம். இதற்கு,

**भद्रं शुद्धात्मविज्ञानं जीवब्रह्मैक्यरूपं कलयतीति भद्रकाळी ।**

என்பது பிரமாணமாம். ஆகவே பத்ரகாளியென்பது அத்யாத்ம சாஸ்திர விசாரணையேயாகும்.

(2) பைரவன்—ஸர்வ அநர்த்தங்களையும் ஒழித்து அகண்டாகார வ்ருத்தியை யருளி ஆநந்தப்பிராப்திரூப சாந்தியைத் தருபவன்; அதாவது சாந்தவ்ருத்தியென்பது தாத்பர்யார்த்தமாம்.

**आनर्थिकस्य अज्ञानस्य भीषणात् अस्तिभातिप्रियरूपाखण्डाकारवृत्तिरक्षणात् स्वस्वरूपज्ञापकरूपमोक्षवमनात् भैरवः ।**

என்பது பிரமாணமாம்.

(3) லம்போதரன் = கணபதி—மேலாகிய நிலையை யருளுபவன்—அம்ருத நிலை—பூர்ணசந்தோஷம். ஆகவே பத்ரகாளி, பைரவன், லம்போதரன் என்னும் மூவரும் விசாரணை, சாந்தம், ஸந்தோஷமென்னும் மூன்றுவித சித்தவ்ருத்திகளே யாவர்.

இவர்கள் மோக்ஷவாயிலைக் காப்பவர்களாவர் என்று ஞானவாஸிஷ்டம், முமுக்ஷுப் பிரகரணங் கூறுகின்றது.

**मोक्षद्वारे द्वारपालाश्चत्वारः परिकीर्तिताः ।**
**शमो विचारः संतोषश्चतुर्थः साधुसङ्गमः ॥**
**एते सेव्याः प्रयत्नेन चत्वारो द्वौ त्रयोऽथवा ।**
**द्वारमुद्घाटयन्त्येते मोक्षराजगृहे तथा ॥**

விசாரணை முதலிய மூன்று ஸாதனங்களையும் ஸத்ஸங்கத்தின் மூலமாய்ப் பெறுமல் ஒருவன் மோக்ஷத்தை

யடையமுடியாததலின், அவற்றைப் பெறவேண்டியது அவஶ்யமென்று **संपूजज्य** என்னும் பதம் அறிவிக்கின்றது.

## தத்துவாசமனம். (३)

ஆத்ம, வித்யா, சிவதத்துவ வடிவ ஸர்வப் பிரபஞ்சத்தையும் சோதித்து ஞானமென்னும் ஜலத்தினுல், ஆணவம், மாயை, கர்மம் என்னும் மும்மலங்களையும், ஸ்தூலஸூக்ஷ்மகாரண தேகங்களையும், அத்தேகங்களின் அபிமானிகளாகும் விஶ்வ, தைஜஸ, பிராக்ஞரென்னும் ஜீவ பாவங்களையும் ஒழித்து, ஸச்சிதாநந்த ஸ்வரூப நிலையில் நிற்பது தத்வாசமனமாகும்.

தத்வங்களின் விவரமும், அவற்றைச் சோதிக்கும் விதமும் தீக்ஷாதத்துவம், ஸ்ரீகுருதத்துவ விமர்ஶம் இவைகளில் கண்டு தெளிக.

## குருபாதுகா மந்த்ரம். (३)

குருபாதுகா முதலாவது இரண்டாவது மூன்றுவது மந்த்ரங்கள், ஓம் என்னும் பிரகாசப் பிரணவத்தோடு மூன்றுவிமர்சப் பிரணவங்களும், பாலா பீஜங்கள் மூன்றும்,

**हंसश्शिवस्सोऽहम् । सोऽहं हंसश्शिवः । हंसश्शिवस्सोऽहं हसः ।**

என்னும் மஹாவாக்கியங்களும்,

**ह् स् ख् फ्रें—ह् स् क्ष् म् ल् व् र् यूं ।**

என்னும் பன்னிரண்டு பீஜங்களும் கூடி, ஸ்வரூப நிரூபண ஹேதுத் தன்மையோடும், ஸ்வச்சப் பிரகாசவிமர்ச ஹேதுத் தன்மையோடும், ஸ்வாத்மாராம பஞ்சரவிலீன தேஜஸ் தத்துவத்தோடுங் கூடி விளங்குவது குருபாதுகா மந்த்ரமாகும்.

ஸ்வரூப நிரூபண ஹேதுவாகும் துவம்பத லக்ஷ்யார்த்தம் குருபாதுகா மந்த்ரத்திலும், ஸ்வச்சப் பிரகாச

விமர்சஹேதுவாகும் தத்பதலக்ஷ்யார்த்தஸ்வரூபம் பரம குருபாதுகாமந்த்ரத்திலும், ஸ்வாத்மாராம பஞ்ஜரவிலீன தேஜஸ்ஸாகும் அஸிபதத்தின் அகண்டார்த்தம் பரமேஷ்டி குருபாதுகா மந்த்ரத்திலும் ஸமன்வயமாகின்றன.

ஆகவே, குருபாதுகாமந்த்ரம் மஹாவாக்கியஸ்வரூபமேயாகும். இதனால் அகண்டாநுஸந்தானத்தின் ஆவஶ்யகதை ஸூசிப்பிக்கப்படுவது அறியத்தக்கது. குருபாதுகா மந்த்ரார்த்தவிசாரமானது குருதத்வ விமர்சத்தில் (30–38 பக்கங்களில்) விஸ்தாரமாய்ச் செய்யப்பட்டுள்ளது.

ம்ருகீமுத்திரையின் வாஸனை

ம்ருகீ என்பது பெண்மான். இது அதிவேகமாய் ஓடக்கூடியது. மனத்தை மானோடு ஒப்பிடுவது சாஸ்திரப் பிரஸித்தம். **चञ्चलं हि मनः कृण** என்பது பிரமாணமாம்.

மானைப்போல் அதிக சஞ்சல ஸ்வபாவமான மனத்தை நிரோதம் செய்து, ஸஹஸ்ரார கமலத்தில் பரமசிவத்தோடு ஐக்கியம் செய்யும் அகண்டவ்ருத்தியே ம்ருகீ முத்திரையின் தத்துவார்த்தமாகும். இந்த முத்திரையோடு தான் குருபாதுகா மந்த்ரத்தை யநுஸந்தானம் செய்தல் வேண்டும்.

**योगश्चित्तवृत्तिनिरोधः**—என்னும் பிரமாணத்தின்படி யோகத்தினால் சித்தத்தில் எழுகின்ற அநாத்ம எண்ணங்களை யொழித்து, ஆத்மகோசர வ்ருத்தியில் நிலைபெறச் செய்தலே ம்ருகீமுத்திரையாமென்பது திரண்டபொருளாம்.

கண்டாபூஜை. (௪)

**घण्टा** நாதம் சப்தப்பிரஹ்மவடிவ பிரணவஸ்வரூபம்.

**आगमार्थं तु विद्यानामविद्यानां क्षयाय च ।**
**ओंकारघण्टानिनदं कुर्वे मोक्षैकलाञ्छनम् ॥**

பிரணவஸ்வரூப கண்டாநாதம் செய்யின், அவித்தையினால் ஏற்பட்ட ஸகல அநர்த்தங்களும் ஒழிந்து, அகண்டாகார சித்வ்ருத்தி ஏற்படுகின்றது. அகார, உகார, மகார சப்தோபாதிகளுக்கு அதிஷ்டானமாயுள்ளது நிருபாதிக நாதஸ்வரூப பரப்பிரஹ்மமாம்.

**आगमार्थं च देवानां गमनार्थं तु रक्षसाम् ।**
**कुर्याद्घण्टारवं तत्र देवताह्वानलाञ्छनम् ॥**

தேவதைகள்—ஸ்வயம்பிரகாச ஆத்மகோசரவ்ருத்திகள்.
ராக்ஷஸர்கள்—அநாத்ம வ்ருத்திகள்.
மணியடித்தல்—நாதாநுஸந்தானமாகும்.

அதிஸூக்ஷ்மமாகும் நாதத்தை யநுஸந்தானம் செய்யும்முறை வரிவஸ்யாரஹஸ்யம் முதலம்சம், நாதவிஷுவம், பிரசாந்தவிஷுவம், சக்திவிஷுவம், காலவிஷுவம், தத்துவவிஷுவம் இவற்றின் நிரூபணத்தில் பார்க்கவும்.

### ஸங்கல்பம். (௪)

**प्राणानायम्य, देशकालौ संकीर्त्य ।**

ஸங்கல்பமென்பது மனத்தின் ஸ்வரூபமாகும். பாம்பு அல்லாத கயிற்றில் பாம்பைப் பார்ப்பது கற்பனை அல்லது அத்தியாஸமாம். **संकल्पमात्रसंभवो बन्धः**—என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ஸங்கல்பத்தினால் பந்தமும், நிஸ்ஸங்கல்பத்தினால் மோக்ஷமும் உண்டாகின்றன. பந்தஹேதுவாகும் ஸங்கல்பம் பேததர்சனத்தினால் ஏற்படுகின்றது. இந்த பேதம் தேச, கால, வஸ்துபரிச்சேதங்களோடு கூடியது. தேசகால நிமித்தங்களை ஏகாக்கிர சித்தத்தோடு நன்கு விசாரித்து, தேசகாலாதி உபாதிகளையொழித்து, அபேதவடிவ அத்வய சிவத்தை யறிவதே ஸங்கல்பத்தின் வாஸனையாம்.

**सम्यक् कल्प्यते इति संकल्पः ।**

கால தேசாதிகளின் கற்பனையை யொழிப்பதே கால தேசாதிகளின் ஸங்கீர்த்தனமாகும்.

**देशकालादि संशोध्य चासंकल्प्य मनोरथम् ।**

**करिष्ये त्रिपुरापूजां मनस्सङ्कल्पशान्तये ॥**

என்பது ஞானிகளது வாக்கு.

முன் தீக்ஷாதத்துவத்தில் 35ம் பக்கத்தில் கூறப்பட்ட தாத்பர்யம் இங்கு அறியத்தக்கது.

ஞானபூமிகைகள் ஏழனுள் மூன்ருவதான தநுமானஸீ பூமிகையே ஸங்கல்ப சோதனமாகும். இதனுல் ஞானுதிஷ்டான பரமேஶ்வரனது திருப்தியுண்டாகின்றது. சித்தப் பிரஸாதமே ஈஶ்வராநுக்கிரஹமாகும்.

## ஆஸன பூஜை. (௪)

சுத்த ஸத்வப்பிரதான அந்தக்கரணமே ஆஸனமாகும். இது ஏகாக்கிரவ்ருத்தியோடு கூடி நிச்சலமாயுள்ள தன்மையது. **स्थिरसुखमासनम्** என்னும் யோகஸூத்திரம் இந்த சுத்தமனத்தைத்தான் குறிப்பிடுகின்றது. நிச்சலமான ஏகாக்கிர விருத்தியில்தான் பரசிவத்தின் ஸத்தையும், ஆநந்தமும் ஸ்புரிக்கும்.

இந்த ஆஸனத்தை "**सौः**" என்று அபிமந்த்ரித்த ஜலத்தால் ப்ரோக்ஷணம் செய்தல்வேண்டும்.

**स+ः+औ=सौः.** ஸகாரம் தத்பதத்தையும், விஸர்க்கம் (ஹகாரம்) துவம்பதத்தையும், ஔகாரம் அவற்றின் ஸாமரஸ்யவடிவ அஸிபதத்தையுங் குறிப்பனவாகும். ஆகவே சுத்தஸத்வப் பிரதான அந்தக் கரணவ்ருத்தி

யாகும் ஆஸனத்தில் அமர்ந்து மஹாவாக்ய லக்ஷ்யார்த்த அநுஸந்தானம் செய்தல் வேண்டுமென்பது ஆஸன பூஜையின் வாஸனையாம்.

யோகாஸனம் — பிரஹ்மாத்மைக்கிய யோகத்திற் குரிய சுத்தமனம்.

வீராஸனம்—தோற்றும் இதந்தையை அஹந்தையில் லயம் செய்யும் வீரமனம்.

சராஸனம்—**शं सुखं राति ददातीति शरम्.** பிரஹ்மாநந்தத் தை ஸ்புரிப்பிக்கும் விமர்சவடிவ மனம்.

ஆதாரசக்தி கமலாஸனம் — மூலாதாரத்தில் விளங் கும் குண்டலினீ சக்தி ஸஞ்சாரம் செய்யும் கமலாஸனங் கள் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநா ஹதம், விசுத்தி, ஆக்ஞையென்பனவாம். இவை முறையே பிரிதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், மனம் என்பன வாம். மனமே குண்டலினீரூப ஜீவசக்தியாம். இக்கம லங்கள் ஸுஷும்னையாகும் ஜீவாத்மாவால் பிரகாசிக்கப் படுகின்றன. இடை, பிங்களை யென்பன ஸூர்ய சந்திரர் கள். பஞ்ச பூதங்களும், ஸூர்ய சந்திரர்களும், ஜீவாத் மாவும் ஆகிய எட்டும் பரசிவம் விளங்கும் ஸ்தானங் களாம். ஆதலின், அஷ்டமூர்த்திவடிவ ஸர்வப்பிரபஞ்ச மென்பதுதான் ஆதாரசக்தி கமலாஸனமாகும். ஓம் என் பது பிரகாச வடிவ சிவத்தையும், ஹ்ரீம் என்பது பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன், ஜீவோபாதியாகும் மனம் என்னும் அஷ்ட மூர்த்தங்களின் உபாதிகளை நிவர்த்தி செய்து, அவற்றின் அதிஷ்டான ஸச்சிதானந்த சித்சக்தி யையும் ஸ்புரிக்கச்செய்யும் பீஜங்களாகும்.

**आसने उपविशेत् ।** இத்தகைய ஆஸனத்தில் அமர்தல் வேண்டுமென்பது அகண்டாகார விருத்தியோடுகூடி

ஸ்வரூபவிமர்சம் செய்தல் வேண்டுமென்னும் ரஹஸ்யார்த்தத்தோடு கூடி விளங்குவதாகும்.

**रक्तद्वादशशक्तियुक्ताय द्वीपनाथाय नमः ।**

**देहो नवरत्नद्वीपः** — சரீரமே த்வீபமாகும். க்ஷேத்ரக்ஞனே த்வீபநாதன்—ஆத்மாபின்ன பரசிவம்.

பன்னிரண்டு கலைகளோடுகூடிய ஸூர்யமண்டலம் பாத்திரத்தைக் குறிப்பிப்பதாகும். ஆதலின், சரீரமாகும் பாத்திரத்தில் பரசிவஸ்வரூப அம்ருதம் இருக்கின்றதென்பது ஸம்ப்ரதாயார்த்தமாம்.

தேஹரக்ஷை. (௫)

"ஸ்தூல ஸூக்ஷ்ம காரணதேஹங்களில் அதிஷ்டான ஸ்வரூபமாய் விளங்கும் ஆத்மஸ்வரூப த்ரிபுரஸுந்தரியே! என் ஜீவபாவத்தை ஒழித்து, துவைததர்சனரூப பயத்தினின்றும் ரக்ஷிப்பாயாக" என்பது மந்த்ரார்த்தமாம்.

வன்னிப் பிராகாரம் என்பது அபேத தர்சன ஞானகாரவிருத்தியாகும்.

பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் மூன்று உலகங்களிலும் உள்ள நாமரூபங்களை நாடும் அசுத்த மனத்தைத் தடுத்து ஆத்மகோசரவ்ருத்தியில் நிறுத்துவதே திக்பந்தமாகும்.

ஸபர்யையின் ஸ்வரூபத்தை அநுஸந்தானம் செய்தல்.

சராசரவடிவ ஸர்வப் பிரபஞ்சத்தையும் மேலாகிய அத்வைத பாவனையாகும் அம்ருதத்தினால் நனைத்து, பேதமாகும் அத்தியாஸ விகற்பங்களை முற்றும் ஒழித்துப் பரமாநந்த பரிதனாய், மிகுந்த உத்ஸாஹத்தோடு மனன

நிதித்தியாஸனங்களோடுகூடிய ஆத்மகோசரவ்ருத்தியி ளுல், அத்வைதவடிவ சிவத்தை யறிதல் வேண்டும்.

எங்கும், எப்பொழுதும், எதையும் சிவமாய்ப் பார்ப் பதுவே பராபூஜையாகும்.

இதை நன்கு அநுஸந்தானம் செய்தல் அவசியம்.

## ஸமஷ்டிமந்த்ரத்திஞல் அஞ்ஜலி.

ஸமஷ்டி மந்த்ரம் ஸ்ரீசக்கிரத்திலுள்ள ஒன்பது சக்கி ரங்களிலும் சேர்க்கையையுடைய யோகினிகளைக் குறிப் பிடுவதாகும். உபாதியோடு சேர்ந்த சித்சக்திக்கு யோ கினியென்று பெயர்.

இந்த யோகினிகள் பிரகட, குப்த, குப்ததர, ஸம்ப்ர தாய, குளோத்தீர்ண, நிகர்ப்ப, ரஹஸ்ய, அதிரஹஸ்ய, பராபராதிரஹஸ்ய யோகினிகளென்று ஒன்பது வகை யினராவர்.

## யோகினிகளின் தத்துவம்

| | | | |
|---|---|---|---|
| பிரகட | யோகினி | — | ஜாக்கிராவஸ்தையோடு கூடிய சித்சக்தி |
| குப்த | ,, | — | ஸ்வப்நாவஸ்தையோடு கூடிய சித்சக்தி |
| குப்ததர | ,, | — | ஸுஷுப்தி அவஸ்தை யோடுகூடிய சித்சக்தி |
| ஸம்ப்ரதாய | ,, | — | ஈஸ்வரவிசார வ்ருத்தி யோடு கூடிய சித்சக்தி |
| குளோத்தீர்ண | ,, | — | குருபக்தி,குரூபஸதனம் இவற்ருேடு கூடிய சித் சக்தி |

நிகர்ப்ப யோகினி — சிரவணத்தோடு கூடிய வ்ருத்தியாரூட சித்சக்தி
ரஹஸ்ய ,, — மனனத்தோடு கூடிய விருத்தியில் ஆரூடசித்சக்தி
அதிரஹஸ்ய ,, — நிதித்தியாஸன விருத்தியாரூட சித்சக்தி
பராபராதிரஹஸ்ய — ஸவிகல்பஸமாதி விருத்தியாரூட சித்சக்தி

இவை யோகினிகளின் வாஸனையாம்.

**ऐं हः अस्त्राय फट् ।**

இது தேஹ சுத்திக்காக ஏற்பட்டமந்த்ரமாகும்.

"ஐம்" என்பது வாக்பவபீஜம். இந்த பீஜமானது, அ, இ, அ, அநுஸ்வாரமென்னும் நான்கு அக்ஷரங்களின் ஸமஷ்டியேயாகும். இந்நான்கு அக்ஷரங்களும், முறையே, ருக், யஜுஸ், ஸாம, அதர்வண வேதங்களைக் குறிப்பனவாமென்பது சாஸ்திர ஸித்தாந்தமாம். வேதங்களின் பரம தாத்பர்யமாகும் பரமாத்வைதமே ऐं பீஜத்தின் லக்ஷ்யார்த்தமாகும். இந்த லக்ஷ்யார்த்த ஸித்தியின் பொருட்டு ஆவித்யகமாகும் அசுத்த, அநித்திய, ஜட, துக்க ஸ்வரூப பிரபஞ்சத்தோற்றத்தை யொழித்தல் அத்தியாவசியம். அத்தியாஸ நிவர்த்தியாகுமிதன் பொருட்டு ஏற்பட்ட பீஜம் हः என்பதாகும். இது அஸ்த்ரபீஜமாகும். அதர்வணவேதத்தில் சஸ்த்ரங்களென்றும் அஸ்த்ரங்களென்றும் இரண்டுவிதங்களுண்டு; இவை கர்மகாண்ட ஸம்பந்தமானவை. பிரஹ்மகாண்டமாகும் பிரஹ்மவித்யோபாஸ்தியில் தத்துவஞானமே அஸ்த்ரமாகும். ह्+र्+:=हः; விஸர்க்கம் அதாவது சிருஷ்டமாயுள்ள ஸர்வப் பிரபஞ்ச

மும் பிரகாசவிமர்ச வடிவ பரப்பிரஹ்மமேயாமென்பது இவ்வஸ்த்ரபீஜத்தின் அர்த்தமாகும்.

**सर्वं खल्विदं ब्रह्म ; नेह नानास्ति किञ्चन ।**

என்னும் திடபாவனையே அஸ்த்ரமாகும். இந்த பாவனையால் அசுத்த பேதப்பொருள்களெல்லாம் சுத்த மாகின்றனவென்பது சாஸ்திரஸித்தாந்தமாம்.

அநுக்ஞை

1. பக்தர்களுக்கு அநுக்கிரஹம் செய்யும் பகவானே! ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகும் பரமகுருவே! ஸ்ரீ சக்கிரயாகத் தின் பொருட்டு எனக்கு உத்தரவு தருவீராக.

2. பிரளயகாலத்து அக்கினியை யொத்தவரே! மிகவும் கோரமான பெருத்த சரீரத்தோடு கூடிய பைரவரே! உமக்கு நமஸ்காரம். எனக்கு அநுக்ஞை யைத் தருவீராக. என்பன தக்ஷிணாமூர்த்தி பைரவர் களின் பிரார்த்தனை.

இங்கே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மந்த்ரார்த்தத்தை அநு ஸந்தானம் செய்தல் அத்தியாவசியம்.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி மந்த்ரத்தின் அர்த்தவிசாரம் :—

**ओं नमो भगवते दक्षिणामूर्तये मह्यं मेधां प्रज्ञां प्रयच्छ स्वाहा ।**

**व्याख्यानम् — ओंकारेण स्थूलसूक्ष्मकारणप्रपञ्चावधिभूतं प्रत्यगभिन्नं तत्त्वमस्यादिमहावाक्यार्थभूतं ब्रह्माभिधीयते । भगवच्छब्देन "उत्पत्तिं च विनाशं च भूतानामागतिं गतिम् । वेत्ति विद्यामविद्यां च स वाच्यो भगवानिति ॥" इति श्लोकोक्तः सर्वज्ञः सर्वशक्तिमांश्चाभिधीयते । दक्षिणामूर्तिशब्देन समर्था**

सृष्टिस्थितिसंहारेषु मूर्तिर्यस्य सः, सत्त्वप्रधानमायोपाधिको बिम्बभूतः परमात्माऽभिधीयते। चतुर्थ्यन्तेनैक्यं दृढीक्रियते। मो जीवः कर्तृत्वादिविशिष्टोऽन्तःकरणप्रतिबिम्बभूतः प्रतिपाद्यते। नेति निषिद्धार्थः। तथाचाहं जीवो न, किंतु भगवान् दक्षिणामूर्तिरेव। एतादृशाय मह्यं उपाधिना तिरस्कृताय महिम्ने। मेधां स्थिरामसंभावनादिदोषरहितां सवासनाविद्याद्वयनिवर्तिकां प्रज्ञां अखण्डसाक्षात्काररूपां प्रयच्छ देहि। तया भ्रान्त्यादिनिवृत्तिः तामपि स्वाहा। आत्मनि सच्चिदानन्दस्वरूपे प्रविलापयामीति स्वाहाकारार्थः।

இதன் தாத்பர்யமாவது:—ஸ்தூலஸூக்ஷ்ம காரண பிரபஞ்சத்தின் முடிவிடமாயும், பிரத்தியக் ஆத்மாவை விட பின்னமல்லாததாயும், தத்துவமஸி முதலிய மஹா வாக்கியங்களுக்கு லக்ஷ்யார்த்தமானதாயுமுள்ள பிரஹ்மமே ஓம் என்பதன் பொருளாகும். பகவத் என்னும் பதத்திற்கு ஸர்வக்ஞன் ஸர்வசக்திமான் என்பது அர்த்தமாம். * தக்ஷிணாமூர்த்தி சப்தத்திற்கு ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச்செய்ய ஆற்றலுள்ள ஸத்வப்பிரதான மாயோபாதிக பரமாத்மாவென்று பொருள்.

நான்காவது வேற்றுமைக்கு ஐக்கியம் அர்த்தமாகும்.

நம: என்னும் பதத்திலுள்ள மகாரதிற்குக் கர்த்ருத்வ போக்த்ருத்வாதி தர்மங்களையுடைய அந்தக்கரணவிசிஷ்ட

---

* தக்ஷிணாமூர்த்தி என்னும் பதத்தில் "தக்ஷிண" என்னும் பதம் ஸகலஜகத்ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்யும் ஸகுணப் பிரஹ்மத்தையும், அமூர்த்தி என்னும் பதமானது நிர்க்குணப் பிரஹ்மத்தையும் குறிக்கின்றன.

ஜீவன் பொருளாகும்; நகாரத்திற்கு எதிர்மறைப் பொருள்; அதாவது ஜீவனல்லவென்பது நம: என்பதன் பொருளாம். "பிரயச்ச" என்னும், கிரியா பதத்திற்கு ஜீவ ஸம்க்ஞையைவிட்டு, பரமாத்மஸ்வரூபனான எனக்கு, வாஸனைகளோடு கூடிய ஆவரண விக்ஷேபாத்மக அவித்தையை நிவர்த்தித்து அகண்டபிரஹ்மஸாக்ஷாத்காரவடிவ ஸமாதி விருத்தியை யருள்வாயாக என்பது பொருளாகும்.

ஸ்வாஹாகாரத்திற்கு, அத்தகைய அகண்டவிருத்தியையும் ஸஹஜ நிலையில் லயிப்பிக்கிறேன் என்பது அர்த்தமாகும்.

மேதை=ஸந்தேக விபரீத அஸம்பாவனைகளென்னும் தோஷங்களற்ற ஞானம்.

பிரக்ஞை=ஜீவப் பிரஹ்மைக்கிய அகண்ட ஸவிகல்ப ஸமாதிவிருத்தி.

இங்ஙனமே பைரவசப்தத்தின் அர்த்தாநுஸந்தானமும் செய்யத்தக்கது. இந்த அர்த்தவிசாரம் முன் துவார பூஜையில் செய்யப்பட்டுள்ளது.

## லகுப்பிராணப் பிரதிஷ்டை. (௭)

பிராணப் பிரதிஷ்டையென்பது பாவனாரூப மானஸிக கிரியையாகும். பூஜ்யமான தேவதையை, ஒரு மூர்த்தியிலே அல்லது சக்ரம் கலசம் முதலியவற்றிலே பாவித்தல் பிராணப் பிரதிஷ்டையெனப்படும். பிரதிஷ்டிக்கப்படும் தேவதையின், பிராணன், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், அந்தக்கரணம், சேதனம் முதலியன பிரதிஷ்டை செய்பவனுடைய பிராணன் முதலியவற்றினின்றும் பாவனாதார்ட்டியத்தால் ஏற்படுவதாக இருப்பதால், பிரதிஷ்டிக்கப்படும் தேவதைக்கும் பிரதிஷ்டை செய்யும் ஸாதக

னுக்கும் பேதமில்லை; ஆதலின் அஹங்கிரஹ உபாஸ்தியே யாகின்றது. பிராணப் பிரதிஷ்டையின் பாரமார்த்திகதத்வம் யாதெனில், எங்கும் வியாபகமாயும் ஸச்சிதாநந்த கனமாயும், பிராணனுக்குப் பிராணனாயும், மனதுக்கு மனமாயுமுள்ள பிரஹ்மாபின்ன அஹம்பத லக்ஷ்யார்த்த சித்சக்தியைப் பாஹ்யத்திலும் ஆந்தரத்திலும், உபாதியை நீக்கி யறிதலேயாகும். எந்த எந்த வஸ்துவில் நாமரூப உபாதிகளை நீக்கி அதிஷ்டான ஸ்வரூபம் அறியப்படுகின்றதோ, அந்த அந்த வஸ்துவானது பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஆகின்றது. பாரமார்த்திகமான பிராணப் பிரதிஷ்டை செய்தற்குத்தக்க ஸாதனம் அகண்டாகார வ்ருத்தியேயாகும்.

**प्राणो ब्रह्म, कं ब्रह्म, खं ब्रह्म,**

என்னும் ஶ்ருதியால் பிராணன் என்னும் பதத்திற்குப் பிரஹ்மம் அர்த்தமாமென்பது இங்கு அறியத்தக்கது.

பிராணப் பிரதிஷ்டா மந்த்ரம்.

இம்மந்த்ரத்திற்கு **ॐ** என்னும் சித்சக்தியே தேவதை.
**आं** என்னும் பிரஹ்மசக்தி—பீஜம்
**ह्रीं** என்னும் மாயாபீஜம்—சக்தி
**क्रों** என்னும் அங்குசபீஜம்—கீலகம்.

ஆகவே, பிரஹ்மாபின்ன ஸ்வாபாவிக சித்சக்தியானது தனது ஸத்தையில், ஜடசக்தியாகிற மாயாசக்தியைக் கற்பித்து, அதனால் ஸர்வஜகத்தையும் தோற்றுவித்தது. இங்கே, ஜகத்தென்பது நாமரூப பேதவடிவ போக்கியாம்சமாம். இந்த நாமரூப பேதத்தை அதிஷ்டான ஞானதிருஷ்டியாகிய அங்குச பீஜத்தினால் நீக்கிவிடின் ஸச்சிதாநந்த சித்சக்தி நன்கு பிரதிஷ்டிதமாகின்றது.

**सर्वजगतोऽधिष्ठानत्वात् प्रतितिष्ठत्यस्यां विश्वमिति प्रतिष्ठा ।**

என்னும் பிரமாணமும்,

**विश्वस्य जगतः प्रतिष्ठा**

என்னும் ஶ்ருதியும்,

**प्रतिष्ठा सर्वभूतानां प्रज्ञैषा पारमेश्वरी ।**

என்னும் ஸூதஸம்ஹிதா ப்ரஹ்மகீதை வசனமும் மேலே கூறப்பட்ட விஷயத்தை ஸ்தாபிக்கின்றன.

**ओं हंसः सोहं ; सोहं, हंसः शिवः ।**

பிரணவத்தை வாசகமாயுடைய மங்களவடிவ பரசிவமே நான்—நானே அவன். என்பது மேற்கூறிய மந்த்ரார்த்தமாம்.

இத்தகைய சிவம் எங்கே எங்கே பிரதிஷ்டைசெய்தற்குரியதெனின்—**यं, रं, लं, वं, हं** என்னும் பீஜார்த்த வடிவ பிரிதிவி முதலிய பஞ்சபூதங்கள்; இவற்ரோடு **शं, षं, सं** என்னும் பீஜார்த்தரூப மனம், புத்தி, அஹங்காரங்களென்பனவுமாம்.

இவை யெட்டும் புர்யஷ்டகமென்னும் ஸூக்ஷ்ம சரீரமும், அதன் காரியமாகும் ஸ்தூல சரீரமுமாகும். இவை அஷ்டப் பிரக்ருதிகள் என்றும் கூறப்படும்.

**भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।**
**अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥**

என்று பகவத்கீதையும்,

**मनो बुद्धिरहंकारः खानिलाग्निजलानि भूः ।**
**एताः प्रकृतयस्त्वष्टौ—**

என்று சாரீரக உபநிஷத்தும் கூறுகின்றது இங்கே அறியத்தக்கது. இதனுல் ஸர்வப் பிரபஞ்சமும், ஸாதக

ஞுகும் உபாஸகனும், சித்சக்தியும், சிதபின்ன பரசிவமும் ஒன்றே யென்னும் ஐக்கிய உணர்ச்சியே பிராணப் பிரதிஷ்டையாகுமென்பது ஸித்திக்கின்றதன்றோ?

மந்திரபூஜை. (௭)

இங்ஙனம் எந்த வஸ்துவில், அஹம்பத லக்ஷ்யார்த்த வடிவ சித்சக்தியானது நாமரூபப் பிரபஞ்சாதிஷ்டானமாயும், சிவாபின்னமாயும் பிரதிஷ்டிக்கப்படுகின்றதோ, அந்த வஸ்துவானது சித்சக்தியின் மந்திரம் அல்லது வாஸஸ்தானம், நகரம், சக்கிரமெனப்படுகின்றது; பிண்டமாகும் சரீரமும், அண்டமாகும் ஸர்வ ஜகத்தும் ஸ்ரீநகரமாகுமென்று கூறவும் வேண்டுமோ?

அந்தக்கரணமற்ற உயிரில்லாத பொருள்களில் சித்சக்தி வியாபித்திருப்பதனால், அவைகளும் அதற்கு மந்திரமேயாகின்றன. ஏனெனில் அந்த ஜடப்பொருள்களும் அந்தக்கரணவிருத்தியினாலோ அல்லது ஸாக்ஷிவ்ருத்தியினாலோ விளங்குவனவாயிருக்கின்றன.

देहो देवालयः प्रोक्तो जीवो देवः सनातनः ।
त्यजेदज्ञाननिर्माल्यं सोऽहंभावेन पूजयेत् ॥

1. அம்ருதாம்போநிதி.

சித்சக்தி எங்கும் வியாபித்துப் பரிபூர்ணமாயிருத்தலின், மந்திரம் அல்லது நகரத்தின் வெளியிலும் அது விளங்குகின்றது. அதுதான் அம்ருதாம்போநிதி. அது அபாரமாயும் நாசரஹிதமாயுமிருத்தலின் அம்ருத ஸாகரமெனக் கூறப்பட்டது.

2. ரத்தினத்வீபம்.

சித்தென்னும் ஸமுத்திரத்தில் தோன்றும் ஜடமென்னும் கற்பிதப் பொருளே ரத்தினத்வீபமாகும். உபாதி

நோக்கில் தீவு என்று கூறப்பட்டது. ஆரோபித்த (கற்பித) நாமரூப உபாதிகளைத் தள்ளின் சித்து விளங்குவதனால் இரத்தினத் தீவு என்று கூறப்பட்டதாகும்.

देहो नवरत्नद्वीपः ।

என்னும் பாவனோபநிஷத் பிரமாணத்தால் சரீரமே ரத்னத்வீபமாகும்.

3. நாநாவிருக்ஷ மஹோத்யானம்.

பற்பலவகையான விருக்ஷங்களோடு கூடிய பெரிய உத்தியானவனமென்பது ரத்தினத்வீபமாகும் சரீரத்திற்குள் விளங்குவதாகும். எங்ஙனம் நானாவகையான விருக்ஷங்கள் நானாவிதமான பழங்களைத்தருமோ, அங்ஙனமே பற்பலவிதமான பலன்களைத்தரும் பற்பலவகையான கர்மவாஸனைகள் சித்தத்தில் ஸமஷ்டியாய் இருக்கின்றன. இதற்கு லிங்க சரீரமென்றுபெயர். இந்த லிங்கசரீரமே நானாவிருக்ஷ மஹோத்தியானமாகும்.

4. கல்பவாடிகை.

"**संकल्पाः कल्पतरवः**" என்னும் பாவனோபநிஷத்தின்படி, ஸங்கல்ப விகல்பாத்மகமாகும் மனமே கல்பவாடிகையாகும். பலவித ஸங்கல்பங்கள் அடுத்தடுத்து வரிசையாய்த் தோன்றுவதால் வாடிகையென்று கூறப்பட்டது. நினைத்ததைத்தருவது கற்பதருவாகும். இங்ஙனமே மனம் ஒன்றைச் சங்கற்பிக்கின் அது எப்பொழுதாவது, எந்த ஜன்மத்திலாவது அடையப்படாமற்போகாது. இம்மனம், கண் காது முதலிய பஞ்ச ஞானேந்திரியங்களால் அறியப்படுபவையான ரூபம், சப்தம் முதலிய விஷயங்களையும், ஸுகதுக்கங்களையும் அறிந்து ஜீவனது போகாயதனமாய் விளங்குகின்றது. ஆதலினால்தான்,

तेजः कल्पकोद्यानम्" என்று பாவனோபநிஷத்து கூறுகின்ற தென்றறியவும்.

| | | |
|---|---|---|
| 5. | ஸந்தான வாடிகை | இவை ஸமஷ்டி யந்தக் கரணத்தின் வியஷ்டி ரூப ங்களாம். அந்தக்கரண மென்பது ஆகாசாதி பஞ் சபூதங்களின் ஸத்வ ஸம |
| 6. | ஹரிசந்தன ,, | |
| 7. | மந்தார ,, | |
| 8. | பாரிஜாத ,, | |
| 9. | கதம்ப ,, | |

ஷ்டியாகும். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், உள்ளம் என்பன வியஷ்டி ஸத்வாம்சத்தினல் ஏற்பட்டவையாகும்.

உள்ளம்—ஆகாசத்தின் ஸத்துவம்
மனம்—வாயுவின் ,,
புத்தி—அக்கினியின் ,,
சித்தம்—ஜலத்தின் ,,
அஹங்காரம்—பிரிதிவியின் ஸத்துவம்

பஞ்சபூதங்களின் தனித்தனியான ஸத்வாம்சத்தினல் சுரோத்திராதி ஞானேந்திரியங்களும் ஏற்பட்டனவாதலின், ஸந்தானம் முதலிய ஐந்தும் பஞ்சஞானேந்திரிய வடிவமாகவும் இருக்கின்றன.

## இவற்றின் விவரம்.

| | வாடிகாபஞ்சகம் | அந்தக்கரணப் பகுதி | விஷயப் பகுதி | ஞானேந்திரியப் பகுதி |
|---|---|---|---|---|
| 1. | ஸந்தானவாடிகை | உள்ளம் | சப்தம் | ஶ்ரோத்திரம் |
| 2. | ஹரிசந்தன ,, | அஹங்காரம் | ஸ்பர்ஶம் | துவக்கு |
| 3. | மந்தார ,, | புத்தி | ரூபம் | சக்ஷு |
| 4. | பாரிஜாத ,, | சித்தம் | ரஸம் | ஜிஹ்வை |
| 5. | கதம்ப ,, | மனம் | கந்தம் | கிராணம் |

பரதேவதையின் வாஸஸ்தானமானது ஸ்ரீநகரமெனப்படும். இந்நகரத்திற்கு இருபத்தைந்து பிராகாரங்களுண்டென்று *ஸ்ரீலலிதாஸ்தவரத்னம் ஸ்ரீலலிதோபாக்யானம் முதலியவை கூறுகின்றன.

रत्नद्वीपे जगद्दीपे शतकोटिप्रविस्तरे ।
पञ्चविंशतितत्त्वात्मपञ्चविंशतिवप्रके ॥
त्रिलक्षयोजनोत्तुङ्गे श्रीविद्यायाः पुरं परम् ।

என்னும் பிரமாணத்தின்படி இருபத்தைந்து தத்துவங்களே இருபத்தைந்து பிராகாரங்களாமென்பது ரஹஸ்யமாம்.

இவை உலோஹக் கோட்டைகளென்றும், இரத்தினக் கோட்டைகளென்றும், மஹாபத்மாடவீபிராகாரங்களென்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரும்பு முதல் தங்கம் ஈறாகவுள்ள எட்டு உலோஹக் கோட்டைகளின் இடையே நானுவிருக்ஷமஹோத்தியானம் முதல் கதம்பவனவாடிகையிறுதியாகவுள்ள ஏழு உத்தியானங்கள் இருக்கின்றன. இவை, காலஸ்வரூப வஸந்தம், கிரீஷ்மம் முதலிய ருதுக்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றன. இனிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு முதலிய அறுசுவைகளில் ஒவ்வொரு சுவையும் ஒவ்வொரு ருதுவில் பிரதானமாய் விளங்குமென்பது ஆயுர்வேதஸித்தாந்தமாம்.

---

* இது சென்னை ஸ்ரீபிரஹ்மவித்யா விமர்சினீ ஸபையாரால் வெளியிடப்பட்டுள்ளது. விலை அணா. 12

| | ரத்தினப் பிராகாரம் | | நவதாதுக்கள். | |
|---|---|---|---|---|
| 10. | புஷ்பராக | ,, | மாமிசம் | சக்தி |
| 11. | பத்மராக | ,, | ஓஜஸ் | சிவம் |
| 12. | கோமேதக | ,, | மேதை | சிவம் |
| 13. | வஜ்ஜிர | ,, | அஸ்தி (எலும்பு) | சக்தி |
| 14. | வைடூர்ய | ,, | துவக் | சக்தி |
| 15. | இந்த்ரநீல | ,, | ரோமம் | சிவம் |
| 16. | முக்தா | ,, | சுக்கிரம் | சிவம் |
| 17. | மரகத | ,, | மஜ்ஜா | சக்தி |
| 18. | வித்ரும | ,, | ருதிரம் | சக்தி |

19. மாணிக்ய மண்டபம்—ஓஜஸ்கூட்டம். ஹ்ருதயம்.
20. ஸஹஸ்ரஸ்தம்ப மண்டபம்—ஸஹஸ்ரார பத்மம்.
21. அம்ருதவாபிகை—துவாதசாந்தம்.
22. ஆநந்தவாபிகை—லலாடமத்தியம்.
23. விமர்சவாபிகை—ப்ரூமத்தியம்.

வாபிகை என்பது ஜலம் நிறைந்த மடுவாகும்.

**ओं आपो ज्योती रसोऽमृतं ब्रह्म ।**

என்னும் ஶ்ருதிப்படி, ஜலம் என்பது சைதன்யவடிவ சித்சக்தியாம். விமர்ச சித்வ்ருத்தி நிதித்தியாஸனத்திலும், ஆநந்தசித்விருத்தி ஸவிகல்ப ஸமாதியிலும், அம்ருத நிலை ஸஹஜஸ்திதி(ஆரூடாவஸ்தை)யிலும் விளங்குவனவாகும்.

24. பாலாதபோத்காரம். } உத்காரம் என்பது துவாரமாகும்.
25. சந்திரிகோத்காரம். }

**उद्गारो लोहितवर्णं समाह्लादकं वस्तु ।**

என்பது பிரமாணமாம். ஸந்தோஷத்தைத்தரும் விமர்ச ரூப விருத்தி யென்பது இதன் ரஹஸ்யார்த்தமாகும். ஸூர்ய சந்திரர்களே இரண்டு நேத்திரங்கள். இவர்கள், முறையே, பிரவ்ருத்திவடிவமாயும் நிவ்ருத்திவடிவமாயுமுள்ள விமர்சரூபங்களாயிருக்கின்றனர். துவாரம் என்பது (ஞான) காரணமாம். நாமரூபப் பிரபஞ்சஞான ஸாதன விருத்தியை பிரவ்ருத்திரூப ஸூர்யதுவார மென்றும் ஸச்சிதாநந்த பார லௌகிக ஞான ஸாதன விருத்தியை நிவ்ருத்திரூப சந்திரதுவாரமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

26. மஹாஸ்ருங்காரபரிகை.

பரிகை யென்பது அகழ். இந்த அகழைத்தாண்டித் தான் பரதேவதையின் வாஸஸ்தானமாகிய அமநஸ்க நிலையை யடையவேண்டும். இது ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் மனமென்னும் அந்தக்கரணம், இவை லயித்த இடம்; உள் நாக்கு ஸ்தானம். சிருங்காரம் சிகரத்தின் நுனியாகும். இது இடை, ஸுஷும்னை, பிங்கலை, யென்னும் மூன்று நாடிகளும் சேரும் இடமாம். இது தான் லம்பிகாக்ரம் (இந்திரயோனி); இது தான் மனோலயஸ்தானமுமாகும்.

27. மஹாபத்மாடவீ.

ஹ்ருதயம் அல்லது ஸஹஸ்ராரம்.

28. சிந்தாமணிக்ருஹராஜம்.

சுத்தஸத்துவப்பிரதான அந்தக்கரணம்.

குறிப்பு:—இனி கூறப்படுபவை சுத்தாந்தக்கரணத்தின் விருத்தி விசேஷங்களென்று அறிதல் வேண்டும்.

29. பூர்வாம்நாயமயபூர்வத்வாரம்.
30. தக்ஷிணாம்நாயமய தக்ஷிண த்வாரம்.
31. பஶ்சிமாம்நாயமயபஶ்சிமத்வாரம்.
32. உத்தராம்நாயமய உத்தரத்வாரம்.

ருக்—யஜுஸ்—ஸாம—அதர்வண மென்னும் நான்கு வேதங்களும் அவற்றின் நான்கு மஹா வாக்கியங்களும்.

33. ரத்னப்ரதீபவலயம். விவேகரூப விக்ஞானவ்ருத்தி.

34. மணிமயமஹாஸிம்ஹாஸனம். குரூபதிஷ்ட மந்த்ரார்த்தாநுஸந்தான வ்ருத்தி.

35. பிரஹ்மமயைகமஞ்சபாதம். ஸ்ருஷ்டி சக்தி—மூலாதாரம்

36. விஷ்ணுமயைகமஞ்சபாதம். ஸ்திதி சக்தி—ஸ்வாதிஷ்டானம்

37. ருத்ரமயைகமஞ்சபாதம். ஸம்ஹார சக்தி—மணிபூரகம்

38. ஈஶ்வரமயைகமஞ்சபாதம். திரோதான சக்தி—அநாஹதம்.

39. ஸதாஶிவமயைகமஞ்சபலகம். அநுக்கிரஹ சக்தி—விசுத்தி.

40. ஹம்ஸதூலிகாதல்பம். பிரளயம், அல்லது ஸுஷுப்தி—ஆக்ஞை.

41. ஹம்ஸதூலிகாமஹோபதானம். அவித்தை, அக்ஞானம்.

42. கௌஸும்பாஸ்தரணம். ஸமஷ்டிஅஹங்காரம்.

43. மஹாவிதானகம். அவ்வியக்தம், மஹத்தத்துவம்.

44. மஹாமாயாயவனிகா. மூலாக்ஞானம், யோகமாயை.

இங்ஙனம் நாற்பத்திநான்கு மந்த்ரங்களையும் அதனதன் அர்த்தாநுஸந்தானத்தோடு பாவித்தல் வேண்டும். இது, "**तत्तदखिलं भावयेत्**" என்னும் வாக்கியத்தால் தொனிக்கின்றது.

மேற்கூறிய நாற்பத்திநான்கு மந்திரங்களையும் சற்றுசீர் தூக்கிப் பார்ப்போமாயின் அவை ஸச்சிதாநந்தவடிவ பிரஹ்மாபின்ன சித்சக்தியினின்றும் கற்பிதமாய்த் தோன்றின மூலாக்ஞானமென்னும் மாயையும், அதினின்றும் தோன்றிய அவ்வியக்தம், மஹத்தத்வம், அஹங்காரம், அவித்தை, பிரளயம், சிருஷ்டியாதி பஞ்சசக்திகள், என்பனவாதிமுதல் ஜீவன் ஈறுகவுள்ள மிஸ்ரதத்துவங்களும், ப்ரக்ருதிமுதல் பூமியீறுகவுள்ள ஆத்மதத்துவங்களுமேயாகும் என்று தோன்றுகின்றது.

விசேஷக் குறிப்பு:—

கலை, அவித்தை, ராகம், காலம், நியதி முதலிய மறைப்புக்கள் சுத்தவித்தையால் நீங்கியகாலத்தில், ஸர்வக்ஞத்துவம், பூர்ணத்துவம், நித்தியத்துவம், நித்திய திருப்தி என்னும் நான்கு மஞ்சபாதங்களின் மேல் உள்ள ஸ்வதந்த்ரத்துவமென்னும் பலகையின் மேல் நிதித்தியாஸனமென்னும் ஹம்ஸதூலிகாதல்பத்தில், பாஹ்யாநுவித்தம், ஆந்தராநுவித்தம் என்னும் இருவிதஸமாதிகள் வடிவதலையணைகளோடும், ஜீவப் பிரஹ்மைக்கிய பரமாநந்தாநுபவ விமர்சவ்ருத்தியாகும் சிவப்புநிற விரிப்போடும், நிர்விகல்பமென்னும் மஹாவிதானத்தோடும், ஸகலகற்பனைகளும் அற்ற மஹாஸ்மஶானரூப திரைச்சீலையோடும் விளங்குவது மணிமயமஹாஸிம்ஹாஸனமாகுமென்றறிதல் அவஸ்

யம். இதில் வீற்றிருப்பது சித்சக்தியாம். இதுதான் ஸ்ரீநகரம்.

## தீபபூஜா. (௯)

தீபம் என்பது பிரகாசம், அல்லது ஞானமாம். இது இருட்டாகிற அக்ஞானத்தை நாசம் செய்வதாகும். ஞானமே விளக்கு.

சுத்தமனம் என்னும் தகழியில் ஆத்மகோசரவ்ருத்தி யென்னும் நெய்வார்த்து நாமரூபப் பிரபஞ்சமென்னும் திரியைப் போட்டு பிராணனாகிய காற்றை நிறுத்தி அல்லது நிதித்தியாஸனமாகிய காற்றை நிறுத்திச் சிவமென்னும் அகண்டஞான பிரகாசத்தைப் பரப்புந்தன்மையே தீப மேற்றுவதன் தத்துவமாம். ஞானதீபப் பிரகாசமே விமர்ச சக்திவடிவமாகும்.

## தீபதேவியின் பிரார்த்தனை

"விமர்சவடிவ ஞானதீப தேவியே! எனக்கு எப்பொழுதும் சுபமாகும் மங்கள வடிவ அபேதநிலை விளங்கட்டும். நீ ஸ்திரமாக (என் மனத்தில்) யான் தொடங்கியுள்ள இந்த ஞானயாக ரூப நிதித்தியாஸன ஸமாதிகள் எனக்கு அபரோக்ஷமாகும் வரையில் பின்ன பின்ன அக்ஞானரூப இருள் சூழாமல் நன்கு பிரகாசிப்பாயாக". என்பது தீபதேவியின் பிரார்த்தனையாகும்.

## ஸ்ரீசக்கிரத்தில் புஷ்பாஞ்ஜலி

இங்கே ஸ்ரீவித்யாமஹாமந்த்ரத்தின் அர்த்தாநுஸந்தானம் செய்தல் அவஸ்யம். இதன் அர்த்த விசாரம் பூமி

கையில் மந்த்ர ஸங்கேதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆங் கறியவும். இதனுல் ஸ்ரீசக்கிரவடிவப் பிரபஞ்சம், தேகம், மனம் இவற்றிற்கும், வித்தியாஸ்வரூப சித்சக்திக்கும், மந்த்ரத்திற்கும் அபேதம் ஸூசிப்பிக்கப்படுவது அறியத் தக்கது.

ஸபர்யா பத்ததி வாஸனு விமர்சம்
முதல் கண்டம் முற்றிற்று.

---

## முதல் கண்டத்தின் ஸாராம்சங்கள்.

1. ஸம்பிரதாய குருஸ்தோத்திரம்—பிரஹ்மவித்யா ஸம்பிரதாய குருவந்தனமும் ஸ்தோத்திரமும்; குரூபஸதனம்.
2. யாகமந்திரப் பிரவேசம், துவார தேவதைகளின் பூஜை; மனன நிதித்தியாஸன விருத்திகள்; விசாரணை, சாந்தம், ஸந்தோஷம் முதலியவற்றைப் பெறுதல்.
3. தத்துவாசமனம் — நாமரூபவடிவ ஸர்வப்பிரபஞ்சத்தையும் அதிஷ்டான பரசிவத்தில் லயிப்பித்தல்.
4. குருபாதுகா மந்த்ரஸ்மரணை—அகண்டபாவனை.
5. மிருகீமுத்திரா தத்துவம்—ஏகாக்கிரத்தன்மை; சித்த விருத்தி நிரோதம்.
6. கண்டா பூஜை—நாதாநுஸந்தானம்.
7. ஸங்கல்பம், தேசகால ஸங்கீர்த்தனம்—தேசகால கற்பனைகளை யொழித்து நிஸ்ஸங்கல்பனுய் இருக்க ஸங்கல்பித்தல்.

8. ஆஸனபூஜை—ஸர்வப் பிரபஞ்சமும் மனமும் பரசிவம் விளங்கும் அஷ்ட மூர்த்திஸ்வரூப பீடமெனல்.

9. த்வீபநாத பூஜை—க்ஷேத்திரக்ஞ பாவனை.

10. தேஹரக்ஷை திக்பந்தம்—பேத தர்சனமாகும் மஹாபயத்தினின்றும் அபயஸ்வரூபரக்ஷையைப்பெற விரும்புதல்.

11. பூஜாதத்துவார்த்தபாவனை—சிவயோகம்.

12. ஸமஷ்டி யஞ்சலி—யோகினிகளின் தத்துவபாவனை.

13. அநுக்ஞை—பிரஹமாத்மைக்கியாநுஸந்தானம்.

14. பிராணப்பிரதிஷ்டை — அகண்டாகாரவிருத்தியால் ஸச்சிதாநந்த சிவத்தையெங்கும் பார்த்தல்.

15. மந்திரபூஜை—“நாமரூபாத்மக ஸர்வப்பிரபஞ்சமும் மனமும் ஸச்சிதாநந்த சித்சக்தியின் அபிவியஞ்சகங்களேயாம்” என்று பாவித்தல்.

16. தீபபூஜை—ஞானமே அக்ஞான நாசத்திற்கு நேர் ஸாதனமாமென்னுமறிவு.

17. ஸ்ரீசக்கிரத்தில் புஷ்பாஞ்சலி—ஸ்ரீமத் பஞ்சதசீமந்த்ர மஹா வாக்கியார்த்த அநுஸந்தானம்.

# ஸபர்யாபத்ததி வாஸனுவிமர்சம்

## இரண்டாவது கண்டம்.

———:0:———

பூதசுத்தி—ஆத்மப்பிராணப்ரதிஷ்டை — பிராணுயாமம்—விக்னேத்ஸாரணம்—சிகாபந்தனம்.

### பூதசுத்தி. (௧௦)

பூதமென்பது உண்டானவஸ்துவாகும். மாயையும், அவித்தையும், அவற்றின் காரியங்களாகும் பாஞ்சபௌதிக ஸர்வதிரிசியப் பிரபஞ்சமும், கர்த்தாபோக்தாவாகும் ஜீவபாவமும் அநாதிகற்பனையாலுண்டானவை. இக்கற்பனைக்கு மூலகாரணம், தான் ஜீவனென்னும் மயக்க அறிவேயாகும்—இதுதான் அக்ஞானமாம். ஜீவபாவத்தின் நீக்கமே பூதசுத்தியாகும். பூதசுத்தியே தரணையென்றும் கூறப்படும்.

पुरुषे सर्वशास्तारं बोधानन्दमयं शिवम् ।
धारयेद्बुद्धिमान्नित्यं सर्वपापविशुद्धये ॥
ब्रह्मादिकार्यरूपाणि स्वे स्वे संहृत्य कारणे ।
सर्वकारणमव्यक्तमनिरूप्यमचेतनम् ।
साक्षादात्मनि संपूर्णे धारयेत्प्रणवे नरः ॥
इन्द्रियाणि समस्तानि वागादीनीह बुद्धिमान् ।
विषयेभ्यः समाहृत्य मनसात्मनि योजयेत् ॥

**धारणैषा मया प्रोक्ता सर्वदुःखविनाशिनी ।**
**न केनाप्युपशान्तिः स्यान्मनसोऽत्रानया विना ॥ इति ।**

तत्वसारायणे—उपासनाकाण्डे

எங்ஙனம், அரிசி உமியோடுகூடியுள்ளபோது நெல்லென்று அழைக்கப்படுமோ அங்ஙனமே, பரசிவம் (கற்பித) அவித்தையோடு கூடியுள்ளபோது ஜீவசிவம் என்னும் பெயரைப் பெறுகின்றது.

இந்த ஜீவசிவம் மூலாதாரத்தில் இருப்பையுடையதாகும். மூலாதாரம் அஞ்ஞானவ்ருதமான **अन्धतामिस्र** ஸ்தானமாகும். இத்தகைய ஜீவனை, நித்யாநித்தியவஸ்து விவேகவிருத்தியென்றும், சுபேச்சை, விசாரணை முதலிய ஞானபூமிகைகளோடுகூடிய விருத்தியென்றும் பலவகையாய்க்கூறப்பட்ட ஸுஷும்ந நாடீமார்க்கமாய்ச் செலுத்தி ஸஹஸ்ராரமென்னும் பிரஹ்மரந்த்ரத்திலுள்ள பரசிவபதத்தில் ஐக்கியப்படுத்துதல் வேண்டும். நெல்லை அரிசியோடு ஐக்கியப்படுத்த வேண்டுமாயின், உமியாகும் அசுத்தத்தைப் போக்கவேண்டும். ஜீவனிடத்திலும் சில அசுத்தமுண்டு. அதை நீக்கினல்தான் பரசிவத்தோடு ஐக்கியம் செய்தற்காகும். அவ்வசுத்தம் ஜீவனது பரிச்சின்ன வியஷ்டிசரீரமாகும். இது ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணமென மூவ்வகைத்து. இம்மூன்று சரீரங்களையும் எரித்தால் தான் பரசிவத்தோடு ஐக்கியமாகலாம்.

ஆதலின், அபூர்ணத்துவம், கிஞ்சித்க்ஞத்துவம், திருப்தியின்மை (ஆசை), அநித்தியத்துவம், அஸ்வாதந்த்ர்யம் முதலிய தர்மங்களோடுகூடிய ஸங்கோச (குவிந்த) சரீரத்தை “**यम्**” என்னும் வாயுபீஜத்தால் உலர்த்தி “**रम्**” என்னும் அக்கினி பீஜத்தால் எரித்தல்வேண்டும். பின்னர்

"**वम्**" என்னும் அம்ருதபீஜத்தால் ஸஹஸ்ராரத்திலிருந்து பரமசிவாம்ருதத்தை வர்ஷிக்கச்செய்து, முப்புரங்களைச்சுட்ட சாம்பலை அவ்வம்ருதத்தால் நனைத்து, "**लम्**" என்னும் பிரிதிவீ பீஜத்தால் சாம்பவசரீரத்தை யுண்டு பண்ணல்வெண்டும். இது திவ்வியசரீரமாகும். ஆதலின் விகாஸசரீரம். இதில் பூர்ணத்துவம், ஸர்வக்ஞத்துவம், நித்தியத்ருப்தி, நித்தியத்துவம், ஸ்வாதந்த்ர்யம் முதலியன விகஸித்து நன்கு விளங்கும்.

**यज्ञो भूत्वा यज्ञमासीद ; शिवो भूत्वा शिवं यजेत् ।**

என்னும் ஸ்ருதிகளின்படி தான் சிவபாவத்தோடு இருந்தே சிவத்தையுபாஸித்தல் வேண்டும். இந்த உபாஸனை யாதெனின், **अहं सः—सोहम्**=நானே பரசிவம், பரசிவமே நான்—என்னும் ஐக்கியவிமர்சமேயாகும். இங்ஙனம் ஐக்கிய நிலையில் நெடுநேரம் நின்று, பின், திவ்விய சரீரத்தோடுள்ள சுத்த ஆத்மாவை மூலாதாரத்திற்குக் கொண்டுவந்து, தொடங்கிய யாகத்தை முடித்தல் வேண்டும். இப்பொழுது மூலாதாரத்திலிருப்பினும் ஆத்மா அசுத்த ஜீவனல்லன்; ஏனெனின், "**हंसः सोहम्**" என்னும் அகண்ட ஐக்கியவிருத்தியோடு கூடியுள்ள காரணத்தால்.

ஆத்மப்ராணப்ரதிஷ்டா. (௧௧)

அவித்தையென்னும் உபாதியே ஜீவனது அசுத்த பாகமாம். பூதசுத்திபாவனையால் அவ்வவித்யோபாதி நீங்கக் கூடஸ்தவடிவ பிரத்யகான்மாவே மிஞ்சுகின்றது.

இங்ஙனம் நிற்கும் நிலையே ஆத்மப்பிராணப் பிரதிஷ்டையாகும்.

"**आं सोहम्**" என்று மும்முறை அநுஸந்தானம் செய்தல்வேண்டும். **आम्**=என்பது பிரஹ்மசக்தியாகும் விமர்ச

வடிவம். இந்த விமர்ச விருத்தியினுல் "பரசிவமும் தானும் ஒன்றே" என்று ஸந்தேகவிபரீதங்களற அறிதல் வேண்டும். ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணசரீர அத்தியாஸங்களை நீக்கும் பொருட்டு மும்முறை **आमू सोहं** என்னும் மந்த்ரத்தின் அர்த்தத்தை அநுஸந்தானம் செய்தல் அவசியம்.

## பிராணுயாமம்.

பின், மூலத்தினுல் பதினுறு முறை, பத்துமுறை அல்லது மும்முறை பிராணுயாமம் செய்தல் வேண்டும். பிராணுயாமமென்பது பிராணனை யடக்கிச் செலுத்துதலாகும். இது ரேசக, பூரக, கும்பகவடிவினதாகும். ரேசகமாவது உள்ளே யிருந்த காற்றை வெளிவிடுதல்; பூரகமாவது வெளியேயுள்ள பிராணவாயுவை உட்கொள்ளுதல். கும்பகமாவது உட்கொண்ட வாயுவை ஸ்தம்பனம் செய்து சற்றுநேரம் அடக்குதல்.

இதன் கால அளவு பலவகையாய்ச் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது.

காலஅளவு

| | |
|---|---|
| பூரகம் | —ஒரு நிமிஷம். |
| கும்பகம் | —நான்கு நிமிஷம். |
| ரேசகம் | —இரண்டு நிமிஷம். |

இந்தக்கால அளவின்படி செய்யின் மிகவும் நலம்.

இவ்வுபாஸ்தி ஞானயோகமாதலின், இதற்கு ஹடயோகரீதியான பிராணுயாமம் அவ்வளவு அவசியமானதன்று; ஆயினும் மனத்தின் ஏகாக்கிரத்தின் பொருட்டு இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## விக்நோத்ஸாரணம். (௧௧)

“श्रेयांसि बहुविघ्नानि” என்பது பழமொழி. விக்னங்கள் தடைகளாம். முதல்கண்டத்தில் திக்பந்தத்தில் கூறப்பட்டபடி பேத எண்ணங்களே வித்யோபாஸ்தியாகும் ஞானயாகத்தின் தடைகளாகும். பேதந்தான் பூதம்; கற்பிதமாய்த் தோன்றியது; தேச, கால, வஸ்து பரிச்சேதமுடையது. இந்தப் பேதம், பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் மூன்று லோகங்களிலும் வியாபித்திருக்கின்றது.

எந்தப்பூதங்கள் (பேதத்தோற்றங்கள்) பூமியில் இருக்கின்றனவோ அந்தப் (பேத) பூதங்கள் ஓடியொழியட்டும்; எந்தப்பூதங்கள் அபேத ஞானத்திற்குத் தடைகளோ அவைகள் பரசிவனது ஆக்ஞையால் நசிக்கட்டுமென்பது மந்த்ரார்த்தமாம். “शिवाज्ञया” என்பதற்கு சிவாவாகும் ஸச்சிதாநந்த வடிவ சித்சக்தியினது ஞானத்தினால் என்று பொருள் கொள்வது மிகவும் நலமாய்த் தோன்றுகின்றது.

இங்ஙனம் பேதத்தோற்றங்களான தடைகளை யொழித்து அபேததரிசனமென்னும் தத்துவஞானத்தையடைந்து நிதித்தியாஸனவடிவ பராபூஜையைச் செய்தல் வேண்டும்.

## சிகாபந்தனம்.

சிகை கர்மகாண்ட அநுவர்த்தனத்தின் லிங்கமாகும்; ஆதலின், கர்மகாண்டத்தை அநுஸரிப்பவர்க்குச் சிகை யவசியம் வேண்டும்.

இது ஞானகாண்டமாதலின், சிகையையுடையவனாயிருப்பினும், “நான், கர்த்தா போக்தாவடிவஜீவனல்லன்; வேதசிகைகளில் பிரதிபாதிக்கப்பட்ட பரசிவமே நான்” என்னும் அநுஸந்தானவடிவமே சிகாபந்தனத்தின் வாஸனையாம்.

அங்குஷ்டமந்த்ரமாகும் "நம:" என்பதன் வாச்சியார்த்தம் ஜீவபாவஸூசகம். இதன் லக்ஷ்யார்த்தமாவது "ம:" என்னும் ஜீவன் ந=(நான்) அல்லன்; அதாவது நான் ஜீவனல்லவென்பதாம். அங்குச முத்திரையால் ஜீவபாவத்தைக் கற்பித்த அவித்தையையும், அதனால் ஏற்பட்ட ஸகல அநர்த்தங்களையும் அதிஷ்டான ஞானத்தினால் நீக்கி வேதசிகையின் அத்வைத தாத்பர்யத்தில் ஐக்கியப்படுத்துதலாம்.

ஸபர்யா பத்ததி வாஸனா விமர்சம்
இரண்டாவது கண்டம் முற்றிற்று.

---

## இரண்டாவது கண்டத்தின் ஸாராம்சம்.

1. பூதசுத்தி—ஜீவபாவத்தையொழித்தல்; பிரஹ்ம பாவதாரணை.
2. ஆத்மப்பிராணப்ரதிஷ்டை—கூடஸ்தபாவத்தில் நிற்றல்.
3. பிராணயாமம்—சித்தத்தின் ஏகாக்கிரதை.
4. விக்னோத்ஸாரணம்—பேததர்சன நீக்கம்.
5. சிகாபந்தனம்—சிவோஹம்பாவனை.

# ஸபர்யாபத்ததிவாஸனு விமர்சம்.

## மூன்றுவது கண்டம்.

——:o:——

### நியாஸங்கள். (१२–१३)

நியாஸம் என்னும் பதத்திற்கு விடுதல் என்று ஒரு அர்த்தமும், வைத்தல் அல்லது பொருத்துதல் என்று மற்றோரர்த்தமும் உண்டு.

ஸபர்யையென்னும் நிதித்தியாஸனத்தில் நியாஸம் ஒரு முக்கியமான பாகமாகும். விஜாதீயமான அநாத்ம வ்ருத்திகளை யொழித்து ஸஜாதீயமான ஆத்ம வ்ருத்திகளைப் பெருக்குதலே நிதித்தியாஸனமாகும். இங்ஙனமே உபாஸகன் தனது சரீரத்தில் ஜட அநாத்மபாவத்தை யொழித்து அதிஷ்டான சித்சக்தியபின்ன சிவபாவத்தைப் பொருத்துதலே நியாஸத்தின் பரமரஹஸ்யமாம்.

**देव्यहंभावयुक्तः स्वशरीरे वज्रकवचन्यासजालं विदधीत ।**

என்பது கல்பஸூத்திரம். உபாஸகன் "சித்சக்தியே நான்" என்று ஸதா பாவித்தல் வேண்டும். நியாஸலக்ஷணம் இந்த பாவனையில் ஸித்திக்கின்றது. எங்ஙனமெனின், "சரீரத்திரய, அவஸ்தாத்திரய விலக்ஷணமாயும் பஞ்சகோசவியதிரிக்தமாயுமுள்ள ஸச்சிதாநந்த சித்சக்தியே நான்" என்று பாவிப்பதால் அஹம்பதலக்ஷ்யார்த்தத்தைப் பொருத்துதலும், "நான் கர்த்தா, நான்

போக்தா, நான் ஜனனமரணவடிவ ஸம்ஸாரி" யென்னும் ஜீவபாவத்தைவிடுதலும் ஸித்திக்கின்றன. ஆதலின் நியா ஸவடிவமே.

அநர்த்தநிவிருத்தி ஆநந்தப்பிராப்திவடிவ மோக்ஷஸ்வரூபமும் நியாஸஸ்வரூபமாகவே யிருக்கின்றது. நியாஸம் வஜ்ரகவசமாம். கவசம் எங்ஙனம் சத்துருக்களின் அஸ்த்ர சஸ்த்ரங்களினின்றும் சரீரத்தைக் காப்பாற்றுகின்றதோ, அங்ஙனமே, நியாஸமும் உபாஸகனது ஆந்தர சத்ருக்களாகும் துவைத (பேத) விருத்திகளினின்றும் காப்பாற்றுகின்றது.

"நானே சித்சக்தி" யென்று பாவிக்கும்போது சித்சக்திக்குள்ள ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம் என்னும்* மூன்று ஸ்வரூபங்களேயும் நன்கு அறிதல் அத்தியாவசியம். அவற்றின் விவரமாவது:—

ஸ்தூலம்—இது அபராபூஜைக்குரியது. மந்தாதிகாரி விஷயம். இங்கே விமர்சம் செய்யவேண்டிய அவசியமில்லே.

ஸூக்ஷ்மம்—இது பராபராபூஜைக்குரியது. மத்யமாதிகாரிவிஷயம். விமர்சித்தற்குரியது. பராபூஜைக்குச் சம்பந்தப்பட்டதாதலின்.

பரதேவதையின் ஸூக்ஷ்மரூபம் மந்த்ராத்மகமானது. (பிரணவ) ஏகாக்ஷரமந்த்ரம், (அஜபாரூப) இரண்டு அக்ஷர மந்தரம், பஞ்சாக்ஷரம், ஷடக்ஷரம், முதலிய ஸப்தகோடி மஹாமந்த்ரங்களும், பாலா, பஞ்சதசீ, மஹாஷோடசீ, புவனேஶ்வரீ, நவாக்ஷரீ முதலிய வித்தைகளும், அகாராதி

---

* இவை, வரிவஸ்யாரஹஸ்யம் தமிழ் மொழி பெயர்ப்பு முன்னுரையில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கறியவும்.

க்ஷகாராந்தமான மாத்ருகைகளும் பரதேவதையின் ஸூக்ஷ்மரூபமேயாகும்.

மாத்ருகா ந்யாஸம் (௧௨)

எல்லாமந்த்ரங்களுக்கும் காரணமானது மாத்ருகையேயாம். பரதேவதையின் சிரஸ்ஸு, கைகள், கால்கள் முதலிய கற்பிதமான ஸ்தூலவடிவமானது சப்தவடிவ அகாராதி க்ஷகாராந்த மாத்ருகாஸ்வரூபமானது. இதுதான் சித்சக்தியின் ஸூக்ஷ்மரூபமாகும்.

अकचादिटतोन्नद्धपयशाक्षरवर्गिणीम् ।
ज्येष्ठाङ्गबाहुपादाग्रमध्यस्वान्तनिवासिनीम् ॥

என்னும் பிரமாணம் இங்கறியத்தக்கது. பரதேவதையே நான் என்னும் பாவனை திடப்படுதற்கு மாத்ருகா ந்யாஸம் அவசியம் செய்தல் வேண்டும். இது பாஹ்யம் ஆந்தரம் என இருவகைப்படும்.

அன்றியும், சரீரத்தில் மாத்ருகாக்ஷரங்களால் குறிக்கப்படும் இடங்கள் யாவும் சிவஸ்தானங்கள் அல்லது சிவம் விளங்குமிடங்களென்று ஸூதஸம்ஹிதை கூறுகின்றது.

அந்தர்மாத்ருகா ந்யாஸத்தில், அகாரம் முதல் க்ஷகாரமீருகவுள்ள ஐம்பது எழுத்துக்களையும் விசுத்தி (16) அநாஹதம் (12) மணிபூரகம் (10) ஸ்வாதிஷ்டானம் (6) மூலாதாரம் (4) ஆக்ஞை (2) என்னும் ஆறுதார்ங்களிலும் ஐம்பதக்ஷரங்களை வியஷ்டியாகவும் ஸஹஸ்ராரகமலத்தில் ஸமஷ்டியாகவும் பாவித்தல் வேண்டும்.

அந்தர்மாத்ருகாந்யாஸத்தின் தத்வார்த்தம் யாதெனின், மூலாதாராதி ஆக்ஞாந்தமான ஷட்சக்கிரங்களும் முறையே

பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், மனம் என்பவற்றின் ஸ்தானங்களாம். சித்சக்தியை அதிஷ்டானமாய்க் கொண்ட குண்டலினீ என்னும் ஜீவசக்தியானது ஸுஷும்னுமார்க்கமாய்ச் சஞ்சரித்து மனத்தோடு தாதாத்மியத்தை யடைந்து ஜீவன் எனப்படுகின்றது. இந்த குண்டலினியானது ஸுஷும்னைக்கு வலப்புறமுள்ள பிங்களையென்னும் ஸூர்ய நாடியிலும், இடப்புறமுள்ள இடையென்னும் சந்திரநாடியிலும் செல்லுகின்றது. ஆகவே ஷடாதாரங்களிலும், ஸூர்ய சந்திர நாடிகளிலும் ஸஞ்சாரம் செய்யும் ஜீவசக்திக்கு அதிஷ்டானமான சித்சக்தியை மேற்கூறிய எட்டுஸ்தானங்களிலும் ஸாஹம்பாவத்துடன் பாவித்தல் வேண்டுமென்பதாகும். இந்த எட்டுஸ்தானங்களே அஷ்டமூர்த்திஸ்வரூபங்களாம்.

### கரசுத்தி நியாஸம். (௧௫)

"**அं ஆं ஸௌ:**" என்று இரண்டு கைகளையும் கைவிரல்களையும் தொடுதல் கரசுத்தி நியாஸமாகும். **அं ஆं ஸௌ:** என்னும் பீஜங்கள், த்ரைலோக்கிய மோஹந சக்கிரத்திற்கு ஈசியாய் விளங்கும் த்ரிபுராசக்ரேஸ்வரியென்னும் நாமரூப உபாதியோடு கூடிய சித்சக்தியைக் குறிப்பிப்பனவாகும். இங்ஙனமே ஸ்ரீசக்கிரத்திலுள்ள எல்லா சக்கிரங்களுக்கும் ஈஸ்வரிகளாய் விளங்கும் சக்ரேஸ்வரிகளைக் குறிப்பிடும் பீஜங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஒன்பது சக்ரேஸ்வரிகளில் பிந்து சக்ரேஸ்வரி மஹாத்ரிபுரஸுந்தரியாவள். இவளது பீஜம் பஞ்சதசியே. மற்ற எட்டுசக்ரேஸ்வரிகளின் வித்தைகளில், முதலாவது சக்ரேஸ்வரியினது வித்தையால் கரசுத்தி நியாஸமும், இரண்டாவது வித்தையால் ஆத்மரக்ஷா நியாஸமும், மூன்றுவதனல், ஆத்மாஸன நியாஸமும் நான்காவதனல்

சக்கிராஸன நியாஸமும், ஐந்தாவதால் ஸர்வமந்த்ராஸன நியாஸமும், ஆறுவது வித்தையால் ஸாத்யஸித்தாஸன நியாஸமும் செய்யப்படுகின்றன. அவை முறையே

2. ऐं क्लीं सौः 3. ह्रीं क्लीं सौः 4. हैं ह्क्लीं ह्सौः

5. ह्सैं ह्स्क्लीं ह्स्सौः 6. ह्रीं क्लीं ब्लें

என்பனவாம். ஏழாவது சக்ரேஶ்வரியின் பீஜம் ह्रीं श्रीं सौः என்பதாம். இது மூர்த்தி கல்பனையில் உபயோகப்படுகின்றது. எட்டாவது சக்ரேஶ்வரியின் பீஜம் ह्स्रैं ह्स्क्ल्रीं ह्स्रौः என்பதாகும். இது ஆவாஹனத்தில் விநியோகப்படுகின்றது.

கரசுத்திநியாஸதத்துவம் :—

कर्मेन्द्रियाणां वैमल्यात्करशुद्धिकरी स्मृता ।

யோகினீஹ்ருதயம்–8-134.

आत्मतत्वगतयोरशुद्धयोरत्र कर्मकरणात्मनोर्द्वयोः ।

शुद्धतत्वलयभावनामयी शुद्धिरात्मकरयोः परा मता ॥

அசுத்ததத்துவமாகும் ஆத்மதத்துவத்திலடங்கிய அந்தக்கரணம், ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் முதலியவைகளை அவற்றிற்குக் காரணமான சிவதத்துவத்தில் லயம் செய்தலே இதன் வாஸனையாகுமென்று ஸ்ரீ அம்ருதாநந்தநாதர் கூறுகின்றனர். அசுத்த கார்யோபாதியை நீக்கிச் சுத்தகாரணோபாதியில் லயிப்பித்தலே கரசுத்தி நியாஸ ரஹஸ்யமாகும்.

ஆத்மரக்ஷா நியாஸம்—(१५)

இது, ऐं क्लीं सौः श्रीमहात्रिपुरसुन्दरि आत्मानं रक्ष रक्ष । என்று ஹ்ருதயத்தில் அஞ்சலி செய்வதாகும். இதன் ரஹஸ்யார்த்தம் ஹ்ருதயக்கிரந்தியென்னும் சித் ஜடக்

கிரந்தியைப் பேதிப்பதாகும். சித் ஜடக்கிரந்தியை அந்நியோன்னியாத்தியாஸமென்று சாஸ்திரங்கள் கூறும். இந்தக் கிரந்தி பரதேவதையின் ஸாக்ஷாத்காரத்தால் தான் அறுபடும். இது ஒழியாமல் சந்தேகவிபரீதங்கள் போகா; கர்மவாஸனைகள் நீங்கா. ஆதலின் ஜீவபாவமும் நாசமாகாது.

भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥

ஜீவபாவமுள்ளவரை ஒருவனுக்கு ரக்ஷையில்லை. ஆத்மாபின்ன சித்சக்தியின் அபரோக்ஷமே ரக்ஷையாகும். இந்த ரக்ஷையை மிக ஆவலாய் வேண்டுவதே இந்த ஆத்ம ரக்ஷா நியாஸ தத்துவமாம்.

பாலாஷடங்கநியாஸம்:—(१५)

பாலாஸ்வரூபமாவது ஞானப்பியாஸ காலத்தில், ஆரம்ப விருத்தியில் விளங்கும் சித்சக்தியாகும். இந்த ஆரம்பவிருத்தி திடப்பட அதில் விளங்குவது த்ரிபுர ஸுந்தரியாகின்றது. அப்பியாஸத்தின் முதிர்ச்சியால் நிதித்தியாஸன பூமிகையும் ஸவிகல்ப ஸமாதி நிலையும் ஏற்படுகின்றன. இவற்றில் விளங்கும் சித்சக்திக்கு ராஜ ராஜேஶ்வரி, மஹாஷோடசி, பராபட்டாரிகையென்னும் பல பெயர்கள் விளங்குகின்றன. ஆதலின் பாலை, த்ரிபுர ஸுந்தரி பராபட்டாரிகைகளுக்குப் பரஸ்பரம் பேத மில்லையென்று அறிதல் அத்தியாவசியம்.

சதுராஸன நியாஸம். (१६)

ஆத்மாஸனம், சக்ராஸனம், ஸர்வமந்த்ராஸனம், ஸாத்தியஸித்தாஸனமென்பவை நான்கு ஆஸன நியாஸங்

களாம். இவை, முறையே, மூன்றுவது, நான்காவது, ஐந்தாவது, ஆறுவது சக்ரேஸ்வரிகளின் வித்யைகளால் நியவஸிக்கப் படுபவையாகும். இவற்றின் தத்துவமாவது :—ஆத்மாஸனம் பிரமாதாவையும், சக்கிராஸனம் பிரபஞ்சம், சரீரம், மனம் என்னும் பிரமேயத்தையும், ஸர்வ மந்த்ராஸனம் பிரமாணத்தையும் ஸாத்திய ஸித்தாஸனம் பிரகாச விமர்ச ஸாமரஸ்ய ஸ்வரூபத்தையும் குறிப்பனவாகும்.

தனது ஸத்தையால் எங்கும் வியாபித்திருக்கும் சேதனத்திற்கு ஆஸனம் என்றுபெயர். அது ஆத்மாவென்னும் ஜீவ உபாதியால் ஆத்மாஸனமென்றும், விஷயோபாதியால் சக்கிராஸனமென்றும், பிரமாண உபாதியால் ஸர்வ மந்த்ராஸனமென்றும் கூறப்படும்; ஸாத்திய ஸித்தாஸனமென்பது நிருபாதிக சைதன்யத்தைத் தெரிவிக்கின்றது. ஆத்மாபின்ன பிரஹ்மசைதன்யம் நித்தியஸித்தமாயுள்ளது. கற்பிதமான மாயை அல்லது அக்ஞானம் தனது ஆவரணசக்தியால் அந்த பிரஹ்மத்தை மறைத்து, நானாத்துவ வடிவ பிரபஞ்சத்தைத் தனது விக்ஷேபசக்தியால் தோற்றச்செய்தது. இதனால் ஸ்தோதித ஸ்வப்பிரகாச பிரஹ்மத்திற்கு அஸத்துவமும், அபானமுமேற்பட்டன. ஆத்மாபின்ன பிரஹ்மத்தை யறியும் வேட்கையையுடைய தீவிரதரமுமுக்ஷுக்களால் பிரஹ்மம் அபேததரிசன தத்துவஞானத்தால் அபரோக்ஷமாய் அறியப்படும்போது ஸாத்தியம் (அடையப்பட்டது) என்று நினைக்கப்படுகின்றது. கழுத்தில் அணிந்துள்ள முத்துமாலையை மறந்து இங்குமங்கும் தேடிக் கிடைக்காமல் துக்கிக்கும்போது பிறரால் ஞாபகப்படுத்தப்பட்டுத் தன் கழுத்திலேயே தொட்டுப் பார்த்துப் புதிதாய்க் கிடைத்தது போலுள்ளது ஸாத்திய

ஸித்தமாகும். இது ஸவிகல்ப ஸமாதியில் அறியப்படுவ தாகும். ஸாத்திய ஸித்தாஸனம் திரிபுடியின் ஒழிவில் தான் புலப்படும்.

**ज्ञातृज्ञानज्ञेयानामभेदभावनं श्रीचक्रपूजनम् ।**

என்னும் பாவநோபநிஷத்தின் வாக்கியத்திற்கு இது தான் பொருளாகும். பிரமாதா-பிரமேய-பிரமாண-சேத னங்களாயும், சுத்தசேதனமாயும் நான் இருக்கிறேனென் பது சதுராஸன நியாஸத்தின் தத்துவார்த்தமாகும்.

வாக்தேவதா நியாஸம். (௧௬)

வசினீ காமேஶ்வரீ முதலிய வாக்தேவதைகள் ஸகல சாஸ்திரங்களின் வடிவமாயுள்ளவர்களாவர். இவர்களைத் தன்னோடு அபேதமாய்ச் சிந்திப்பதே வாக்தேவதா நியா ஸமாகும்.

சக்கிர நியாஸம் (பாஹ்யம்-ஆந்தரம்) (௧௬-௧௯)

இதில் திரிபுரை-திரிபுரேசீ முதலிய ஒன்பது சக்ரே ஶ்வரிகளும், அவரவர்களுக்குரிய த்ரைலோக்ய மோஹ னம், ஸர்வாசாபரிபூரகம் முதலிய ஒன்பது சக்கிரங் களோடும், அணிமாதி — காமாகர்ஷிண்யாதி—முதலிய ஆவரண சக்திகளோடும் நமது சரீரத்தில் பாதம் முதல் சிரஸ் வரையில் பாஹ்யமாகவும், கீழ் ஸஹஸ்ராரம் முதல் மேல் ஸஹஸ்ராரம் வரை ஆந்தரமாகவும் பாவிக்கப் படு கின்றன. இந்தப் பாவனையால் "எனது தேகமே ஸ்ரீசக் கிரம்; நானே சித்சக்தி" என்னும் அகண்ட பாவனை திடப்படுகின்றது.

காமேஶ்வர்யாதி நியாஸம். (௨௦)

காமேஶ்வரீ, வஜ்ரேஶ்வரீ, பகமாலினீ, மஹாத்ரிபுர ஸுந்தரீ யென்னும் நான்கு சக்திகள் இந்த நியாஸத்தி

லுண்டு. இவர்களில் மஹாத்ரிபுரஸுந்தரி ஸமஷ்டி சக்தியாகவும் மற்ற காமேஶ்வரியாதி மூவரும் வியஷ்டி சக்திகளாகவும் கூறப்பட்டுள்ளனர். இவற்றின் விளக்கம் வரிவஸ்யா ரஹஸ்யம் முதலம்சம் 33ம் ஶ்லோகத்தில் நன்கு காணலாம். ஜகத்காரண சித்சக்தியபேத பாவனை யை இந்த நியாஸம் குறிப்பிடுகின்றது.

மூலவித்யா நியாஸம். (२१)

**मूलमन्त्रात्मिका मूलकूटत्रयकलेबरा ।**

என்னும் பிரமாணத்தின்படி பரதேவதையின் வடிவம் ஶ்ரீவித்யா மஹாமந்த்ரமே. அதிலுள்ள ஒவ்வோரெழுத்தையும் நமது சரீரத்தில் நியஸிப்பதனால் நமது தேஹம் பரதேவதையின் சரீரமேயாகின்றது. இங்ஙனமே மாத்ருகா நியாஸத்திலும் கூறப்பட்டிருப்பது காண்க. இவ்விஷயம் வரிவஸ்யை இரண்டாவது அம்சம் 61வது ஶ்லோகத்தில் கண்டு தெளிக.

ஶ்ரீஷோடசாக்ஷரீ நியாஸம். (२१)

மஹாஷோடசீ மந்த்ரமானது இருபத்தெட்டு பீஜாக்ஷரங்களோடு கூடியது. பதினைந்து வர்ணங்களோடு கூடிய மூன்று கூடங்களும் மூன்று எழுத்துக்களாகக் கணக்கிடின் பதினாறு எழுத்துக்களே ஸித்திக்கின்றன.

மஹாஷோடசீவித்தையின் அதிஷ்டாத்ரீ, நிதித்தியாஸன ஸவிகல்பஸமாதி விருத்திகளில் ஆரூடமான சித் சக்தியேயாகும்.

**दीपाभा—स्वस्सुधारसा—महासौभाग्यदा**—என்னும் நாமங்கள் இந்த சக்திக்குரியனவாகும். தீபமென்பது ஞான தீபமாகும்—ஞானவொளியென்னும் விமர்சஸ்வரூபிணி. ஸஹஸ்ரார கமலத்தினின்று பெருகும்படியான சிதாநந்

தாம்ருத ரஸஸ்வரூபிணியே ஸ்ரவத் ஸுதாரஸையாகும். மஹா ஸௌபாக்கியமென்பது ஸ்வாராஜ்ய ஸித்திவடிவ மோக்ஷமாம். இந்நிலையை யருள்பவள் மஹா ஸௌபாக்கியதாவெனப்படுவள். இங்ஙனம் பரதேவதையின் ஸ்வரூபத்தைச் சிரஸில் பாவித்தல் அவசியம்.

மஹாஸௌபாக்கியவடிவ ஸ்ரேயஸ்ஸை எனக்கு அருள்வாயாக; விஷயாநந்தங்களை யனுபவிக்கும் பிரேயஸ்ஸைத் தேடும் எண்ணத்தை யென்மனத்திலிருந்து ஒழிப்பேனாக. ஆத்மேதரமே பரஸௌபாக்கியமாம்.

ஸௌபாக்கியதண்டினீ முத்திரை ஆள்காட்டி விரலை நீட்டி மற்றவிரல்களை மடக்கிக் காட்டுவதாகும். இது கட்டளையிடுவதைக் குறிப்பிடுகின்றதாகும். லௌகிகவிஷய இன்பங்களில் பிரவிருத்திக்கும் சுரோத்திராதி ஞானேந்திரியங்களையும், அவற்றோடு உபலக்ஷணமாய் மனத்தையும், அங்ஙனம் பிரவிருத்திக்காவாறு தடுத்தலே ஸௌபாக்கிய தண்டினீ முத்திரையின் தத்துவமாகும். இதை வாமபாகத்தில் காட்டுவதால் வெளிவிஷயங்களிலிருந்து நிவ்ருத்தியை யடைந்து அந்தர்முகப்பட்டு மஹாஸௌபாக்கியத்தை யடைதல் அத்தியாவசிய மென்பது தொனிக்கின்றது.

என்னுடைய சத்துருக்களைத் தண்டிப்பேனாக. காமக்குரோதாதி துர்வ்ருத்திகளே ஆத்மபாவனாவ்ருத்திக்குச் சத்துருக்களாம். இவைகள் தாம் ஆஸுரஸம்பத்துகள்.

ரிபு ஜிஹ்வாக்கிர முத்திரை:—இடது கையின் ஆள்காட்டிவிரலை நீட்டி கட்டைவிரலையுள்ளே பொருத்தி மற்ற மூன்றுவிரல்களை அதன்மேல் மடிப்பது இந்த முத்திராஸ்வரூபமாம். பகைவர்களின் நாக்கின் நுனி, நமது

இடது பாதத்தின் கீழ் இருப்பதாகப் பாவனைசெய்தல். இதனால் சத்துருஜயம் அதாவது அநாத்ம வ்ருத்திகளின் நாசமும், உபலக்ஷணமாய், அசுத்தமனத்தின் நாசமும் ஸூசிப்பிக்கப்படுகின்றன.

"மூன்று லோகங்களுக்கும் நானே கர்த்தா" பூமி அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் முவ்வுலகங்களும் என்னால் கற்பிக்கப்படுகின்றனவாதலின் அவற்றிற்குக் கர்த்தா நானே.

**मय्येव सकलं जातं मयि सर्वं प्रतिष्ठितम् । मयि सर्वं लयं याति—**

"அவை என்னிடமிருந்து தோன்றி, இருந்து, லயிக்கின்றனவாதலின் அவற்றிற்குக்காரணம் நானே. அவை எனக்கு அந்நியமாயில்லை." என்று திரிகண்டாமுத்திரையால் நெற்றியில் நியாஸம் செய்தல் வேண்டும்.

திரிகண்டா முத்திரை :—பிரமாதா, பிரமாணம், பிரமேயமென்னும் திரிபுடி வடிவ ஸர்வப் பிரபஞ்சமும் என்னில் (ஆத்மஸ்வரூபத்தில்) கற்பிதமே; என்றால், அகண்டத்தில் திரிகண்டம் கற்பனையாகத் தோன்றுகின்றது. நாமரூப நாட்டத்தை விடின், அகண்டாகார நிலை வெளியாகும். இது தான் திரிபுடியற்ற நிலை. திரிபுடித் தோற்ற காலத்தில் திரிபுடியற்ற ஸ்திதியைத் தெரிவிப்பது திரிகண்டா முத்திரையின் தத்துவமாம்.

இத்தகைய பாவனாரூப ஆத்மஞான அக்கினியால், முகம், சிரஸ், சரீரம் முதலிய எல்லாப் பாகங்களையும் தபிக்கச்செய்தல் வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது இங்கே அறியத் தக்கது.

யோனிமுத்திரை :—இது பிரகாச விமர்ச ஸாமரஸ்ய நிலையைக்காட்டும் முத்திரையாகும். பிரஹ்மாத்மைக்கிய ஸமாதி வ்ருத்தி ஸூசகமே இதுவாம்.

संपूर्णस्य प्रकाशस्य लाभभूमिरियं पुनः ।
योनिमुद्रा कलारूपा सर्वानन्दमये स्थिता ॥

யோ-ஹ்ரு. 6. 71

என்னும் பிரமாணம் இங்கறிதல் அவசியம்.

ஸம்மோஹந ந்யாஸம் (௨௨)

ஸ்ரீவித்யையின் அர்த்தத்தை அநுஸந்தானம் செய்து அதனுடைய செந்நிறப் பிரபையால், காணப்படும் இந்த உலகமுழுமையும் செந்நிறமாய்ப் பாவித்தல் அவசியமாம்.

**लौहित्यमेतस्य सर्वस्य विमर्शः ।**

என்னும் பாவனோபநிஷத்தின் பிரமாணத்தின்படி விமர்சரூப பரதேவதையின் நிறம் சிகப்பு. இந்த நிறம் அநுராகத்தை குறிப்பிடுகின்றது.

आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति ।
आत्मलाभान्न परं विद्यते ।

என்னும் பிரமாணங்களின்படி ஆத்மஸ்வரூபத்தை யறிய வேண்டு மென்னும் தீவிரதர வ்ருத்தியே அநுராக மாகும். ஆத்மாதான் ஸர்வஜகத்திற்கும் ஆதாரமாயும் அதிஷ்டானமாயும் இருக்கின்றது. அதிஷ்டான நோக்கமே செந்நிறமாய்ப் பார்த்தலாகும். இந்தப் பார்வை திடப்படின் நாமரூப பேதப் பிரபஞ்சமானது ஸாதகனுக்கு வசப்படுகின்றது; என்றால், தன் ஸ்வாதீனத்தில் பிரபஞ்சத்தை யடக்கிக் கொள்ளும் ஆற்றல் அவனுக்கு ஏற்படுகின்றது. பிரபஞ்சம் என்னும் ஸ்திரீயை மோஹிக்கச் செய்து தன் வசமாக்கிக் கொள்வதனால் இதற்கு ஸம்மோஹன ந்யாஸ மென்று பெயரேற்பட்டது போலும்.

சாக்த திலகம்:—எங்ஙனம் விபூதியானது நாமரூபப் பிரபஞ்சத்தை அகண்டாகாரத் தீயாலெரிக்க மிஞ்சிய ஸச்சிதாநந்தஸ்வரூபமோ, அங்ஙனமே, அகண்டாகார வ்ருத்தியால் ஸர்வபேத நாட்டங்களேயும் ஒழிக்கும் விமர்சவடிவ சித்சக்தியின் ஸ்வரூபமே சாக்த திலகமாகும் குங்குமமாம். ஆதலின் சாக்த திலகம் ஞான திருஷ்டியைக் குறிப்பிடுவது அறியத்தக்கது.

ஸம்ஹார, சிருஷ்டி, ஸ்திதி நியாஸங்கள். (௨௩)

இவற்ருல் பிரஹ்மவித்யாஸ்வரூப அபேத ஞானுநுஸந்தானத்திஞல் அவித்யை அக்ஞானங்களின் ஸம்ஹாரமும், வித்யாஸ்வரூப ஆநந்தப் பிராப்தியும், ஜீவன் முக்த நிலேயும் ஏற்படுகின்றன. இந்நிலேயே அழியா நிலேயாகும்.

இது வரையில் ஸபர்யா பத்ததியில் சொல்லப்பட்டிருக்கும் நியாஸங்கள் கூறப்பட்டன. இனி இதர பத்ததிகளில் கூறப்பட்டுள்ள இதர நியாஸங்கள் விமர்ஸிக்கப் படுகின்றன.

லகுஷோடா நியாஸம்.

**गणेशग्रहनक्षत्रयोगिनीराशिरूपिणीम् ।**
**देवीं मन्त्रमयीं नौमि मातृकां पीठरूपिणीम् ॥**

என்னும் பிரமாணத்தின்படி "பரதேவதையே கணேசர், கிரகங்கள், நக்ஷத்திரங்கள், யோகினிகள், ராசிகள், பீடங்களாகவும் விளங்குகின்றனள்" என்று ஏற்படுகின்றது. ஆதலின் ஸாதகன் மேற்கூறிய கணேசாதி ஆறு நியாஸங்களேச் "சித்சக்தியே நானே"ன்னும் அபேத பாவனேயின் தார்ட்டியத்தின் பொருட்டுச் செய்தல் அவஸியம். இவற்றின் ஸமஷ்டிக்கு லகு ஷோடா நியாஸமென்றுபெயர்.

## மஹாஷோடா நியாஸம்.

பிரபஞ்சம், புவனம், மூர்த்தி, மந்த்ரம், தேவதை, மாத்ருகையென்னும் ஆறு நியாஸங்களும் சேர்ந்து மஹாஷோடாநியாஸமெனப்படும். இந்த நியாஸத்திற்கும் மேற்கூறிய லகுஷோடா நியாஸத்திற்கும் மாத்ருகைகளே பிரதானமானவையாகும். மஹாஷோடா நியாஸத்தில் கூறப்படும் மாத்ருகா நியாஸத்திற்கும் ஸாதாரணமான பஹிரந்தர்மாத்ருகா நியாஸங்களுக்கும் மிகவும் பேதம் உண்டு.

## லகுஷோடா மஹாஷோடா நியாஸங்களின் தத்துவம்.

தேச கால வஸ்து பரிச்சேத (பேத) ங்களோடுள்ள, பீடங்கள், பிரபஞ்சம், புவனம், கிரஹ, நக்ஷத்திர, ராசி, கணேச, யோகினீ, மூர்த்தி, மந்த்ர, தேவதை, மாத்ருகைகளின் (பேதவடிவ) உபாதியை யொழித்து அதிஷ்டான சித்சக்தியைத் தன் ஸ்வரூபத்தோடு அபேதமாய்ப் பாவித்தலேயாகும்.

இங்ஙனமே பலசாஸ்திரங்களில் இன்னும் பற்பல வகையான நியாஸங்கள் கூறப்பட்டுள்ளன. எல்லாநியாஸங்களும் ஒரே தத்துவத்தைத் தாத்பர்யமாயுடையனவேயாகும். அந்தக்கரண தர்மம் பின்ன பின்னமாயிருப்பதால் பலவாறு கூறப்பட்டுள்ளது. எவரெவர்க்கு எந்த எந்த நியாஸங்களில் மனம் ஈடுபட்டுப் பாவனை திடப்படுகின்றதோ, அவரவர் அந்த அந்த நியாஸங்களைச் செய்தல் அவசியம்.

ஸபர்யா பத்ததி வாஸனு விமர்சம்
மூன்ருவது கண்டம் முற்றிற்று.

## நியாஸகண்டஸாரம்.

1. மாத்ருகாந்யாஸங்கள்.

பாஹ்யம்— சித்சக்தியின் மந்த்ரமயமான சரீர பாவனை.

ஆந்தரம்— அஷ்டமூர்த்திஸ்வரூபபாவனை.

2. கரசுத்தி நியாஸம் — அசுத்த கார்யோபாதியை நீக்குதல்.

3. ஆத்மரக்ஷா, பாலாஷடங்க நியாஸங்கள்— அந்யோந்யாத்தியாஸ ஒழிவு.

4. ஆத்மாஸன, சக்ராஸன, மந்த்ராஸன, ஸாத்யஸித்தாஸன நியாஸங்கள் — பிரமாதா, பிரமாண, பிரமேய சேதனங்களின் உபாதிகளை யொழித்து சுத்த சேதனத்தோடு அபேதபாவனை.

5. அந்தஸ்சக்ர, பஹிஸ்சக்ர நியாஸங்கள் — ஸ்ரீசக்கிரமே சரீரமாமென்னும் பாவனை.

6. காமேஸ்வர்யாதி நியாஸம் — ஜகத்காரண சித்சக்தியே நானென்று பாவித்தல்.

7. மூலவித்யாவர்ண நியாஸம் — பரதேவதாஸ்வரூபப் பிராப்தி.

8. லகுஷோடா மஹாஷோடா நியாஸங்கள். } பிரபஞ்சத்தோடு அபேதாநுஸந்தானம்.

9. ஷோடசாக்ஷரீ நியாஸங்கள் — ஆத்மஸ்வரூபா நுஸந்தானம்.

10. ஸம்மோஹன நியாஸம். } பிரபஞ்சத்தைத் தன்வசமாக்கிக் கொள்ளுதல்.

11. ஸம்ஹார ஸ்ருஷ்டி ஸ்திதி } நியாஸங்கள்—அநர்த்தநிவ்ருத்தி, ஆநந்தப் பிராப்தி, ஜீவன்முக்திகளின் அடைவு.

## முத்திரைகளின் வாஸனை.

1. ஸௌபாக்கியதண்டினீ முத்திரை—மனோ நிக்கிரஹம்.
2. ரிபுஜிஹ்வாக்கிர முத்திரை—அநாத்ம வ்ருத்திகளின் நாசம்.
3. திரிகண்டா முத்திரை—திரிபுடி ராஹித்யம்.
4. யோனி முத்திரை—சிவசக்தி ஸாமரஸ்யம்.
5. சாக்ததிலக ரஹஸ்யம்—விமர்சவடிவ ஞானதிருஷ்டி.

# ஸபர்யாபத்ததிவாஸஞு விமர்சம்.

## நான்காவது கண்டம்

——:o:——

### பாத்ராஸாதனம் (२४–४०)

பாத்ராஸாதனமென்பதற்குப் பாத்திரங்களைப் பரப்பிவைத்தலென்பது பொருளாம். கலசம் அல்லது தீர்த்தபாத்திரம், ஸாமான்யார்க்கிய பாத்திரம் (சங்கம்), விசேஷார்க்கிய பாத்திரம், சுத்தி பாத்திரம், குருபாத்திரம், ஆத்ம பாத்திரம், பலிபாத்திரம் முதலியவை பூஜைக்குரிய பாத்திரங்களாகும். இவற்றைப் பிரதிஷ்டை செய்வதைப் பற்றியும், அவற்றின் அத்தியாத்ம தத்துவத்தைப்பற்றியும் இந்தக்கண்டம் கூறுகின்றது.

### வர்த்தனீ கலசம் அல்லது தீர்த்த பாத்திரம்

பூஜைக்கு ஜலம் இன்றியமையாதது. பூஜை செய்யும்போது "மனத்தின் ஏகாக்கிரத்துவம் கலைந்து இதர எண்ணங்கள் வரும்போது கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு வாயினுல் மூல மந்த்ரஜபம் செய்தல் வேண்டு" மென்று கர்ம காண்டம் கூறுகின்றது. ஆதலின் ஜலத்திற்கு மிகவும் ஸூக்ஷ்மமான தத்வார்த்தம் இருந்தே தீர வேண்டுமென்று தெரிகின்றது. அப்பு, ஜலம், நாரம், உதகம், தீர்த்தம் என்பன பர்யாய நாமங்களாகும்.

"आपो वा इदँ सर्वं । सम्राडापः विराडापः स्वराडापः सत्यमापः आप ओं ।"

"नारं विज्ञानं, तत् अयनम् आश्रयो यस्य सः नारायणः ।"

"आपो वा अग्नेरायतनं" इत्यादिः "आपो वै संवत्सरस्यायतनम्" इत्यन्ता श्रुतिः ।

"सर्वं पुनन्तु मामापोऽसतां च प्रतिग्रहँ स्वाहा"

"ओमापो ज्योती रसोऽमृतं ब्रह्म"

என்னும் ஶ்ருதிப் பிரமாணங்களால் ஞானமே ஜலமென்று ஏற்படுகின்றது. இங்ஙனம் பொருள் செய்யாவிடின் மேலே உதாகரித்த ஶ்ருதிவாக்கியங்களுக்கு ஸமந்வயமான அர்த்தம் ஏற்படாது. "**सर्वं खल्विदं ब्रह्म**" என்று எங்ஙனம் **ஶ்**ருதி கூறுகின்றதோ, அங்ஙனமே, **आपो वा इदँ सर्वं** என்றும் கூறுகின்றது. விராட்டும், ஹிரண்ய கர்ப்பரூப ஸம்ராட்டும், ஸூத்ராத்மஸ்வரூப ஸ்வராட்டும் ஸத்யஸ்வரூபனும் பிரணவவாச்சிய காரணேஶ்வரனும் ஜலஸ்வரூபரே யெனின் அதற்கு ஞானம் என்னும் அர்த்தத்தைத்தவிற வேறு என்ன சொல்லின் பொருந்தும்? அன்றியும், "பரமாத்மா பிரளயகாலத்தில் ஜலத்தின்மேல் சயனித்துக்கொண்டிருக்கிறுனெ" ன்னும் புராணகதையும் இதையே ஆதாரமாய்க்கொண்டதாகும்.

ஆகவே, அத்தியாத்ம யஜனத்திற்கு ஞானமாகிற ஜலம் அத்தியாவஶ்யமானது. தீர்த்தபாத்திரமென்னும் வர்த்தனீ கலசமென்பது வியாவஹாரிகஸத்தையையுடைய பிரஹ்மாண்ட வடிவினதாகும். இக்கலசத்தின் வடிவம் திரிமூர்த்திகளின் ஸ்வரூபமே; இதனுள் ஸப்த ஸாகரங்களும் ஸப்த த்வீபங்களும் அடங்கியுள்ளன.

ருக் யஜுஸ் ஸாம அதர்வணமென்னும் நான்கு வேதங் களும், சீக்ஷை, கல்பம், நிருக்தம், சந்தஸ், வியாகரணம், ஜ்யோதிஷம் என்னும் ஆறு அங்கங்களும், மற்றுமுள்ள ஸ்ம்ருதி புராண இதிஹாஸங்கள் முதலிய சகல சாஸ்திர ங்களும் கலச தீர்த்தத்தை யாஶ்ரயித்திருக்கின்றனவென் பது **कलशस्य मुखे विष्णुः** என்னும் ஶ்லோகங்களால் ஏற்படு கின்றது. வேதங்களும் வேதாங்கங்களும் அபரவித்தை யாதலின் அவற்றின் ஆஶ்ரயமும் அபரஞானமேயாதல் வேண்டும். வர்த்தனீ கலச தீர்த்தத்தின் ஸ்வரூபம் அபர ஞானமே. இது லௌகிக ஞானமும் ஜகத்காரண பரமே ஶ்வரனது பரோக்ஷ ஞானமுமாமென்க. இந்த தீர்த்த பாத்திரந்தான் கர்மோபாஸனா காண்டங்களையும் ஞான காண்டத்தையும் ஸாதனஸாத்தியவாயிலாகச் சம்பந்தப் படுத்துவதாகும்.

இவ்வர்த்தனீ பாத்திர தீர்த்த ஸ்வரூப அபரஞான மெத்தன்மைத்தெனின் கூறப்படுகின்றது.

கர்மகாண்டத்தின்படி ஸகல கர்மங்களையும், ஈஶ்வ ராக்ஞை யென்றறிந்து, அவற்றின் பயனைத் தினையளவும் விரும்பாது நிஷ்காமனாய்ச் செய்த காரணத்தால் சித்த சுத்தியைப் பெற்று ஜீவன் புண்ணிய பாபங்களின் அநு பவத்தின் பொருட்டுப் பரலோகஞ் சென்று அப்புண்ணிய பாபங்களின் பலாநுபவம் தேய்ந்த பின்னர் மறுபடியும் இம்மண்ணுலகில் பிறத்தலென்னும் ஜீவவிஷயமான ஞான மும், உலகமானது கர்த்தா போக்தா வடிவமாயுள்ள ஜீவ னால், கண் காது முதலிய பஞ்சேந்திரியங்களாலநுபவித்து ணரத்தக்க தென்னும் உலகவிஷயமான் ஞானமும், இவ் வுலகத்திற்குக் காரணன் ஒருவன் உளன்; அவன் ஸர்வக் ஞன்; அவன் தான் ஸர்வ ஜீவர்களாலியற்றப்படும் ஸகல

கர்மங்களுக்கும் பயனையருள்பவன்; அவனே பரமேஸ்வ ரன் என்னும் ஈஸ்வர விஷயமான ஞானமும் அபரஞான ஸ்வரூபமாகும். அன்றியும், உபாஸனா காண்டத்தின்படி ஸகுணஸாகாரரூபத்தைத் தியானிப்பதன் மூலமாய் அந்தக் கரணத்தின் விக்ஷேபதோஷம் நீங்கப்பெற்று ஏகாக்கிரத் தன்மையை யடைந்து பரோக்ஷரூப பரமேஸ்வரனது லீலா ஸ்வரூபத்தைப் பிரத்தியக்ஷமாய் அறிகின்றான். இந்த ஞானமும் அபரஞானமேயாகும். சித்தசுத்தி விக்ஷேப நிவ்ருத்திகளைப் பயனாகவுடையது அபரஞானமாகும்.

இந்த அபரஞானத்திற்கும் பரஞானத்திற்குமுள்ள ஸம்பந்தம் யாதெனின், அதன் விமர்சம் செய்யப்படுகின் றது. "(1) நான் கர்த்தா போக்தாவடிவ ஜீவன். (2) இவ்வுலகம் பஞ்சஞானேந்திரியங்களுக்கு விஷயமான சப்த ரூபாதி வடிவமானது. (3) இந்த ஜகத்தின் காரண னும், ஜீவர்கள் இயற்றுங் கர்மங்களுக்குப் பயன் தருபவ னும் ஸர்வக்ஞ பரமேஸ்வரனே" என்னுமிவை அபர ஞான விஷயங்களாகுமென்று முன் கூறப்பட்டனவன்றோ? இவ்வபரஞானமானது, ஸத்யாந்ருதங்களின் சேர்க்கையே யாகும். "இது உலகம்" என்பது அபரஞானம். இந்த ஞானத்தில் உண்மையும் பொய்யும் கலந்திருக்கின்றன. 'இது' என்பது ஸாமான்ய ஞானம்; இது அதிஷ்டான சேத னத்தின் ஸாமான்ய ஸ்வரூப ஆதாரமாயுள்ளது. "உலகம்" என்பது நாமரூப பேதத்தோடு கூடிய வொன்றாகும். இதில் அஸ்தி, பாதி, பிரியம், நாமம், ரூபமென ஐந்தம் சங்களுண்டு. இவற்றில் அஸ்தி பாதி பிரியமென்னும் ஸச் சிதானந்தங்கள் உண்மையானவை; நாமரூபங்கள் பொய். ஆகவே "இது நாமரூப வுலகம்" என்னும் அபரஞானத்தி ற்கும் "இது ஸச்சிதாநந்த சிவம்" என்னும் பரஞானத்தி

ற்கும் ஸம்பந்தமுண்டு. இச்சம்பந்தம் கற்பித ஸம்பந்தமேயாகும். ஆகவே,

வர்த்தனீ கலசம் அபரஞானமென்றும்,

ஸாமான்யார்க்கிய (சங்கஜல)ம் மேற்கூறிய அபரஞானத்திலுள்ள நாமரூப அந்ருதாம்சங்களை நீக்கிய போது மிஞ்சும் அதிஷ்டான சேதன ஸாமான்ய ஸ்வரூப இதந்தாஞானமென்றும்,

விசேஷார்க்கியம் ஸாமான்யஞானரூப இதந்தையானது ஆத்மகோசரவிமர்சவ்ருத்தியாலறியப்படும் போதுணரப்படும் ஸச்சிதாநந்த வடிவ விமர்ச சித்சக்தியபின்ன சிவம் என்னும் விசேஷ ஞானமென்றும் தத்துவ முணர்ந்தோர் கூறுகின்றனர். இவ்விஷயம் மிகவும் ரஹஸ்யமானது.

## ஸாமான்ய விசேஷார்க்கிய விமர்சம்.

பரதேவதாராதனரூபஞானயாகம், மனன நிதித்தியாஸன ஸமாதிவடிவமாமென்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. மாயாவித்தைகளால் தோன்றும் ஸகல அத்தியாஸங்களையும் ஒழித்து, அதிஷ்டான ஸ்வரூபத்தை யறிதலே ஸமாதியென்றும், அதற்குச் சாதனங்களே மனன நிதித்யாஸனங்களென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே அத்தியாஸ வடிவ அநர்த்த நிவ்ருத்தியும் அதிஷ்டான ஞானவடிவ ஆநந்தப் பிராப்தியுந்தான், இந்த ஸபர்யையில் ஸாமான்யார்க்கிய விசேஷார்க்கிய ஸ்வரூப தத்துவமாகும். "ज्ञानमर्घ्यं" ஞானமே அர்க்கிய ஸ்வரூபமென்று ஸ்ரீபாவனோபநிஷத்து கூறுகின்றது அர்க்கிய மென்னும் பதத்திற்குப் பூஜார்ஹமான வஸ்துவென்பது பொருள். ஞானமொன்றே பூஜார்ஹமானது.

ஸாமான்யஞானவடிவினது ஸாமான்யார்க்கியமென்றும், விசேஷஞானவடிவினது விசேஷார்க்கியமென்றும் ஸித்திக்கின்றது. ஸாமான்யம் விசேஷமென்னும் இருவித யதார்த்த ஞானங்களும் சுத்தமனத்தில்தான் தோன்றும். அசுத்தமனத்தில் அவித்தையின் விக்ஷேப சக்தியால் கற்பிதவிசேஷ (பேத) ஞானம் தோன்றும்.

"இது சிவம்" என்பது யதார்த்த விசேஷஞானம்; சுத்த மனத்தில் தோன்றுவது.

"இது உலகம்" என்பது அயதார்த்த விசேஷ ஞானம்; அசுத்த மனத்தில் தோன்றுவது.

"இது" வென்னும் ஸாமான்யஞானம் சுத்தம் அசுத்தம் என்னும் இருவித தன்மைகளோடு கூடிய மனத்திற்கும் தோன்றுவதாகும்; இதற்கு ஸத்தாஸாமான்யமென்றும் மற்றொரு பெயருண்டு.

ஆதலின் இவ்விதந்தாஸ்புரணத்திற்கு மனம் அவசியம் வேண்டும். எங்கே எங்கே மனமுண்டோ அங்கே அங்கே ஸாமான்யஞானமும், அயதார்த்த விசேஷஞானமோ அல்லது யதார்த்த விசேஷஞானமோ உண்டு. ஸுஷுப்தியில் மனமில்லை; ஆதலின் எந்தஞானத்தின் ஸ்புரணமும் அங்கே இல்லை. ஜாக்கிர ஸ்வப்னங்களில் அசுத்த மனமிருப்பதால் அயதார்த்த விசேஷஞானமும், துரீயத்தில் சுத்த மனமிருப்பதால் யதார்த்த விசேஷஞானமும் இருக்கின்றன. இங்கே யதார்த்தமென்பது பாரமார்த்திக பிரஹ்மாபின்ன சித்சக்தி யென்றும், அயதார்த்தமென்பது ஸகல வியாவஹாரிக அல்லது பிராதிபாஸிக ஸத்தையையுடைய கற்பிதப்பொருள்களென்றுமறிதல் அவசியம்.

## மண்டல நிர்மாணம்.

மனமே ஸாமான்ய விசேஷார்க்கியங்களுக்கு மண்டலமாகும்.

ஸாமான்னிய விசேஷார்க்கிய பாத்திரமண்டலஸ்வரூபமாவது :—பிந்து, த்ரிகோண, ஷட்கோண, வ்ருத்த, சதுரஸ்ரங்களின் சேர்க்கையாலானது. (ஸபர்யாபத்ததி பக்கம் 30). இத்தகைய பற்பல உருவங்களோடு கூடிய மண்டலம் எங்ஙனம் மனம் அல்லது அந்தக்கரணத்தைக் குறிக்கும்? எனின், அந்தக்கரணம் ஆகாசாதி பஞ்சபூதங்களின் ஸத்துவாம்சங்களின் ஸமஷ்டிவடிவமானது. மண்டலத்தின் உருவங்களான—

பிந்து = ஆகாசத்தின் (ஸத்வாம்ச) ரூபம் = உள்ளம்,
த்ரிகோணம் = அக்கினியின் ,, புத்தி,
ஷட்கோணம் = வாயுவின் ,, மனம்,
வ்ருத்தம் (வட்டம்) = ஜலத்தின் ,, சித்தம்,
அரைவட்டம்
சதுரஸ்ரம் (சதுரம்) = பூமியின் ,, அஹங்காரம், ஆகும்.

ஆகவே, மேற்கூறிய வுருவங்களோடு கூடிய மண்டலம் அந்தக்கரணத்தைக் குறிக்கின்றதென்பதில் யாதொரு சந்தேகமுமின்று. இந்த மண்டல வடிவங்களை வர்த்தனீ கலச ஜலத்தால் "மத்ஸ்ய முத்திரை" யினால் பூமியில் வரைதல் வேண்டும் என்று பத்ததி கூறுகின்றது.

## மத்ஸ்ய முத்திரையின் ஸ்வரூப தத்துவங்கள்.

எந்த நாடி பிரஸரிக்கின்றதோ அந்தப் பக்கத்தின் உள்ளங்கையைக் கவிழ்த்து அதன் மேல் மற்றொரு உள்ளங்

கையைக் கவிழ்த்து இருபுறங்களிலுமுள்ள இரண்டு கட்டைவிரல்களையும் மீனின் இறகுகள் போல் சலிக்கச்செய்து மற்ற விரல்களைச்சேர்த்துப் பொருத்தி கீழ்கை மோதிரவிரலால் எழுதுவது. இந்த முத்திரை மனம் அல்லது அந்தக்கரணத்தையும், ஞாநேந்திரியங்களையும் குறிக்கின்றது.

"ஸாமான்ய ஞானமும் விசேஷ ஞானமும் அந்தக்கரணத்தில்தான் ஸ்புரிக்கும்" என்னும் உணர்ச்சியும் அந்தக்கரணவ்ருத்தியில்தான் உண்டாகவேண்டும். இந்த அர்த்தம் விளங்குதற்பொருட்டே மத்ஸ்ய முத்திரையால் லேகனம் கூறப்பட்டதென்க.

मनआदीन्द्रियगणं संयम्यात्मनि योजयेत् ।
स मीनाशी भवेद्देवि इतरे प्राणिहिंसकाः ॥

என்று "தந்த்ரதத்வப் பிரகாசம்" என்னும் கிரந்தம் கூறுகின்றது. இதன்படி மத்ஸ்யம் என்பதன் தத்துவம் மனமும் இந்திரியங்களுமாம் என்றேற்படுகின்றது.

ஸாமான்ய விசேஷார்க்கியங்களின் ஸ்வரூபம் ஜீவவடிவமேயாகும். இது மிகவும் ரஹஸ்யமானது. இவ்வர்க்கியங்கள் அம்ருதம், பாத்திரம், ஆதாரம் என்னும் மூன்று பாகங்களையுடையன. அம்ருதாதி மூன்றும் முறையே ஸோம, ஸூர்ய, அக்கினிமண்டலங்களைக் குறிப்பிடுவனவாகும். மும்மண்டல வடிவம் தான் ஜீவனது சரீரம். பிரபஞ்சமும் மும்மண்டல வடிவமே; பஞ்சதசீவித்யை, காமகலை, ஸ்ரீசக்கிரம் முதலிய யாவும் ஸோமஸூர்யாக்கினி மண்டலஸ்வரூப முடையனவேயாகும்.

# மும்மண்டல விளக்கம்.

| | அக்கினிமண்டலம் | ஸூர்யமண்டலம் | ஸோமமண்டலம் |
|---|---|---|---|
| அர்க்கியம் | ஆதாரம் | பாத்திரம் | அம்ருதம் |
| சரீரம் | மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம் | மணிபூரகம், அநாஹதம் | விசுத்தி, ஆக்ஞை |
| காமகலை | ரக்தபிந்து | மிஸ்ரபிந்து | சுக்கிலபிந்து |
| பீஜங்கள் | ऐं | क्लीं | सौः |
| பிரணவம் | अम् | उम् | मम् |
| மஹாவித்யை | முதல்கூடம் | மத்தியகூடம் | அந்தியகூடம் |
| சக்கிரம் | த்ரிகோணம், அஷ்டகோணம் | இரண்டு தசாரங்கள், சதுர்த்தச கோணம் | அஷ்டதளம், ஷோடச தளம், சதுரஸ்ரம் |
| அந்தக்கரணம் | புத்தி | அஹங்காரம், சித்தம் | மனம் |
| திரிபுடி | பிரமாணம் | பிரமாதா | பிரமேயம் |
| திரிவர்க்கம் | தர்மம் | அர்த்தம் | காமம் |
| பிரபஞ்சம் | இதந்தாஞானம் | அயதார்த்தவிசேஷ ஞானம் | சுகதுக்கங்கள் |
| மாத்ருகைகள் | य—क्ष 10. | क—भ $24=2\times12$ * | अ—अः 16. |
| கலைகள் | 10 | 12 | 16 |
| வாக்குகள் | பஸ்யந்தி | மத்தியமை | வைகரி |
| கிரந்திகள் | பிரஹ்ம | விஷ்ணு | ருத்திர |
| திரிமூர்த்திகள் | பிரஹ்மா | விஷ்ணு | ருத்திரன் |
| கிருத்தியங்கள் | சிருஷ்டி | ஸ்திதி | ஸம்ஹாரம் |

* இதன் விசேஷவிவரத்திற்கு ஸபர்யாபத்ததியில் 28 பக்கம் பார்க்கவும்.

இங்ஙனம் மும்மூன்ருகக் கூறப்படுவன யாவும் இந்தப் பாகுபாட்டில் அடங்கும். இவை யாவும் இக்கற்பனையில் அடங்கினவேயாகும். இக்கற்பனைகளுக்கெல்லாம் அதிஷ்டானம் ஸச்சிதாநந்த சித்சக்தியே யாகுமென்று சந்தேக விபரீதங்களற அறிதல் வேண்டும். இத்தகைய பாரமார்த்திக ஞானம் அல்லது பிரஹ்மவித்தைதான் அர்க்கியத்தின் சிறந்த தத்துவமாகும்.

ஸச்சிதாநந்த கூடஸ்த சித்சக்தியினின்றும் ஜீவபாவம் அத்தியஸ்தமாய்த் தோற்றியது போல, அச்சீவனுல் இச்சிக்கப்படும் தர்மம் அர்த்தம், காமம் என்பனவும் அச்சித்சக்தியினின்றே தோன்றின. ஸத்திலிருந்து தர்மமும், சித்திலிருந்து அர்த்தமும், ஆநந்தத்திலிருந்து காமமும் அத்தியஸ்தமாய்த் தோன்றிற்று. திரிவர்க்கமாகும் தர்மார்த்தகாமங்களின் ஒழிவே மோக்ஷமென்னும் அபவர்க்கமாகும். ஆகவே இத்தர்மவடிவ அக்கினி மண்டலமே ஸாமான்னிய விசேஷார்க்கியங்களின் ஆதாரமாகும். (யாகமந்திரப் பிரவேசமென்னும்) முதல் கண்டத்தில் தர்ம புருஷார்த்தமே மோக்ஷத் துவாரமென்றும் தர்மமார்க்கத்தில் நிற்பவனே இந்த ஞான யாகத்திற்கு அதிகாரியாவனென்றுங் கூறப்பட்டிருப்பதை இங்கே அறிதல் அவசியம்.

சரீரமே அர்க்கிய பாத்திரமாகப் பாவிப்பின் மூலாதாரமே அக்கினிமண்டலமாகுமாதாரமாம். இது தர்ம வடிவமாய் இருக்கின்றது. இந்தத்தர்மம் அத்ருஷ்டம்; இந்திரிய கோசரமாகாதது. ஒரு ஜீவன் கோடிக்கணக்கான ஜன்மங்களை யெடுத்துச் சேர்த்து வைத்த பொக்கிஷவடிவினது. இத்தர்மரூப விறகினுல் குண்டலினீ யென்னும் ஜீவசக்திக்கிருப்பிடமான மூலாதாரத்தி

னுள்ள அக்கினிமண்டலம் ஸதா கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கின்றது. இந்தச் சக்தியால்தான் ஜீவன் பஹிர்முகப் பிரவ்ருத்தியோடு கூடி விஷயங்களை அநுப விக்கின்றான். இவ்வநுபவத்திற்குக் கார்ய கரண ஸங்காத சரீரமும் மனமும் அத்தியாவஶ்யம்; ஆகவே சரீரத்தோடு கூடிய மனமே பாத்திரமென்றும், விஷயாநுபவமே அம்ரு தமென்றுங் கூறப்படும்.

பாத்திரம் ஸூர்யமண்டலமும், அம்ருதம் சந்திர மண்டலமுமாகும்.

இஹாமுத்ரார்த்த பலபோகமே ஜீவனது அம்ருத மாகும். இது ஸுக துக்க மிச்ரவடிவினது. இதையநு பவிக்க மனம் வேண்டும். இவ்வநுபவமோ மனோவிருத்தி யாலனுபவிக்கப் படுவதன்று; மற்றோ ஸாக்ஷி விருத்தி யினால் பிரகாசிக்கப்படுகின்றது. ஏனெனின் மனந்தான் ஸுகதுக்கங்களாகப் பரிணமித்திருக்கின்றது. ஸுகதுக் கங்களைத் தவிர வேறொரு விஷயாநுபவமில்லை. ஆத லால் அந்தக்கரணமண்டலமே ஜீவநுகர்ச்சியாகும் அம்ரு தமாமென்பது ஸித்தித்தது. அந்தக்கரணமண்டலமே சந்திரமண்டலமென்பது அதிதேவதா திருஷ்டியாலென் றறிதல் வேண்டும். அந்தக்கரணத்தின் ஓரம்சமாகும் மன த்தின் அதிதேவதை சந்திரனென்பது சாஸ்திரப் பிரஸி த்தம்; இந்த சந்திரன் பூதசந்திரன்; விசுத்தி சக்ரத்தில் பதினாறிதழ்க்கமலத்தில் விளங்குபவன். ஆக்ஞை வரை யில் சந்திர மண்டலத்தின் வியாபகம் உள்ளது. ஸுக துக்க அநுபவம் ஆக்ஞையிலாகும்.

இங்ஙனமுள்ள அநுபவத்தோடுகூடிய போக்தா வடிவ ஜீவபாவத்தை யொழிப்பதன்றோ இந்த ஞான யாகவடிவ பரதேவதாராதனத்தின் முக்கியபலன்? ஆத

லின், விகாரியாயுள்ள பிரதிபிம்ப சந்திரமண்டலாம்ருத வடிவ அநுபவத்தை யொழித்து, நிர்விகாரசித்சந்த்ரமண்டல அம்ருதவடிவ ஆநந்தாநுபவத்தை அடைதல் வேண்டும். இவ்வநுபவத்தின் ஸ்தானமும் ஆக்ஞைதான். சுத்த ஸத்துவப் பிரதான அகண்டாகாரமனோவிருத்திதான் ஆநந்தாநுபவஸ்வரூப அம்ருதமாமென்பது பரம ரகசியமும் சிதையாத சித்தாந்தமுமாகும்.

ஜீவனது ஸுகதுக்காநுபவம் ஒழியவேண்டுமாயின், திரிபுடியோடுகூடிய பேத நோக்கமறவேண்டும். இஃதற வேண்டுமாயின் நாமரூப நாட்டம் அழியவேண்டும். இஃதழியவேண்டுமாயின் அகண்டாகாரவிருத்தி வரவேண்டும். அஸ்தி—பாதி—பிரியஸ்வரூப அகண்டாகாரவ்ருத்தியே அம்ருதமாகும். இது, நாசமற்றதும், என்றும் அழியாத ஆநந்தவடிவினதுமாகும்.

**परमामृतवर्षेण प्लावयन्तं चराचरम् ।**
**सञ्चिन्त्य परमद्वैतभावनामृतसेवया ॥**
**मोदमानो विस्मृतान्यविकल्पविभवभ्रमः ।**

என்னும் பிரமாணத்தால் பரமாயுள்ள அத்வைத பாவனையே அம்ருதமாமென்று ஸித்திக்கின்றது. ஸாமான்ய அர்க்கியாம்ருதமானது, அயதார்த்தநாமரூப வடிவ விசேஷஞானம் நீங்கி ஸத்தாஸாமான்ய ஞானத்தோடு மாத்திரம் விளங்குவதாகும். விஶேஷார்க்கிய அம்ருதமோவெனின் யதார்த்தவிசேஷ ஞானத்தோடு விளங்குவதாகும். ஸாமான்ய ஞானம் இருவகைத்து. "இதம்" என்பது ஒன்று; "அஹம்" என்பது மற்றொன்று. இவை முறையே மமதைக்கும் அஹந்தைக்கும் ஹேதுக்களாகவிருக்கின்றன.

"நான் ஜீவன்" என்னும் மயக்க அறிவு நீங்கி "நான் ஸச்சிதாநந்த சிவம்" என்னும் உண்மை ஞானமும், "இதுவுலகம்" என்னும் மயக்க அறிவு நீங்கி "இது ஸச்சிதாநாந்த சிவம்" என்னும் உண்மை அறிவும் விசேஷார்க்கியாம்ருதஸ்வரூபமாகும்.

இதுகாறும் ஸாமான்னிய விசேஷார்க்கியங்களுக்குள்ள பொதுவான அம்சங்கள் விமர்சிக்கப்பட்டன. இனி விசேஷார்க்கியத்தின் சிறப்பு லக்ஷணம் விமர்சிக்கப்படும்.

விசேஷார்க்கிய பாத்திரம்: — இது ஸூர்யமண்டல ஸ்வரூபமானதென்று முன் கூறப்பட்டது. அநாஹதம் அல்லது ஹ்ருதயம்வரை வியாபித்துள்ளது. சரீரத்தோடு கூடிய மனமே பாத்திரமாகும். அந்தக்கரண விசிஷ்ட சேதனம் ஜீவன். சேதனனாகும் கூடஸ்தன் அந்தக்கரணத்தோடு தாதாத்மியப்படுவது ஹ்ருதயக்கிரந்தியினாலே தான். ஹ்ருதயம்தான் ஜீவபாவத்திற்கு இருப்பிடம்; இது தான் பாத்திரம். இந்தப் பாத்திரத்தில் அகண்டாகார அபேதவ்ருத்திவடிவ அம்ருதத்தை நிரப்பிப் பூரணம் செய்தால் ஸகல அநர்த்தங்களும் நிவ்ருத்தியாய் நித்தியாநந்தஸ்வரூபனாகின்றான்.

சித்கலாப் பிரார்த்தனை :—

ह्रीं = ஸச்சிதாநந்த விமர்சஸ்வரூபிணீ!
ऐं = ஸகலவேத சாஸ்திராத்மக வித்தியாவடிவீ!
महालक्ष्मीश्वरि = லக்ஷ்யங்களுக்கெல்லாம் மேலான பிரஹ்ம வித்யாஸ்வரூபிணீ!
परमस्वामिनि = பராஹந்தாஸ்வரூபமாய் விளங்குபவளே!
ऊर्ध्वशून्यप्रवाहिनि = ஊர்த்துவாகாசமாகும் சிதாகாசத்தில் பிரவஹிக்கும் ஆநந்தரூபீ!

**सोमसूर्याग्निभाक्षिणि** = மும்மண்டலங்களுக்கும் அதீதமாய் விளங்கி அவற்றைப் பிரகாசிக்கச் செய்பவளே!

**परमाकाशभासुरे** = சிதாகாசத்தில் விளங்குபவளே!

**आगच्छ आगच्छ** = வருவாய் வருவாய்.

**विश विश** = (இந்தப் பாத்திரத்தில்) பிரவேசி, பிரவேசி;

**पात्रं प्रतिगृह्ण प्रतिगृह्ण** = இந்தப் பாத்திரத்தைப் பெற்றுக்கொள் பெற்றுக்கொள்.

"ஸச்சிதானந்த விமர்ச ஸ்வரூபிணியாயும் ஸகலவித்தியா ஸ்வரூபிணியாயும் மஹா (வாக்கிய) லக்ஷ்யார்த்த ஸ்வரூபிணியாயும் பராஹந்தா ஸ்வரூபிணியாயும் இருப்பவளே! சிதாகாசத்தினின்றும் பெருகும் ஆநந்தவெள்ளமே! மும்மண்டலவடிவ சராசரங்களையும் பக்ஷிப்பவளே! பரமாகாசத்தில் விளங்குபவளே! வருவாய் வருவாய்; இந்தப் பாத்திரத்தில் பிரவேசிப்பாயாக. இந்தப் பாத்திரத்தை (சரீரத்தை) நீ நன்குவிளங்கும் ஸ்தானமாகச்செய்து உனக்கு உரிமையாக்கிக் கொள்வாயாக." என்பது சித்கலாப் பிரார்த்தனை.

இந்த மந்த்ரத்தின் அர்த்த விசாரத்தால் விசேஷார்க்கியாம்ருதமாகும் **सुधादेवि**யின் ஸ்வரூபம் நன்குவிளங்குகின்றதல்லவா?

பாத்திரத்தில் அம்ருதத்தைப் பூரணம் செய்கையில்,

**तत्त्वमुद्रया गृहीतनागरखण्डोपरि सबिन्दु अकारादि क्षकारान्तं क्षकाराद्यकारान्तं मातृकया अर्पितेन अमृतेन आपूर्य अष्टगन्धलोलितं पुष्पं निधाय नागरखण्डं निक्षिप्य ।**

என்பது பத்ததி வாக்கியம்.

தத்துவமுத்திரையால் கிரகிக்கப்பட்ட நாகரகண்டம் (இஞ்சித்துண்டம்) என்பது, பிரிதிவிமுதல் சிவாந்தமா

யுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் சுத்தவித்தையில் ஒடுக்கும் ஆற்றலோடுகூடிய சுத்தமனத்தைக்குறிக்கின் றது. இத்தகைய சுத்தசித்தத்தில்தான் அம்ருதஸ்வரூப அகண்டாகாரவ்ருத்தி ஸ்புரிக்கும். விவேகவைராக்கியாதி ஸகல ஸாதனங்களோடுகூடியுள்ள ஜீவனென்பது தாத்பர் யார்த்தமாம்.

மாத்ருகைகளை வரிசைக்கிரமமாயும் தலைகீழாயும் உச் சரித்தலால், அஸம்பாவனை விபரீதபாவனைகளின் நீக்கத் தின் பொருட்டுச் செய்யவேண்டிய மனன நிதித்தியாஸன ங்கள் ஸூசிப்பிக்கப்படுகின்றன. இவற்றிற்கு ஶாஸ்திர விசாரம் அவசியம். ஸகல ஶாஸ்திரங்களும் மாத்ருகாஸ்வ ரூபம் என்பது மிகப் பிரஸித்தம்.

அஷ்டகந்த லோலிதபுஷ்பம். விவேகம், வைராக்கியம், சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, ஸமாதானம் என்னும் எட்டுஸாதனங்கள் நன்கு ஸித்தித்துள்ளதால் முமுக்ஷுத்துவம் ஸித்திக்கின்றது. இம்முமுக்ஷுத்து வமே புஷ்பமாம். முமுக்ஷு, ஸம்ஸாரக்கடலினின்றும் கரையேறவேண்டுமானால், ஜீவப்பிரஹ்மைக்கிய அகண் டாம்ருதத்தில் திளைத்தல் அவசியம். அஷ்டகந்த லோலித புஷ்பம் போடுதல் என்பது ஸகலஸாதனங்களோடுகூடிய முமுக்ஷு ஸதா அகண்டாகார வ்ருத்தியோடு இருத்தல் வேண்டுமென்பதைத் தெரிவிக்கின்றது.

**ॐ जुं सः**—என்னும் மந்த்ரத்தினால் அபிமந்த்ரணம் செய்தல். இது ம்ருத்யுஞ்ஜயமந்த்ரமாகும். ம்ருத்யுவை ஜெயித்தால்தான் அம்ருதத் தன்மையையடைதற்கு முடியுமென்பது கருத்து.

**अ—क—थादिरेखात्रयं, ह·ळ·क्ष कोणत्रयम् ।**

இந்த முக்கோணத்தில் ஐம்பத்தோரக்ஷரங்களும் பாவிக்கப்படல் வேண்டும். ஆதலின் இது ஸகலவித்தியாஸ்வரூபமானது. **शास्त्रयोनित्वात्** என்னும் பிரஹ்மஸூத்திரத்தின்படி சப்தப்பிரமாணம் ஒன்றினல் மட்டும் சித்சக்தியபின்ன சிவம் அறியப்படுமேயன்றி மற்றெந்தப் பிரமாணத்தாலும் அறிவதற்கு முடியாது. வேத, வேதாந்த, ஸ்ம்ருதி, புராண, இதிஹாஸ, ஸூத்திர, நிகம, ஆகம, பிரகரணவடிவ ஸகலவித்தைகளுக்கும் ஆநந்தவடிவ அத்விதீயப் பிரஹ்மத்தில்தான் தாத்பரியம். இவ்வபேத தாத்பர்யத்தைப் பிரதிபாதிப்பன மஹாவாக்கியங்களாகும். இவையும், வாச்சியார்த்தத்தினல் அத்விதீயப் பிரஹ்மத்தை அறிவிக்கமாட்டா; மற்ருே லக்ஷ்யார்த்தத்தினல்தான் அறிவிக்கமுடியும். இந்த தாத்பர்யத்தை, अ—क—थ என்னும் மூன்று ரேகைகளும்--ह--ळ--क्ष. என்னும் மூன்று கோணங்களும் ஸூசிப்பிக்கின்றன.

**"अकथासनं हळक्षान्तरं" कथानां वाचां अनासनं अविषयम् । वाच्यकक्षामतिक्रान्तमिति यावत् । हेति निश्चये । लक्षस्य लक्षणाया अन्तरमवकाशो यस्मिंस्तत् ॥**

வரிவஸ்யை-2-அம்-113 ஸ்லோ.

மூன்று கூடங்களாயுள்ள ஸ்ரீபஞ்சதசீ மஹாவித்யையும் இந்த அர்த்தத்தையே பிரதிபாதனஞ் செய்கின்றது. வரிவஸ்யை-மஹாவாக்கியார்த்த நிரூபணம் பார்க்கவும்.

பிந்துவில் **ई.** இந்த பீஜம் காமகலாஸ்வரூபமானது; இது **"जन्माद्यस्य यतः"** என்னும் பிரஹ்மஸூத்திரத்தினல் பிரதிபாதிக்கப்பட்டது; ஆத்ம கோசர அகண்டாகார விருத்தியில் ஸ்புரிக்கும் சிவஸ்வரூபமானது; இந்த பீஜத்தைச் சிரவணஞ்செய்து மனனநிதித்தியாஸ

னங்களின் மூலமாய் அபரோக்ஷஞானத்தை யடைந்தவர் களுக்கு உத்கிராந்தியே இல்லை; இங்கேயே பிரஹ்ம ஸ்வ ரூபத்தை யடைந்து பிரஹ்மமாகவே இருப்பாகள் என்று ஸ்ருதி கூறுகின்றது. அவை,

**तुरीयस्वरं साक्षात्तुरीयरूपमेव । य ईँ शृणोत्यलकँ शृणोति, न हि प्रवेद सुकृतस्य पन्थाम् इति ॥ बिन्दुयुक्त-ईकारमात्रश्रवणं तु लकारककारराहित्येन श्रवणम्, अतस्तद्वान् । सुकृतस्य सत्कर्मणः पन्थामुत्तमलोकान्न याति; किं तु निर्गुणज्ञानं प्राप्नोति इहैव । "अत्र ब्रह्म समश्नुते" "ब्रह्मविद्ब्रह्मैव भवति" ॥**

என்பவையாகும்.

**तद्वामदक्षयोः हंसः इति लिखेत् ।**

**हंसः** என்பது **अहं सः** என்னும் மஹாவாக்கியார்த்தத் தைத் தருவதாகும். சரீரத்திரய விலக்ஷணனும் பஞ்ச கோசங்களுக்கு அதீதனும் அவஸ்தாத்திரய ஸாக்ஷியாயு முள்ள நான், "**सः**" என்னும் தத்பத லக்ஷ்யார்த்த வடிவ சிவமே; நம:—மகார வாச்சியனாகும் ஜீவன், ந=அல்ல." என்பது **हंसः नमः इति आराध्य** என்பதன் தாத்பர்யமாம்.

ஆகவே, விசேஷார்க்கிய அம்ருதத்தின் பரமதத்துவ மாவது, "ஸகலசாஸ்திரங்களின் பரமதாத்பர்யமாவதும், ஸகல மந்த்ரங்களின் லக்ஷ்யார்த்தமாயுள்ளதும், காமகலா ஸ்வரூபமானதும், நாசரஹிதமாயுள்ளதுமான சிவமே நான்; கர்த்தாவாயும் போக்தாவாயும் ஜனன மரண ஸம் ஸார ஸாகரத்தில் அமிழ்ந்துத் தவிப்பவனுமாகிய ஜீவன் நான் அல்ல" வென்னும் அநுஸந்தானத்தோடு கூடிய விருத்திவடிவமேயாகுமென்பது பெறப்பட்டது.

## ஸுதாதேவீஸ்வரூபாநுஸந்தானம்.

**तां** = பஞ்சதசீ மஹாவித்தையால் பிரதிபாதிக்கப்பட்ட, அஹம்பதலக்ஷ்யார்த்த சிவாபின்ன சித்சக்தியாயும்,
**चिन्मयीं** = சித்கனஸ்வரூபமாயும்,
**आनन्दलक्षणाम्** = ஆநந்தமே லக்ஷணமாயும்,
**अमृतकलशपिशितहस्तद्वयाम्** = ஒருகரத்தில் அம்ருத கலசத்தையும் மற்ருெரு கரத்தில் மீன் துண்டத்தையும் வைத்துக்கொண்டிருப் பவளாயும்,
**प्रसन्नाम्** = எங்கு மிருப்பவளாயும்,
**देवीम्** = எங்கும் ஸ்வயம்பிரகாசத்தோடு விளங்குபவளாயும் உள்ள அகண்டாகார வ்ருத்தி வடிவ விசேஷார்க்கியாம்ருதஸ்வரூப ஸுதா தேவியை
**पूजयामि** = நான் பூஜை செய்கிறேன்.

பூஜையின் ஸ்வரூபம் நம: என்பதும் ஸ்வாஹாவென்பதுமாகும். நான் ஜீவன் அல்ல; ஸச்சிதாநந்த சித்சக்தியபின்ன சிவமே என்பது நம: என்னும் பல்லவத்தின் தாத்பர்யமாம். இது ஸித்திக்கவேண்டுமாயின் ஜீவபாவத்தை ஸம்விதக்கினியில் ஹோமம் செய்யவேண்டும். ஜீவபாவம் ஒழிந்தால்தான் நிரங்குசதிருப்திவடிவ ஆநந்தம் அபிவ்யக்தமாகும். ஆதலின் ஆநந்தாபிவியஞ்சகவடிவமே தர்ப்பணமாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸகல ஜீவ உபாதிகளையும் ஞானவாளால் சேதிப்பதே ஸ்வாஹாவென்னும் பல்லவத்தின் பரமதாத்பர்யமாம்.

ஸுதா தேவியின் ஒருகையில் அம்ருதகலசமும், மற்ருெருகையில் பிசிதமென்னும் மீன் இறைச்சியும் இருப்பதன் தாத்பர்யமாவது:—அம்ருதகலசம், நித்தியாநந்த ஸ்வரூப மோக்ஷஸூசகம். மீன் இறைச்சியானது உபாதி

யோடுகூடிய நஸ்வரமான விஷய ஸுகங்களைக் குறிப்பிடு வதாகும். மீன் அசுத்தமனத்தை ஸூசிப்பிக்கின்றது. இவ்வசுத்தமனத்தில்தான் ஜீவபாவம் கற்பிதமாய்த் தோன்றுகின்றது. இது பிரவிருத்திமார்க்கம். முந்தியது நிவ்ருத்திமார்க்கம். இவ்விரண்டுமார்க்கங்களிலும் ஆநந்த வடிவ சிவம் ஸதோதிதமாய் இருக்கின்றது. பிரவ்ருத்தி மார்க்கமென்னும் மயக்ககாலத்தில், ஸ்வகீயமாயுள்ள ஆநந்தம் பாஹ்யவிஷயங்களிலிருந்து வருகின்றதென்று நினைத்துப் பாஹ்யமாயுள்ள விஷயாநந்தங்களையடையப் பிரவர்த்திக்கின்றான். இங்ஙனம் அடையப்பட்ட ஸுகம் நாசத்தோடுகூடியதாகும். இத்தகைய ஸுகஸாதனங்களாகிற உபாதிகளை நீக்கி யுணரப்படுங்காலத்தில் அவ்விஷய ஸுகமே நிருபாதிக நித்தியாநந்தமாகப் பவிக்கின்றது. இது தான் நிவ்ருத்திமார்க்கம். விஷயஸுகங்கள் பஞ்ச ஞானேந்திரியங்களால் உணரப்படும் சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தமென்பனவாம். இவையே போக்கிய வடிவ உலகம். இவை பஞ்ச பூதங்களின் ஸூக்ஷ்ம ரூபமாம். இவைகளைத் தான் சாக்த தந்த்ரங்கள் பஞ்ச மகாரங்கள் என்று கூறுகின்றன. இங்கே மகார மென்பது மகார வாச்சிய ஜீவனுக்குப் போக்கிய ரூபமாயுள்ளதென்பது பொருளாகும். போக்கிய வடிவ பஞ்ச மகாரங்களையும் போக்தா வடிவ ஜீவ பாவத்தோடு சேர்த்துச் சின்மயாநந்தஸ்வரூப அஹம் பத லக்ஷ்யார்த்த பரதேவதையின் சரணாரவிந்தத்தில் அர்ப்பணம் செய்யவேண்டுமென்பது தான் விசேஷார்க்கியத்தினுல் தர்ப்பணம் செய்வதன் முக்கிய தாத்பரியமாகும்.

பிந்துவாகும் ஜீவபாவத்தை யர்ப்பணம் செய்வதால் பரதேவதை பரம திருப்தியை யடைகின்றனளென்று **बिन्दुतर्पणसन्तुष्टा** என்னும் நாமம் கூறுகின்றது.

மபஞ்சகதத்துவ விமர்சம்.

**“पञ्चदशाक्षररूपा नित्या चैषा हि भौतिकाभिमता”**

என்னும் காமகலா பிரமாணத்தின்படி பரதேவதையின் பஞ்சதசீ மந்த்ரவர்ணாத்மகமாயும், ஒரு கையில் விளங்கும் சப்த ஸ்பர்சாதி பஞ்சதன்மாத்ரவடிவ பஞ்சபாணங்களாயும் விளங்குவன ஆகாசாதி பஞ்ச மஹா பூதங்களாகும். இவை தாம் பஞ்சமகாரங்களென்று கூறப்பட்டன. இவற்றைத் தந்த்ரங்கள் குலத்திரவியங்கள் என்றுங் கூறுகின்றன. குலம் என்பது மூலாதாராதி ஆதாரங்களாகும். இவ்வாதாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்ருகப் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், என்னும் ஐந்து திரவியங்கள் உள்ளன. பஞ்ச தன்மாத்ரைகளை யறியும் மனமும் குலத்திரவியமே. இவை யாவும் ஆநந்தஸ்வரூப பிரஹ்மாபிவ்யஞ்சகங்களாகும். இதற்குப் பிரமாணமாவது

**आनन्दं ब्रह्मणो रूपं तच्च देहे व्यवस्थितम् ।**
**तस्याभिव्यञ्जकाः पञ्चमकाराः कुलसंज्ञिकाः ॥**

(குளார்ணவம்)

இங்ஙனமுள்ள குலத்திரவியங்களை, அதமாதிகாரிகளின் பொருட்டு, மத்யம், மத்ஸ்யம், மாம்ஸம், முத்ரை, மைதுனமென்னும் ஐந்துவஸ்துக்களாமென்று சில தந்த்ரங்கள் கூறுகின்றன. இங்ஙனம் கூறும் தந்த்ரங்களுக்குக் கர்மகாண்டத்தில் தாத்பர்யமே தவிற ஞானகாண்டத்தில் தாத்பரியமில்லை.

**यथा क्रतुषु विप्राणां सोमपानं विधीयते ।**
**मद्यपानं तथा कार्यं समये भोगमोक्षदम् ॥**

குளார்ணவம், 5—90.

இங்கே தேவீயாகத்தைப் பாஹ்யமாயுள்ள திரவிய யாகத்தோடு ஒப்பிட்டுக் கூறியிருப்பதனுல், தேவீயாகம் கர்மகாண்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பது நன்கு தொனிக்கின்றது. ஆகவே இது அதமாதிகாரிவிஷயமாகும்.

உத்தமாதிகாரிவிஷயத்தில் இந்த யாகம் கேவலஞான யாகமே யாகுமென்பதில் யாதொரு ஸந்தேஹமுமில்லே. ஞானயாகத்திற்குப் பாஹ்யவஸ்துக்கள் அவசியமில்லே.

அதமாதிகாரிகளின் பொருட்டுச் சாஸ்திரங்கள் கூறும் மபஞ்சக குலத்திரவியங்களின் தத்துவஸ்வருபத்தை அவையே, உத்தமாதிகாரிகளின்பொருட்டுக் கீழ்க்கண்டவாறு கூறுகின்றன.

1. மத்யம் :—அக்கினிதத்துவம்—முதல் மகாரம். இதன் தாத்விகஸ்வரூபமாவது :—

लिङ्गत्रयविशेषज्ञः षडाधारविभेदकः ।
पीठस्थानानि चागत्य महापद्मवनं व्रजेत् ॥
आमूलाधारमाब्रह्मरन्ध्रं गत्वा पुनः पुनः ।
चिच्चन्द्रकुण्डलीशक्तिसामरस्यसुखोदयः ॥
व्योमपङ्कजनिष्यन्दसुधापानरतो नरः ।
सुधापानमिदं प्रोक्तमितरे मद्यपायिनः ॥

(குளார்ணவம்—5—106–108)

ब्रह्मस्थानसरोजपात्रलसिता ब्रह्माण्डतृप्तिप्रदा
या शुभ्रांशुकला सुधा विगलिता सा पानयोग्या सुरा ।

(तन्त्रतत्वप्रकाशिका)

यदुक्तं परमं ब्रह्म निर्विकारं निरञ्जनम् ।
तस्मिन् प्रमदनं ज्ञानं तन्मद्यं परिकीर्तितम् ॥ (विजयतन्त्रम्)

2. மத்ஸ்யம் :—ஜலதத்துவம்--இரண்டாவது மகாரம். இதன் தாத்விகஸ்வரூபமாவது :—

मनसा चेन्द्रियगणं संयम्यात्मनि योजयेत् ।
मत्स्याशी स भवेद्देवि शेषाः स्युः प्राणिहिंसकाः ॥

(குளார்ணவம்—5--110)

अहंकारो दम्भो मदपिशुनतामत्सरद्विषः
षडेतान्मीनान्वै विषयहरजालेन विधृतान् ।
पचन्सद्विद्याग्नौ नियमितकृतिर्धीवरकृतिः
सदा खादेत्सर्वान्न च जलचराणां तु पिशितम् ॥

(तन्त्रतत्वप्रकाशिका)

3. மாம்ஸம் :—ப்ரிதிவீ தத்துவம்--மூன்றுவது மகாரம். இதன் தத்துவமாவது: —

पुण्यापुण्यपशुं हत्वा ज्ञानखड्गेन योगवित् ।
परे लयं नयेच्चित्तं पलाशी स निगद्यते ॥

(குளார்ணவம்—5--109.)

कामक्रोधसुलोभमोहपशुकांश्छित्वा विवेकासिना
मांसं निर्विषयं परात्मसुखदं भुञ्जन्ति तेषां बुधाः ।
कामक्रोधौ पशू तुल्यौ बलिं दत्वा जपं चरेत् ।

(तन्त्रतत्वप्रकाशिका)

4. முத்திரை—வாயுதத்துவம்—நான்காவது மகாரம். இதன் உண்மை ஸ்வரூபமாவது :—

आशातृष्णाजुगुप्साभयविषयघृणामानलज्जाप्रकोपाः
ब्रह्माग्नावष्टमुद्राः परसुकृतिजनः पच्यमानाः समन्तात् ।

नित्यं संभावयेत्तानवहितमनसा दिव्यभावानुरागी
योऽसौ ब्रह्माण्डभाण्डे पशुहतिविमुखो रुद्रतुल्यो महात्मा ॥
(तन्त्रतत्वप्रकाशिका)

5. மைதுனம்:—ஆகாசதத்துவம்—ஐந்தாவது மகாரம். இதன் பாரமார்த்திகஸ்வரூபமாவது:—

पराशक्त्यात्ममिथुनसंयोगानन्दनिर्भरः ।
य आस्ते मैथुनं तत्स्यादपरे स्त्रीनिषेवकाः ॥
(குளார்ணவம்—5--112)

या नाडी सूक्ष्मरूपा परमपदगता सेवनीया सुषुम्ना
सा कान्तालिङ्गनार्हा न मनुजरमणी सुन्दरी वारयोषित् ।
कुर्याच्चन्द्रार्कयोगे युगपवनगते मैथुनं नैव योनौ
योगीन्द्रो विश्ववन्द्यः सुखमयभवने तां परिष्वज्य नित्यम् ॥
(तन्त्रतत्वप्रकाशिका)

மபஞ்சகங்களின் தத்துவத்தைச் சுருக்கிக் கூறுவோமாயின், ஸஹஸ்ராரகமலத்திலிருந்து பெருகும் பிரஹ்மாத்மைக்கிய அகண்டாகாரவ்ருத்தியே மத்தியத்தின் தத்துவமென்பதும், பராங்முகமாய்ச் செல்லும் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கி அந்தர்முகப்படுத்துதலே மத்ஸ்ய தத்துவமென்பதும், கர்மபலமாகும் தர்மாதர்மங்களால் கட்டுப்பட்ட பசுபாவத்தை விவேகமாகும் வாளால் வீசியெறிந்து தன் ஸ்வரூபத்தைப் பிரஹ்மத்தில் லயம் செய்வதே மாம்ஸ தத்துவமென்பதும், தன்னிடமுள்ள ஸகல துர்க்குணங்களையும் பிரஹ்மவித்தையாகும் அக்கினியில் சமைத்துண்டு ஸதா ஸ்வயம்பிரகாச திவ்விய பாவத்தில் நின்று நிரங்குசத் திருப்தியோடிருப்பதே

முத்ராதத்துவ மென்பதும், ஸந்தேக விபரீதமற்ற ஜீவப்பிரஹ்மைக்கியமென்னும் சிவசக்தி ஸ்ாமரஸ்யமே மைதுனத்தின் தத்துவமேன்பதும் ஸித்திக்கின்றன.

இத்தகைய தாத்விகத்ருஷ்டியின்றி பசுபாவத்தோடு விஷயங்களில் இச்சையுள்ளவனாய் மபஞ்சகங்களைச் சேவிப்பானேயாயின், அவனுக்கு நரகம் நல்வரவு கூறுகின்றதென்று அத்தந்த்ரங்களே உத்கோஷிக்கின்றன. இதைப்பற்றி அதிகம் கூறுதல் அவசியமின்று.

இங்ஙனம் மேலே கூறப்பட்ட மபஞ்சகங்களின் வாஸனையை ஸதா சித்தத்தில் அநுஸந்தானம் செய்தல் அவஸ்யம்.

**इत्यादिपञ्चमुद्राणां वासनां कुलनायिके ।**
**ज्ञात्वा गुरुमुखाद्देवि यो भावेत स मुच्यते ॥**

என்னும் குளார்ணவவசனம் இங்கு அறியத்தக்கது.

இங்ஙனம் ஐந்துவிதமான தத்துவங்களோடு கூடிய மனமானது ஜீவபாவத்தோடுள்ள விசேஷார்க்கியவடிவமாய் இருக்கின்றது. இத்தகைய சுத்தமனம் அகண்டாகார அம்ருதஸ்வரூபிணியாயுள்ள ஸுதாதேவியினிடத்தில் ஈடுபட்டுப் பரவசமாயிருக்கின்றதென்பது ரஹஸ்யார்த்தமாம்.

**वषट् इत्युद्धृत्य, स्वाहा इति तत्रैव निक्षिप्य, हुं इत्यवकुण्ठ्य, वौषट् इति धेनुमुद्रया अमृतीकृत्य, फट् इति संरक्ष्य, नमः इति पुष्पं दत्त्वा ॥**

வஷட் முதல் நம: ஈருகவுள்ள ஆறும் மந்த்ரத்தின் அங்கங்களாகும். மந்த்ரதத்துவம் மஹாவாக்கிய ஸ்வரூபமாயிருப்பதால் இவை ஆறும் அவ்வகண்டாகார வ்ருத்திவடிவ அபேதஞானத்தை நன்கு ரக்ஷிப்பனவாகுமென்

றறிதல் அவசியம். இங்ஙனம் இதை ரக்ஷிப்பதற்கு நாம் என்ன செய்தல் வேண்டும்? நாம் பஞ்சேந்திரியங்களாலும் மனத்தாலும் உணரும் ஒவ்வொரு விஷயத்தையும் சிவமாய்ப் பாவித்தல் வேண்டும்.

यद्यच्छृणोति कर्णाभ्यां तत्तदात्मेति भावयेत् ।
यद्यत्पश्यति चक्षुर्भ्यां ,, ।
लभते नासया यद्यत् ,, ।
जिह्वया यद्रसं ह्यत्ति ,, ।
त्वचा यद्यत्स्पृशेद्योगी ,, ।
दृष्टिं ज्ञानमयीं कृत्वा पश्येद्ब्रह्ममयं जगत् ।

என்னும் உபநிஷத் பிரமாணங்களின்படி ஆத்மபாவனையை விசுவாஸத்தோடும் சிரத்தையோடும் நெடுநாள் இடைவிடாது பழகினால் ஸச்சிதாநந்த சிவநாட்டம் நிலைத்து நிற்கும்; அப்பொழுது தான் பேதஞானம் ஒழியும்.

விசேஷார்க்கிய அம்ருதபிந்துக்களால் ஸபர்யா ஸாதனங்களை யெல்லாம் ப்ரோக்ஷித்து அவற்றை யெல்லாம் சின்மயமாய்ப் பாவித்தல் வேண்டுமென்று பத்ததி கூறுவது, மேலே உபநிஷத்து கூறிய ஆத்ம பாவனையை யேயாகும்.

## ஶுத்திபாத்ரம்—ஶுத்திஸம்ஸ்காரம். (௩௪)

சுத்தி செய்தற்குரியவஸ்துவுக்கு சுத்தியென்றுபெயர். அசுத்தவஸ்து தான் சுத்தி செய்தற்குரியது. இயற்கையில் அசுத்தமாயுள்ள வஸ்துவைச் சுத்தி செய்தற்குமுடியவேமுடியாது ஆதலின் அசுத்தம் என்னும் பாவனை மயக்கத்தினால் ஏற்பட்டிருத்தல்வேண்டும். அம்மயக்கம் தத்துவ

ஞானத்தினல் நீங்க, அசுத்தம் என்னு மெண்ணம் நீங்கிச் சுத்தம் என்னும் தீர்மானம் வருகின்றது. "நான் தாழ்ந்த குலத்திற் பிறந்தவன்" என்னும் பிராந்தி ஞானத்தால் வருந்திய கர்ணன் ஒருகால் "நான் உண்மையில் க்ஷத்திரிய குலத்திலுதித்தவனே" என்னும் தீர்மானத்தை யடைந்து சந்தோஷித்தான் என்று மஹாபாரதம் கூறுகின்றது. அஃதிங்கே கவனிக்கத்தக்கது.

உலகில் சுத்தி செய்தற்குரிய பொருள்கள்யாவற்றி லும் சிறந்த பொருள் ஜீவன்தான். அவனுல்தான் யாவும் விளங்குகின்றன. ஜீவனின்றேல் உலகமில்லை. ஆதலின் ஜீவன் சுத்தப்பட்டு அவனிடத்துள்ள பசு பாவம் நீங்கின் யாவும் ஒழியும். ஜீவபாவந்தான் சுத்தி பாத்திரத்தின் ரஹஸ்யார்த்தமாகுமென்றறிதல் அவசியம்.

जीवः शिवः शिवो जीवः स जीवः केवलः शिवः ।
तुषेण बद्धो व्रीहिः स्यात्तुषाभावे तु तण्डुलः ॥
एवं बद्धस्तथा जीवः कर्मनाशे सदाशिवः ।
पाशबद्धस्तथा जीवः पाशमुक्तः सदाशिवः ॥

(स्कन्दोपनिषत्)

ஜீவனிடத்திலுள்ள அநாதி மல விக்ஷேப ஆவரணங்களே அவனைப் பந்தித்துள்ள பாசமாம். இந்தப் பாசத்தைச் சேதிக்கின் அவன் சிவமாகவேவிளங்குவான். உமிநீங்கினல் நெல் என்னும் பெயர் போய் அரிசி யென்னும் பெயரை அடைகின்றதல்லவா ?

उद्बुध्यस्व पशो त्वं हि नाशिवस्त्वं शिवो ह्यसि ।
शिवोत्कृत्तमिदं पिण्डमतस्त्वं शिवतां व्रज ॥
ओं श्लीं पशु हुं फट् ।

ஜீவனை அவனது அஞ்ஞானத் தூக்கத்தினின்று ஞானத்தில் விழிப்படையச் செய்யும் உத்போதன மந்தரம். **पशो**=ஹே ஜீவனே! **उद्बुध्यस्व**=விழித்துக்கொள் **त्वं**=நீ, **हि**=நிஸ்சயமாய் **न अशिवः** = அசிவமாகும் ஜீவனல்ல; மற்றோ, **त्वं**=நீ, **शिवो ह्यसि**=சிவமாகவே இருக்கின்றாய்; **इदं पिण्डं**=இந்த ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்கள், **शिवोत्कृत्तं**=சிவசம்பந்தமான அக்ஞானத்தினால், கற்பிக்கப்பட்டவையாகும், **अतः**=ஆகையால், **त्वं**=நீ, **शिवतां**=ஶிவபாவத்தை **व्रज**=வரிப்பாயாக.

திரண்டபோருள்:—ஹே ஜீவனே! நீ விழிப்படைவாயாக. நீ உண்மையில் ஜீவனல்ல; சிவமே. உபாதிநோக்கில் உனக்கு ஜீவபாவம் ஏற்பட்டுள்ளது. கற்பிதமாயுள்ள சரீரோபாதிகளையொழித்து நிருபாதிக சிவஸ்வரூபத்தையடைதற்கு முயல்வாயாக வென்பதாம்.

**ओं श्लीं पशु हुं फट्** இது பாசுபதாஸ்த்ரம். இதன் அர்த்தமாவது:—**लं**=ப்ரிதிவீ பீஜம். இதனோடு உபலக்ஷணமாய்ப் பஞ்சபூதங்களையும் கொள்ளல் வேண்டும். அவற்றால் ஏற்படும் **श**=ஸுகங்கள்—சப்தஸ்பர்சரஸகந்தாதி விஷயாநந்தங்கள்; ஆதலின் விஷயாநந்தங்களில் உழலும் ஜீவனே **श्लीं** என்னும் பீஜத்தின் பொருளாம். இங்கே **ई** என்பது கூடஸ்தவாசகம். இதற்கு உபாதியாயுள்ளவை ஜீவனது போகாயதனமாகும் ஸ்தூல ஸூக்ஷ்மகாரண சரீரங்களாகும். இந்த அநாத்மசரீரங்களுக்கும் அஸங்க கூடஸ்தனுக்கும் ஒருவிதஸம்பந்தத்தைக் கற்பிப்பது பாசமாம். அதனையுடையவன் **पशु**. இந்தப் பசுத்துவ நீக்கத்தை **हुं फट् स्वाहा** என்னும் பீஜாக்ஷரங்கள் அறிவிக்கின்றன.

இதன் தாத்பரியமாவது: — சப்த-ஸ்பரிசாதிவிஷயங்களில் உழன்று வருந்துவது பேதபுத்தியால் ஆயது. இந்த

பேதஞானம் அஞ்ஞானத்தாலும், அந்தக்கரண உபாதியாலும் ஏற்பட்டது. இங்ஙனம் ஏற்பட்ட அவித்யோபாதிக அந்தக்கரணவிசிஷ்ட ஜீவபாவம் ஒழியட்டும். அஸங்க கூடஸ்தசிவபாவம் ஏற்படட்டுமென்பதே. இஞ்சித்துண்டத்தைப் பசுபாவத்தின் உபாதியாகிய மனத்தின் பிரதிநிதியாகச் சாஸ்திரங் கூறியிருப்பதால், அங்ஙனம் செய்வதவசியம். எந்த வஸ்துவிலும் இந்தப் பாவனை செய்யலாம்.

ஜீவனிடத்துள்ள அசுத்த உபாதிபாகத்தை, விசாரமாகும் அபேத அகண்டைகரஸ விசேஷார்க்கியத்தால் களைவதுதான் தர்ப்பணத்தின் ரஹஸ்யமாமென்று மற்றொருமுறையும் கூறுவதில் குற்றமில்லை.

குருபாத்திரம்:—அபரோக்ஷ ஸாக்ஷத்காரஸமாதியில் நிலைபெறச் செய்யும் ஸத்குருவின் அநுக்கிரஹமும், அவர் முகமாய்ச் சிரவணித்த மஹாவாக்கியமுமே குருபாத்திரத்தின் தத்துவமாகும்.

ஆத்மபாத்திரம்:—நிருபாதிக அஹம்பதலக்ஷ்யார்த்த கூடஸ்தஸ்வரூபமும், ஜீவன்முக்திவிலக்ஷணாநந்தத்தை யநுபவிக்கும் ஸவிகல்பஸமாதிவிருத்தியுமே ஆத்மபாத்திரத்தின் தத்துவமாகும்.

பலிபாத்திரம்:—பாகத்தியாகலக்ஷணையால் அவித்தையின் நாசமேற்பட்டு ஜீவபாவம் ஒழிந்ததேயாயினும்,

नित्यं ब्रह्म निरन्तरं विमृशता निर्व्याजशान्तात्मना
भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके ।
प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनीषा मम

என்னும் பிரமாணத்தின்படி பிராரப்தமுள்ளவரையிலும் கார்யகரணஸங்காதத்தினால் விஷயங்கள் தோன்றும்; விஷயாநுபவங்களுமுண்டாகும். இவற்றை ஸ்தூல

ஸூக்ஷ்ம காரணசரீரங்களுக்கு அர்ப்பணம் செய்தலே பலியாகும். பேதத்தைத் தோற்றுவிக்கும் கெட்ட எண்ணங்களும் துஷ்ட இந்திரியங்களும் அசுத்த சரீரமுமே விக்கினகாரிகள். இதைப் பற்றிய விஸ்தாரமான விமர்சம் இனி வரும் 9-வது கண்டம் பலிதானப் பிரகரணத்தில் காண்க.

விசேஷார்க்கியத்தைத் தொண்ணூற்றுநான்குமந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்தல் அவஸ்யம்.

அவையாவன:—அக்கினிகலைகள் 10, ஸூர்யகலைகள் 12, சந்திரகலைகள் 16, பிரஹ்மகலைகள் 10, விஷ்ணுகலைகள் 10, ருத்திரகலைகள் 10, ஈஸ்வரகலைகள் 4, ஸதாசிவ கலைகள் 16, பஞ்சப்பிரஹ்மப் பிரதிபாதகமந்த்ரங்கள் 5, மூலமந்த்ரம் 1, ஆக தொண்ணூற்றுநான்கு. இத்தொண்ணூற்றுநான்கு கலைகளும், பிண்டாண்ட பிரஹ்மாண்டங்களையும், ஜீவனையும், ஜகத்காரண பரமேஸ்வரனையும், கார்யப் பிரஹ்மங்களையும் நிஷ்கள பிரகாச விமர்சங்களையும் குறிப்பனவாகும். விசேஷார்க்கிய அம்ருதமே பிரகாச விமர்ச ஸாமரஸ்யவடிவமென்பது பரமஸித்தாந்தமாம்.

ஸுதாதேவீ பிரார்த்தனாங்கமான மந்த்ரங்கள். (३९)

अखण्डैकरसानन्दकरे परसुधात्मनि ।
स्वच्छन्दस्फुरणामत्र निधेहि कुलनायिके ॥
अकुलस्थामृताकारे शुद्धज्ञानकरे परे ।
अमृतत्वं निधेह्यस्मिन्वस्तुनि क्लिन्नरूपिणि ॥
तद्रूपिण्यैकरस्यत्वं कृत्वा ह्येतत्स्वरूपिणि ।
भूत्वा परामृताकारा मयि चित्स्फुरणं कुरु ॥

இம்மூன்று ஶ்லோகங்களும் ஸுதாதேவியின் பிரார்த்தனுவடிவமானது. அபிமந்த்ரணம் செய்தற்காக ஏற்பட்ட தென்பது சிலரது அபிப்பிராயமாம்.

இதன் பொருள் :—ஹே குலநாயகியே! அவிச்சின்னமாயும், துக்கம் ஒரு சிறிதும் கலவாததுமான ஆநந்த ஸ்வரூபத்தைப் பிரகடம் செய்பவளே!! மேலாகிய பரமாம்ருதஸ்வரூபமாயுள்ள இந்த திரவரூபவஸ்துவில் ஸ்வதந்த்ரமாயுள்ள சித்ஸ்புரணத்தைச் செய்வாயாக.

அகுல ஸஹஸ்ராரத்தில் விளங்கும் அம்ருதஸ்வரூபியே! திரவரூபமாயுள்ள இந்த (விசேஷார்க்கிய பாத்திரத்திலுள்ள) வஸ்துவில், மேலாகிய சுத்த ஞானத்தையுண்டு பண்ணும் ஸ்வபாவமுடைய அகண்டைகரஸ அம்ருதத்துவத்தை உண்டாக்குவாயாக.

பரப்பிரஹ்மஸ்வரூபியே! நீ இந்த விசேஷார்க்கிய ஸ்வரூபத்தையடைந்து, பிரகாசவடிவ பிரஹ்மஸ்வரூபத்தோடு என்னை ஐக்கியம் செய்வதற்காக நித்தியாநந்த சித்ஸ்புரணத்தை என்புத்தியில் விளக்குவாயாக.

இந்த மூன்றுஶ்லோகங்களாலும் விசேஷார்க்கியத்தின் பெருமை நன்கு விளங்குகின்றதல்லவா?

பின் நான்காவது மந்த்ரம் அம்ருதேஶ்வரியின் மந்த்ரமாகும். அது—

**ऐं ब्लूं झ्रौं जुं सः अमृते अमृतोद्भवे अमृतेश्वरि अमृतवर्षिणि अमृतं स्रावय स्रावय स्वाहा ।** என்பதாம்.

**ऐं**=வாக்பவபீஜம், இது ஸகலசாஸ்திரங்களின் வடிவினது.

**ब्लूं**=வஶ்யபாணபீஜம்—இது திருசியமாயுள்ள ஸர்வப்பிரபஞ்சத்தையும் தன் ஸ்வரூபத்தில் இழுத்துக் கொள்ளும் ஆற்றலையுண்டுபண்ணுவதாம்.

**ज्ञौं जुं सः** = சித்சந்த்ரமண்டலத்தில் பெருகும் பரமாம்ருத ஸ்வரூபிணியான

**अमृते... स्रावय स्वाहा** = அம்ருதஸ்வரூபிணியே! அவ்வாநந்தத்தினின்றும் ஏற்படும் பரமத்ருப்தியே! அம்ருதத்துவத்தைத்தரும் அகண்டாகார விருத்தியின் அதிஷ்டான சக்தியே! ஆத்மகோசரவ்ருத்தியை நன்கு உண்டாக்குபவளே! என் மனத்தில் ஆநந்தவெள்ளத்தைப் பெருக்குவாயாக. என்பது அம்ருதேஸ்வரியின் மந்த்ரார்த்தமாம்.

ஐந்தாவது மந்த்ரம் தீபினீ மந்த்ரமெனப்படும். இது,

**ऐं वद वद वाग्वादिनि ऐं; क्लीं क्लिन्ने क्लेदिनि क्लेदय महाक्षोभं कुरु कुरु क्लीं; सौः मोक्षं कुरु कुरु; ह्सौः स्हौः ॥**

பிரத்யகாத்மஸ்வரூபத்தைப் பிரகாசிப்பிக்கச்செய்யும் வ்ருத்திக்குத் தீபினீவ்ருத்தி யென்று பெயர். தீபினீ வ்ருத்தியைப் பவிக்கச் செய்வது தீபினீமந்த்ரமாகும். இந்த தீபினீ மந்த்ரத்தில், வாக்பவ, காமராஜ. சக்திகூடங்களின் பீஜங்கள் சேர்க்கப்பட்டு மூன்று கண்டங்களாகவும், அந்தியத்தில் பிராஸாதபரா பராப்ராஸாத மந்த்ரங்களும் சேர்ந்துவிளங்குகின்றன.

வாக்பவகண்டமானது, பிரஹ்மாபின்ன பிரத்தியகாத்மஸ்வரூபம் சப்தாத்மக ஸகலவேதசாஸ்திரங்களின் லக்ஷ்யார்த்தப் பிரதிபாதகமென்றும்,

காமராஜ கண்டமானது அத்தகைய ஆத்மஸ்வரூபத்தை யறியாமலறிவதற்கு அந்தக்கரணம் சுத்தமாய்த் திரவரூப அம்ருதபாவத்தையடைதல் வேண்டுமென்றும், இதுவே ஆத்மகோசர அகண்டாகாரவிருத்தியென்றும்,

சக்தி கண்டமானது அத்தகைய ஆத்மகோசர அகண்டாகாரவிருத்தியால், மஹாபலமாகும் மோக்ஷம் அடையாமல் அடையப்படுகின்றதென்றும், நான்காவதான பிராஸாதபரா, பராபிராஸாதங்கள் ஜீவப்பிரஹ்மைக்கிய ஜீவன்முக்திநிலைகளை நன்கு அறிவிக்கின்றனவென்றும் பெரியோர் கூறுவர்.

இங்ஙனம் ஐந்து மந்த்ரங்களால் விசேஷார்க்கியத்தை யபிமந்த்ரணம் செய்தல்வேண்டுமென்று பத்ததி கூறுகின்றது. இவ்விஷயம்,

एताः कला मातृकां चाप्यखण्डैकादिकान्मनून् ।
अमृतेशीं दीपिनीं च मूलमन्त्रमपि क्रमात् ।
संस्मृत्याभ्यर्च्य पात्रं तु पूजयेद्धेनुमुद्रया ।। इति ।

குளார்ணவம்—6—59--60. ஶ்லோகங்களில் கூறப்பட்டிருப்பதறியத்தக்கது.

குருயஜனம். (३९)

ஸத்குருவானுபதேசிக்கப்பட்ட மஹாவாக்கியங்களின் அர்த்தத்தை மனனம் செய்து நிச்சயிப்பதே குருயஜனமாம். மனனத்திற்குரிய சில வாக்கியங்களாவன :—

1. स य एषोऽणिमैतदात्म्यमिदं सर्वं तत्सत्यं स आत्मा तत्त्वमसि श्वेतकेतो ।

2. तत्त्वमसि त्वं तदसि ।

3. यत्परं ब्रह्म सर्वात्मा विश्वस्यायतनं महत् ।

4. सूक्ष्मात्सूक्ष्मतरं नित्यं तत्त्वमेव त्वमेव तत् ।

5. मा भव ग्राह्यभावात्मा ग्राहकात्मा च मा भव ।
भावनामखिलां त्यक्त्वा यच्छेषं तन्मयो भव ।।

6. द्रष्टृदर्शनदृश्यानि त्यक्त्वा वासनया सह ।
दर्शनप्रथमाभासमात्मानं केवलं भज ॥

7. एकमाद्यन्तरहितं चिन्मात्रममलं ततम् ।
खादप्यतितरां सूक्ष्मं तद्ब्रह्मास्मि न संशयः ॥

8. अनात्मेति प्रसङ्गो वा अनात्मेति मनोऽपि वा ।
अनात्मेति जगद्वापि नास्त्यनात्मेति निश्चिनु ॥

9. निद्रया लोकवार्तायाः शब्दादेरात्मविस्मृतेः ।
क्वचिन्नावसरं दत्वा चिन्तयात्मानमात्मनि ॥

10. सर्वव्यापारमुत्सृज्य अहं ब्रह्मेति भावय ।
अहं ब्रह्मेति निश्चित्य अहंभावं परित्यज ॥

என்பன முதலிய உபதேசவாக்கியங்களை மனனம் செய்தலே குருயஜனமாகும். குரு ஸமீபத்தில் இருக்கும் பக்ஷத்தில், தான், மனனம் செய்யும் விதத்தை நிவேதனம் (அர்ப்பணம்) செய்தல் வேண்டும். இங்ஙனம் சிஷ்யனால் நிவேதிக்கப்பட்ட விஷயத்தை யாமோதிப்பதே குரு பாத்ரஸ்வீகாரம் செய்தலாகும்.

ஆத்மபாத்ரஸ்வீகாரம் :—இதன் தத்துவம் நிதித்தியாஸனஸ்வரூபமாம். இதன் விமர்சனமாவது :—மூலாதாரத்தில் நீவாரதான்னியத்தின் வால்நுனிபோல் அதிஸூக்ஷ்மமாயும், அநாதிவாஸனைவடிவ விறகினால் எரிகின்றதாயும் குண்டலினீசக்தியால் அதிஷ்டிதமாயுமுள்ள சிதக்னிமண்டலத்தைத் தியானித்து அதைத்தனது உண்மை வடிவமெனப் பாவித்து அச்சிதக்கினியில், தனது முன் ஜன்மாந்தரங்களில் சேர்த்து வைத்தவைகளான புண்ணி

யம், பாபம், க்ருத்தியம், அக்ருத்தியம், ஸங்கல்பம், விகல்பம், தர்மம், அதர்மம் என்பவைகளை ஹோமம் செய்தல்வேண்டும்; என்றால், இவைகள் யாவும் பிரத்திய காத்மஸ்வரூபமாயுள்ள தனக்கு எந்தவிதத்திலும் ஸம்பந் தப்பட்டவை யல்லவென்றும், அவை, தன் ஸ்வரூபத்தில் உண்மையில் இல்லவேயில்லையென்றும் நிச்சயித்தலே யாகும். சிதக்கினியானது ஜீவனது ஸர்வகர்மங்களையும் நாசம் செய்கின்றது.

இத்தகைய நிதித்தியாஸனத்தால், இதற்குமுன், ஜீ வன், தனது பிராணன், புத்தி, தேஹம் இவற்றின் தர்மங் களால் ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தியென்னும் அவ ஸ்தைகளில், மனத்திஞலும் வாக்காயங்களாலும் செய்யப் பட்ட ஸகலகர்மங்களும் பிரஹ்மார்ப்பணம் செய்யப்படுவ தால் அவை நிர்மூலமாய் ஒழிகின்றன.

நிதித்தியாஸன வ்ருத்திசோதனப் பிரகாரமாவது:—

आर्द्रं ज्वलति ज्योतिरहमस्मि ज्योतिर्ज्वलति ब्रह्माहमस्मि ।
योऽहमस्मि ब्रह्माहमस्मि अहमस्मि ब्रह्माहमस्मि ।
अहमेवाहं मां जुहोमि स्वाहा ॥

இதன் பொருள்:—

यदेतदुदकरूपं आर्द्रं तदेतत् स्वाधिष्ठानचैतन्यरूपेण ज्वलति प्रकाशते । तच्चाधिष्ठानरूपं ज्योतिः अहमस्मि देहेन्द्रियादिभ्यो विवेचितस्य मम तदेवाधिष्ठानचैतन्यं स्वरूपमित्यर्थः । तदेवोपपाद्यते । ज्योतिर्ज्वलतीत्युक्तं भवति । तज्ज्योतिः ब्रह्मैव । अतो ज्योतिरहमस्मीति वाक्येन ब्रह्माहमस्मीत्युक्तं भवति । न च पूर्वसिद्धं जीवात्मनः स्वरूपं विनाश्य रूपान्तरस्य ब्रह्मत्वलक्षणस्य

प्राप्तिर्भवति । किंतु योऽहं पुरा जीवोऽस्मि, स एवेदानीं अहं ब्रह्मास्मि । वस्तुतो ब्रह्मण्येव मयि पूर्वमज्ञानाज्जीवत्वमारोपितमासीत् । तस्मिन्नज्ञाने विवेकेनापनीते सति वस्तुतः पूर्वसिद्धमेव ब्रह्मस्वरूपमिदानीमनुभवितास्मि । न तु नूतनं किंचिद्ब्रह्मत्वमागतम् । तस्मादहमेव अहंब्रह्मभावानुभववेलायामपि पूर्वसिद्धोऽहमेव । नतु योषित्यग्निध्यानवदुपचरितं ब्रह्मत्वम् । तादृशोऽहं जलरूपं मां जुहोमि उदराग्नौ प्रक्षिपामि ॥

इदंतापात्रभरितमहंतामृतपूरितम् ।
पराहंतामये वह्नौ होमस्वीकारलक्षणम् ॥
गुरुदैवतमन्त्राणामैक्यं सं चिन्तयेद्धिया ।

இந்த விசேஷார்க்கியவடிவ தீர்த்தமானது (என்) அதிஷ்டான சைதன்னியஸ்வரூபமேயாகும். அத்தகைய சைதன்னியமானது ஸ்வயம் பிரகாசமாய் விளங்குகின்றது. இந்த ஜோதியாகும் பிரஹ்மமே நான்; என் உண்மைஸ்வரூபத்தில் ஜீவபாவம் கற்பிக்கப்பட்டது. இக்கற்பனை அக்ஞானத்தாலுண்டானதாகும். ஞானத்தினல் அக்ஞானம் ஒழிந்தால் பூர்வஸித்தமாகும் பிரஹ்மபாவம் ஸித்திக்கின்றது; புதிதாகப் பிரம்ஹத்துவம் எள்ளளவும் ஸித்திக்கவேயில்லை. இப்போதும், அப்போதும், எப்போதும் யான் பிரஹ்மமே. இந்தத் தீர்த்தத்தின் இதமாகார திருசிய உபாதியை யொழித்து என்னோடு ஐக்கியம் செய்கின்றேன். என்பதாம்.

இத்தகைய பாவனுவிசேஷத்தோடு ஆத்மபாத்திர ஸ்வீகாரம் செய்தல்வேண்டும்.

நான்காவது கண்டம் முற்றிற்று.

நான்காவது கண்டத்தின் ஸாராம்சங்கள்.

| பாத்திரங்கள் | அவற்றின் தத்துவார்த்தம் |
|---|---|
| 1. வர்த்தனீபாத்திரம் | வேதவேதாங்கங்களால் ஏற்பட்ட (பரோக்ஷ) அபரஞானம்—இது அத்தியஸ்தவடிவம். |
| 2. ஸாமான்ய அர்க்கியபாத்திரம் | அத்தியாஸம் நீங்கிக் கேவலம் அஹம்-இதம் என்னும் ஸாமான்ய ஞானவடிவமானது. |
| 3. விசேஷார்க்கியபாத்திரம் | நான் ஜீவன் என்னும் அத்தியாஸம் நீங்கி நான் சிவமென்னும் விசேஷஞானவடிவமும், இது உலகம் என்னும் மயக்கம் நீங்கி இது ஸச்சிதாநந்த சிவமென்னும் விசேஷஞான வடிவமுமாகும். |
| 4. சுத்திபாத்திரம் | ஜீவபாவம் நீங்குதற்கு வேண்டிய அகண்டதாத்பர்ய ஞானம். இது பாகத்தியாக லக்ஷணையால் ஏற்படுவது. |
| 5. குருபாத்திரம் | ஜீவப்பிரஹ்மைக்கிய அபரோக்ஷ ஸ்புரண ஞானஸாதனம் (மனனம்). |
| 6. ஆத்மபாத்திரம் | ஜீவன் முக்தி விலக்ஷணாநந்தாநுபவ ஸவிகல்பஸமாதி வ்ருத்திஞான ஸாதனம். |
| 7. பலிபாத்திரம் | ஜீவன்முக்திதசையில் பாதிதாநுவ்ருத்தியால் தோன்றும் உலகத் தோற்றத்தையும், விஷயாநுபவத்தையும் பிராரப்தாநுஸாரமாய்க் கிடைத்த சரீரத்திற்கு அர்ப்பணம் செய்து தான் அஸங்கமாய் நிற்கும் ஞானம். |

# ஸபர்யாபத்ததிவாஸனு விமர்சம்.

## ஐந்தாவது கண்டம்

——:o:——

(அந்தர்யாகம் முதல் லயாங்க பூஜைவரை) (௪௧—௬௨)

### அந்தர்யாகம். (௪௧)

அந்தர்யாகமென்பது உள்ளே மானஸிகமாய்ச் செய்யப்படும் பூஜையாகும். இந்த ஆந்தரபூஜை இரண்டு வகைப்படும்.

पूजा याभ्यन्तरा सापि द्विविधा परिकीर्तिता ।
साधारा च निराधारा निराधारा महत्तरा ॥
साधारा या तु साधारे निराधारा तु संविदि ।
आधारे वर्णसंकॢप्तविग्रहे परमेश्वरीम् ॥
आराधयेदतिप्रीत्या गुरुणोक्तेन वर्त्मना ।
या पूजा संविदि प्रोक्ता सा तु तस्यां मनोलयः ॥
संविदेव पराशक्तिर्नेतरा परमार्थतः ।
अतः संविदि तां नित्यं पूजयेन्मतिमत्तमः ॥

(ஸூதஸம்ஹிதா ஶிவமாஹா—5 அத்)

என்னும் பிரமாணப்படி அந்தர்யாகம் ஸாதாரமென்றும் நிராதாரமென்றும் இருவகைப்படும்.

ஸாதார ஆந்தரபூஜையானது மனத்தினுல் ஒரு மூர்த்தியையோ அல்லது சக்கிரத்தையோ கற்பித்து அதில்

ஸச்சிதாநந்தஸ்வரூப சித்சக்தியை ஆவாஹனம் செய்து மனோகற்பித பூஜாதிரவியங்களால் பூஜிப்பதாகும்.

நிராதார ஆந்தரபூஜையோவெனின் மனோவிருத்திக்கு ஆலம்பனமாயுள்ள ஆதாரவஸ்துக்களின் கற்பனையின்றிக் கேவல ஸச்சிதாநந்தங்களை மாத்திரம் அநுஸந்தானஞ் செய்தலாகும். இந்த நிராதார ஆந்தரபூஜையே மிகச் சிறந்தது. ஆயினும் இதற்குச் சாதனம் ஸாதார அந்தர்யாகமேயாகும்.

ஸாதார அந்தர்யாக விமர்சம் வருமாறு:—

**एवं निरस्तनिखिलदोषः सन् । आमूलाधारादाब्रह्मबिलं विलसन्तीं बिसतन्तुतनीयसीं विद्युत्पुञ्जपिञ्जरां विवस्वदयुतभास्वत्प्रकाशां परःशतसुधामयूखशीतलतेजोदण्डरूपां परचितिं भावयेत् ।**

என்று பத்ததி கூறுகின்றது.

**मूलाधारमुखोद्गतबिसतन्तुनिभप्रभाभावितसुधाधाराविसृतसंविदं आवाहनादिभिराराधयेत् ।**

என்று ஸ்ரீவித்யாரண்யர் ஸூதஸம்ஹிதை தாத்பர்யதீபிகையில் கூறுகின்றார். அத்தகைய ஆந்தரபூஜைக்கு அதிகாரி சுத்தஸத்துவப்பிரதான அந்தக்கரணத்தோடு கூடியவனேயாவன். "**एवं निरस्तनिखिलदोषः सन्**" என்பது இந்த அர்த்தத்தைத் தெரிவிக்கின்றது. நிர்தோஷ சித்தத்தோடு கூடியவன்தான் பரசித்சக்தியைத் தியானித்தற்குக்கூடும்.

சித்சக்தியின் ஸ்வரூபமாவது:—மூலாதாரம் முதல் பிரஹ்மரந்திரம் வரையில் பிரகாசிப்பதும், தாமரைத்தண்டின் மெல்லிய நூல்போன்று அதிஸூக்ஷ்மமாயிருப்பதும், மின்னற் கூட்டத்தைப்போல் பிரகாசிப்பதும், பதினாயிரம் ஸூர்யர்கள் ஒன்றாயுதித்ததுபோலுள்ள காந்தியுடைய

தும், அநேக சந்திரர்களின் அம்ருதகிரணங்களைப் போன்று மிகவும் குளிர்ச்சியுடையதுமான தேஜோதண்ட வடிவமாம். இத்தகைய பரசிதியைப் பாவனை செய்தல் வேண்டும்.

இங்ஙனம் பாவிப்பதன் நோக்கம் யாதெனின், அக்கினி, ஸூர்ய, சந்திரர்களென்னும் மும்மண்டலவடிவ சரீரத்திலும், ஸர்வப்பிரபஞ்சத்திலும், சித்சக்தியானது வியாபித்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கி, எல்லா ஜடப் பொருள்களையும் விளக்குகின்றதென்றும், மண்டலத்திரயங்களுக்கும் அதீதமாயுள்ள ஜ்யோத்ஸ்நாலோகத்தில் மஹாப்ரகாசஸ்வரூபசிவத்தோடு அபேதமாய் விளங்குகின்றதென்றும் நன்கு பாவிப்பதற்கேயாம். இதுதான் ஸமயமத ரஹஸ்யம். ஸ்ரீஶங்கரபகவத்பாதாள் ஸௌந்தர்யலஹரியில் கூறியுள்ளது இவ்வுபாஸனையையேயாகும்.

महीं मूलाधारे कमपि मणिपूरे हुतवहं
स्थितं स्वाधिष्ठाने हृदि मरुतमाकाशमुपरि ।
मनोऽपि भ्रूमध्ये सकलमपि भित्त्वा कुलपथं
सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसि ॥

என்னும் ஸௌந்தர்யலஹரி 9-வது ஶ்லோகமும்,

ततो गत्वा ज्योत्स्नामयसमयलोकं समयिनां
पराख्या सादाख्या जयति शिवतत्वेन मिलिता ।
सहस्रारे पद्मे शिशिरमहसां बिम्बमपरं
तदेव श्रीचक्रं सरघमिति तद्बैन्दवमिति ॥

என்னும் ஸ்ரீகௌடபாதாள் இயற்றிய ஸுபகோதய ஶ்லோகமும் இந்த அர்த்தத்தையே தெரிவிக்கின்றன.

இந்த அந்தர்யாகம்தான் அஹங்கிரஹோபாஸனு லிங்கமாகும். அந்தர்யாகமில்லாமல் பஹிர்யாகம் செய்வது அவைதிகமேயாகும். அந்தர்யாகமாவது, தன் ஆத்ம ஸ்வரூபத்தை ஹ்ருதயத்தில் நன்கு பாவித்து அவ்வாத்ம ஸ்வரூபத்தையே வெளியிலும் பாவிக்கச் செய்து அபேத பாவத்தையுண்டுபண்ணுகின்றது.

योऽन्यां देवतामुपास्ते न स वेद ।

என்று ஶ்ருதி கூறுவது பேதபாவத்தோடுகூடிய ப்ரதீகவுபாஸனேயேயாகும். ஆதலின் அந்தர்யாகம் அத்தியாவஶ்யம். உத்தமாதிகாரிகளுக்குப் பாஹ்யயாகமே அவசியமின்று என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அஹம்பதலக்ஷ்யார்த்தவடிவ சித்சக்தியில், தனது தேஹமும், மனமும், போக்கியரூபபிரபஞ்சமும் கற்பனையாய்த் தோன்றுகின்றனவென்பது ஸகலசாஸ்திர ஸித்தாந்தமாம். ஆதலின் சித்சக்தி அபிவியஞ்சகவடிவ ஸ்ரீ சக்கிரத்தைப் பிரபஞ்சமாகவோ அல்லது ஸ்தூலசரீரமாகவோ அல்லது ஸூக்ஷ்மசரீரவடிவமனமாகவோ பாவித்தல் அவசியம். பிரபஞ்சம், சரீரம், மனம் என்பவற்றை ஸ்ரீசக்கிரமாகப் பாவித்தல், முறையே, மந்த, மத்யம, உத்தமாதிகாரிகளுக்கு அத்தியாவசியமானது. சரீரமே ஸ்ரீசக்கிரமென்னும் பாவனையில் மூலாதாரத்திற்குக் கீழுள்ள ஸஹஸ்ரார பத்மத்தில் பூபுரத்திலுள்ள சக்திகளையும், அதற்குமேல் உள்ள விஷுவமென்னும் ஷட்தள பத்மத்தில் ஷோடஶதளத்திலுள்ள தேவிகளையும், மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தியென்னும் சக்கிரங்களில் முறையே அஷ்டதளம், மன்வஶ்ரம், பஹிர்த்தசாரம், அந்தர்த்தசாரம், அஷ்டகோணம் என்னும் சக்கிரங்களிலுள்ள தேவிகளையும், லம்பிகாக்கிர

மென்னும் இந்திரயோனியி (உள்நாக்கி) ல் மத்திய முக்கோணத்திலுள்ள தேவிகளையும் ஆக்ஞையில் பிந்து சக்கிர தேவியையும் தியானித்தல்வேண்டும். இங்ஙனம் தியானிக்கும்போது ஜீவாத்மாவாகும் தன்னை ஒவ்வொரு சக்கிரத்தின் எதிரிலும் புஷ்பாஞ்சலியோடு நிற்பதாய்ப் பாவித்து அந்த அந்த சக்கிரங்களில் உள்ள ஆவரண தேவதைகளைப் பூஜித்து அந்த அந்த ஆவரண பூஜையைப் பரதேவதையின் இடது ஹஸ்தத்தில் ஸமர்ப்பணம் செய்வதாய்ப் பாவித்துப் பின்னர் எல்லாச் சக்கிரங்களும் ஆவரணசக்திகளும் பரதேவதையினிடம் லயமானதாய்ப் பாவித்தல் வேண்டும். இந்த பாவனையை ஹ்ருதயத்தில் செய்தல் அவசியம். பரதேவதையின் சரணாரவிந்தத்தில் ஜீவாத்மா சரணமடைந்திருப்பதாகப் பாவித்தல்வேண்டும். இங்கே இது ரஹஸ்யமாம்.

அஹம்பதலக்ஷ்யார்த்தம் பரதேவதை; அஹம்பத வாச்சியார்த்தம் ஜீவன். இவைகளின் விமர்சம் ஹ்ருதயத்தில் தான் ஆகும். மத்தியத்ரிகோணம்தான் விமர்ச விருத்தி. இது சுத்தத் திரிபுடியோடுகூடியது. **स्वाञ्जलि-गतकुसुम**ங்கள் ஆத்மகோசரவிருத்திகளாம்.

பூஜையென்பது அதத்வியாவிருத்தியால் உபாதிகளையொழித்தலாகும்.

**अकुलेन्दुगलितामृतधारारूपिणीः** = அகுளஸஹஸ்ரார கமலத்தினின்றும் பெருகும் அம்ருதஸ்வரூபவடிவினர்கள். இவர்கள் ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களில் அதிஷ்டிதராயுள்ளவர்கள். இவர்களின் மூலமாய்த்தான் பிரஹ்மாநந்தம் உணரப்படுகின்றது. சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியமென்னும் பஞ்சோபசார சக்திகள் இவர்களே யாவர். இவர்களைப் பரதேவதையின் எதிரில்

இருப்பதாகப் பாவித்தல் வேண்டும். இந்த பஞ்சசக்திகளின் மயமே போக்கியவடிவப்பிரபஞ்சமாகும். இவைகளை ஜீவனுகும் போக்தா அநுபவிக்கும்போது எந்த ஆநந்தம் உணரப்படுகின்றதோ அதுதான் பரதேவதையின் ஸ்வரூபமாம்.

पञ्चरूपिणमात्मानं दिव्यैः पञ्चोपचारकैः ।
अर्पयेत्सह गन्धेन पृथिवीं कुसुमेन खम् ॥
धूपेन वायुं दीपेन तेजोऽन्नेन रसं पुनः ।

1. सुगन्धवत्पदार्थानुभवेन प्रत्यङ्मुखतया प्रमातरि विश्रान्तिः **गन्धसमर्पणम्** ।
2. सुशब्दवत्पदार्थानुभवेन प्रत्यङ्मुखतया प्रमातरि विश्रान्तिः **पुष्पसमर्पणम्** ।
3. सुस्पर्शवत्पदार्थानुभवेन प्रत्यङ्मुखतया प्रमातरि विश्रान्तिः **धूपसमर्पणम्** ।
.4 सुरूपवत्पदार्थानुभवेन प्रत्यङ्मुखतया प्रमातरि विश्रान्तिः **दीपसमर्पणम्** ।
5. स्वादुरसवत्पदार्थानुभवेन प्रत्यङ्मुखतया प्रमातरि विश्रान्तिः **नैवेद्यसमर्पणम्** ।

*என்பதை முக்கியாம்நாய ரஹஸ்யத்தில் கீழ்க்குறித்தவாறு கூறப்பட்டிருக்கின்றது.*

इन्द्रियग्रामसंग्राह्यैर्गन्धाद्यैरात्मदेवताम् ।
स्वाभेदेन समाराध्य ज्ञातुः सोऽयं महामखः ॥

சக்ஷுஸ்ஸ்ரோத்ராதி இந்திரியங்கள் ரூபசப்தாதி விஷயங்களைக் கவர்ந்து பிரமாதாவினிடத்தில் விஸ்ராந்தி யடையும்போது ஸ்வாத்மாநந்தம் ஸ்புரிக்கின்றதென்பது சாஸ்திரஸித்தம். ரூபம் சப்தம் முதலிய விஷயோபாதிகளை நீக்கிக் கேவலம் ஞானரூபமாகப் பாவித்தலே கந்தபுஷ்பாதி பஞ்சோபசார தேவதைகளின் லயபாவனையாகும். பாஞ்சபௌதிக போக்கியப் பிரபஞ்சம் லயித்தபோது போக்தாவடிவ ஜீவபாவமும் லயமாதல்வேண்டும். ஜீவவொடுக்கம் எங்கே ? பரதேவதையின் சரணத்தில் தான். இங்ஙனம் அறிதல் அவசியம்.

**परिपूर्णध्यानमेव तत्पादुकानिमज्जनम् ॥**

என்பது பிரமாணம். உபாதிகளின் நிரஸனத்தால் ஜீவபாவமும், பிரபஞ்சத்தின் (நாமரூப) ஜடாம்சங்களும் ஒழியவே, பரதேவதையின் ஸ்வபாவவடிவ அஸ்தி பாதி பிரியங்கள் மாத்திரம் உணர்ச்சிக்கு விஷயமாகும். இந்நிலைதான் ஸச்சிதாநந்த ஆத்மதரிசன நிலையாகும். ஆத்மஞானிக்குச் சோகமோஹங்கள் இல்லை. உலகமெல்லாம் அவனுக்குச் சிவமயமாகும். ஆதலால் ஆநந்தஸ்வரூபமாகவே விளங்கும்.

இந்த தத்துவத்தை ஸர்வஸங்க்ஷோபிணீ முதலிய பத்து முத்திரைகள் தெரிவிக்கின்றன. **मुदं रातीति मुद्रा.** ஆநந்தத்தைப் பிரகடஞ் செய்பவைகளுக்கு முத்திரைகளென்றுபெயர்.

### முத்திரைகளின் தத்துவார்த்தம்.

சித்சக்தியென்னும் ஞானமே முத்திரையென்னும் பெயரைப் பெறுகின்றது.

यदा विमर्शशक्तिः विश्वरूपेण विहर्तुमिच्छति तदा क्रियाशक्तिर्भूत्वा स्वविकारभूतस्य विश्वस्य परचिदानन्दलक्षणेन मोदनेन तदैकरस्यलक्षणेन द्रावणेन च मुद्राख्यामापन्नेत्यर्थः ।

(யோகினீ ஹ்ருதயம் அம்ருதாநந்த வியாக்கியை)

1. ஸர்வஸம்க்ஷோபிணீ = சித்சக்தியில் கற்பிதமான ஜட சக்தியாகும் மாயையால் ஸர்வப் பிரபஞ்சத்தின் சிருஷ்டியைக் குறிக்கின்றது.

2. ஸர்வவித்ராவிணீ = பிரபஞ்சத்தின் ஸ்திதியைக் குறிக்கின்றது. பஞ்சஞானேந்திரியங்களால் பிரபஞ்சத்தை அநுபவிப்பதே அதன் ஸ்திதியாம்.

3. ஸர்வாகர்ஷிணீ = அங்ஙனம் அநுபவித்த பிறகு அவற்றின் ஞானம் சித்தத்தில் அதிஸூக்ஷ்மமான வாஸனைவடிவாய் நிலைத்துள்ள ஸ்திதியை இந்த முத்திரை ஸூசிப்பிக்கின்றது.

4. ஸர்வவசங்கரீ = பஞ்சஞானேந்திரியங்களாலும் மனத்தினுலும் அநுபவிக்கப்படும் விஷயங்கள் யாவும் பிரமாதாவினிடத்தில் ஸுகதுக்கவடிவாய் லயமாதலை இது குறிப்பிடுகின்றது.

5. ஸர்வோந்மாதினீ = இது தோஷத்ருஷ்டியால் பிரபஞ்சாநுபவத்தை வெறுத்து, ஸர்வவியாபாரங்களுக்கும் பராங்முகனாய் உள்ள நிலையைக் குறிப்பிடுகின்றதாகும்.

6. ஸர்வமஹாங்குசா = பாஹ்யவிருத்தியை வெறுத்து அந்தர்முகவிருத்தியோடுள்ள நிலையில், மனமானது தனது முற்பழக்கத்தால் பாஹ்யத்திற் செல்லும். அப்போது இது அதைக்கட்டுப்படுத்தி அந்தர்முகத்தில் நிறுத்தச் செய்வதைக் குறிக்கின்றது (தாரணை).

7. ஸர்வகேசரீ = அகண்டாகார பிரஹ்மஸ்வரூபத்தில் ஸஞ்சாரம் செய்யும் விருத்தியைக் குறிப்பது இந்த முத்திரையாம்.

8. ஸர்வபீஜம் = ஆத்மஸ்வரூபமே ஸர்வப்பிரபஞ்சகாரணமாயிருக்கின்றது; ஆதலின் ஆத்மாவே ஸர்வப் பிரபஞ்சத்தின் அதிஷ்டானமும் பிரகாசமுமாகுமென்பது இம்முத்திரையாலுணரப்படுகின்றது.

9. ஸர்வயோனி = ஜீவப்பிரஹ்மைக்கிய அபரோக்ஷ ஸாக்ஷாத்காரஸூசகம்.

10. ஸர்வத்ரிகண்டா = ஜீவன்முக்திதசையில் தோற்றும் பிரபஞ்சம் பிரகாசவிமர்சஸ்வரூபமேயாமென்றும், ஆநந்தவடிவினதே யென்றும் தோற்றச்செய்வதாகும்.

**दशमुद्रासमाराध्या** என்பது பரதேவதையின் நாமாந்தரமாகும். பத்துவிதமுத்ராஸ்வரூப மனோவிருத்திகளாலும் நன்கு ஆராதிக்கத்தகுந்தவள் சித்சக்தி யென்பதே இதன் தாத்பர்யமாம்.

ஸுஷுப்தியினின்று விழிப்படைதலே பிரபஞ்ச சிருஷ்டியாம். இதுதான் ஸர்வஸங்க்ஷோபிணீ முத்திரை

யாகும். பிரபஞ்சத்தை இந்திரியங்களால் அறியும் விருத்தியோடுள்ள ஸ்திதியே ஸர்வவித்ராவிணி முத்திரையென்றும், பிரபஞ்சாநுபவ ஸம்ஸ்காரரூப ஸ்ம்ருதியே ஸர்வாகர்ஷிணி முத்திரையென்றும், விஷயாநந்தாநுபவநிலையே ஸர்வவசங்கரீ முத்திரையென்றும், வைராக்கியவிருத்தியே ஸர்வோந்மாதினீ முத்திரையென்றும், ஆத்மஸ்வரூபதியானவிருத்தியே ஸர்வமஹாங்குசையென்றும், மனனவிருத்தியே ஸர்வகேசரீ முத்திரையென்றும், நிதித்தியாஸனவிருத்தியே ஸர்வபீஜமுத்திரையென்றும், ஸவிகல்பஸமாதிவிருத்தியே ஸர்வயோனிமுத்திரையென்றும், ஜீவன்முக்தி நிலையே ஸர்வத்திரிகண்டா முத்திரையென்றும் தத்துவஞானிகள் கூறுகின்றனர். மேற்கூறியவிருத்திகளில் சித்சக்தி ஆரூடையாய் இருப்பதால் அந்த அந்த விருத்திக்கு யோக்கியமான விஷயஞானமேற்படுகின்றது. ஞானத்திற்கு உபாதியாகிய விஷயத்தன்மையை நீக்கின் கேவலஞானம் ஸித்திக்கின்றது. இதுதான் நிர்விசேஷஞானம்; பரதேவதையின் ஸ்வரூபம். ஆதலால்தான் பரதேவதையே முத்திரைகளின் வடிவாய் விளங்குகின்றனள் என்று முன் கூறப்பட்டது. ஞானி எந்த சித்தவிருத்தியில் இருந்தாலும் அவனுக்கு ஆநந்தமே. அவனது எந்த அவஸ்தையும் சாம்பவீஸ்புரணத்தோடு கூடியதென்று ஸித்திக்கின்றது.

सा शाम्भवी स्फुरतु कापि ममाप्यवस्था
यस्यां गुरोश्चरणपङ्कजमेव लभ्यम् ।

என்பது பிரமாணமாம்.

இங்ஙனம் முத்திராஸ்வரூபதத்துவத்தைப் பாவித்த பின் ஸ்வரூபநிஷ்டையில் இருத்தல் அவஶ்யம்.

பின் ஆத்மநிஷ்டையினின்றும் பரதேவதையின் பிரேரணையால் நழுவினமனத்தனாய், ஸாதகன், பிரக்ருதியை அவலம்பித்து, ஸர்வப்பிரபஞ்சகாரணமாயும், எல்லாவற்றையும் விளக்கும் சேதனமாயும், பரமசிவத்திற்கும் தனக்கும் அபின்னமாயுமுள்ள சித்சக்தியை அகண்டாகார விருத்தியால் எங்கும் அறிகின்றான். அவனது பஞ்சேந்திரியங்களுக்கு விஷயமாயுள்ள ஸர்வப்பிரபஞ்சமும் சின்மயமாகவே அவனுக்குப் புலப்படும். இங்ஙனம் புலனாகும் பிரபஞ்சமே சித்சக்தியின் ஸ்வ (நிஜ) லீலையால் அங்கீகரிக்கப்பட்ட சரீரமாம். இதுதான் அம்ருதசைதன்ய மூர்த்தியுமாகும்.

## ஆவாஹனம்

இந்திரியவிஷயமாகும் மூர்த்தத்திரவியங்களில் அதிஷ்டிதமாயுள்ள ஸச்சிதாநந்த சித்சக்தியை யுணர்வதே ஆவாஹனமாம். நிர்விசேஷப் பிரஹ்மமாகும் பிரகாசவடிவ காமேஶ்வரரது துடையின்மேல் விமர்சவடிவ பரதேவதையிருப்பதாகப் பாவித்தல் அவசியம். பிந்துபீடந்தான் மனம், அல்லது சரீரம், அல்லது பிரபஞ்சமாகும். பிரபஞ்ச சரீர மனங்களாகும் ஸ்ரீசக்கிரத்தில் அதிஷ்டிதமாய் விளங்குவது பிரத்தியகபின்ன சிவமே.

இங்கே பிரத்தியகாத்மாவென்பது அஹம்பதலக்ஷ்ய கூடஸ்தஸ்வரூபமும், சிவமென்பது பிரஹ்மமுமாகும். கூடஸ்தஸ்வரூபமே சித்சக்தியென்பது பரம ரஹஸ்யமாகும். ஸ்ரீசக்கிரத்தின் வாஸனை பின்னர் கூறப்படும்.

## சதுஷ்ஷஷ்டி உபசாரபூஜை.

**उप = समीपे ; चारः = संचारः इति उपचारः** ஆத்மாபின்ன பரசிவஸமீபத்தில் வஸிப்பது என்னும் பொருளை யுடையது

உபசாரமென்னும் பதமாகும். எங்கும், எப்பொழுதும், எல்லாமாயுமுள்ள பரசிவத்திற்கு ஸமீபமென்றும், தூரமென்றுமுள்ளதேசாந்தரவிசேஷமுண்டோவெனின், இல்லவே இல்லை. கற்பனையாய்த் தோன்றும் காலதேசவஸ்து பரிச்சேதத்தினுல் ஸமீபமென்று கூறவந்ததே யொழிய மற்றன்று. அநாத்ம நாமரூப நாட்டத்தைப் பையப் பைய நம்மனத்தினின்றும் நீக்குவதனுல் நாம் ஆத்மரூப அஸ்திபாதிபிரிய நாட்டத்தைச் சிறிது சிறிதாகப் பெற்று ஆத்மஸ்வரூபத்தைச் சமீபிக்கின்றேம். இது அப்பியாஸ தசையில் கூறப்படுவதாகும். ஆத்மகோசரவிருத்தியோடிருத்தலே உபசாரமென்பது பரமஸித்தாந்தமாகும்.

**भावनायाः क्रिया उपचारः ।**

என்பது பாவனேபநிஷத்து. இதற்கு,

**उक्तायाः स्वात्माभेदेन ललिताभावनायाः क्रियाः पुनः पुनः करणानि धारावाहिन्यो भावना इति यावत् ।**

என்று ஸ்ரீபாஸ்கரராயர் வியாக்கியானம் செய்துள்ளார்.

**आत्मनो विषयोपभोगजनितानन्दस्य सर्वस्य स्वात्माभेदेनानुसंधानं सपर्यापर्याय इति निष्कर्षः ।**

**आत्मार्पणदृशा सपर्यापर्यायस्तव भवतु यन्मे विलसितम् ।**

என்னும் பிரமாணங்களின்படி, மனேவாக்காயங்களால் செய்யப்படும் ஸகல மானஸிக, வாசிக, காயிககர்மங்களிலும் ஆத்மஸ்வரூபத்தை யநுஸந்தானம் செய்யின் அவை சிவாபின்ன சித்சக்தியின் உபசாரங்களேயாகின்றன. இவ்வுபசாரங்கள் ஐந்தென்று சிலசாஸ்திரங்களும், பதினுறு என்று சிலசாஸ்திரங்களும், அறுபத்திநான்கு என்று சிலவும் கூறுகின்றன. ஸ்ரீபாவனேபநிஷத்து

பாஷ்யத்தில் பாஸ்கரராயர் கூறும் வண்ணம் ஷோடசோபசாரங்களின் தத்துவம் பூமிகையில் பூஜாஸங்கேதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆங்கறியவும்.

வேறு உபநிஷத்துக்களிலும் உபசாரங்களின் பாரமார்த்திகதத்துவம் கூறப்பட்டுள்ளது. அஃதாவது, மண்டலப் பிராஹ்மணோபநிஷத்து:—

**तस्य निश्चिन्ता ध्यानम् । सर्वकर्मनिराकरणं आवाहनम् । निश्चयज्ञानं आसनम् । उन्मनीभावः पाद्यम् । सदाऽमनस्कं अर्घ्यम् । सदादीप्तिरपारामृतवृत्तिः स्नानम् । सर्वात्मभावना गन्धः । दृक्स्वरूपावस्थानं अक्षताः । चिदाप्तिः पुष्पम् । चिदग्निस्वरूपं धूपः । चिदादित्यस्वरूपं दीपः । परिपूर्णचन्द्रामृतस्यैकीकरणं नैवेद्यम् । निश्चलत्वं प्रदक्षिणम् । सोऽहंभावो नमस्कारः । मौनं स्तुतिः । सर्वसंतोषो विसर्जनम् ।**

இரண்டாவது பிராஹ்மணம்.

மேற்கூறிய பிரமாணங்களால் ஆத்மீயவிருத்தியே உபசாரமென்றேற்படுகின்றதல்லவா?

## ஆயதன பூஜை.

ஆயதனமென்பதற்கு இருப்பிடம் என்று பொருள். சித்சக்தி, எல்லாப்பொருள்களிலும் எல்லா ஜீவராசிகளிலும் எல்லாமனிதர், தேவர், கந்தர்வர், யக்ஷர், கின்னரர், கிம்புருஷர் முதலியவர்களிடத்திலும் இருப்பதால் ஸர்வப்பிரபஞ்சமும் சித்சக்தியின் ஆயதனங்களேயாம். ஆயினும் அவைகளின் சக்தி அல்லது ஸாமர்த்தியம், உபயோகம் முதலியவற்றின் அதிகக் குறைவுகளால் மேல் கீழ் என்னும் வித்தியாஸங்கள் ஏற்படுகின்றன. மேல் கீழ்

என்னும் பேதங்கள் மனோகற்பிதமேயாம். एकोऽपि आत्मा बहुधा संबभूव । एकं सद्विप्रा बहुधा वदन्ति । एकं सन्तं बहुधा कल्पयन्ति ॥ என்னும் ஶ்ருதிகளின்படி ஆத்மாபின்ன சித்சக்தி யொன்றே அநேகமாய் ஆயிற்று. இங்ஙனம் அநேகமாய்த் தோற்றின இப்பிரஹ்மாண்டத்தில் சுத்த ஸத்துவப் பிரதானிகளாயுள்ள தேவர்கள் மிகச் சக்தியுடையவர்களாதலின் பூஜ்யர்களேயாவர். இத்தேவர்களுள் சிறந்தவர்கள் நால்வர். அவர்கள் கணேசன், ஸூர்யன், சிவன், விஷ்ணு என்பவர்களாம்.

## பஞ்சாயதனபூஜையின் ஆவஶ்யகதை.

வேதம் ஜீவர்களின் ஹிதத்தின் பொருட்டுப் பரமேஶ்வரனால் அருளப்பட்டது. அதன் பிரஹ்ம அல்லது ஞானகாண்டத்தை நன்கு விளக்குதற் பொருட்டுப் பகவான் பாதராயண மஹர்ஷியால் பதினெண் புராணங்கள் இயற்றப்பட்டன. இப்பதினெண்புராணங்களில் சில சிவனையும், சில விஷ்ணுவையும், இங்ஙனமே கணேசன் தேவி, சூரியன் முதலியவர்களையும் உபாஸ்யமாய் விதித்திருக்கின்றன. உபாஸ்யமானது பரமேஶ்வரன் ஒருவனே. அவ்வொருவனே கணேச, ஸூர்ய, சிவ, விஷ்ணுவாதிவடிவத்தோடும் நாமத்தோடும் விளங்குகின்றான். இம்மூர்த்திகளுள் ஒருவருக்கொருவர் சைதன்யாம்சத்தில் பின்னப்பட்டவர்களல்லர். இத்தகைய அபேதபாவனை முமுக்ஷுக்களுக்கு அத்தியாவசியமானது. இதன் பொருட்டே பஞ்சாயதனபூஜை அத்வைதிகளுக்கு விதிக்கப்பட்டதென்றறிதல் அத்தியாவசியம்.

अद्वैतविद्यया युक्ताः पञ्चपूजारताः सदा ।
भवतेत्युदिताः सर्वे गुरुपादाम्बुजे रताः ॥

என்று, சங்கரவிஜயம் 15 ஸர்க்க வியாக்கியானம் கூறுவது இங்கே அறியத்தக்கது. எல்லாத்தேவர்களும் சித்சக்தியின் ரச்மிகளே யாவரென்பது சாக்த சாஸ்திரங்களின் துணிபு. ஆதலின் கணேசன், ஸூர்யன், விஷ்ணு, சிவனென்னும் நால்வரையும், அவர்களின் நாமரூபங்களைவிட்டு அதிஷ்டான சித்சக்திவடிவமாய்ப் பார்ப்பதுவே சதுராயதன பூஜையின் சிறந்த தத்துவமாகும்.

இங்ஙனம் எல்லாத் தேவதைகளிலும் அவரவர்களின் நாமரூபங்களைவிட்டு பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூப சித்சக்தியைப் பார்ப்பதுவே ஸ்வப்பிரதான உபாஸ்தியாகும். உபாஸ்தி மூன்றுவகை. அவை ஸ்வப்பிரதானம், ஸமப்பிரதானம், அஸ்வப்பிரதானம் என்பனவாம்.

1. நாமரூப உபாதியைவிட்டு ஆத்மாபின்ன பிரஹ்மத்தையே பிரதானமாயுணர்ந்து செய்யப்படும் உபாஸ்தி ஸ்வப்பிரதான உபாஸ்தியாகும். இது உத்தமாதிகாரி விஷயம் (பராபூஜை).

2. உபாதி, அதிஷ்டானம் என்னும் இவ்விரண்டையும் ஏற்றத் தாழ்வில்லாமல் பிரதானமாய்ப் பாவித்துச் செய்வது ஸமப்பிரதான உபாஸ்தியாகும். இது மத்தியமாதிகாரிகளது விஷயமாகும். (பராபராபூஜை).

3. நாமரூப உபாதிகளையே பிரதானமாய் எண்ணிப் பரமாத்ம தத்துவத்தை முற்றும் மறந்து உபாஸிப்பது அஸ்வப்பிரதான உபாஸ்தியாகும். இது அதமாதிகாரி விஷயம். (அபராபூஜை).

ஆகவே ஸ்வப்பிரதானமாய்ச் செய்யப்படும் உபாஸ்தியில் முப்பத்துமூன்றுகோடியல்ல இதற்கும் அதிக ஸங்கியையுள்ள தேவதைகள் பூஜிக்கப்பட்டாலும், அங்கே

உபாஸ்யம் சித்சக்தி ஒன்றேதான்; அவ்வொன்றும் உபாஸகனுக்கு அபேதமே (பின்னப்பட்டதன்று) யென்றறிதல் அத்தியாவசியமானது.

குறிப்பு:—ஆயதன பூஜையின் தத்துவம் மற்ரொரு விதமாகவும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. அஃதாவது,

கணேஶன்:—ஜடசேதனாத்மகமாயுள்ள பதினான்கு லோகங்களும் பலகணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வக்கணங்களுக்குள் சிரேஷ்டமாய் விளங்குந்தன்மையை யுடையவன். இது ஈஶ்வரஸம்பந்தமான ஐஶ்வர்யங்களில் ஒன்று.

ஸூர்யன்:—ஸ்ருஷ்டி சக்தியோடுகூடியவன்; ஸவிதா.

விஷ்ணு:—ஸ்திதி சக்தியோடுகூடியவன்; பிரபஞ்சரக்ஷக வடிவ ஐஶ்வர்யத்தோடு கூடியவன்.

சிவன்:—(ருத்திரன்) ஸம்ஹாரசக்தியோடு கூடியவன்.

அம்பிகை:—ஞானசக்தி; மயக்ககாலத்தில் விஷயஞானரூபமாயும், தெளிவுகாலத்தில் தத்துவஞானரூபமாயும் பிரகாசிப்பவள்.

ஆகவே, மேற்கூறிய ஐந்து ஆயதனங்களும் பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூப சித்சக்திவடிவங்களேயாமென்றறிதல் அத்தியாவஶ்யமாம். இதனால் அபேத தர்ஶனமானது திடப்படுகின்றது.

ஷடாம்நாயபூஜை, ஷடாதாரபூஜை, ஷட்தர்ஶனபூஜை, பஞ்சபஞ்சிகாபூஜை முதலியவைகளிலும் மேற்கூறிய தத்துவத்தை மறவாமல் இருத்தல் அவசியம்.

## லயாங்கபூஜை. (௫௬)

லயாங்கமென்பது அங்கியோடு அபேதப்படும்படியான அங்கங்களென்று பொருள்படுவதாகும். இங்கே அங்கியானது காரணமாகவும் அங்கம் காரியமாகவும் கொள்ளத்தக்கது. இந்த பூஜை ஸ்ரீசக்கிரத்தில் பிந்து, திரிகோணம், குருமண்டலம் என்னும் மூன்று ஸ்தானங்களிலும் செய்யத்தக்க வொன்ருகும்.

பிந்துவில் அதிஷ்டிதராயுள்ள காமேஶ்வர காமேஶ்வரிகள், பிரகாசவிமர்சவடிவ பிரஹ்மமும் ஆத்மாவுமேயாவர். பிரகாசவிமர்சவடிவ சிவசக்திகளின் ஸாமரஸ்யமே ஜகத்காரண காமகலையாமென்பது மிகப்பிரஸித்தம். காமகலை, ஜகஜ்ஜீவபரர்களின் அதிஸூக்ஷ்ம ஸமஷ்டிவடிவமானது. இதனின்றும் திரிகோண சக்கிரமுண்டாயது. இது அவ்வியக்த மஹத்தத்துவ அஹங்காரஸ்வரூபமானதும், பஶ்யந்தீ மத்தியமா வைகரீஸ்வரூப சப்தாத்மகமானதுமாகும். பிரபஞ்சத்தில் எவை எவை மும்மூன்ருகக் கூறப்படுகின்றனவோ அவையாவும் இத்திரிகோணத்தினின்றும் தோன்றினவையேயாகும் புர்யஷ்டகஸ்வரூபமான அஷ்டகோணம் இந்தத் திரிகோணத்தினின்றுமுண்டாயது. இங்ஙனமே பிராணுதி பஞ்சவாயுக்களும் நாகாதி பஞ்ச உபவாயுக்களும், அவற்றின் தொழில்களும் அந்தர்த்தஶாரபஹிர்த்தஶாரங்களாயுண்டாயின. பதினன்கு நாடிகளே மந்வஶ்ரமாயின. ஐந்து கர்மேந்திரியங்களின் தொழில்களாகும் பேசுதல் முதலிய ஐந்தும், தியாக, கிராஹக, உபேக்ஷாபுத்திகள் மூன்றும் ஆக எட்டும் அஷ்டதளபத்மமாகவும், பஞ்சபூதங்கள், பஞ்சஞானேந்திரியங்கள், பஞ்சகர்மேந்திரியங்கள் ஆக பதினைந்தும் மனம் ஒன்றும்

சேர்ந்து பதினாறுதளகமலமாகவும், நியதியோடுகூடிய ஒன்பது ரஸங்களும், காமாதி சத்துருக்கள் ஆறும், புண்ணிய பாவங்கள் இரண்டும், ஆக எட்டும் மூலாதாராதி ஒன்பது ஆதாரங்களும் இவற்றின் ஸமஷ்டி ஒன்றும் ஆகப் பத்தும் இங்ஙனம் இருபத்தெட்டும் பூபுரமாகவும் தோன்றின வென்று பாவனோபநிஷத்து கூறுகின்றது. ஆகவே பிந்து முதல் பூபுரம் வரையிலுள்ள ஒன்பதுசக்கிரங்களும் ஜீவர்களின் போக்கியரூப பிரபஞ்சத்தின் சிருஷ்டியையும் போகாயதனவடிவ சரீரத்தின் சிருஷ்டியையும் குறிப்பிடுகின்றனவென்றேற்படுகின்றது.

बिन्द्वादिभूपुरान्तानि नव चक्राणि भैरवि ।
ईक्षणादिप्रवेशान्ता सृष्टिरीशेन निर्मिता ॥
चतुरश्रादिबिन्द्वन्तनवचक्राणि सुन्दरि ।
जाग्रदादिविमोक्षान्तः संसारो जीवकल्पितः ॥

(சிவத்ருஷ்டி).

என்னும் சிறந்தபிரமாணத்தின்படி, ஸ்ருதிகளில் "स ईक्षत बहुस्यां प्रजायेय" என்பது முதல் "तत्सृष्ट्वा तदेवानुप्राविशत्" என்பது வரையுள்ள வாக்கியங்களால் கூறப்படும் ஸ்ருஷ்டியானது பிந்து முதல் பூபுரம் வரையுள்ள ஒன்பது சக்கிரங்களால் குறிப்பிடப்படுகின்றது. இங்ஙனம் சிருஷ்டமான ஜகத்தைத் தனதென்றும் தானென்றும் அஞ்ஞானத்தினால் மயங்கிப் பிறப்பிறப்புக்களுக்குட்பட்டு ஜாக்கிரதாதி அவஸ்தைகளை யநுபவித்து ஜீவன் வருந்துகின்றான். இது ஜீவசிருஷ்டி. ஸுகமும் துக்கமும் ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டவையல்ல; ஜீவனே சிருஷ்டித்துக் கொண்டவை. இச்சிருஷ்டி கயிற்றில் தோன்றும் ஸர்ப்பத்தைப் போன்றது. எங்ஙனம் மயக்கத்தோற்றம் ஞானத்

தினுல் நீங்குகின்றதோ, அங்ஙனமே கற்பனையாய்த்தோன்றின அஹந்தை மமதைகளும், ஸுகதுக்கங்களும் ஞானத்தினுலேயே ஒழியவேண்டும். இதற்குத்தான் தத்துவ ஞானமென்றும், பிரஹ்மவித்தையென்றும் பெயர். இந்த ஞானம் விசாரத்தினுல் ஏற்படும். இவ்விசாரம், பூபுரம் முதல் பிந்துவரையிலுமுள்ள ஒன்பது சக்கிரங்கள்வடிவமாய் இருக்கின்றது. இவ்விஷயம் மேற்கூறிய பிரமாணங்களால் ஏற்படுகின்றது.

ஆகவே ஸ்ரீசக்கிரத்தின் ஸ்வரூபம் ஜீவ சிருஷ்டிக்கு ஆதாரமாகும் மனமே யென்பதில் என்ன தடை ?

எங்ஙனம் அவிசார வேளையில் சேதனஅசேதனத்மக பிரபஞ்சம் ஈஸ்வர சிருஷ்ட மென்று கூறுகின்றேமோ, அங்ஙனமே அவிசார வேளையில் ஸ்ரீசக்கிரமானது ஸகல பிண்டாண்ட பிரஹ்மாண்ட வடிவமாயிருக்கின்றதென்று கூறப்படுகின்றது. விசாரகாலத்திலோவெனின்,

**ब्रह्मैवाहमिदं जगच्च सकलं चिन्मात्रविस्तारितं**
**सर्वं चैतदविद्यया त्रिगुणया सेशं मया कल्पितम् ।**

என்னும் ஸ்ரீசங்கரபகவத்பாதாள் வாக்கின்படி ஸர்வப்பிரபஞ்சமும் சின்மயமே ; பேதங் காரணமாகத் தோற்றும் தான், தனது, ஸுகம், துக்கம் முதலிய யாவும் திரிகுணுத்மக அவித்தையால் ஜீவனுல் கற்பிக்கப்பட்டன. இக்கற்பனைக்கு மனந்தான் முக்கிய காரணமென்றேற்படுகின்றது.

“ஸங்கல்பமே ஜகமாம் ; ஜகமே ஸங்கல்பமாம்” என்று ஞானவாசிஷ்டமும் கூறுகின்றது. ஆதலின் இங்ஙனம் விசாரிக்குங் காலத்தில் ஸர்வஜகத்தும் மனோமயமாய் ஏற்படுவது போல, ஸ்ரீசக்கிரமும் மனோமயமாகவே இருக்

கின்றதென்று புலப்படாமற் போகாது. இவ்விமர்சம் முன் சக்கிரஸங்கேதத்திலும் செய்யப்பட்டிருக்கின்றது.

இதுகாறும் பிரஸங்காநுஸாரமாய் ஸ்ரீசக்கிரத்தின் உண்மை ஸ்வரூபம் விமர்சிக்கப்பட்டது. இனி பிரக்ருத விஷயத்தை யாராய்வாம். அங்காங்கிபாவனையால் காரிய காரணபாவம் ஸூசிப்பிக்கப்பட்டது. காரியரூப உலகம் சப்தாத்மகமாயும் நாமரூபவடிவ அர்த்தாத்மகமாயுமிருக்கின்றது. "सदेव सोम्य इदमग्र आसीत्" என்னும் பிரமாணப்படி காலம் ஸூசிப்பிக்கப்படுகின்றது. "नात्र काचन भिदास्ति" என்னும் பிரமாணத்தின்படி தேசம் ஸூசிப்பிக்கப்படுகின்றது. ஆகவே சப்தம், அர்த்தம், (நாமரூபாத்மக மூர்த்தவடிவ வஸ்துக்கள்), காலம், தேசம் முதலிய அங்கங்கள் காரணவடிவ அங்கியினின்றும் தோன்றியவையாகும். இவற்றின் பாவனையே லயாங்கபூஜையின் தத்துவமாம். தேசகாலவஸ்துக்கள் மாயிகமும், சப்தம் வித்தியா ஸம்பந்தமுமாகும்.

1. பிந்துஸ்தானத்தில் மூன்றுமுறை யஜனம் பத்ததியில் விதிக்கப்பட்டுள்ளது. இதனால் மூன்றுவிதபாவனைகள் செய்தல் அவசியமென்றேற்படுகின்றது.

முதலாவது—பிரகாசவிமர்சஸாமரஸ்யபாவனை

இரண்டாவது—காமகலாபாவனை.

மூன்றாவது—ஸ்வாபாவிக சித்சக்தியில் கற்பிதமான மாயாவிசிஷ்ட ஜகத்காரணத்துவபாவனை.

மூன்றாவதான ஜகத்காரண பாவனை பாரமார்த்திகமானதன்றெனவறிதல் அத்தியாவசியம். இந்த ஜகத்காரண பாவனையில்தான் லயாங்கபூஜை கூறப்பட்டிருக்கின்றது.

2. ஹ்ருதயம், சிரஸ்ஸு, சிகை, கவசம், நேத்திரத்திரயம், அஸ்த்ரம் என்பன ஸாகாரமூர்த்தியின் அங்கங்

களாகும். அவயவங்களையுடைய ஸர்வ வஸ்துக்களும் இந்த ஸ்வரூபத்தில் லயமாவனவாகும்.

3. நித்தியாதேவிகளின் யஜனமானது த்ரிகோணத்தில் செய்யப்படுவது.

"**पञ्चदशातिथिरूपेण कालस्य परिणामावलोकनम्**" என்று பாவனோபநிஷத்து கூறும் வண்ணம், பதினைந்து நித்யைகளும் காலத்தைக் குறிப்பிடுகின்றனர். காலமானது தேசஸாபேக்ஷிகமாகவே இருக்கின்றது, காலதேசங்கள் பரஸ்பரம் அவிநாபாவ ஸம்பந்தமுடையனவென்பது சாஸ்திர ஸித்தாந்தமாகும். இவ்விஷயம் தீக்ஷாப் பிரகரணத்தில் "**मनःपवनानां ऐक्यनिष्फालनादन्तरात्मावित्तिः (भवति)**" என்னும் ஸூத்திர வியாக்கியான விமர்சத்தில் (பக்கங்கள் 33--35) நன்கு கூறப்பட்டிருப்பது அறியத்தக்கது. ஆகவே, காலதேசவடிவ அங்கங்கள் மஹாநித்யையாகும் அங்கியில் லயமாய் இருக்கின்றனவென்னும் பாவனையை நித்தியாயஜனம் ஸூசிப்பிக்கின்றது.

**देशकालवस्त्वन्तरासङ्गान्महात्रिपुरसुन्दरी वै प्रत्यक् चितिः**

என்பதுஶ்ருதி.

4. குருமண்டலார்ச்சனம்: இது சப்தரூப அங்க பாவனையாகும். குருஸ்வரூபமானது அஞ்ஞான நிவர்த்தகமும் தத்துவஞான பிராபகமுமாகும். ஞானத்தாலன்றி மற்றெதனாலும் அஞ்ஞானம் நிவர்த்தியாகாது. இந்த ஞானம் பரோக்ஷம் அபரோக்ஷம் என இருவகைத்து. இங்கே ஞானமென்பது பிரஹ்ம அல்லது ஆத்மஞானமேயாகும். ஆத்மஸ்வரூப பிரஹ்மம் சப்தப் பிரமாணம் ஒன்றினாலேயே அறியத்தக்கது. பிரத்தியக்ஷாதி இதர பிரமாணங்கள் ஆத்மஞான ஸாதனங்களன்று. ஆதலின் பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூபபோதக மஹாவாக்கியவடிவ

சப்தஸ்வரூபமே ஸ்ரீகுருமூர்த்தியின் சிறந்த வடிவமாகும். ஆதலின் வித்தியாப் பிரபஞ்சரூபசப்தாபின்ன குருமண்டலியின் காரணத்துவமும் பரதேவதையின் ஜகத்காரணத் தன்மையில் உள்ளதென்னும் துணிபு குருமண்டலார்ச்சனையால் ஏற்படுகின்றது. ஆகவே, ஜகத்காரணத்துவ பாவனையில் மூர்த்தப் பிரபஞ்சகாரணத்துவம் (ஷடங்க யஜனம்), கால தேசங்களின் காரணத்துவம் (நித்தியாயஜனம்), சப்தப் பிரபஞ்ச காரணத்துவம் (குருமண்டலார்ச்சனம்) என்பவை அங்கங்களாம்.

ஸௌபாக்கிய சிந்தாமணி யென்னும் துர்வாஸகல்ப ரீதியாய் வசின்யாதி எட்டுவாக்தேவதைகளின் அர்ச்சனமும் (அஷ்டகோணதேவதைகள்) லயாங்க பூஜையில் சேர்க்கப்பட்டுள்ளது அறியதக்கது. வசின்யாதிகள் சப்தவடிவ ஸகலசாஸ்திரஸ்வரூபிணிகள்; ஆதலின் லயாங்க பூஜையில் சேர்த்திருப்பது கவனிக்கத் தக்கதேயாகும்.

ஷடங்கார்ச்சனம் பிந்துவில் மாத்திரமும், காலதேச வடிவ நித்தியாதேவிகளின்யஜனம் திரிகோண பிந்துக்களிலும், சப்தாத்மக ஸகலசாஸ்திராபின்ன குருமண்டலார்ச்சனம் பிந்து, திரிகோணம், (மத்தியத் திரிகோணத்திற்குக் கிழக்கேயுள்ள திரிரேகாத்மக) குருமண்டலம் என்னும் மூன்றிடங்களிலும் செய்தல் அவசியம். பிந்து, திரிகோணம் இவைகளில் பரகுருஸ்வரூபமும், மூன்றுரேகைகள் வடிவ குருமண்டலத்தில் திவ்விய, ஸித்த, மானவ குருஸ்வரூபங்களும் பாவிக்கத்தக்கன. இவற்றின் விஸ்தார விமர்சம் குருதத்துவவிமர்சம், (பக்கம் 25) ஆதிநாதநிரூபணத்திலும், 18-வது பக்கம் முதல் 22-வது பக்கம் வரையிலும் செய்யப்பட்டுள்ளது. அங்கே கண்டுதெளியவும்.

ஸாதகனானவன், தனதுகுரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு ஸ்வரூபங்களைக் குருமண்டலத்தில் பத்ததி கூறும்வண்ணம் பாவித்தல் அவசியம்.

ஐந்தாவதுகண்டம் முற்றிற்று.

## ஐந்தாவது கண்டத்தின் ஸாராம்சங்கள்.

| | விஷயம் | தத்துவம் |
|---|---|---|
| 1. | அந்தர்யாகம்— | அஹங்கிரஹோபாஸனலிங்கம். |
| 2. | தியானம் — | ஜீவபாவநிரஸனம், சிவஸாமரஸ்யம். |
| 3. | ஆவாஹனம் — | அதிஷ்டான சித்சக்தியின் ஞானம். |
| 4. | உபசாரங்கள்-- | ஆத்மகோசரவ்ருத்தியோடிருத்தல். |
| 5. | ஆயதனபூஜை— | அபேத தர்ஶனஸாதனம். |
| 6. | லயாங்கபூஜை— | கார்யகாரண அபேதபாவனை. |
| i. | ஷடங்கார்ச்சனம் — | ஸகுணஸாகார உபஸம்ஹார பாவனை. |
| ii. | நித்யாதேவிகளின் யஜனம் | காலதேஶாத்தியாஸங்களின் நிரஸன பாவனை. |
| iii. | குருமண்டலார்ச்சனம் | ஆத்மஸ்வரூபபோதக மஹாவாக்கிய வடிவ சப்தப் பிரமாண விமர்சம். |

# ஸபர்யாபத்ததிவாஸனு விமர்சம்.

## ஆருவது கண்டம்

## நவாவரணபூஜை.

——:o:——

அவதாரிகை :—ஸ்ரீசக்கிரமானது சிருஷ்டிக்கிரமத்தில் பிந்துமுதல் பூபுரமீருக ஒன்பது சக்கிரங்களையுடையதென்றும், அதன் தத்துவம் பரமேஸ்வரனல் சிருஷ்டிக்கப்பட்ட பிரஹ்மாண்ட பிண்டாண்ட ஸ்வரூபமானதென்றும் முன் கூறப்பட்டிருக்கின்றது. ஆனல் பூஜாக்கிரமமோ பூபுரம் முதல் பிந்துசக்கிரமீருக ஒன்பது ஆவரணங்களாகக் கணக்கிடப்பட்டு அதன்படியே ஆராதனையும் நடந்துவருகின்றது. இது ஸம்ஹாரக்கிரமத்தில் செய்யப்படும் பூஜையாகும். இந்தக்கிரமப்படி பூஜிக்கும்போது ஸ்ரீசக்கிரத்தின் தத்துவம் சுத்தஸத்துவப் பிரதான மனமென்றும், ஒவ்வொரு சக்கிரமும் அம்மனத்தின் அவஸ்தை அல்லது நிலை, அல்லது ஸ்திதியென்றும், ஒவ்வொரு சக்கிரத்தின் ஆவரண தேவதைகளும் அந்த அந்த அவஸ்தை அல்லது நிலை அல்லது ஸ்திதியிலுள்ள அம்மனத்தின் விருத்திகளேயாமென்றும் முன் ஸ்தூலமாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

அவற்றின் விளக்கமான விமர்சம் இங்கே செய்யப்படுகின்றது.

முன், முதல்கண்டத்தில் ஸமஷ்டிமந்த்ரத்தினால் யோகினிகளுக்குப் புஷ்பாஞ்சலி செய்யுமிடத்தில் (பக்கங்கள் 54--55) யோகினிகளின் தத்துவம் கூறப்பட்டுள்ளது. அவ்வொன்பதுயோகினிகளும் பற்பல அவஸ்தை அல்லது நிலை அல்லது ஸ்திதியிலுள்ள மனத்தை யுபாதியாய்க் கொண்ட சித்சக்தியேயாகுமென்று கூறப்பட்டிருப்பதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவஸ்யம்.

**चतुरश्रादिबिन्द्वन्ता नव चक्राणि सुन्दरि ।**
**जाग्रदादिविमोक्षान्तः संसारो जीवकल्पितः ॥**

என்னும் பிரமாணத்தின்படி சதுரஸ்ரம் முதல் பிந்து சக்கிரம் வரையிலுள்ள ஒன்பது சக்கிரங்களும் ஜீவனால் கற்பிக்கப்பட்ட ஜாக்கிரம் முதல் மோக்ஷபரியந்தமான அசுத்த அல்லது சுத்த ஸம்ஸாரவடிவினதாமென்றேற்படுகின்றது. அசுத்த ஸம்ஸாரம் அசுத்தமனத்தினால் கற்பிக்கப்பட்ட பந்தவடிவினதாகும்; சுத்த ஸம்ஸாரமோவெனின், சுத்த ஸத்துவகுண மனத்தினால் பந்த நிவ்ருத்தியின் பொருட்டுச் செய்யப்படும் ஞானப்பியாஸவடிவினதாகுமென்றறிதல் அவசியம். இது சுத்த த்ரிபுடியோடுகூடியது.

பூபுரம்முதல் பிந்துபரியந்தமாயுள்ள ஒன்பது சக்கிரங்களின் தத்துவம் விரிவாய்க் கூறப்படுகின்றது.

**भूपुरादित्रिभिश्चक्रैर्विश्वतैजसप्राज्ञयोः ।**
**धामत्रयं विभाव्यं तदूर्ध्वे तत्पदमैश्वरम् ॥**
**ततो बहिर्दशारे तु गुरूपसदनं स्मृतम् ।**
**अन्तर्दशारचक्रे तु श्रवणं च विभावयेत् ॥**

**वसुकोणे तु मननं निदिध्यासं त्रिकोणके ।**
**बिन्दौ तु शिवजीवैक्यं भावनीयं बुधैः सदा ॥**

சிவதிருஷ்டி.

இதன் பொருள் :—விவேகிகள் பூபுரம்முதல் மூன்று சக்கிரங்களில் அதாவது பூபுரம், ஷோடசதள கமலம், அஷ்டதள கமலமேன்னும் மூன்று சக்கிரங்களில் விஶ்வன், தைஜஸன் பிராக்ஞன் என்னும் ஜீவவிசேஷர்களின் அபிமானத்துக்குரிய ஜாக்கிரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி யென்னும் மூன்று அவஸ்தைகளைப் பாவித்தல் வேண்டுமென்றும், அதற்குமேலுள்ள மன்வஶ்ரத்தில் ஜகத்காரணனும் தத்பதவாச்சியனுமான பரமேஶ்வரனைப் பாவித்தல் வேண்டுமென்றும், அதற்குமேல் பஹிர்த்தஶார சக்கிரத்தில் ஸத்குருவையடைதலையும், அந்தர்த்தஶார சக்கிரத்தில் அக்குருவின்பால் சிரவணம் செய்தலையும் பாவித்தல் வேண்டுமென்றும், பின், அஷ்டகோணத்தில் மனனத்தையும், திரிகோணத்தில் நிதித்தியாஸனத்தையும், பிந்துவில் ஜீவப்பிரஹ்மைக்கிய ஸவிகல்ப ஸமாதியையும் பாவித்தல் வேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

மேற்கூறியவற்றில் பூபுரம் முதல் மூன்றுசக்கிரங்களும் ஜாக்கிரம், ஸ்வப்நம், ஸுஷுப்தியென்னும் மூன்று அவஸ்தைகள் வடிவாய் இருப்பதால் இவை சுத்தமனத்தையுடைய முமுக்ஷுக்களுக்கேயன்றி அசுத்தமனத்தையுடைய பாமரர்களுக்கும் அநுபவமாயிருக்கின்றன. ஏனெனின், பிரஹ்மாண்ட பிண்டாண்டவடிவினதாயும் அந்தக்கரணஸ்வரூபமாயுமுள்ள ஸ்ரீசக்கிரமானது அநாதி ஜீவர்களின் கர்மபலங்களின் அநுபவத்தின் பொருட்டே ஏற்பட்டதாகும். ஜீவர்களின் முன்வினைப்பயன் ஜாக்கிர, ஸ்வப்ந, ஸுஷுப்தி அவஸ்தைகளில் அநுபவிக்கப்படுகின்

றது. ஆதலின் எல்லா ஜீவர்களுக்கும் ஜாக்கிரதாதி அவஸ்தைகள் அநுபவமே. இவை அஞ்ஞானவஸ்தைகளாகும். இவ்வவஸ்தைகளில் அகப்பட்டுக்கொண்டு, ஒவ்வொரு ஜீவனும் கர்மபலனை யநுபவித்து ஒவ்வொருநாளும், ஸுஷுப்தியென்னும் பிரஹ்மாநந்தத்தைத் தனக்குத் தெரியாமலே யநுபவித்துவருகின்றான். மறுபடியும், அவனது எஞ்சியுள்ள கர்மம் காரணமாக அச்சுஷுப்தியினின்றும் விழித்தெழுந்து அவஸ்தாந்தரத்தை யடைகின்றான். இங்ஙனம் ஜீவன் ஜாக்கிரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி ஆகிய விம்மூன்றவஸ்தைகளையும் முறையாகவோ அல்லது முறை தவறியோ அநுபவித்துக்கொண்டு இறந்தும், பிறந்தும் இங்ஙனமே சுழன்று சுழன்று அல்லல்படுகிறான். இது சாஸ்திரசித்தாந்தமும் நம்மனோர் யாவர்க்கும் அநுபவமுமாகும்.

இங்ஙனமிருக்க எந்த வொரு ஜீவன் தனது பூர்வ புண்ணிய பரிபாகவசத்தால் ஜாக்கிரதாதி அவஸ்தாத்திரயங்களினின்றும் விடுபடவேண்டுமென்னும் எண்ணமுண்டாய்ப் "போக்தாவாகுந் தன்னையும், போக்கியரூப வுலகத்தையும் சிருஷ்டித்த பரமேஸ்வரன் ஒருவன் இருத்தல் வேண்டும்; அவனுக்கும் தனக்குமுள்ள ஸம்பந்தம் யாது? அவன் எங்கேயிருக்கின்றான்? இந்த உலகிற்கும் பரமேஶ்வரனுக்கும் உள்ள ஸம்பந்தமெத்தகையது?" என்று பலவிதமாக விசாரிக்கத்தொடங்குகின்றானோ அவனது மனோவிருத்திரூபமாய் நான்காவது சக்கிரமாகும் மன்வஸ்ரம் இருக்கின்றது. இந்த "பதினான்கு முக்கோண" சக்கிரமானது, முமுக்ஷுவினது சுபேச்சை, விசாரணையென்னும் ஞானபூமிகாவிருத்திகளோடுகூடிய மனமாகும்.

अशुभक्षयकर्तारं फलमुक्तिप्रदायकम् ।
यदि योन्याः प्रमुच्येऽहं तत्प्रपद्ये महेश्वरम् ॥

என்னும் கர்ப்போபநிஷத்தின்படி ஜீவர்களின் அக்ஞானத்தை நிவர்த்திசெய்து ஜனனமரணஸம்ஸாரத்தினின்றும் விடுவிப்பவன் பரமேஸ்வரனேயாவன். ஆதலின் பரமேஸ்வரனே மோசகனெனப்படுவன்.

இங்ஙனம் மோசகனுகும் பரமேஸ்வரஸ்வரூபத்தை விசாரிக்கினும், அவனது உண்மையான ஸ்வரூபம் சற்குருவாலன்றி அறியமுடியாது. ஆதலின் குருவே மோசகப்பிரதனெனப்படுவன். ஆதலின் பரமேஸ்வரஸ்வரூபஞானத்தின்பொருட்டும், அப்பரமேஸ்வரனுக்கும் தனக்குமுள்ள ஸம்பந்தத்தை நன்கு அறியும்பொருட்டும் முமுக்ஷுவானவன் சற்குருவையடைதல்வேண்டும். இங்ஙனம் குருவை நாடிச்செல்லும் ஸத்சிஷ்யனது மனோவிருத்தி ஸ்வரூபமாயுள்ளது ஐந்தாவது ஆவரணமாகும் பஹிர்த்தஸார சக்கிரமாம். இந்நிலையோடுள்ள மனத்தில், சற்குருலக்ஷணம், ஸத்குருவை நாடுவதிலுள்ள ஆவஸ்யகதை, குருசுஸ்ரூஷையின் பயன் முதலிய பற்பலவிஷயாகாரமான விருத்திகள் இருக்கின்றன.

ஆருவது ஆவரணசக்கிரம் அந்தர்த்தஸாரமாகும். இதில், சிஷ்யன் குருவையடைந்து அவருடைய அநுக்கிரஹத்திற்குப் பாத்திரனுய் அவரிடத்தினின்றும், ஜீவப்பிரஹ்மைக்கிய போதக மஹாவாக்யோபதேசத்தின் அடைவு பாவிக்கப்படுகின்றது. இதற்குத்தான் வேதாந்த சிரவணமென்றுபெயர். இங்ஙனம் ஈஸ்வரபக்தி-குருபக்தி-வேதாந்தமஹாவாக்கிய சிரவணம் இவைகளில் ஈடு

பட்ட மனோ நிலைகளே நான்காவது, ஐந்தாவது, ஆறுவது ஆவரணங்களாமென ஏற்பட்டன.

இதற்குமேல் ஏழு, எட்டு, ஒன்பது என்னும் மூன்றுவரணங்களும், மனனம், நிதித்தியாஸனம், ஸவிகல்ப ஸமாதி இவைகளிலீடுபட்ட சுத்த ஸத்துவப்பிரதான மனத்தின் ஸ்திதிகளேயாகும். இவற்றின் விஸ்தாரமான நிரூபணம், அந்த அந்த ஆவரண பூஜாவாஸனையில் செய்யப்படும்.

## முதலாவது ஆவரணம்.

இது பூபுரம்; மூன்று சதுரங்கள் வடிவினது; த்ரைலோக்கிய மோஹனமென்னும் பெயரையுடையது. இந்த சக்கிரத்திலுள்ள யோகினிகளுக்குப் பிரகடயோகினிகளென்றுபெயர். இவ்வாவரணசக்ரேஸ்வரி திரிபுரையாகும். இதில் அணிமாஸித்தியும், ஸர்வஸங்க்ஷோபிணீமுத்திரையும் வியாபகமாயிருக்கின்றன.

"லம்" என்னும் பிரிதிவீபீஜம் இந்த சக்கிரத்தின ப்ரக்ருதியாயிருப்பதால் பிரிதிவியோடு உபலக்ஷணமாய்ப் பஞ்சபூதங்களையும் கொள்ளல் வேண்டும். சப்தஸ்பர்ஸாதி விஷயங்களும் சக்ஷுஃ ஸ்ரோத்ராதி இந்திரியங்களும் வாக்பாணி பாயுவாதி கர்மேந்திரியங்களும், மனம் புத்தி சித்தா ஹங்காரவடிவ அந்தக்கரணமும் கூடிய இந்த ஜாக்கிராவஸ்தையில் எல்லாம் ஸ்தூலமாய் உணரப்படுங் காரணத்தால் இச்சக்கிரத்திலுள்ள விஷயவிருத்திகளையுபாதியாய்க்கொண்ட சித்சக்திக்குப் பிரகடயோகினியென்றுபெயர். இவ்வவஸ்தையில் பிரமேயமென்னும் விஷயங்களே பிரதானமானவை. துவம்பதவாச்சியனுை

விஶ்வனென்னும் ஜீவனே இதன் அபிமானி; ஸ்தூல புக் (போக்தா). அன்னமயகோசம். ஸ்தூலசரீரம்.

முதல் சதுரஶ்ரத்திலுள்ள ஆவரணதேவதைகள் அணிமா, லகிமா முதலிய பத்து ஸித்திகள். இவை களின் தத்துவமாவது:—சப்த ஸ்பர்சாதிவிஷயங்கள் 5. இவை ஶ்ரோத்திராதி இந்திரியங்களால் அறியப்படுபவை யாகும். பாயு உபஸ்தம் என்னும் கர்மேந்திரியங்களா லியற்றப்படும் புரீஷமூத்திர விஸர்ஜனங்கள் இரண்டோடு மானஸிக விஷயங்களாகும் அநுகூல, பிரதிகூல உபே க்ஷைகள் மூன்றும் ஆக ஐந்து. இவையும் சப்தாதி ஐந் தும் ஆகப் பத்துவிஷயங்களும் அணிமாதி ஸித்திகளின் வாஸனைகளாம்.

ஞானம், ஆநந்தம் இவைகளின் அடைவிற்குச் சாதன மான விஷயங்களைச் சித்திகள் என்று கூறுவது உபசார வழக்காகும். ஆயுளை விருத்திசெய்யும் ஆஜ்யத்திற்கு ஆயுஸ் என்னும் பெயர் வழங்குவதுபோல.

இரண்டாவது சதுரஶ்ரத்திலுள்ள ஆவரணதேவதை கள் பிராஹ்மி, மாஹேஶ்வரி முதலிய அஷ்டமாத்ருகை கள். இவர்கள் எண்மரும் அஷ்டதாதுக்களின் ஸ்வரூப முடையவர்களாவர். அஷ்டதாதுக்களாவன:—சர்மம், இரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி (எலும்பு), மஜ்ஜை, சுக்கிலம், ஓஜஸ் என்பனவாம். இவை ஸ்தூலசரீரத்தை யும் ஸூக்ஷ்மசரீரத்தையும் ஆஶ்ரயித்துள்ளவையாகும். போசாயதனசரீரம். போகங்களின் இருப்பிடத்திற்குப் போகாயதனமென்றுபெயர்.

மூன்றாவது சதுரஶ்ரத்திலுள்ள ஆவரணதேவதை கள் ஸர்வஸங்க்ஷோபிண்யாதி பத்து முத்ராதேவதைகள்; ஆநந்தமே ஸ்வரூபமாயுடையவர்கள். முதல் சதுரஶ்ரத்

தில் கூறப்பட்ட பத்துவிஷயங்களை யநுபவிக்கும்போது ண்டாகும் விஷயாநந்தஸ்வரூபமே முத்ராதேவதைகளின் தத்துவமாகும்.

பிரமாதா, பிரமாணம், பிரமேயம் என்னும் ஸ்தூல திரிபுடியோடு விளங்குவதால், இந்த சக்கிரத்தை யுபாதி யாய்க்கொண்டு விளங்கும் சித்சக்திக்குத் திரிபுராசக்கிரே ஶ்வரியென்னும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே முதலாவது ஆவரணமானது ஜீவனது ஜாக்கிராவஸ்தை யையும், ஸ்தூலசரீரத்தையும், ஞானேந்திரியங்கள் மனம் முதலியவற்றாலுணரப்படும் விஷயங்களையும், அவற்றா லடையும் ஸுகாநுபவத்தையும் குறிப்பிடுகின்றதென்பது திரண்டபொருளாம்.

பிந்துவில் சித்சக்தியின் பாவனை. முதலாவது ஆவர ணமாகும் ஜாக்கிராவஸ்தையில் எந்த எந்த விஷயங்கள் துவைதவிர்த்தியால் அறியப்படுகின்றனவோ அவ்விஷயங் களுக்கும், பிரமாணரூபவிர்த்திக்கும், அறியும் பிரமாதா வுக்கும் அதிஷ்டானமாய் உள்ளது சித்சக்தியேயாம் என் னும் திடபாவனையே பிந்துவில் பரதேவதையின் தர்ப்பண த்தின் தத்துவமாகும். திரிபுடியை ஒழித்தால்தான் சிரே யஸ்காமியின் அபீஷ்ட ஸித்தியாகும் மோக்ஷம் ஸித்திக் கும். பரதேவதையின் கிரணங்களே ஜாக்கிராவஸ்தையில் பின்ன பின்னமாயும் ஸ்தூலமாயும் தோன்றும் விஷயா வச்சின்ன சித்சக்திவடிவ பிரகடயோகினிகள் என்று அறி தல் அவசியம்.

## இரண்டாவதாவரணம்.

ஷோடஶதளம்; பதினாறிதழ்களையுடைய கமலவடிவி னது; ஸர்வாஶாபரிபூரகமென்னும் பெயரையுடையது.

இந்த சக்ரத்திலுள்ள யோகினிகளுக்குக் குப்தயோகினி களென்றுபெயர். இவ்வாவரணத்தின் சக்ரேஶ்வரி த்ரிபுரேசீயாகும். இதில் லகிமாஸித்தியும் ஸர்வவித்ராவிணீ முத்திரையும் வியாபகமாயிருக்கின்றன. "सं" என்னும் சந்த்ரபீஜம் இந்த சக்ரத்தின் ப்ரக்ருதியாயிருப்பதால் சந்திரனை யதிதேவதையாகவுடைய் மனமும் அம்மனத்தின் விகாரங்களாயுள்ள ஸூக்ஷ்மத்திரிபுடியுமே இந்த சக்ரத்தின் உபாதியாகும். இதில் உபஹிதமான சித்சக்திக்குக் குப்தயோகினியென்றுபெயர். ஸ்வப்னவஸ்தை. இவ்வவஸ்தையில் பிரமாணமென்னும் மனமே பிரதானமாயிருப்பதால் பிரமாணப் பிரதானமானது. துவம்பதவாச்சியனுகும் தைஜஸனெனப்படும் ஜீவனே இவ்வவஸ்தையின் அபிமானியாவன். பிரவிவிக்தபுக். பிராணமயம், மனோமயம், விக்ஞானமயமென்னும் மூன்று கோசவடிவினதாயுள்ள ஸூக்ஷ்மசரீரவடிவமானது. ஆந்தர (விஷய) ங்களாதலின் குப்தயோகினிகளென்னும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது.

காமாகர்ஷிணி முதலிய பதினாறு சக்திகள் இவ்வாவரண தேவதைகளாவர்; இவர்கள் மனத்தின் சலனத்தினாலும் பிராணஸ்பந்தத்தினாலும் ஏற்பட்டு வ்ருத்திவடிவாயுள்ளவர்களாவர். ஜாக்கிராவஸ்தையில் அநுபவித்தவைபோக மீதியாயுள்ள பிராரப்தத்தையுடைய ஜீவர்களுக்கு, அவர்களின் கர்மகாமனையின் பரிபூர்த்திவடிவாய் இருப்பது இந்த சக்ரமாதலின் இதற்கு ஸர்வாசாபரிபூரக சக்ரமென்னும் பெயர் ஏற்பட்டுள்ளது.

**षोडशस्पन्दसंदोहचमत्कृतिमय्यः कामाकर्षिण्यादिकलाशक्तयः——प्राणादिपञ्चकं, इन्द्रियदशकं मनश्चैकं आहत्य षोडश ।**

अथवा केवलं मनः प्राणस्पन्दनेन षोडशप्रकारेण चलयन् वृत्तिरूपेण परिणमति । ता वृत्तय एव स्वप्ने परिदृश्यमानप्रपञ्च इत्यर्थः ॥ (யோ-ஹ்ரு. 8 விஶ்ராமம். வியாக்கியா.)

ஸ்வப்னாவஸ்தை கண்டத்தில் உண்டாவதாகும். இது சந்திரஸ்தானம். விசுத்தியிலுள்ள ஷோடசதள கமலமே இந்த சக்ரமாம். ஸ்வப்னத்தில் தோன்றுவது வாஸனா வுலகமாகும். கேவலம் மனத்தினால் கற்பிக்கப்பட்ட ஸூக்ஷ்மத்ரிபுடிவடிவ ஸ்வப்னப்பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானமாயுள்ளது சித்சக்தியேயாமென்னும் பாவனையின் அப்பியாஸமே பிந்து சக்ரத்தில் பரதேவதையை யர்ச்சித்தலாகும்.

மூன்றாவதாவரணம்.

அஷ்டதளபத்மம். எட்டுதளங்களையுடைய கமலவடிவினது. ஸர்வஸங்க்ஷோபணமென்னும் பெயரையுடையது. இந்த சக்ரத்திலுள்ள யோகினிகளுக்குக் குப்ததர யோகினிகளென்றுபெயர். இவ்வாவரணசக்ரேஶ்வரிக்குத் த்ரிபுரஸுந்தரியென்றுபெயர். இதில் மஹிமாஸித்தியும், ஸர்வாகர்ஷிணீ முத்திரையும் வியாபகமாயிருக்கின்றன.

"ஹ்ம்" என்னும் சிவபீஜம் இந்த சக்ரத்தின் பிரக்ருதியாயிருப்பதால் ருத்திரனது கிருத்தியமாகும் ஸர்வஸம்ஹாரரூப மஹாப்பிரளயம் ஸூசிப்பிக்கப்படுகின்றது. ஜீவர்கள் தினந்தோறும் அனுபவிக்கும் அவஸ்தைகளில் பிரளயவடிவமாயுள்ளது ஸுஷுப்தியேயாகும். இவ்வவஸ்தையைத் தினப்பிரளயமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதை யுபாதியாய்க்கொண்ட சித்சக்திக்குக் குப்ததரயோகினியென்றுபெயர். ஸுஷுப்தியவஸ்தையானது, பிரமேயமாகும் விஷயங்களும் பிரமாணமாகும்

உணர்ச்சியுமற்று விளங்குவதால் பிரமாத்ருப்பிரதானமா யுள்ளது. துவம்பதவாச்சியனுகும் பிராக்ஞனென்னும் ஜீவ விசேஷனே இவ்வவஸ்தையின் அபிமானியாவன். இவன் ஆநந்தபுக். ஸ்வகீய ஆநந்தத்தையே அனுபவிப்பவனு வன்; ஆதலின் ஆநந்தமயகோசமென்னும் காரண சரீரத் தோடுகூடியவனுவன்.

அநங்ககுஸுமா, அநங்கமேகலா முதலிய எட்டு சக்திகள் இவ்வாவரணத்தின் தேவதைகளாவர். இவ் வெட்டு சக்திகளும் லயரூபமாயுள்ள ஸூக்ஷ்மபுர்யஷ்டக ஸ்வரூபிணிகளாவர். ஸூக்ஷ்மபுர்யஷ்டகமாவது பிரக் ருதி, மஹத்தத்வம், அஹங்காரம், பஞ்சதன்மாத்திரை கள், பஞ்சபூதங்கள், தசேந்திரியங்கள், அந்தக்கரணம், புருஷன் என்பனவாம். இவை எட்டும் இவற்றிற்குக் காரணமானஅக்ஞானத்தில் லயமாய் இருக்கின்றன. ஆத லின் அநங்கத்துவமும், குப்ததரத்துவமும் ஏற்பட்டுள் ளன. அநங்கத்வம் = சரீரமின்மை; குப்ததரம்= அதி ரஹஸ்யம்.

இந்த ஆவரணத்தின் சக்ரேஸ்வரி த்ரிபுரஸுந்தரி யெனப்படுவள். த்ரிபுரஸுந்தரியென்ருல், ஜாக்கிரம், ஸ்வப்னம், ஸுஷுப்தியென்னும் மூன்று அவஸ்தைகளி லும் ஸ்வப்பிரகாசமாய் விளங்கி, அந்த அந்த அவஸ்தை களிலுள்ள விஷயங்களையும் விளங்கும்படிசெய்யும் சை தன்யவடிவ விமர்சமென்பதாகும். அன்றியும், ஜாக்கிரம், ஸ்வப்னமென்னும் இரண்டு அவஸ்தைகளிலும் பாஹ்யப் பிரவிருத்தியினுல் ஜீவனுக்கு ஏற்படும் சிரமத்தை மூன்ரு வதான ஸுஷுப்தி அவஸ்தையில் நீக்கி ஜீவனுக்கு ஸஹஜமாயேற்பட்ட ஸ்வகீயாநந்தத்தைத்தருபவள் எனி னுமாம்.

भोग्यभोक्तृरूपप्रवृत्त्या संजनितश्रमानिवृत्तिपूर्वकसहजानन्दावाप्तिः सैव सौन्दर्याख्यो गुणः । तेन संयुता त्रिपुरसुन्दरी चक्रेश्वरी ॥ யோ. ஹ்ரு 8--143. அம்ருதாநந்த வியாக்கியா.

ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயுமுள்ள பாஹ்ய ஆந்தரப் பிரபஞ்சங்கள் நன்கு ஆகர்ஷிக்கப்பட்டுக் காரணத்தில் லயமாயிருக்கும்போது ஸஹஜமாயுள்ள ஆநந்தம் அக்ஞானஸஹிதமாய் அனுபவிக்கப் படுகின்றது. "நான் ஒன்றுமறியாமல் ஸுகமாய்த் தூங்கினேன்" என்னும் அனுபவம் ஒவ்வொருவருக்கும் ஸுஷுப்தியில் ஏற்படுவதாகும். இவ்வனுபவ வடிவந்தான் ஸர்வாகர்ஷிணீ முத்திரையாகும். பிரக்ஞானகனமே ஜீவனது மஹிமையாம். இதை யுணர்த்துவதே மஹிமாஸித்தியாம்.

காரணசரீரமாகும் அக்ஞானத்தின் அதிஷ்டானமே சித்சக்தியபின்ன பரதேவதையென்று அநுஸந்தானம் செய்வதே பிந்துவில் மூலமந்த்ரத்தினுல் தர்ப்பணம் செய்வதன் அபிப்பிராயமாகும்.

குறிப்பு :—உபாதியாகும் நாமரூப விஷயஞானம் பிரதீதியாகுந்தோறும், கற்பித உபாதி நோக்கத்தை யொழித்து, அதிஷ்டான ஸச்சிதாநந்த சித்சக்தியை யனுஸந்தானம் செய்வதே அப்பியாஸம் அல்லது ஆவ்ருத்தியெனப் படும். ஆவ்ருத்தியே ஆவரணமென்பதன் பொருளாகும். ஆவரணத்திற்கு ஆவ்ருதியென்பது நாமாந்தரம். ஆவ்ருதி = மறைப்பு. ஆவ்ருத்தி = அப்பியாஸம். ஒருவிஷயத்தை யடிக்கடி யப்பியாஸஞ் செய்வதற்கு ஆவ்ருதியாகும் மறைப்பே நிமித்தமாகும். மறைப்பு நீங்குமட்டும் அப்பியாஸம் செய்வது அவஶ்யமல்லவா? ஆதலினுற்றுன்

ஆவரணமென்பதற்கு ஆவ்ருத்தியென்று லக்ஷணையாய்ப் பொருள் செய்யப்பட்டது.

"आवृत्तिरसकृदुपदेशात्" । ब्रह्मविषयकश्रवणमनननिदिध्यासनानां असकृत् अनेकवारमावृत्तिः अभ्यासः कर्तव्या । कुतः ? उपदेशात् । 'आ सुप्तेरा मृतेः कालं नयेद्वेदान्तचिन्तया' ।

'तच्चिन्तनं तत्कथनमन्योन्यं तत्प्रबोधनम्' ।

'तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः' ।

'दिने दिनेऽपि वेदान्तश्रवणाद्भक्तिसंयुतात्' ।

'गुरुशुश्रूषया लब्धात् कृच्छ्राशीतिफलं लभेत्' ॥

इत्यादिस्मृतिषु निरन्तरब्रह्मविचारस्य कर्तव्यत्वोपदेशादित्यर्थः ॥ (பிரஹ்மஸூத்ரம் IV. i. 1 விருத்தி.)

என்னும் பிரமாணத்தால் அடிக்கடி பிரஹ்மவிசாரம் செய்யத்தக்கது. ஆவரணபூஜையென்பது அடிக்கடி செய்யும் பிரஹ்மவிசாரவடிவமாய் இருப்பது அறியத்தக்கது.

## நான்காவது ஆவரணம்.

சதுர்த்தசகோணம். பதினன்கு முக்கோணவடிவினது. ஸர்வஸௌபாக்கியதாயகமென்னும் பெயரையுடையது. இந்த சக்ரத்திலுள்ள யோகினிகளுக்கு ஸம்ப்ரதாய யோகினிகளென்றுபெயர். இவ்வாவரணத்தின் சக்ரேஸ்வரி த்ரிபுரவாஸினியாகும். இந்த ஆவரணத்தில் ஈஸித்துவ ஸித்தியும் ஸர்வவசங்கரீ முத்திரையும் வியாபகமாயிருக்கின்றன.

இத்துரீயாவரணமானது மஹாமாயா பீஜமாகும் "ஹ்ரீம்" என்னும் காமகலையைப் பிரக்ருதியாயுடையதா

தலின், ஸர்வஜகத்காரணமாகும் மாயாவிசிஷ்ட பரமேஶ்வரஸ்வரூபத்தைக் குறிப்பிடுவதாகும். ஈஶ்வரவிசாரத்தோடுகூடிய மனமும் மனோவிருத்திகளுமே துரீயாவரணமும் துரீயாவரணதேவதைகளுமாகும். இதற்கு,

**मोचकस्वरूपतत्पदवाच्यार्थेश्वरभावना तुरीयावरणे सूचिता । ईश्वरस्वरूपं तु चतुर्दशकोणात्मकचतुर्दशभुवनेषु अनुप्रवेशलक्षणया बोद्धव्यम् ॥** என்பது பிரமாணமாம்.

ஸர்வஸௌபாக்கியதாயகம்.

**भेदाविषयकज्ञानमेव सौभाग्यम् । तद्दायकः परमेश्वरः । पुरत्रययोगात्संजनितक्लेशभेदकः इत्यर्थः ॥**

த்ரிபுடியாகும் பேதத் தோற்றத்தை யொழித்து அபேததர்சன ஸ்வரூபஞானத்தையருளும் பரமேஶ்வரஸ்வரூபமாயிருப்பதே ஸர்வஸௌபாக்கியதாயக சக்ரமாகும்.

**शिवाद्वैतभावना सैव सौभाग्यं । परमसुभग-परमप्रेमास्पद-परशिवाभेदगोचरत्वात् तदेव सर्वसौभाग्यदायकमित्यर्थः ॥**

யோ-ஹ்ரு. 8வி-143. அம்ருதாநந்த வியாக்கியா.

ஸம்ப்ரதாயயோகினி.

**सम्यक् प्रकर्षेण मुमुक्षून् प्रति स्वयमेव गुरुरूपेण वा अभेददर्शनरूपज्ञानप्रदातृत्वात् संप्रदाय इत्यर्थः ॥**

முமுக்ஷுக்களுக்குப் பரமேஶ்வரன் தானாகவோ அல்லது குருவடிவமாகவோ தோன்றி அபேததர்சனவடிவ தத்துவஞானத்தை யருளுவதால் ஸம்ப்ரதாயமென்னும் பெயர் ஏற்பட்டுள்ளது. ஸம்ப்ரதாய பரம்பரைக்கு ஆதியாயும், ஜகத்குருவாயும் விளங்குபவர் பரமேஶ்வரனேயாகும்.

ஆதிநாதராயும், ஜகத்காரணராயும், மோசகராயுமுள்ள பரமேஶ்வரர் பிரஹ்மாண்டரூப சதுர்த்தச புவனங்களிலும் வியாபித்திருக்கின்றனரென்பது சாஸ்திரஸித்தாந்தமாம். இந்நான்காவது ஆவரணமானது சதுர்த்தசபுவனத்மகமாக விளங்குகின்றது. ஆகவே பதினான்கு கோணங்களிலும், பதினான்கு பிரகாரமான பரமேஶ்வரஸ்வரூபவிசாரம் செய்யத்தக்கதாகும்.

ஜகத்காரண பரமாத்மவடிவ ஈஶ்வரவிசாரம் ஶ்ருதிஸ்ம்ருதிகளிலும் உத்தரமீமாம்ஸை முதலிய ஸூத்திரங்களிலும் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது.

பிரஹ்மஸூத்திரத்தில் முதலத்தியாயத்தில் பரமாத்மவிமர்சம் கீழ்க்குறித்த அதிகரணங்களில் செய்யப்பட்டுள்ளது.

| | அதிகரணம் | விஷயம் |
|---|---|---|
| 1. | ஆகாஶாதிகரணம் | ஆகாசபாவம். |
| 2. | பிராணாதிகரணம் | வாயுபாவம். |
| 3. | ஜ்யோதிர்தர்சனாதிகரணம்<br>ஜ்யோதிரதிகரணம் | தேஜோபாவம் |
| 4. | ஆநந்தமயாதிகரணம் | ரஸபாவம். |
| 5. | இந்த்ரப்ராணாதிகரணம் | பிரஞ்ஞானவடிவ முக்கியப்பிராணபாவம். |
| 6. | வைஶ்வாநராதிகரணம் | த்ரைலோக்ய சரீரபாவம். (மூன்று லோகங்களையும் சரீரமாயுடைய தன்மை) |
| 7. | த்யுப்வாத்யதிகரணம் | அவித்தையால் தோன்றும் பூமி அந்தரிக்ஷம் ஸ்வர்க்கம் என்னும் மூவுலகங்களுக்கும் அதிஷ்டானமாயிருக்குந்தன்மை. |

| | | |
|---|---|---|
| 8. | ஸர்வத்ரப் பிரஸித்தி யதிகரணம் | மனோமயத்வம் முதலிய குணபாவம். |
| 9. | அத்ரதிகரணம் | ஸர்வஜகத்தையும் உட்கொள்ளுந்தன்மை(**ஸர்வஸம்** ஹாரபாவம்) |
| 10. | குஹாதிகரணம் தஹராதிகரணம் | தஹராகாஶபாவம் |
| 11. | அந்தராதிகரணம் | அஸங்கத்வம் முதலிய தர்ம பாவம். |
| 12. | அந்தர்யாம்யதிகரணம் | ஸர்வஜகத்தையும் நியமிக்கும் தர்மபாவம். |
| 13. | அத்ருஶ்யத்வாதிகரணம் | அத்ருஶ்யம் அநிர்த்தேஶ்யம் முதலிய லக்ஷணங்களையுடையபாவம். |
| 14. | பூமாதிகரணம் | வியாபக அத்விதீயபாவம். |

இங்ஙனம் ஸர்வாத்மகமாயும், ஸர்வக்ஞனும், ஸர்வகர்த்தாவாயும், ஸர்வநியந்தாவாயுமுள்ள பரமாத்ம ஸ்வரூபத்தை உபாஸ்யதியேயவடிவமாகவும் ஞேயவடிவமாகவும் பிரதிபாதிக்கப் பட்டுள்ளது அறியத்தக்கது. இதை விரிவாய் அறிய விரும்புவோர் ஸூத்திரபாஷ்ய வியாக்கியானுதிகளைக் குருமுகமாய்ச் சிரவணஞ்செய்து அறியவும். விஷயம் விஸ்தரிக்குமென்னும் பயத்தால் இங்கே இதோடு விடப்பட்டது.

ஸர்வஸங்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ முதலிய பதினன்கு சக்திகள் இந்தத் துரியாவரண தேவதைகளாவர். இவர்கள் பதினன்கு தேவதைகளும் பரமேஶ்வரலக்ஷணுத்மகமாய்ப் பரிணமித்த மனோவிருத்திகளேயாவர்.

த்ரிபுரவாஸினீ சக்ரேஶ்வரி.

**पुरत्रयं प्रमाणप्रमेयप्रमातृरूपं त्रिपुटीत्वेन प्रसिद्धम् ।**

பிரமாணம், பிரமேயம், பிரமாதா வென்னும் திரிபுடி வடிவமாயுள்ளது முப்புரங்களாகும். திரிபுடிவடிவபேத ஞானத்தில் ஸம்பந்தப்படுவதால் துன்பம் நேரிடுகின்றது.

**एतस्मिन्नुदरमन्तरं कुरुते अथ तस्य भयं भवति ; द्वितीयाद्वै भयं भवति ।**

என்னும் ஶ்ருதிப்பிரமாணங்களால் பேதஞானமே பயஜனகமாமென்றேற்படுகின்றது. திரிபுஞானத்தாலேற் படுந்துன்பத்தைச் சேதம் செய்பவள் அதாவது நாசம் செய்பவள் என்பது த்ரிபுரவாஸினீ என்னும் பதத்தின் அர்த்தமாம்.

வாஸி = மரத்தைச் செதுக்கும் 'வாய்ச்சி' என்னும் ஆயுதம். இதைப் போன்றவள் வாஸினீயாகும்.

**पुरत्रये योगादिक्लेशभेदेन सिद्धा त्रिपुरवासिनी ।**

யோ-ஹ்ரு. 8. 149-150.

இந்த ஆவரணத்தில் ஈசித்துவஸித்தியும் ஸர்வவசங் கரீமுத்திரையும் பூஜிக்கப்படுவதால், ஈஶ்வரபாவரூப தத்துவம் ஊர்ஜிதமாகின்றது. ஜகத்காரணத்துவம் நிர்வி சேஷப் பிரஹ்மத்தின் தடஸ்த லக்ஷணமாகும். இது சுத்தஸத்துவ மாயோபாதியினால் ஏற்பட்டது. உபா தியை யொழித்து நிருபாதிக சின்மாத்திரமாய் உணர்வதே பிந்துவில் அர்ச்சித்தலின் தத்துவமாம்.

### ஐந்தாவது ஆவரணம்.

பஹிர்த்தசாரசக்ரம். பத்து முக்கோணங்களை யுடையது. ஸர்வார்த்தஸாதகமென்னும் பெயரையுடை

யது. இந்த சக்ரத்திலுள்ள யோகினிகளுக்குக் குலோத்தீர்ணயோகினிகளென்று பெயர். இவ்வாவரண சக்ரேஸ்வரி திரிபுராஸ்ரீயெனப்படுவள். இதில் வசித்துவஸித்தியும் ஸர்வோந்மாதினீ முத்திரையும் வியாபகமாயிருக்கின்றன.

முன் துரீயாவரணத்தில் ஈஸ்வரஸ்வரூப விசாரம் செய்யப்பட்டது. ஈஸ்வரவிசாரம் செய்து, விதிப்படி பரமேஸ்வரனைப் பூஜித்ததனால் அப்பரமேஸ்வரனே சற்குருரூபமாய் மனிதச் சட்டையைப் பூண்டு எதிர்ப்பட்டு அருள் புரிவரென்பது சாஸ்திரஸித்தமாம். ஈஸ்வரனது உண்மையான ஸ்வரூபம் குருவினாலன்றி மற்றொரு ஸாதனத்தா லறிய முடியாது. இது,

**आराधितं दैवतमिष्टमर्थं ददाति तस्याधिगमो गुरुः स्यात् ।**
**नो चेत्कथं वेदितुमीश्वरोऽयमतीन्द्रियं दैवतमिष्टदं नः ॥**

என்னும் (சங்·விஜ-10 அத்-101 ஸ்லோ) பிரமாணத்தினால் அறியத்தக்கது.

ஈஸ்வராநுக்கிரஹமே ஸற்குருலாபமாம்; ஆகவே இந்த ஐந்தாவது ஆவரணத்தின் வாஸனை ஸற்குரு லாபமாகும்.

குலோத்தீர்ணயோகினி. குலம் = ஞானபரம்பரை. உத்தீர்ணம் = நன்கு விருத்திசெய்யப்பட்டது. ஞானபரம்பரை எங்ஙனம் விருத்தியாகுமெனின், அதிகாரிகளாயுள்ள தக்க சிஷ்யர்கள் அதில் சேருவதால் ஆகும். ஆகவே சிஷ்யர்கள் குருவை நாடிச்செல்வதும், குரு சிஷ்யர்களை யங்கீகரிப்பதுமே குலோத்தீர்ண அல்லது குலகௌளயோகினியின் வாஸனையாமென்று ஏற்படுகின்றது.

ஸர்வார்த்தஸாதகசக்ரம்=பரமபுருஷார்த்தவடிவ மோக்ஷத்தையருளும் சக்ரம்.

**सर्वशब्दः परमार्थवाची । परमार्थः परमपुरुषार्थः, सः मोक्ष एव तत्साधकं चक्रम् ।**

**ज्ञानादेव तु कैवल्यं ; तरति शोकमात्मवित् ; आचार्यवान् पुरुषो वेद; तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ।** என்னும் பிரமாணங்களால் அநர்த்த நிவ்ருத்தி ஆநந்த பிராப்திவடிவ மோக்ஷத்திற்குத் தத்துவஞானம் அவசியம் வேண்டும் என்றும், இத்தத்துவஞானம் குரூபதேசமின்றி யுண்டாகாது என்றும் புலப்படுகின்றது. குருவால்தான் ஆவரணத்தின் அதாவது அக்ஞானத்தின் நிவருத்தி ஏற்படும்.

ஸாதனஸம்பத்தியையுடைய முமுக்ஷுவிற்குச் சாஸ்திரஞானமிருப்பினும் அவன் ஒரு சற்குருவின் உபதேசமின்றிச் சுதந்திரமாய்ப் பிரஹ்மாத்ம ஐக்கியத்தை யுணர்வதற்குமுடியாது. "**स गुरुमेवाभिगच्छेत्**" என்பதிலுள்ள **एव** காரம் இதை ஸ்தாபிக்கின்றது. ஆதலின், குரூபஸதனம் அல்லது ஸற்குருவை நாடிச்சென்று அவரை விதிப்படி சரணமடைதல் ஒரு சிறந்தஸாதனமாகும்.

**तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।**
**उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्वदर्शिनः ॥** (கீதை. IV. 34)

ஜீவப்பிரஹ்மைக்கிய தத்துவத்தை யுணர்ந்த ஞானிகளை விதிப்படி சரணமடைந்து ஸாஷ்டாங்கமாய்ப் பிரணமஞ்செய்து, பந்தமென்பது யாது? மோக்ஷம் எப்படி

ஷித்திக்கும்? வித்யை அவித்யைகளின் லக்ஷணமென்ன? என்பனவாதி பலகேள்விகளைக்கேட்டு ஆப்தம், அங்கம், ஸ்தானம், ஸத்பாவம் என்னும் நான்குவகையான சுஶ்ரூஷைகளினால் குருவைத் திருப்தி செய்தல்வேண்டும். இங்ஙனம் செய்யும் ஸத்சிஷ்யனை அநுக்கிரஹித்து, குரு தத்துவஞானத்தை யுபதேசிப்பார்.

நான்குவித பணிவிடைகளின் விவரம்:—

ஆப்தம்:—குருவிற்கு அநுகூலமாயுள்ள காரியங்களைச் செய்தல்.

அங்கம்:—குருவினது பாதசுஶ்ரூஷை.

ஸ்தானம்:—குருவினது உடைமைகளைப் பத்திரமாய்க் காத்தல்.

ஸத்பாவம்:—குருவை ஸாக்ஷாத் பரப்பிரஹ்மமென்று கருதுதல்.

सत्कर्मपरिपाकतः बहूनां जन्मनामन्ते नृणां मोक्षेच्छा जायते । तदा सद्गुरुमाश्रित्य चिरकालसेवया बन्धान्मोक्षं कश्चित्प्रयाति । (பைங்கலம்)

குருபஸதனமஹிமை:— (ஶங்கரவிஜயம். X. 95-98).

परिपक्वमतेः सकृच्छ्रुतं जनयेदात्मधियं श्रुतेर्वचः ।
परिमन्दमतेः शनैः शनैर्गुरुपादाब्जनिषेवणादिना ॥
प्रणवाभ्यसनोक्तकर्मणोः करणेनापि गुरोर्निषेवणात् ।
अपगच्छति मानसं मलं क्षमते तत्त्वमुदीरितं ततः ॥
मनो नु वर्तेत दिवानिशं गुरोः
गुरुर्हि साक्षाच्छिव एव तत्त्ववित् ।

निजानुवृत्त्या परितोषितो गुरु-
विनेयवक्त्रं कृपया हि वीक्षते ॥
सा कल्पवल्लीव निजेष्टमर्थं
फलत्यवश्यं किमकार्यमस्याः ।
आज्ञा गुरोस्तत्परिपालनीया
सा मोदमानाय विधातुमिष्टा ॥

த்ரிபுராஸ்ரீசக்ரேஸ்வரி.

**लोकत्रयसमृद्धीनां हेतुत्वाच्चक्रनायिका त्रिपुराश्रीः ।**

**लोकत्रयस्य मातृमानमेयलक्षणस्य समृद्धीनां परिपूर्णप्रमातृविश्रान्तिलक्षणानां हेतुत्वात् त्रिपुराश्रीः इति नाम लभते ॥**

த்ரிபுடித்தோற்றம் ஆத்மஸ்வரூபத்தில் லயித்து ஆத்மஸத்தையாகவே ஸ்புரிக்கச்செய்யும் காரணத்தினால் ஸத்குருவையடையும் மனோவிருத்திவடிவ ஐந்தாவது ஆவரண சக்ரேஸ்வரிக்குத் த்ரிபுராஸ்ரீயென்னும் பெயர் ஏற்பட்டுள்ளது.

**गुरुप्रसादात्परमार्थलाभः ।** ஸற்குருவையடைவதாலேற்படும் பயனே இந்த ஆவரண தேவதைகளாகும்.

1. ஸர்வஸித்திப்பிரதா :—ஆத்மாபரோக்ஷ ஞானத்தின் அடைவு.
2. ஸர்வஸம்பத்ப்ரதா:—நிராசையின் பிராப்தி.
3. ஸர்வப்பிரியங்கரீ :—ஸதாஸந்தோஷமாயிருத்தல்.
4. ஸர்வமங்களகாரிணீ :— எங்கும் சிவநாட்டத்தையடையும்படி செய்தல்.

5. ஸர்வகாமப்பிரதா:—ஸர்வகாமவடிவ பேராநந்தத்தை யடையச்செய்தல்.
6. ஸர்வதுக்கவிமோசினீ :—ஸர்வாநர்த்தங்களையும் நிவ்ருத்தி செய்தல்.
7. ஸர்வமிருத்யுப்பிரசமனீ :—நித்தியத்துவப் பிராப்தி.
8. ஸர்வவிக்கினநிவாரிணீ :— ஸகலபேதத் தோற்றத்தை யொழித்தல்.
9. ஸர்வாங்கஸுந்தரீ :—அங்கங்களாயுள்ள ஸகல உபாதிகளிலும் உபஹித அதிஷ்டானத்தை அறிதல்.
10. ஸர்வஸௌபாக்கியதாயினீ :—“சிவோஹம்” என்னும் பாவனையே ஸௌபாக்கியம்; இத்தகைய நிலையை யடைதல்.

இவை பத்தும் சற்குருலாபத்தால் ஏற்படுவனவாம்.

வசித்துவஸித்தி: நாமரூபவடிவ ஸர்வப் பிரபஞ்சத்தையும் ஆத்மஸ்வரூபத்தில் லயம் செய்யும் ஆற்றல். இது குரூபதேசத்தாலன்றி ஏற்படாது.

ஸர்வோந்மாதினீ முத்திரை :—இது தீவிரதர முமுக்ஷுத் தன்மையைக் குறிப்பிடுகின்றது.

**गृहे दह्यमाने तत्रस्थदह्यमानः पुरुषः यथा कलत्रपुत्रादिकं परित्यज्य स्वतापोपशमनार्थमेव बहिर्निर्गत्य तापोपशमनं कर्तुमिच्छति, एवं सांसारिकतापोपशमनं संपादयितुं त्यक्तसर्वेषणः सन् मोक्षेच्छया सद्गुरुं वृणोति ॥**

இதன் பொருள் :—வீடு தீப்பற்றி யெரியும் போது அவ்வீட்டிலுள்ள தகிக்கப்பட்ட புருஷன் எங்ஙனம் தன்

மனைவிமக்களையும் பொருட்படுத்தாது தாபத்தை நிவ்ருத்தி செய்துகொள்ளும் பொருட்டு ஒரு நீர் நிலையை நாடிச் செல்வனோ, அங்ஙனமே, ஸம்ஸார தாபத்தை நிவ்ருத்தித் துக்கொள்ள ஈஷணாத்திரயங்களையும் விட்டு ஸத் சிஷ்யனானவன் சற்குருவை வரித்துச்செல்வான்.

இங்ஙனம் செல்லும் நிலைதான் ஸர்வோந்மாதினீ முத்திரையின் தத்துவமாகும்.

"ஸத்குருவை யடைதல் வேண்டும்" என்னும் குலோத்தீர்ண விருத்தியாரூடசேதன விமர்சமே இவ்வாவரணத்தின் பிந்து தர்ப்பணமா மென்றறியவும்.

இதுவும், நான்காவது ஆவரணமும் சுபேச்சையென்னும் ஞானபூமிகையில் சேர்ந்தனவாகும்.

## ஆறுவது ஆவரணம்.

அந்தர்த்தசாரம். பத்துமுக்கோணங்களையுடையது. இதற்கு ஸர்வரக்ஷாகரசக்ரமென்றுபெயர். இந்த சக்ர யோகினிகளுக்கு நிகர்ப்பயோகினிகளென்றுபெயர். இதன் சக்ரேஶ்வரி த்ரிபுரமாலினியாகும். இதில் பிராகாம்ய ஸித்தியும் ஸர்வமஹாங்குசாமுத்திரையும் வியாபகமாயிருக்கின்றன. ஸர்வக்ஞா--ஸர்வசக்தி--ஸர்வைஶ்வர்யப் பிரதா முதலிய பத்துசக்திகள் இவ்வாவரணசக்திகளாவர்.

முன் ஐந்தாவது ஆவரணத்தில் ஸத்குருவின் அடைவு கூறப்பட்டது. இதில் குரூபதேசத்தின் ஶ்ரவணம் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

ஸகலவேதாந்த வாக்கியங்களுக்கும் ஜீவப்பிரஹ்மைக்கியத்திலேயே தாத்பரியமாமென்னும் நிச்சயம் குரூபதேசஶ்ரவணத்தினால் ஸித்திப்பதாகும். "தத்துவ

மஸி" என்னும் வாக்கியமே குரூபதேசமாம். இம்மஹா வாக்கியத்தைக் கேட்டலே ஶ்ரவணமாம். இதனுல் பிரஹ்மாத்மைக்கியம் அறிவிக்கப்படுகின்றது. ஸர்வ வேதாந்த வாக்கியங்களின் தாத்பரியம் இந்த அபயஸ்வரூபமேயாகும்.

ரக்ஷையினுல் அபயம் (பயமின்மை) ஸித்திக்கின்றது. இந்த ஆருவது ஆவரணசக்ரம் "ஸர்வரக்ஷாகரம்" என்னும் பெயரினதாகையால் அபயஸ்வரூப அத்வைத (ஜீவப் பிரஹ்மைக்கிய) வடிவ மஹாவாக்கியோபதேச ஶ்ரவணமே இவ்வாவரணத்தின் தத்துவார்த்தமாமென்பது ஸித்திக்கின்றது.

ஸர்வரக்ஷாகர சக்கிரம்:—

**स्वरूपावेशरूपके सर्वरक्षाकरे चक्रे ।**

**स्वरूपस्य साधकस्य आत्मनः आवेशः स्वरूपावेशः परशिवोऽहमिति मतिः । आवेशो हि लोके ब्रह्मराक्षसोऽहमितिवत् पराहंताप्रथा तद्रूपके तन्निरूपके । रक्षा नाम सर्वस्मात् भेदप्रपञ्चलक्षणात् परिपन्थिनो रक्षा परशिवाभेदप्रतीतिरूपा ॥**

யோ-ஹ்ரு. 8-வி. 152 ஶ்லோ. அம்ருதாநந்தர்.

துவைதமாகும் பேயின் வசமாயுள்ள ஜீவனைத் தனது உண்மைச் சொரூபத்தில் இருக்கச்செய்து மறுபடியும் அவனை அப்பேய் அணுகாதபடி குரூபதேச ஶ்ரவணம் முமுக்ஷுவுக்கு ரக்ஷையாக இருக்கின்றது.

**तत्त्वमसीत्युपदेशवाक्यात् 'जीवोऽहं, चतुरोऽहं' इत्याद्याकारकसर्वाध्यासनिरासोपायेन ब्रह्मैवाहमिति स्वस्वरूपावेशकप्रदं तदेव सर्वरक्षा ॥**

நிகர்ப்பயோகினி:—

**नितरां गर्भे अतिरहस्यस्थले स्थितत्वात् निगर्भः ।**

அந்நமயாதி பஞ்சகோசங்களுக்கு முள்ளே இருப்பது குஹையாகும். இது அதிரஹஸ்யமான ஸ்தலம். இங்கே விளங்குவது பிரத்தியகாத்மா. இந்த ஆத்மாவையுணரும் விருத்திக்கு நிகர்ப்பயோகினியென்று பெயர். ஆவரணம் விக்ஷேபம் என்னும் இரண்டு அம்சங்களோடு கூடிய அக்ஞானத்தினுல் ஆவரிக்கப்பட்டுள்ள காரணத்தால் அக்ஞர்களுக்குப் பிரஹ்மம் விளங்குவதில்லை. ஆதலால் பிரஹ்மம் ரஹஸ்யமாய் அல்லது நிகர்ப்பமாய் இருக்கின்றது. இத்தகைய நிகர்ப்பத்தோடு சேர்ந்த மனோவ்ருத்தியே நிகர்ப்பயோகினியாமென்றுங் கூறலாம்.

**नाहं प्रकाशः सर्वस्य योगमायासमावृतः ।**
**मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम् ॥**

(கீதா-7. 25 ஸ்லோ.)

த்ரிபுரமாலினீ சக்ரேஸ்வரீ:— ஞாதா ஞானம் ஞேயமென்னும் த்ரிபுரங்களையும் போஷிப்பவள். இது,

**मातृमानप्रमेयाणां पुराणां परिपोषिणी ।**
**त्रिपुरामालिनी ख्याता चक्रेशी सर्वमोहिनी ॥**

(யோ-ஹ்ரு 8-158)

என்னும் பிரமாணத்தால் ஸித்திக்கின்றது. போஷணையென்றுல் தனது ஸத்தையில் இருத்தி விளக்குவது. த்ரிபுடித் தோற்றத்திற்கு ஆதாரம் ஆத்மஸத்தையேயாகும். அபேததர்சனமே ஸர்வ மோஹனமாகும் த்ரிபுடிராஹித்தியமாம். அபேததர்சனவடிவ ஞானமானது குருபதேசத்தாலன்றிச் சித்திப்பதாகாது.

பிராகாம்யஸித்தி :—

**विद्याशक्तिविशुद्धिं च सिद्धिं प्राकाम्यसंज्ञिताम् ।**

அசுத்தமாயுள்ள அவித்தையை யொழித்து அஸங்க ஆத்ம ஞானத்தை யருளும் ஸித்தியே பிராகாம்யஸித்தி யாகும்.

**प्रकर्षेण काम्यं प्राकाम्यम् ।** யாவராலும் நன்கு விரும்பப் படுவது எதுவோ அதை யடைவிப்பது. அழிவற்ற ஆநந் தந்தான் யாவராலும் நன்கு விரும்பப்படுவது. அதை யடைவிப்பது ஆத்ம ஞானமே. **ज्ञानादेव तु कैवल्यम्** என்பது ஶ்ருதி.

ஸர்வமஹாங்குஶா முத்திரை :—மனத்தின் ஏகாக்கிரத் தன்மையைக் குறிப்பதாகும். இது சிரவணத்திற்கு முக்கிய ஸஹகாரியாயுள்ளது.

**वेदस्य म आणीस्थः श्रुतं मे मा प्रहासीरनेनाधीतेना-होरात्रान्संदधामि ।**

என்னும் சாந்தி மந்த்ரம், மனத்தின் ஏகாக்கிரத் தன்மை யாகும் ஸர்வ மஹாங்குஶா முத்திரையைக் குறிப்பது அறியத் தக்கது.

குருபதேசஶ்ரவணத்தினுலேற்படும் பயனே இந்த ஆவரண சக்திகளாவர்.

1. ஸர்வக்ஞா = அகண்டஞானம்.
2. ஸர்வசக்தி = "எல்லம் தானே"யென்னும் வியாபகத் வம்.
3. ஸர்வைஶ்வர்யப்பிரதா = நித்தியம், சுத்தம், புத்தம் முதலிய ஈஶ்வர லக்ஷணங்களினடைவு.
4. ஸர்வக்ஞானமயீ = ஞானமே தானுயிருத்தல்.
5. ஸர்வவியாதிவிநாஶினீ = ஸர்வ துக்க நிவ்ருத்தி.

6. ஸர்வாதாரஸ்வரூபா = ஆத்மஸத்தாஸ்புரணம்.
7. ஸர்வபாபஹரா = ஸர்வாநர்த்த நிவ்ருத்தி.
8. ஸர்வாநந்தமயீ = ஆநந்தஸ்வரூப அடைவு.
9. ஸர்வரக்ஷாஸ்வரூபிணீ = துவைதநிவர்த்தக அத்வைத ஸ்திதி.
10. ஸர்வேப்ஸிதபலப்பிரதா = மோக்ஷலாபம்.

இவை யாவும் மஹாவாக்கிய உபதேசத்தின் ஸ்ரவணத்தினால் உண்டாகும் பயன்களாகுமென்றறிதலவசியம்.

நிகர்ப்பயோகினி யென்னும் அந்தர்முக ஏகாக்கிர விருத்தியாரூட சேதனமே பிந்து தர்ப்பணமாமென்பது அறியத் தக்கது. இது விசாரணை யென்னும் ஞானபூமிகையோடு கூடியதாகும்.

நான்கு, ஐந்து, ஆறு என்னும் இம்மூன்று ஆவரணங்களில், அக்ஞானத்தின் அஸத்வாபாதக ஆவரணம்சம் பரோக்ஷஞானத்தினால் நாசமாகின்றதென்னும் ரஹஸ்யம் இங்கே அறியத்தக்கது.

## ஏழாவது ஆவரணம்.

அஷ்ட கோணம். ஸர்வரோகஹர சக்ர மென்னும் பெயரை யுடையது. இதில் உள்ள யோகினிகளுக்கு ரஹஸ்யயோகினிகளென்று பெயர். இவ்வாவரண சக்ரேஸ்வரிக்குத் த்ரிபுராஸித்தாவென்று பெயர். புக்திஸித்தியும், ஸர்வகேசரீமுத்திரையும் இந்த சக்ரத்தில் வியாபகமாயிருக்கின்றன. வஶினீ காமேஶ்வரீ முதலிய எட்டு வாக்தேவதைகள் இவ்வாவரண தேவதைகளாவர்.

குரூபதேசமாகும் மஹாவாக்கியஶ்ரவணத்தினாலேயே, அபரோக்ஷஞானப்பிரதிபந்தங்களற்ற உத்தமாதிகாரிக்கு "अहं ब्रह्मास्मि" யென்னும் அநுபவம் உண்டா

கின்றது. பிரதிபந்தகங்களுடையவர்க்கோ வெனின், அஸம்பாவனை விபரீதபாவனை யென்னும் இரண்டு தடைகளுண்டாகின்றன; இவை அபானுபாதக ஆவரணத்தின் காரியங்களாம். "விளங்கவில்லை" யென்று தோற்றுவிக்கும் மறைப்பே அபானுபாதகமாம். இவற்றுள் முதலாவதான அஸம்பாவனை யென்னும் ஸந்தேகம் மனனத்தினால் நிவ்ருத்தியாகின்றது. இது,

**अपरोक्षज्ञानप्रतिबन्धकाभानावरणकार्यभूतासंभावनानि – वृत्त्यर्थं मननं कर्तव्यम् ।**

என்னும் பிரமாணத்தால் ஸித்திக்கின்றது. ஆதலின், ஏழாவது ஆவரணமாகும் அஷ்டகோணசக்ரம் மனனத்தைக் குறிக்கின்றதாகும்.

இவ்வாவரணத்தில்தான் ஸ்ரீவித்யையின் முக்கிய தர்மம் அதாவது சிறப்புலக்ஷணம் வெளிப்படுகின்றது.

ஸ்ரீவித்யையென்பது அஹங்கிரஹோபாஸனையேயாகும். மனனநிதித்தியாஸனஸமாதிகளின் வடிவமாயுள்ளது. ஸற்குருபால் மஹாவாக்கியத்தை ஶ்ரவணஞ்செய்தபின்னரும், அபரோக்ஷாநுபவம் ஏற்படாவிடின் ஸந்தேஹ விபரீதங்களென்னும் பிரதிபந்தங்கள் இருக்கின்றனவென்று அநுமானம் செய்தல் வேண்டும். இத்தடைகள் அக்ருதோபாஸகனுக்கே யுண்டாகின்றனவென்பது சாஸ்திரஸித்தம். அபரோக்ஷஞானத்திற்குத் தடையாயுள்ள அபானுபாதக ஆவரணத்தின் நாசமே ஸ்ரீவித்யோபாஸனையின் முக்கியபலமாம். ஆதலின், அக்ருதோபாஸகன் அபரோக்ஷஞானத்தின்பொருட்டு வித்யோபாஸனை செய்தல் வேண்டுமென்பது ஸ்ரீகௌடபாதாசார்யாளின் கருத்தாகும். இக்கருத்து அவரியற்றியுள்ள ஸ்ரீவித்தியா

மந்த்ரரத்னஸூத்திரங்களின் முதல் ஸூத்திரத்தால் நன்கு வெளியாகின்றது. (20-22 பக்கம் பார்க்க.)

ஸம்ஶயம்

**एकाधिकरणे परस्परविरुद्धनानाधर्मज्ञानमेव संशयः ।**

ஒரு அதிகரணத்தில் பரஸ்பரவிருத்தமான பலதர்மங்களின் ஞானமே ஸம்ஶயமெனப்படும். இது பிரமாணகத ஸம்ஶயம், பிரமேயகதஸம்ஶயமென இருவகைத்து. அத்விதீய சிவத்தில் வேதாந்தவாக்கியங்கள் பிரமாணமா? அன்று? என்பது பிரமாணகத ஸம்ஶயமாகும்.

பிரமேயகத ஸம்ஶயம்

இதுவும் இரண்டு வகை. இவை ஆத்மப்பிரமேய ஸம்ஶயம், அநாத்மப் பிரமேய ஸம்ஶய மென்பனவாம். அநாத்மப்பிரமேய ஸம்ஶயங்கள் எண்ணிறந்தன. இவற்றின் நிரூபணம் நிஷ்பிரயோஜனமானது. ஆத்மப்பிரமேய ஸம்ஶயமும் பலவகைப்படும்.

1. ஆத்மா பிரஹ்மத்தைவிட பின்னமா? அபின்னமா?
2. அபின்னமெனின், எப்பொழுதும் அபின்னமா? அல்லது மோக்ஷத்தில் மாத்திரம் அபின்னமா?
3. எப்பொழுதும் அபின்னமெனின், ஆநந்தாதி ஐஶ்வர்யங்களோடுகூடியதா? அல்லது அத்தகைய ஐஶ்வர்யங்களற்றதா?
4. ஆநந்தாதி ஐஶ்வர்யங்களோடு கூடியதாயினும் அவ்வாநந்தாதிகள் குணங்களா? அல்லது ஸ்வரூபமா? அல்லது சக்தியா?

இவை முதலியன பிரமேயமாகும் தத்பதார்த்தாபின்னத்வம் பதார்த்தத்தில் ஏற்படக்கூடிய ஸம்ஶயங்களாகும்.

கேவல த்வம்பதார்த்தத்தில் ஏற்படக்கூடிய ஸம்ஶயங்களாவன:—

1. ஆத்மா தேஹாதிகளைக் காட்டிலும் பின்னமா? அன்று?
2. பின்னமெனின், அணுவா? விபுவா? அல்லது மத்தியம பரிமாணமுடையதா?
3. விபுவெனின் கர்த்தாவா? அல்லது அகர்த்தாவா?
4. அகர்த்தா வெனின் பரஸ்பர பேதத்தோடு கூடிய அநேகமா? அல்லது ஏகமா? என்பனவாதியாம்.

கேவல தத்பதார்த்தத்தில் ஏற்படக்கூடிய ஸம்ஶயங்களாவன:—

1. ஈஶ்வரன் கைலாஸம் வைகுண்டம் முதலிய லோகங்களில் வஸிக்கும் கரசரணாதிகளோடு கூடிய சரீரியா அல்லது அசரீரியா?
2. சரீரரஹித விபுவாயினும், பரமாணு முதலியவற்றையபேக்ஷிக்கும் ஜகத்காரணை அல்லது ஒன்றையும் அபேக்ஷிக்காது தனது இச்சாமாத்திரத்தினாலேயே இச்சகத்தைச்சிருஷ்டிக்கும் கர்த்தாவா?
3. நிரபேக்ஷிக கர்த்தாவாயினும் கேவல கர்த்தாவா அல்லது அபின்னநிமித்தோபாதான கர்த்தாவா?
4. அபின்னநிமித்தோபாதானகர்த்தாவெனினும் ஜீவர்களின் கர்மபலதாதாவா? அன்று?
5. ஜீவர்களின் கர்மபலதாதாவாயினும் வைஷம்யாதி தோஷங்களோடு கூடியவனா அன்று? இவை முதலிய பலவாம்.

ஸகல வேதாந்த வாக்கியங்களின் ஸமன்வயத்தினால் பிரமாணகதஸம்ஶயநிவ்ருத்தியும், அவைகளுக்குள்ள அவிரோதத் தன்மையை அறிவதனால் பிரமேயகத ஸம்ஶய நிவ்ரு

த்தியுமுண்டாகின்றன. ஆகவே இந்த எழாவது ஆவரணம் ஸகல அத்தியாத்மசாஸ்திரவிசாரரூபமாயிருப்பது தொனிக்கின்றது. ஸற்குருவின்பால் ஶ்ரவணித்த மஹாவாக்கியார்த்தத்தை யுக்தி, தர்க்கம், அநுமானம் முதலியவற்றின் வாயிலாகச் சிந்தித்தல் மனன மெனப்படும்.

ஸர்வரோகஹர சக்ரம் :—

अनित्याशुचिक्लेशरूपसंसारो रोगः । तस्य हरणे प्रभावशालीति सर्वरोगहरचक्रम् ।

அக்ஞானமே ரோகமாம். அதை நீக்குவது ஸர்வரோகஹரசக்ரமாம். மனனவடிவ இந்த ஆவரணத்தில் "சிவம் அபரோக்ஷமாய் விளங்கவில்லை" என்னும் அக்ஞானம் இருக்கின்றது. இது ஸந்தேஹமென்னும் பிரதிபந்தவடிவமாயிருக்கின்றது. இத்தடையின் நிவ்ருத்தி இந்தசக்ரத்தில் உண்டாவதால் இது ஸர்வரோகஹரமென்னும் பெயரைப் பெற்றுள்ளதென்று அறிதல் அவசியம்.

ரஹஸ்யயோகினிகள் :—

रहस्ययोगिनीर्देवि संसारदलनोज्ज्वले ।<br>
सर्वरोगहरे चक्रे संस्थिता वीरवन्दिते ॥

என்னும் யோகினீ ஹ்ருதயவாக்கியத்தின்படி பேதரூபத்வைதநாட்டத்தால் ஏற்பட்ட ஜனனமரணரூபஸம்ஸாரத்தை யொழிப்பதில் பரமகாரணமாய் விளங்கும் ஸ்வயம்பிரகாச அகண்டநாட்டமே ரஹஸ்யயோகினி யாகுமென்று ஸித்திக்கின்றது.

த்ரிபுராஸித்தா சக்ரேஶ்வரீ :—

मानमातृमेयरूपाणां त्रिपुराणामुत्तीर्णपरमशिवलक्षणां सिद्धिं ध्यायेत् ।

என்னும் யோகினீ ஹ்ருதய அம்ருதாநந்தரின் பாஷ்ய வாக்கியத்தின்படி, பிரமாதா, பிரமாணம், பிரமேயமென்னும் த்ரிபுடித் தோற்றத்தினுல் ஏற்பட்ட ஸகல ஸம்சயங்களையும் நிவ்ருத்தி செய்து, ஸம்ஶயமற்ற நித்தியஸித்த பரசிவ லக்ஷணத்தைச் சிந்திக்கச்செய்தலே இந்த சக்ரேஶ்வரியின் தத்துவமாம்.

புக்திஸித்தி :—

शुद्धविद्याविशुद्धिं च भुक्तिसिद्धिं महेश्वरि ।
अहंतेदन्तयोरैक्यमिति विद्या निगद्यते ॥

इति परापञ्चाशिकोक्तरीत्या शिवाद्वैतप्रथालक्षणायाः शुद्धविद्याया विशुद्धिः । "ज्ञानेन ज्ञेयमालोक्य पश्चात् ज्ञानं परित्यजेत्" इति प्रतिपादितरीत्या ज्ञातृज्ञानज्ञेयविभागशून्यनिर्विकल्पबोधलक्षणपरमशिवसमावेशस्तद्रूपिणी । अत एव भुक्तिसिद्धिः । "विश्वं शिवादिभूम्यन्तं चमत्काररसाश्रयम्" इत्युक्तरीत्या महाभुक्तिः विश्वविषयिणी स्वसाधकस्य सिध्यति ॥

"अत्ता चराचरग्रहणात्" என்னும் பிரஹ்மஸூத்திரத்தின்படி அஹந்தை இதந்தைகளுக்கு ஐக்கியத்தை யுண்டு பண்ணி அவற்றிற்குள்ள பரஸ்பரபேதத்தை யொழிப்பதே புக்திஸித்தியாகும்.

ஸர்வகேசரீமுத்திரை :—பேதவடிவ ஸம்ஶயமென்னும் அஸம்பாவனையைவிட்டு அபேதவடிவ நிஸ்ஸம்ஶய பிரஹ்மஸ்வரூபத்தில் சரிக்கும் விருத்தியே ஸர்வகேசரீ முத்திரையின் ரஹஸ்யமாம்.

குருபதிஷ்ட மஹாவாக்கியார்த்த மனனத்திலுள்ள மனோவ்ருத்திகளே ஏழாவது ஆவரணசக்திகளாவர். இவர்கள் சாஸ்திரவடிவமாயுள்ளவர்கள்.

1. வஶினீ :—ஸர்வப் பிரபஞ்சமும் ஆத்மாபின்ன பிர
ஹ்மஸ்வரூபமே என்று நிச்சயித்தற்
குரிய பிரமாணஶ்ருதிகள்.
2. காமேஶ்வரீ : —ஆத்மாபின்னபிரஹ்மத்தின் ஸ்வரூப
லக்ஷணங்களைக் கூறும் ஶ்ருதிகள்.
3. மோதினீ :—பிரஹ்மாபின்ன ஆத்மஞானத்தின் பய
னைப் பிரதிபாதிக்கும் ஶ்ருதிகள்.
4. விமலா :—அஞ்ஞான உபாதியை நீக்கிச் சின்மாத்
திரமாய்ப் பாவித்தற்குரிய ஶ்ருதிகள்.
5. அருணா :—ஜீவப்பிரஹ்மைக்கியப்பிரதிபாதக ஶ்ருதி
கள்.
6. ஜயினீ :—அகண்டார்த்தபோதக ஶ்ருதிகள்.
7. ஸர்வேஶ்வரீ : —ஜீவன்முக்தியைப் பிரதிபாதிக்கும்
ஶ்ருதிகள்.
8. கௌளினீ :—விதேஹமுக்தியைப் பிரதிபாதிக்கும்
ஶ்ருதிகள்.

மேற்கூறிய எட்டுசக்திகளும் வாக்தேவதைகளாவர். சப்தப்பிரமாணரூப ஸகலசாஸ்திரவடிவாய் விளங்குபவர்கள். அக்ஷரவடிவ மாத்ருகாஸ்வரூபிணிகளாயுமுள்ளவர்கள்.

சாஸ்திரவடிவ சப்தப் பிரமாணத்தின் வாச்யார்த்தத்திற்கு அகோசரமாய், லக்ஷ்யார்த்தத்தினுல் விமர்சிக்கப்படுவதே சிவாபின்னசித்சக்தியாமென்னும் பாவனையே இந்த ஆவரணத்தின் பிந்து தர்ப்பணதத்துவமாம்.

இந்த ஏழாவது ஆவரணமானது தனுமானஸியென்னும் ஞானபூமிகா வடிவினதாகும். இதில் அபானுபாதக மறைப்பின் ஒரு பகுதியான அஸம்பாவனை நிவ்ருத்தியாகின்றது.

ஆயுதார்ச்சனம் :— ஏழாவது ஆவரணத்திற்கும் எட்டாவது ஆவரணத்திற்கும் இடையில் மத்தியத்ரிகோணத்திற்கு மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்குத் திசைகளில் முறையே பாணம், தனுஸ், பாஶம், அங்குஶமென்னும் நான்கு ஆயுதங்களையும் பூஜித்தல் வேண்டுமென்று பத்ததி கூறுகின்றது.

மனனதத்துவத்தோடுகூடிய ஏழாவது ஆவரணத்திற்குப் பின் ஆயுதார்ச்சனம் செய்யப்படுவதாயிருத்தலின் ஆயுதங்களின் தத்துவம் மனனத்தின் பலபூதமாயிருத்தல் வேண்டுமென்றும், இனிமேல் விமர்சிக்கப்படும் எட்டாவது ஆவரணம் நிதித்தியாஸன ஸ்வரூபமாயிருத்தலின் அதற்குச் சாதனமாயும் இருத்தல் வேண்டுமென்றும் ஸித்திக்கின்றது.

மனனத்தினல் அந்தக்கரணத்திலுள்ள அஸம்பாவனரூப ஸம்ஶயம் நிவ்ருத்தியாய்ப் பரிசுத்தப்பட்டு அந்தக்கரணம் அந்தர்முகமாய்த் திரும்பி ஆத்மாபரோக்ஷ வேதனத்திற்கு உரியதாக ஆகின்றது.

**विशुद्धबुद्धेः परमात्मवेदनं तेनैव संसारसमूलनाशः ॥**

(விவேகசூடாமணி 150)

என்பது இதற்குப் பிரமாணமாம்.

ஆயுதங்களின் தத்துவம் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் கூறப்பட்டுள்ளது. அஃதாவது :—

**मनोरूपेक्षुकोदण्डा पञ्चतन्मात्रसायका ।**

**रागस्वरूपपाशाढ्या क्रोधाकाराङ्कुशोज्ज्वला ॥**

இதன்படி, கோதண்டமென்பது மனமென்றும், பஞ்சபாணங்கள் பஞ்சதன்மாத்திரைகளென்றும், பாஶம் விருப்பென்றும், அங்குஶம் வெறுப்பென்றும் ஏற்படு

கின்றது. இங்ஙனம் கூறுவதால் இவை (ஆயுதங்கள்) எங்ஙனம் ஆத்மாபரோக்ஷவேதனத்திற்குச் சாதனமாகு மெனின், பஞ்சதன்மாத்திரைகளின் வடிவ பஞ்சஞானேந் திரியங்களை நன்கு அடக்கி அவற்றை மனத்தில் லயிப் பித்து அம்மனத்தைப் பாஹ்யத்தில் செல்லவொட்டாது தடுத்து அந்தர்முகப்படுத்தி, ஆத்மாபரோக்ஷஞானஸித் தியில் மிகவும் விருப்பங்கொண்டு, அநாத்மவிஷயங்களில் வெறுப்படைந்துள்ள மனநிலையை ஆயுதங்கள் குறிப்பிடு கின்றனவாதலின், அவை ஆத்மஞானஸாதனங்களாகு மென்பதில் என்ன ஸந்தேஹம்?

அன்றியும், பாணுதி நான்கு ஆயுதங்களையும் ஸமாதி, நிதித்தியாஸனங்களின் தடைகளாயுள்ள லய, விக்ஷேப, கஷாய, ரஸாஸ்வாதங்களின் நிவர்த்தகங்களாகவும் கூறலாம்.

1. பாஶம் கஷாயத்தடையின் நிவர்த்தகம். ஆத்மா வை எப்படியாகிலும் அறியவேண்டுமென்னும் விருப்பமே பாஶமாகும்; இதனுல் அநாத்மநாட்டமாகிய கஷாயத் தடை நிவ்ருத்தியாகின்றது.

2. அங்குஶம் லயரூபவிக்கினத்தின் நிவர்த்தகமாம். அநாத்ம நாமரூபநாட்டத்தின் வெறுப்பே அங்குஶத் தின் தத்துவமாம். இதனுல் ஸுஷுப்திவடிவ (அக்ஞான) லயம் நிவ்ருத்தியாகின்றது.

3. தனுஸ் விக்ஷேபநிவர்த்தகம். அந்தர்முகப்பட்ட சுத்தமனமே தனுஸ்ஸாகும். சுத்தமனத்திற்குப் பாஹ்யப் பிரவ்ருத்தியின் அபாவத்தால் விக்ஷேபமென்னும் கற்ப னைத்தோற்றம் நிவ்ருத்தியாகின்றது.

4. பஞ்சபாணங்கள் ரஸாஸ்வாதத்தடையை நிவர் த்திப்பனவாகும். ஜிதேந்திரியத்துவமே பஞ்சபாணங்

களின் வாஸனையாம். சப்தாதிவிஷயங்களினின்றும் திரும்பி, மனத்தில் லயமாயுள்ள பஞ்சஞானேந்திரியங்கள் விஷயானுபவஸ்வரூப ரஸாஸ்வாதத்தடையை நீக்குகின்றன.

இங்ஙனம், ஆயுதார்ச்சனத்தினுல் ஆத்மாபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தடைகள் நீங்குகின்றனவாதலின் இந்த அர்ச்சனையை நிதித்தியாஸனவடிவ எட்டாவது ஆவரணத்தின் முன்னர் செய்தல் தகுதியுடையதாகின்றது.

## எட்டாவது ஆவரணம்.

இதன் சக்ரம் மத்தியத்திலுள்ள ஒரு த்ரிகோணம். இதற்கு ஸர்வஸித்திப்பிரதசக்ரமென்று பெயர். இந்த சக்ரத்திலுள்ள யோகினிகள் அதிரஹஸ்யயோகினிகளெனப்படுவர். சக்ரேஸ்வரிக்குத் த்ரிபுராம்பா என்று பெயர். இதில் இச்சாஸித்தியும் ஸர்வபீஜமுத்திரையும் வியாபகமாயிருக்கின்றன. மஹாகாமேஸ்வரீ, மஹாவஜ்ரேஸ்வரீ, மஹாபகமாலினீ, மஹாத்ரிபுரஸுந்தரீ என்பவர்கள் இவ்வாவரண தேவதைகளாவர்.

இந்த ஆவரணத்தின் தத்துவவிமர்சமாவது :—

**मननोदितविज्ञानात् परमात्मैक्यसिद्धये ।**
**निदिध्यासनरूपं हि विहितं तदुपासनम् ॥**

என்னும் தத்துவஸாராயண உபாஸனகாண்ட வாக்யத்தின்படி, மனனத்தினுல் ஏற்பட்ட ஸந்தேஹமற்ற ஞானத்தினுல் பரமாத்மைக்கியஸித்தியின் பொருட்டு நிதித்தியாஸனம் செய்யத்தக்கதென்று ஸித்திக்கின்றது. ஆகவே இந்த ஆவரணத்தின் தத்துவம் நிதித்தியாஸனவடிவமாயிருத்தல் வேண்டுமென்று ஊஹிக்கப்படுகின்றது.

நிதித்தியாஸனத்தினுல் "எனக்குச் சிவம் விளங்க வில்லை" யென்னும் அபாஞுபாதகஆவரணத்தின் காரிய மாகும் விபரீதபாவனை யொழிகின்றது. இது,

"कृतश्रवणमननस्य अपरोक्षात्मज्ञानप्रतिबन्धकाभानावृतिरूपविपरीतभावनानिवृत्त्यर्थं निदिध्यासा कर्तव्या"

என்னும் பிரமாணத்தால் நன்கு விளங்குகின்றது.

நிதித்தியாஸனமாவது அனுத்மாகாரவ்ருத்திகளைத் தடுத்தல் வாயிலாக ஆத்மாகாரவ்ருத்திகளைப் பெருக்கு தலாகும்; அதாவது மனனத்தினுல் நிச்சயிக்கப்பட்ட ஆத்மஸ்வரூபத்தில் சுத்தஸத்துவப்பிரதானசித்தம் நிச்சலமாய் நிலைத்திருப்பதுவே யாகும்.

நிதித்தியாஸனத்தின் பரிபாகாவஸ்தையே ஸமாதி வடிவாயிருப்பதால், ஸமாதியை வேறுஸாதனமாய்க்கொள்ளாது நிதித்தியாஸனத்திலேயே உள்ளடக்கிக் கூறுவர் பெரியோர்.

"अयमात्मा ब्रह्म" என்னும் சுத்தத் திரிபுடியோடுகூடியது நிதித்தியாஸனமென்றும், "अहं ब्रह्मास्मि" யென்னும் ஸாக்ஷாத்கார அநுபவத்தோடுகூடியது ஸவிகல்பஸமாதி யென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. த்ரிபுடியின் விளக்கம் முழுதுமற்ற நிலை நிர்விகல்ப ஸமாதியாகும்.

நிதித்தியாஸனத்தில் ஆத்மாகாரவ்ருத்தியின் இருப்பு பிரயத்தினத்தினுல் ஸித்தித்துள்ளதாகும். இது பிரயத்தினங்கொண்டு கைகளாற் பற்றி இழுத்துவைத்திருக்கும்வரை வளைந்துள்ள மரக்கிளையின் வளைவுபோல்வதாகும். கைகளாற் பற்றியிருத்தலாகிய முயற்சி நீங்கியவிடத்து அம்மரக்கிளையின் வளைவு நீங்கிவிடுதல் போல், நிதித்

தியாஸனத்தில், அநாத்மாகாரவ்ருத்திகளைத் தடுத்த லென்னும் பிரயத்தினம் நீங்கியபோது ஆத்மாகாரவ்ருத்தி நீங்கிவிடும். பலமுறை வளைத்து வளைத்துப் பழகிய மரக்கிளை இயல்பாகவே வளைந்துவிடுதல் போல, நிதித்தியாஸனத்தை யடிக்கடி பழகுவதால் (விஜாதீய) அநாத்மாகாரத்தில் சித்தம் செல்லும் பழக்கம் அறவே ஒழிந்து ஆத்மாகாரமாகவே ஸதா இருக்கும் நிஜஸ்திதி அதற்கு ஏற்படுகின்றது.

"आवृत्तिरसकृदुपदेशात्; आप्रायणात् तत्रापि हि दृष्टम्"

என்று பிரஹ்மஸூத்திரங் கூறுவதிங்கறியத்தக்கது.

நிதித்தியாஸனம் நன்கு ஸித்திக்கவேண்டுமாயின் வாஸனாக்ஷயம், மனோநாசம், தத்துவஞானமென்னும் மூன்றையும் ஒரே காலத்தில் பெறுதல் வேண்டுமென்பது சாஸ்திர ஸித்தாந்தமாம்.

वासनाक्षयविज्ञानमनोनाशा महामते ।
समकालं चिराभ्यस्ता भवन्ति फलदा इमे ॥

என்பது ஞானவாஸிஷ்டப் பிரமாணமாகும்.

வாஸனைகள் நசிக்காமல் மனோநாசம் ஏற்படுவதில்லை; மனோநாசமேற்படாதவரை தத்துவஞானமுண்டாதலில்லை. தத்துவஞானமின்றி வாஸனாக்ஷயமுண்டாகின்றதில்லை. இம்மூன்றும் பரஸ்பர ஸாபேக்ஷிகங்களாதலின் ஸமகாலத்தில் மூன்றையும் அப்பியஸித்தல் வேண்டும். இங்ஙனம் அப்பியஸிப்பின், பிரஹ்மாத்மைக்கிய அபரோக்ஷம் அந்த நிமிஷத்திலேயே ஏற்படுகின்றது. அல்லது, சாந்தம் ஸந்தோஷம், விசாரம் என்னும் மூன்றும் அபரோக்ஷஸாக்ஷாத்காரத்திற்குச் சிறந்த ஸாதனங்களாமென்றும் சில சாஸ்திரங்கள் கூறுகின்றன. வைராக்

கியம்-உபரதி-போதம் என்னுமிம்மூன்றும் அவசியமென்றும் சில பெரியோர் கூறுகின்றனர். இவையாவும் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமென்னும் ஒரேபயனை யுத்தேசித்துக் கூறப்பட்டிருப்பதால், சொல்லால் வேறேயன்றிப் பொருளால் வேருகாவென்றறிதல் அவசியமானது.

ஸர்வஸித்திப் பிரதசக்ரம் :— நிதித்தியாஸனமாகும் இந்த எட்டாவது ஆவரணத்தால் "ஸர்வஸித்தி" யென்று கூறத்தக்க ஜீவப்பிரஹ்மைக்கியம் ஸித்திப்பதால் இதற்கு ஸர்வஸித்திப்பிரதசக்ரமென்னும் பெயர் ஏற்பட்டுள்ளது.

அதிரஹஸ்யயோகினிகள் :—கேவலம் ஆத்மாகாரவிருத்தியோடு சேர்ந்துள்ள காரணத்தாலும், அவ்விருத்தியானது ஸூக்ஷ்மாதிஸூக்ஷ்மதமமாயிருப்பதாலும் இந்த சக்ரத்தை உபாதியாயுடைய சித்சக்திக்கு அதிரஹஸ்ய யோகினிகள் யென்னும் பெயர் ஏற்பட்டுள்ளது தகுதியேயாகும்.

த்ரிபுராம்பா சக்ரேஶ்வரி :— நிதித்தியாஸனத்தோடு கூடிய நிலையானது ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணசரீரங்களுக்கு அதீதமாயுள்ளது. இதுவே துரீய நிலையென்றுங் கூறத்தகும். இது சுத்தஸத்துவப்பிரதான அகண்டாகார வ்ருத்தியோடு கூடியதாகும். இதை யுபாதியாய்க்கொண்டு விளங்கும் சித்சக்திக்குத் த்ரிபுராம்பா சக்ரேஶ்வரி யென்றபெயர்.

"वामादीनां पुराणां तु जननी त्रिपुराम्बिका"

என்பது யோகினீ ஹ்ருதய வாக்கியமாம்.

இச்சா ஸித்தி :—ஸர்வ பீஜமுத்திரை :—

**सदेव सोम्येदमग्र आसीत्** என்னும் பிரமாணத்தின்படி, "ஜகத் ஜீவபரவடிவ ஸர்வப்பிரபஞ்ச சிருஷ்டிக்குமுன் ஸத்

தாஸ்வரூப சித்சக்தியே இருந்தது. அதுதான் ஸர்வப் பிரபஞ்ச ஸ்ருஷ்டியின் பீஜமாகும். அதனது இச்சையாலே தான் ஸர்வமும் உண்டாயின" என்னும் திட நிச்சயம் நிதித்தியாஸன ஸ்வரூப ஸர்வ அநாத்மதிருஷ்டிப் பிரவிலாபநிலையில் ஏற்படுகின்றது. ஆதலின் இவ்வாவரணத்தில் இச்சாஸித்தியும் ஸர்வ பீஜமுத்திரையும் வியாபித்திருக்கின்றன வென்றறிதல் அவசியம்.

ஆவரணதேவதைகள் :—

1. மஹாகாமேஶ்வரீ = வாஸனக்ஷயம்.
2. மஹாவஜ்ரேஶ்வரீ = மனோநாசம்.
3. மஹாபகமாலினீ = தத்துவஞானம்.
4. மஹாத்ரிபுரஸுந்தரீ = பிரஹ்மாத்மைக்கிய அபரோக்ஷஞானம்.

நிதித்தியாஸனத்தின் பரிபாகாவஸ்தையே ஸவிகல்ப ஸமாதியாயிருத்தலின் ஸமாதிநிதித்தியாஸனங்களை வெவ்வேறாகப் பிரித்தல் தகுதியன்று. இவை இரண்டுக்கும் அவிநாபாவ ஸம்பந்தமுளது; ஆதலின் பிரிக்கவும் முடியாது. இதன் பிரமாணமாவது :—

"अष्टाचक्रा नवद्वारा" इति श्रुतौ बिन्दुचक्रस्य त्रिकोणचक्र एवान्तर्भावमभिप्रेत्य । (யோ. ஹ்ரு. வியாக்கியானம்).

ஆதலின், பிந்துவையுபாதியாயுடைய மஹாத்ரிபுரஸுந்தரியும் இவ்வாவரணதேவதைகளில் அந்தர்ப்பூதையேயாகும்.

ஞாதா ஞானம் ஞேய மென்னும் சுத்தத் த்ரிபுடியுமற்று விளங்கும் அதிஷ்டானசின்மாத்திர பாவனையே இவ்வாவரணத்தின் பிந்து தர்ப்பண வாஸனையாகும்.

இந்த ஆவரணமானது ஞானபூமிகைகளுள் நான்காவதும் ஐந்தாவதுமான ஸத்துவாபத்தி அஸம்ஸக்திகளின் வடிவமாயிருக்கின்றது.

ஸ்வரூபஸத்தையின் அடைவு ஸத்துவாபத்தியாம். அஸம்ஸக்தியாவது, தேகாதிகளில் யானென்னும் திரிபும், விஷயங்களில் எனதென்னும் மயக்கமும் ஒழிந்த நிலையாகும். இதனால் அபாஞபாதக ஆவரணத்தின் (மறைப்பின்) ஒரு பகுதியான விபரீதபாவனை நாசமாகின்றது. ஸ்வஸ்வரூப விளக்கத்திற்குத் தடைகளாயுள்ள ஸம்ஶய விபரீதங்கள் மனனநிதித்தியாஸனங்களால் நீங்க, அந்த க்ஷணமே ஆத்மாபரோக்ஷஞானம் ஸித்திக்கின்றது.

### ஒன்பதாவது ஆவரணம்.

இது ஸ்ரீசக்ரமத்தியிலுள்ள பிந்து வடிவினது.

இது ஸவிகல்பஸமாதிவடிவ துரீயாவஸ்தையினதென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः।**

என்று மாண்டூக்ய ஶ்ருதி கூறுவதும் இதையேயாகும்.

**अहमेव परं ब्रह्म ब्रह्माहमिति संस्थितिः ।**
**समाधिः स तु विज्ञेयः सर्ववृत्तिनिरोधकः ॥ १ ॥**
**निर्विकारतया वृत्त्या ब्रह्माकारतया पुनः ।**
**वृत्तिविस्मरणं सम्यक्समाधिरभिधीयते ॥ २ ॥**
**यत्समत्वं तयोरत्र जीवात्मपरमात्मनोः ।**
**समस्तनष्टसंकल्पः समाधिरभिधीयते ॥ ३ ॥**

(தாத்பரியம்). 1. "நானே பிரஹ்மம்; பிரஹ்மமே நான்" என்னும் ஸம்சயவிபரீதங்களற்ற திடஞானந்தான்

மனோவ்ருத்திகள் யாவற்றையும் நாசம் செய்யும். இந்த திட அபரோக்ஷஞானமே ஸமாதியாம்.

2. நிஸ்தரங்கஸமுத்திரம்போல் நிர்விகாரமாயுள்ள சுத்த சித்தமானது நிதித்தியாஸனத்தின் முதிர்ச்சியால், பிரஹ்மாகாரமாய் விளங்குவதும், அநாத்மவ்ருத்திகளை நன்றாய் மறப்பதும் எந்த நிலையிலோ அந்த நிலை ஸமாதி யெனப்படும்.

3. சித்தத்திலுள்ள கற்பனாசக்தி யொழிந்து ஸமஸ்த ஸங்கல்பங்களும் நாசமானபோது ஜீவப்பிரஹ்மங் களுக்கு ஐக்கியமேற்படும். இந்த ஐக்கிய அபரோக்ஷமே ஸமாதியாகும்.

ब्रह्माकारमनोवृत्तिप्रवाहोऽहंकृतिं विना ।
संप्रज्ञातसमाधिः स्याद्ध्यानाभ्यासप्रकर्षतः ॥

நிதித்தியாஸன அப்பியாஸத்தின் அதிசயத்தினால் அத்தியாஸமாய்த் தோன்றும் அஹங்காரமற்றுப் பிரஹ்மாகாரமாய் நிலைத்துள்ள சுத்தஸத்துவப்பிரதான ஆத்மகோசரமனோவ்ருத்தியின் பிரவாஹமே ஸம்ப்ரஞ்ஞாத அல்லது ஸவிகல்ப ஸமாதி யாமென்று உபநிஷத்து கூறுகின்றது. இந்த ஸவிகல்ப ஸமாதிஸ்திதிதான் பிந்து சக்ரத்தின் தத்துவமாகும்.

இந்த பிந்து சக்ரத்தில் காமேஸ்வரரும் காமேஸ்வரியும் அதிஷ்டிதராய் இருக்கின்றனர். காமேஸ்வரர் தத்பதலக்ஷ்யார்த்த வடிவ நிர்விசேஷப் பிரஹ்மமாவர். காமேஸ்வரீ த்வம்பதலக்ஷ்யார்த்த கூடஸ்தஸாக்ஷிஸ்வரூபிணியாவள்.

स्वसंवित्त्रिपुरादेवी लौहित्यं तद्विमर्शनम् ।

என்பது இதற்குப் பிரமாணமாம்.

பிந்துவிற்கு ஸர்வாநந்தமயசக்ரமென்றுபெயர். இந்த சக்ரத்தின் யோகினி பராபராதிரஹஸ்யயோகினி யெனப் படுவள். சக்கிரேஸ்வரிக்கு மஹாத்ரிபுரஸுந்தரீ யென்று பெயர். இதில் பிராப்திஸித்தியும் ஸர்வயோனிமுத்திரையும் வியாபகமாய் இருக்கின்றன.

ஸுஷுப்திரூப மூன்றுவது ஆவரண சக்ரேஸ்வரி த்ரிபுரஸுந்தரீ யென்றும், ஸமாதி ரூப ஒன்பதாவது ஆவரண சக்ரேஸ்வரி மஹாத்ரிபுரஸுந்தரீயென்றும் கூறப்படுவதன் ரஹஸ்யம் கூர்மையாய்க் கவனிக்கத் தக்கது.

ஸர்வாநந்தமயசக்ரம்:—

"आनन्दो ब्रह्मेति व्यजानात्";

"एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति"

என்னும் ஶ்ருதிகளின்படி இந்த சக்ரமானது ஸர்வாநந்த ஸமஷ்டிபூத பரமாநந்தஸ்வரூபமாயிருக்கின்றது. ஆத லால்தான் बिन्द्वभिन्नपरब्रह्मात्मके बिन्दुचक्रे என்று பத்ததி கூறுகின்றது.

वेदकवेद्ययोरहंतेदंतयोः शक्तिशिवयोरभेदैक्यविमर्शभूमि-रेव बिन्दुचक्रमिति ज्ञेयम् ।

என்னும் அபியுக்தவசனம் இங்கு அறியத்தக்கது. இது தான் காமகலாரூபம். இது வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத ஸ்வரூபமாகையால், இந்த சக்ரத்தின் யோகினி பராபராதிரஹஸ்யயோகினி யென்று கூறப்படுவள்.

மஹாத்ரிபுரஸுந்தரீ சக்ரேஸ்வரி:—எங்ஙனம் அத்தி யாஸத்தினுல் ஏற்பட்ட த்வைதப்பிரபஞ்சம் ஸ்தூல, ஸூ க்ஷ்ம, காரணமென்னும் மூன்றுசரீரங்களோடுகூடி விள ங்குகின்றதோ அங்ஙனமே அத்தியாஸ நிவ்ருத்தியின்

பொருட்டு ஏற்பட்ட வித்யாப் பிரபஞ்சமும் மூன்றுசரீரங்களோடுகூடி விளங்குவதாகும். அவை வித்யாஸ்தூல சரீரம், வித்யாஸூக்ஷ்மசரீரம், வித்யாமஹாகாரணசரீரம் என்பனவாம். இவை முறையே, மனன, நிதித்தியாஸன, ஸவிகல்பஸமாதிகளே யாகும். அஷ்டகோண, த்ரிகோண, பிந்துசக்ரங்களே வித்யாத்ரிபுரசக்ரங்களாகும்.

அவித்யாகாரணசரீரமாகும் ஸுஷுப்தி அவஸ்தைவடிவ அஷ்டதளகமல மென்னும் மூன்ருவது ஆவரண சக்ரேஸ்வரி த்ரிபுரஸுந்தரீ யென்றும், வித்யாமஹாகாரணசரீரமாகும் ஸவிகல்பஸமாதி யென்னும் துரீயாவஸ்தைவடிவ பிந்து வென்னும் ஒன்பதாவது ஆவரண சக்ரேஸ்வரி மஹாத்ரிபுரஸுந்தரீ யென்றும் கூறப்படுவதனுல் இந்நூலில் கூறப்பட்டுள்ள ஸ்ரீசக்ரத்தின் தத்துவமும், ஆவரணபூஜையின் வாஸனையும், ஆவரண தேவதைகளின் பாரமார்த்திகஸ்வரூபமும் சாலப் பொருத்த முடையனவேயாகு மென்றறியத்தக்கது.

“शुद्धाद्वैतस्वरूपोऽहम्” அவித்யாஸம்பந்தம் ஒரு சிறிதுமின்றி, அத்வைதஸ்வரூபமாயுள்ளதுவே அஹம்பத லக்ஷ்யார்த்த ஆத்மவடிவம். ஆதலின் ஸச்சிதாநந்த பராஹந்தா ஸ்வரூபபரதேவதை யொருவளே இந்த ஆவரண தேவதை யாவள். “नान्यत् किञ्चनमिषत्; नेह नानास्ति किंचन” என்னும் ஶ்ருதிகள் இங்கு அறியத் தக்கன.

பிராப்தி ஸித்தி :—

तुरीयातीतपदपरशिवविश्रान्तिलक्षणां सिद्धिं प्रापयति ददातीति प्राप्तिसिद्धिः ॥

துரீயாதீத நிர்விசேஷப் பிரஹ்மஸ்வரூப ஸித்தியை யருளுவதால் இதற்கு பிராப்தி ஸித்தி யென்று பெயர்.

ஸர்வயோநி முத்திரை :—ஜீவப்பிரஹ்மைக்கிய மென்னும் சிவசக்திஸாமரஸ்யத்தினுல் உத்பூதமான பிரஹ்மாநந்த ஸ்வரூபமாயிருக்கும் ஸ்திதிக்கு ஸர்வ யோநி முத்திரை யென்று பெயர். பிந்துவானது ஸ்ரீசக்ரத்தில் த்ரிகோணத்திற்குச் சம்பந்தப்படாமல் தனியாய் இருக்குங் காரணத்தால் அதன் தத்துவமானது அஸ்பர்ஶயோகமென்னும் ஸமாதியாய்த்தான் இருக்க வேண்டுமென்று ஏற்படுகின்றதல்லவா?

## துரீயவித்யை. (௮௨)

இது துரீயாவஸ்தை யென்னும் ஸவிகல்ப ஸமாதியில் அநுபவிக்கப்படும் சிவசக்திஸாமரஸ்யம் அல்லது ஜீவப்பிரஹ்மைக்கிய ஸ்வரூபமாயுள்ளது. இதற்கே மஹாபூர்த்தி வித்யை யென்னும் வேறு பெயர் சாஸ்திரங்களில் கேழ்க்கப் படுகின்றது. இது தான் ஸ்ரீவித்யையின் அவதி. அகண்டாகார விமர்ச சக்தியுங் கூட மஹாப்பிரகாசத்தில் ஒடுங்கும் நிலேயே இதுவாகும்.

அத்வைத போதமே ப்ரஹ்மாநந்தமயசக்ரமாம். இது தான் மஹோட்டியாண பீடமுமாகும்.

**ततः पूर्वापरे व्योम्नि द्वादशान्तेऽच्युतात्मके ।**
**ओड्याणपीठे निर्द्वन्द्वे निरालम्बे निरञ्जने ॥**

என்னும் யோகசிகோபநிஷத்தின் பிரமாணப்படி, மஹோட்டியாண பீடமே அத்வைதாவஸ்தான வடிவமாமென்றேற்படுகின்றது.

துரீயாதீதாவஸ்தையின் அதிஷ்டானமாயும், சாந்தியதீத கலேயின் வடிவமாயும், பிரகாசவிமர்சங்களின் ஸாமரஸ்யவடிவ பரப்பிரஹ்மஸ்வரூபமாயும் உள்ளது

இந்த துரீய வித்யையாம். இது தான் மேலாகிய அம்ருத வடிவ மோக்ஷமாகும். ஸர்வமந்த்ரங்கள், ஸர்வபீடங்கள் (மனத்தின் அவஸ்தைகள்) ஸர்வயோகங்கள், ஸர்வவாக்குகள், ஸர்வஸித்திகள், ஸர்வவீரர்கள் (ஞானிகள்) முதலியவற்றை நியமிப்பதாயுள்ள ஒப்பற்ற நிலையாகும். துரீயாதீதஸ்வரூப ஸாபேக்ஷிக நிர்விகல்ப ஸமாதியென்னும் ஸ்திதியும் இதுவேயாம்.

இங்கே ஸர்வகாமஸித்தியும் ஸர்வத்ரிகண்ட முத்திரையும் (அபின்னமாய்) வியாபித்திருகின்றன. பிரஹ்மாத்மைக்கியஞான காமணேயுமற்றுள்ள ஸ்திதியே ஸர்வகாமஸித்தியாம். அகண்டமாயுள்ள தன் ஸ்வரூபத்தில் த்ரிகண்டமாகும் ஸர்வபிரபஞ்சமும் தக்தபடம் (எரிந்த வஸ்திரம்) போலும், ஸினிமாத்திரையிலுள்ள சித்திரங்கள்போலும் காணப்படும் நிலை. இது ஜீவன்முக்த நிலையைக் குறிப்பிடுவதாகும். இதில், அஸத்துவாபாதகம் (நாஸ்தி) அபானுபாதகம் (நபாதி) என்னும் இரண்டம்சங்களோடு கூடிய ஆவரணமென்னும் ஒரு அக்ஞானப் பகுதி பிரஹ்மஞானத்தால் நாசமாகின்றது. விக்ஷேபத் தோற்றம் மட்டும் எஞ்சியிருக்கின்றது. கானலில் ஜலமில்லவே இல்லையென்று நன்கறிந்த பின்னரும் பாதிதானுவ்ருத்தியால் ஜலத்தோற்றம் மட்டும் இருக்கின்றது. ஸூர்ய கிரணங்களும், மணல்வெளியும், நேத்திரேந்திரியமும் உள்ளவரை கானல் ஜலம் தோற்றிக்கொண்டேதான் இருக்கும். இது ஸோபாதிகப் பிராந்தி யெனப்படும். இத்தகையதுதான் பிரபஞ்சத்தோற்றமும்; கார்யகரண ஸங்காதவடிவசரீரம் உள்ளவரை ஞானிக்கு இவ்வுலகத் தோற்றமுண்டு. இத்தோற்றத்தினலும், கேவலந் தோற்றம் மாத்திரமாயுள்ள பிரபஞ்சானுபவத்தினலும் ஞானிக்

குத் துக்கம் ஸம்பவிப்பதில்லை. பிரபஞ்சாநுபவம் அந்த வீரபுருஷனுக்கு மறுபிறப்புக்குக் காரணமாவதுமில்லை. வறுத்த விதைகளை யுண்டால் பசிமாத்திரம் ஆறுமே தவிற, விதைத்தால் முளையா. இதைப் போல்வதே ஞானிகளது போகமும்.

இங்ஙனம் ஒன்பதாவது ஆவரணபூஜையானது ஸவிகல்பஸமாதிவடிவமாயும் ஜீவன்முக்தஸ்திதியாயுமிருப்பது விமர்சிக்கப்பட்டது.

ஆவரணபூஜை முற்றிற்று.

## பஞ்சபஞ்சிகாபூஜை. (௮௪)

இந்த பூஜையில் பிந்து சக்ரத்தின்மேல் ஸிம்ஹாஸனவடிவமாய் ஒன்றன்மேலொன்றாக அடுக்கிய ஐந்து பீடங்களாகப் பாவித்தல்வேண்டுமென்றும், அவற்றில் ஒவ்வொரு பீடத்திலும் ஐந்து ஐந்து ஸ்வரூபங்களைப் பூஜித்தல் வேண்டுமென்றும் பத்ததி கூறுகின்றது.

இப்பூஜையின் தத்துவம் வாஸநாசாஸ்திரங்களில் எங்கும் கூறப்படவில்லை. நாமும் இதைப்பற்றி விமர்சிக்காமல் விட்டுவிடலாமெனில் அங்ஙனம் செய்ய மனம் இடந்தரவில்லை. ஆதலின் குருநாதரது சரணாநுக்கிரஹம் ஒன்றையே ஸஹாயமாய்க்கொண்டு இதன் வாஸனை ஒருவாறு விமர்சிக்கப்படுகின்றது.

பிந்துசக்ரம் ஸவிகல்பஸமாதியாமென்று முன் கூறப்பட்டது. அதன்மேல் ஐந்து ஸிம்ஹாஸனங்களுள்ளனவெனில், ஸவிகல்பஸமாதிக்குமேல் ஸஹஜஸ்திதியாகும் நிர்விகல்பஸமாதிவரையில் ஐந்து ஸ்திதிகள் இருக்கின்றனவென்று ஊஹித்தற்குரியதாக இருக்கின்றது.

ஸமாதியவஸ்தையின் மனோவ்ருத்தி சோதனை :—

ஸவிகல்பஸமாதிக்குமேல், ஸாம்யம், லயம், விநாசம், அத்தியந்தாபாவம், ஐக்கியம் என்னும் ஐந்து ஸ்திதிகள் உண்டு. அவற்றின் விவரமாவது :—

1. ஸாம்யம் :—ஸமமாய் நீரும் பாலும் கலந்துநின்றாற்போல ஜீவோபாதியானது அகண்டப்பிரஹ்மோபாதியில் சுத்த ஸூக்ஷ்மத்ரிபுடித் தோற்றத்தோடு கலந்து நிற்கும் நிலை. த்ரிவேணீஸங்கமத்தில் யமுனையின் கரிய நீரும் கங்கையின் வெள்ளிய நீருங் கலந்து ஓடினும், நிறத் தோற்றம் கொஞ்சதூரம்வரை யிருக்கும். இதைப்போல்வதுதான் ஸாம்யஸமாதியுமாகும். இந்த ஸமாதிநிலையின் தத்துவத்தோடுகூடியது பஞ்சபஞ்சிகையில் முதற்பஞ்சகமான லக்ஷ்மீ பஞ்சகமாகும்.

2. லயம் :—ஜீவோபாதி (அஹம்) பிரஹ்மோபாதி (பிரஹ்மம்) என்னும் சுத்தஸூக்ஷ்மத்ரிபுடியும் லயித்து ஏகமாய்த்தனித்த நிலையே லயரூபஸமாதியாம். இந்நிலையை இரண்டாவது பஞ்சகமாகும் கோசாம்பாபஞ்சகம் அறிவிக்கின்றதென்று கூறத்தகும்.

3. விநாசம் :—அகண்டாகாரவ்ருத்திஸ்வரூப அகண்டோபாதியின் நாசரூப நிவ்ருத்தியே விநாசவடிவஸமாதியாம். நிவ்ருத்தி இரண்டுவகைப்படும். ஒன்று லயரூபம்; மற்றொன்று நாசரூபம். ஸுஷுப்தியில் பிரபஞ்சத்தின் லயரூப நிவ்ருத்தியும், துரீயத்தில் அதன் நாசரூப நிவ்ருத்தியும் இருக்கின்றன. இங்ஙனம், லயரூபஸமாதியில் அகண்டோபாதியின் லயரூபநிவ்ருத்தியும், விநாசரூபஸமாதியில் அவ்வுபாதியின் நாசரூபநிவ்ருத்தியும் அறியப்படுகின்றன. இது மூன்றாவது பஞ்சகமாகும் கல்பலதாபஞ்சக தத்துவமாம்.

4. அத்தியந்தாபாவம்: — ஸ்வபாவஸ்திதியைத்தவிர ஜீவபோதமென்றும், பிரஹ்மபோதமென்றும், அகண்ட போதமென்றும் பின்னபின்னமாய் அறியப்படுவதெல்லாம் ஸாபேக்ஷிகமே. கேவலஸ்திதியிலல்ல. இது, பேதம் முக்காலத்திலும் இல்லையெனக்கொள்ளும் நிலையாம். இது நான்காவது பஞ்சகமாகும் காமதுகாபஞ்சக வாஸனையாகும்.

5. ஐக்கியம்:—இந்த ஸமாதியை அதீதோதிதமென்றும் சில அநுபவசாஸ்திரங்கள் கூறுகின்றன. இது போதாதீதஸ்வபாவமாய் விளங்குகின்றதெனக்கூட சொல்லத்தகாதநிலையாகும். ஆதலின் இது அநாமாக்கியை; அசிந்தியமும், இது, அது எனக் குறிக்கமுடியாததும் ஆகும். இந்த ஸமாதியின் தத்துவவடிவமானது ஐந்தாவது பஞ்சகமாகும் ரத்னம்பாபஞ்சகமாம்.

இங்ஙனம், பஞ்சபஞ்சிகாபூஜைக்கு ஒருவாறு வாஸனை கூறுதல் தகுதியாயிருக்குமென்று தோன்றுகின்றது. இங்கே கூறப்பட்ட ஸமாதிநிலைகளின் விவரம், ஸ்ரீபிரஹ்ம நிஷ்ட பண்டிதசிகாமணியாய் விளங்கியிருந்த கோடகநல்லூர் ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "ஸ்வாநுபூதிரஸாயனம்" என்னும் பிரஹ்மாநுபவசாஸ்திரத்தில் கண்டறிக.

இங்ஙனமன்றிப் பஞ்சபஞ்சிகைகளுக்கு வேறுவகையாகவும் வாஸனை கூறலாம். அது எவ்வாறெனின்

| | | |
|---|---|---|
| முதற் | பஞ்சகம் | —ஆந்தரத்ருஶ்யாநுவித்த ஸமாதி |
| இரண்டாவது | ,, | —ஆந்தர சப்தாநுவித்த ஸமாதி |
| மூன்றாவது | ,, | —பாஹ்யத்ருஶ்யாநுவித்த ஸமாதி |
| நான்காவது | ,, | —பாஹ்யசப்தாநுவித்த ஸமாதி |
| ஐந்தாவது | ,, | —பாஹ்யநிர்விகல்ப ஸமாதி |

என்பனவாம்.

## ஷட் தர்சனபூஜை (௮௯)

பௌத்தம், வைதிகம், சைவம், ஸௌரம், வைஷ்ண வம், சாக்தம் என்னும் ஆறுதர்சனங்களிலும், பிரஹ்மா பின்ன அத்விதீய சித்சக்தியே அதிஷ்டானமாய் விளங்கி அந்த அந்த தர்சனத்தின் தேவதையாக நின்று அந்த அந்த உபாஸகர்களுக்கு அருள்புரிகின்றதென்னும் தத்து வமே ஷட்தர்சன பூஜையாமென்க.

## ஷடாதாரபூஜை. (௯௦)

சரீரத்திலுள்ள ஷட்சக்ரங்களாகும் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞையென்னும் ஆறு ஆதாரசக்ரங்களிலும் அந்தர்யாமி யாயுள்ள சித்சக்திக்கு முறையே, ஸாகினி, காகினி, லாகினி, ராகினி, டாகினி, ஹாகினியென்னும் பெயர்கள் சாஸ்திரங்களில் கூறப்படுகின்றன. இவை உபாதிபேதத் தால் ஏற்பட்டனவாகும். இந்த ஆறு யோகினிகள்தாம் கணநாதர், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன் (ஸதாசிவன்), ஜீவன், பரமாத்மாவாகும் இவர்களின் ஸ்வரூபமாய் விள ங்குபவராவர். நாநாவாய்த் தோன்றும் ஸகல தேவதை களும் பராசக்திஸ்வரூபமே யென்னும் திடஞானம் இதனு லுண்டாகின்றது.

## ஷடாம்நாயபூஜை. (௯௧)

ஆம்நாய மென்னும் பதம் வேதம் என்னும் பொரு ளையுடையதாகும்.

ऋचां प्राची महती दिगुच्यते दक्षिणामाहुर्यजुषां मनीषिणः ।
अथर्वणामङ्गिरसां प्रतीची साम्नामुदीची महती दिगुच्यते ॥

என்னும் ஶ்ருதிப்பிரமாணத்தின்படி பூர்வாதி நான்கு ஆம்நாயங்களும் முறையே, ருக், யஜுஸ், அதர்வண, ஸாம வேதங்களின் ஸ்வரூபமாகவும், ஊர்த்வாம்நாய மானது வேத சிரோபாகமாகும் உபநிஷத்துக்களின் வாச்சியார்த்தவடிவமாகவும், அநுத்தராம்நாயமானது அவ்வுபநிஷத்துக்களின் லக்ஷ்யார்த்தஸ்வரூபமாகவும் இருக்கின்றன வென்று ஆம்நாயரஹஸ்யம், ஆம்நாயஸாரஸங்கிரஹமென்னும் நூல்களால் ஏற்படுகின்றன. கர்ம, உபாஸனா, ஞானமென்னும் மூன்று காண்டங்களையுடைய வேதத்தின் பரமதாத்பரியமாய் விளங்குவது பிரஹ்மாபின்ன அஹம்பதலக்ஷ்யார்த்த அத்விதீய சித்சக்தியேயாமென்னும் திடபாவனை ஏற்படுவதே ஆம்நாயபூஜையின் பரமப் பிரயோஜனமாகும்.

இந்த ஆறு ஆம்நாயங்களிலும் ஸப்தகோடி மஹாமந்த்ரங்கள் அடங்கியுள்ளன. எல்லா மந்த்ரங்களும் அத்விதீய பிரஹ்மாபின்ன சித்சக்தியையே பிரதிபாதிக்கின்றன வென்றறிதல் அத்தியாவசியம்.

## தண்டநாதாதி நாமாவளியர்ச்சனம். (௧௩)

இதில் தண்டநாதை, மந்த்ரிணி, லலிதாம்பாள் இம்மூவரின் நாமாவளிகள் அடங்கியிருக்கின்றன. இந்த நாமாவளிகள் ஸ்ரீலலிதோபாக்கியானத்தில் கூறப்பட்டுள்ளன. மஹாவாராஹியே தண்டநாதை யென்னும் ஸேநாநாயகியாம்.

ஸமஷ்டி அஹம்பத வாச்சியார்த்தமாய் விளங்கும் பரதேவதாஸ்வரூப ஸ்ரீலலிதாமஹாத்ரிபுரஸுந்தரியின் அஹங்கார தத்துவமே மஹாவாராஹீரூபமாகும்.

सा भगवती जगत्सृष्ट्वेदं तस्मिन् देवादीनुत्पाद्य तेषामनुगृह्य स्वभक्तानां पुरुषार्थाय भण्डासुरहरणायापि च या ब्रह्मणः स्वप्रकाशा चित् देवीरूपेण अभिव्यक्ता सती धर्मसंस्थापनार्थाय ततश्चानेकरूपेण पश्चान्मरीच्यादयोऽभिव्यक्तास्तेषां ज्ञानैश्वर्यबलतेजोभिः सदा संपन्नत्वमिति यावत् ।

என்று ஸ்ரீகௌடபாதஸூத்ரங்களுக்கு ஸ்ரீஶங்கராரண்ய முனிகளின் வியாக்கியானத்தில் கூறியுள்ளபடி பரப்பிரஹ்மசக்தியாகும் சித்சக்தி இந்தப் பிரபஞ்சத்தை சிருஷ்டித்து அதில் தேவமநுஷ்யாதி ஸகலர்களையும் உத்பத்தி செய்து அவர்களுக்கு அநுக்கிரஹம் செய்வதற்காகவும், பக்தர்களுக்குப் புருஷார்த்தங்களை யருளுவதற்காகவும், அஞ்ஞானமென்னும் பண்டாஸுரனை ஸம்ஹாரம் செய்வதற்காகவும், தான் தேவீரூபத்தை யடைந்து தர்மத்தை ஸ்தாபித்தற்பொருட்டுத்தானே பல சக்திகளாகவும் ஆனுள் என்று ஏற்படுகின்றது. இதன்படி, பரதேவதையின் அஹங்காரமே மஹாவாராஹீ யென்றும், புத்திதத்துவமே மந்த்ரிணி யென்னும் ஶ்யாமளையென்றும் கூறப்படும். பரதேவதையே ஸ்ரீலலிதாம்பாளாகும்.

सा ब्रह्माभिन्नचित् स्वसामर्थ्यात् तेजोरूपमापन्ना सती नामरूपविशिष्टा सती च यदा (पराभट्टारिकात्मकश्यामात्मकशाम्भव्याख्यकोलमुख्यात्मकेति) त्रिविधा जाता ॥

என்னும் சங்கராரண்யமுனிகளின் பாஷ்யவாக்கியங்கள் இங்கு நன்கு அறியத்தக்கன. இதனால் பரதேவதையின் புத்தி அஹங்கார உபாதிகளே மந்த்ரிணியும் தண்டநாதையுமாயிருக்கின்றனர் என்றேற்படுகின்றது.

## ஸஹஸ்ரநாமம், த்ரிசதீ.

இவைகளின் தத்துவத்தை நன்கு அறிந்து அந்நாமங்களின் அர்த்தாநுஸந்தானத்தோடு நிதித்தியாஸனம் செய்தல் அவசியம். பூஜையென்பது பிரஹ்மாத்மைக்கியமேயாமென்று முதலில் பூஜாஸங்கேதத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது. ஆதலின் இவற்றினால் அர்ச்சனைசெய்வதன் தத்துவம் நிதித்தியாஸனமும் ஸமாதியுமேயாகும். நான்காவது வேற்றுமையோடு "**नमः**" என்னும் பதமும் பரதேவதாநாமங்களாகும் **श्रीमाता** என்பது முதல் **श्रीललिताम्बिका** என்பது வரையிலுள்ள ஆயிரமும், **ककाररूपा** என்பது முதல் **ह्रींकारपरसौख्यदा** என்பதுவரையிலுள்ள முந்நூறும் மஹாமந்த்ரஸ்வரூபங்களாமென்று ஸந்தேஹமறத் தெளிதல் அத்தியாவசியமாம். இவ்விஷயம், கும்பகோணம் ஜநார்த்தன ப்ரிண்டிங்க் ஓர்க்ஸ்கம்பெனியாரால் வெளியிடப்பட்டுள்ள ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத் தமிழ்மொழிபெயர்ப்பு நூலின் முகவுரையிலும், சென்னை ஸ்ரீபிரஹ்மவித்யாவிமர்சினீ ஸபையின் வரிவஸ்யாரஹஸ்யத் தமிழ்மொழிபெயர்ப்பிலும், சென்னை வேப்பேரி N. ராஜம் கம்பெனியார் வெளியிட்ட ஸ்ரீலலிதாத்ரிசதீ பாஷ்யத் தமிழ்மொழிபெயர்ப்பிலும் நன்கு அறியலாம்.

## தூபம், தீபம், நைவேத்தியம். (௯௪-௯௫)

முன் சதுஷ்ஷஷ்டியுபசார ஸந்தர்ப்பத்தில் இவற்றின் வாஸனை யொருவாறு கூறப்பட்டிருக்கின்றது. ஆயினும் இங்கே மற்றொருவிதமாய்க் கூறப்படுகின்றது.

**समस्तविषयाणां मनसः स्थैर्येण सर्वदा स्वीकरणं धूपः ।**

என்று பாவனோபநிஷத்தில் (பாடபேதத்தில்) பிரதி

பாதிக்கப்பட்டபடி சப்தஸ்பர்சாதி ஸகலவிஷயங்களையும், மனத்தின் ஏகாக்கிரத்தன்மையோடு ஸதா பிரஹ்மா பின்ன ஆத்மஸ்வரூபத்தில் ஐக்கியம் செய்தலே தூபமாகும். புகையற்றுத் தணல்வடிவமாயுள்ள அக்கினியில் தசாங்கம், ஸாம்ப்ராணி, மட்டிப்பால், அகரு முதலிய திரவியங்களைப் போடுவதால் நறுமணம்வீசும் புகை கிளம்புகின்றது. இதற்குத்தான் தூபம் போடுதலென்றுபெயர். தசாங்கம் முதலிய திரவியங்களிலுள்ள வாஸனுபாகமானது அக்கினி யிலிடுவதால் வேறுபிறிக்கப்படுகின்றது. இங்ஙனமே, சிதக்னியாகும் பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூபத்தில் சப்த ஸ்பர்ஶாதிவிஷயங்களை ஹோமஞ்செய்வதால் ஞானயோக மஹிமையாகும் வாஸனை வீசுகின்றது. எங்ஙனம் ஸுவா ஸனையையுடைய புஷ்பவிருக்ஷமானது புஷ்பித்தகாலத்தில் அதன் வாஸனை வெகுதூரம் வீசுமோ, அங்ஙனமே புண் ணியவான்களான ஞானயோகாப்பியாஸிகளின் மஹிமை பதினன்கு உலகங்களிலும் வீசும் என்று

"यथा वृक्षस्य संपुष्पितस्य दूराद्गन्धो वाति एवं पुण्यस्य कर्मणो दूराद्गन्धो वाति"

என்னும் ஶ்ருதி கூறுவது இங்கு அறியத்தக்கது.

தீபம். (௯௫)

सुप्रकाशो महादीपः सर्वत्र तिमिरापहः ।
स बाह्याभ्यन्तरज्योतिर्दीपोऽयं प्रतिगृह्यताम् ॥

ஸதா ஸ்வயம்பிரகாசமாயுள்ள மஹாதேஜஸ்ஸாகும் பிரஹ்மத்தோடு ஐக்கியப்படுத்தும் விருத்திஞானமே தீபோபசாரதத்துவமாகும். விருத்திஞானத்தாலன்றி மற் றெதனுலும், உள்ளும் வெளியும் வியாபித்து ஆவரித்துள்ள

இருளாகும் அக்ஞானம் நாசமாகாது. இருளுக்கு விரோதி எங்ஙனம் தீபமோ, அங்ஙனமே மூலாக்ஞானத்திற்கு விரோதி விருத்திஞானமாம். இதற்குத் தான் அகண்டாகார விருத்தி யென்றும் பெயர்.

நைவேத்தியம். (௯௬)

**स्वशरीरघटकामृतभागानां जडतापनयेन चिन्मात्रताविशेषरूपं नैवेद्यम् ।**

என்று பாவநோபநிஷத்தும்,

**परिपूर्णचन्द्रामृतस्य एकीकरणं नैवेद्यम् ।**

என்று மண்டலப்பிராஹ்மணோபநிஷத்துங் கூறுவதைக் கூர்ந்து நோக்கின், நைவேத்யோபசாரத்தின் தத்துவம் வெளியாகின்றது.

பாஞ்சபௌதிக சரீரத்திலுள்ள ஜலபாகத்தின் ஜடாம்சத்தை மித்யாதிருஷ்டியாலொழித்து அஸ்திபாதிப்பிரியரூப அகண்டாகாரமாய்ப் பாவிப்பதே நைவேத்தியமாகும். இங்கே சரீரமென்னும் பதத்தால், போக்தா, போக்கியம், போகம், போகாயதனம் இவைகளையும் கொள்ளல் வேண்டும். சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியமென்னும் பஞ்சோபசாரங்கள், முறையே, ப்ருதிவி, ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம் என்னும் பஞ்சபூதாத்மகமானவை யென்பது மிகப்பிரஸித்தமன்றோ? அந்த அந்த பூதங்களின் உபாதிபாகங்களை யொழிப்பதே அந்த அந்த உபசாரங்களாம். உபாதி நிரஸன (நீக்க)த்தின் பொருட்டுச்செய்யும் பாவனாவிசேஷங்களே ஸம்ஸ்காரங்களாம். அவையாவன—

I. மூலமந்த்ரத்தினுல் நிரீக்ஷணம் :—நேத்திரங்களால் நைவேத்தியத்திரவியங்களைப் பார்த்தல் நிரீக்ஷணமாகும்.

நிரீக்ஷணத்தினுல் திருஷ்டிக்குட்பட்ட ரூபவத்வஸ்துவின் அதிஷ்டான சேதனமும், திரஷ்டா (பிரமாத்ரு) வின் சேதனமும் ஐக்கியப்பட்டுப் பிரமேயமாயுள்ள நிவேதித வஸ்துவின் பிரத்தியக்ஷஞானமுண்டாகின்றது. பொருள் ஞானமாக மாறும் ஒருவகை ஸம்ஸ்காரம் பார்த்தலென்னும் நிரீக்ஷணத்தினுலுண்டாகின்றது.

II. (1) அஸ்த்ர மந்த்ரத்தினுல் ப்ரோக்ஷணம்:—இதனுல் நைவேத்திய பதார்த்தங்களின் பேதகற்பனைக்கு நிமித்தமான நாமரூப உபாதிகளின் நீக்கம் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

(2) அம்ருதம்ருத்யுஞ்ஜய மந்த்ரத்தினுல் அபிமந்த்ரித்த ஜலத்தால் ப்ரோக்ஷணம். ம்ருத்யுவாகும் நாசத்தை வெல்லுவது நாசமற்ற அம்ருதஸ்வரூபந்தான். இது த்ரிகால அபாத்ய ஸத்தியவடிவமானது.

चित्पात्रे सद्धविः सौख्यं विविधानेकभक्षणम् ।

என்னும் பத்ததிப்பிரமாணத்தின்படி நிவேதனம் ஸத்ஸ்வரூபமா மென்று பெறப்படுகின்றது.

சக்ரமுத்திராப்ரதர்ஶனம் :—

हृदयग्रन्थिरस्तित्वे छेदने ब्रह्मचक्रकम् ।

என்னும் ஶ்ருதிவாக்கியத்தின்படி பிரஹ்மஞானமே சக்ரஸ்வரூபமாயுள்ள அஸ்திபாதிப்ரியவடிவ அகண்டாகார விருத்தியாமென்பது தாத்பரியமாம்.

“नैवेद्यजातं तादात्म्येन समर्पयेत्” நைவேத்திய வஸ்துக்களைப் பரதேவதைக்குத் தாதாத்மியமாய் ஸமர்ப்பித்தல்

வேண்டும் என்று பத்ததி கூறுகின்றது. "கற்பிதபேதம் வாஸ்தவ அபேதம் தாதாத்மியம்" என்பது தாதாத்மிய லக்ஷணமாகும். கற்பிதநாமரூப உபாதியை யொழித்து வாஸ்தவ ஸச்சிதாநந்த அதிஷ்டானஸ்வரூபத்தை யுணர்வதே தாதாத்மியமாம். உபாதிதான் தோஷமெனப்படும். நிவேதனவஸ்துக்கள் நேத்திரேந்திரியத்தாலும், கிராணேந்திரியத்தாலும், ரஸனேந்திரியத்தாலும் உணரப்படுந்தன்மையே அவற்றிலுள்ள தோஷமாம்.

(3) தோஷநிரஸனம்: அத்தோஷத்தை (यं) வாயுபீஜத்தினுல் உலர்த்தி, (रं) அக்கினிபீஜத்தால் எரித்து, (वं) அம்ருதபீஜத்தால் நனைக்கின், அது ஒழிகின்றது. இங்ஙனம் பாவித்து, மஹாவாக்கியவடிவ மூலமந்த்ரத்தை யநுஸந்தானம் செய்யின், நைவேத்திய வஸ்துஜாதமானது தோஷரஹிதமாகிச் சின்மாத்திரஸ்வரூபமுடையதாகின்றது.

(4) இங்ஙனம் பாவித்துப் பின் அதைக் காமதேனு மந்த்ரத்தினுல் அபிமந்த்ரணம் செய்தல் வேண்டும். எது எல்லாவற்றையுந் தருமோ அது காமதேனு வெனப்படும். எல்லாவற்றையுந் தருவது யாதெனின் எதனையும் வேண்டாதிருக்கும் நிலையேயாகும். இதற்கு ஆப்தகாமத்துவமென்றுபெயர். இந்நிலை யாருக்கு வருமெனின் ஆத்மஞானிக்கேவரும். இது மிகப் பிரஸித்தமாம். **आत्मलाभ एव आप्तकामत्वम्** என்பது பிரமாணமாம். "போது மென்ற மனமே பொன் செயும் மருந்து" என்பது ஞானிகளின் வாக்கு. பரதேவதையே காமதேனுவாம். நைவேத்தியார்ஹமான வஸ்துவானது நிருபாதிக சின்மாத்திரமாய்ச் சேஷிக்கின், அதுவே காமதேனுவடிவ சித்சக்தியாகின்றது.

காமதேனு வித்தையின் அர்த்த விமர்சமாவது :—

அளவிட்டுக் கூறுதற்கு முடியாத ஸ்வரூபிணியாயும், ஸகலவிதமான வரங்களேயுமருள்பவளாயும், சித்ஸதாநந்த ரூபிணியாயும் உள்ள காமதேனுவே! ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயுமுள்ள ஸகல ஐஶ்வர்யங்களேயும், பாரலௌகிகமான மோக்ஷத்தையும் என் மனத்தில் நன்கு ஸ்புரிக்கச் செய்வாயாக!

**विच्चे**—**वित्** = ஞானம். **च** = ஸத். **ई** = ஆநந்தம்.

**श्रीं** = ஐஹிகாமுஷ்மிக ஐஶ்வரியங்களே

**परश्रीं** = பாரலௌகிக ஐஶ்வரியமாகிய மோக்ஷத்தை.

இங்ஙனம் மேலே கூறப்பட்ட ஸம்ஸ்காரங்களின் ரஹஸ்யம், நிவேதிதமாயுள்ள வஸ்துக்களே வித்தியாமயமாய்ப் பாவித்தலேயாகுமென்பது தெளிவாய்ப் புலப்படுகின்றதல்லவா? விசேஷார்க்கியாம்ருதத்தை நைவேத்திய வஸ்துக்களோடு சேர்த்து வைப்பது இந்த பாவனையை நன்கு திடப்படுத்தும் பொருட்டேயாகும்.

## குலதீபம். (௯௮)

குலமென்பது மாத்ருமானமேயஸ்வரூபத்ரிபுடியாகும். த்ரிபுடித் தோற்றம் பேதகற்பனையின் காரியம் த்ரிபுடி இரண்டுவிதம். ஒன்று பாஹ்யத்ரிபுடி ; மற்றொன்று ஆந்தரத்ரிபுடி. பாஹ்யாப்பியந்தரத்ரிபுடிகள் இரண்டும் ஆவித்யகமாம் ; என்றால், அவித்தையால் ஏற்பட்டனவாகும் ; ஆதலின் அசுத்தம். இவற்றின் அதிஷ்டானம் சுத்தசேதனமே யாகும். தீபம் என்னும் பதத்திற்கு ஞானம் அல்லது சேதனமென்பதே அர்த்தமாம்.

अन्तस्तेजः = ஸூக்ஷ்மப் பிரபஞ்சாத்மக ஆந்தர அசுத் தத்ரிபுடியின் அதிஷ்டான ஞானம்.

बहिस्तेजः = ஸ்தூலப் பிரபஞ்சாத்மக பாஹ்ய அசுத்த த்ரிபுடியின் அதிஷ்டானஞானம்.

அதிஷ்டானஞான நோக்கத்தினுல் இவ்விரண்டிற்கும் ஐக்கியம் பொருந்தும். இங்ஙனம் ஐக்கியம் செய்யின் மாத்ரு மானமேயங்களென்னும் அளவுகளுக்கு அதீதமாய்ப் பரிச்சேதமற்ற அகண்டப் பிரகாசம் ஸ்புரிக்கின்றது. இங்ஙனம் ஸ்புரித்த அகண்டப் பிரகாசத்தை மூன்று முறை அநுஸந்தானம் செய்து, பின்னர் அந்த அநுஸந்தானவடிவ அகண்டாகாரவிருத்தியையும் அந்த மஹாப் பிரகாசத்திலேயே நிவேதித்தல் வேண்டும்; என்றால் லயிப்பித்தல் வேண்டுமென்பது கருத்து. பாஹ்யத்ரிபுடியாகும் அசுத்த உபாதியை யொழித்தற்கு ஒரு அநுஸந்தானமும், ஆந்தரத்ரிபுடியாகும் அசுத்த உபாதியை யொழித்தற்கு ஒரு அநுஸந்தானமும், சுத்தத்ரிபுடியை ஒழித்தற்கு ஒரு அநுஸந்தானமும், ஆக மும்முறை அநுஸந்தானம் செய்தல்வேண்டு மென்று அறிதல் அவஶ்யம்.

## கற்பூர நீராஜனம். (௯௧)

கற்பூரஜோதியால் ஆத்மாபின்ன பரதேவதையைப் பிரகாசிப்பித்தல் நீராஜன மெனப்படும். ஸ்வயம்பிரகாச சித்சக்தியைப் பிரகாசிக்கச் செய்யும் மற்றொரு பிரகாசம் இல்லவே யில்லை யென்பது பரம ஸித்தாந்தமாம்.

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं
नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।

तमेव भान्तमनुभाति सर्वं
तस्य भासा सर्वमिदं विभाति ॥
न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।

என்பவை பிரஸித்தமான ஶ்ருதி ஸ்ம்ருதிப் பிரமாணங்களல்லவா?

ஆதலின், ஆத்மாபின்ன சித்சக்தியைப் பிரகாசிப்பித்தலென்பதன் தாத்பரியம் யாதெனில், சித்சக்தியை ஆஶ்ரயித்துள்ள அவித்தை அல்லது மாயையை யொழிப்பதேயாகும். அவித்தையை யொழிப்பது வித்தையே. ஆதலின் அகண்டாகார (அபேத) ஞானமே கற்பூரஜோதியாம். எங்ஙனம் ஜோதியில் கற்பூரம் நிஶ்ஶேஷமாய் நாசமடைகின்றதோ, அங்ஙனமே அகண்டாகாரவிருத்திவடிவ சித்ஜோதியில் நாமரூப (பேத) வடிவப் பிரபஞ்சம் மூலகாரணத்தோடு நாசமடைகின்றது. அகண்டஞானதீபமே கற்பூரஜோதியா மென்பது தாத்பர்யார்த்தமாம்.

மந்த்ரபுஷ்பம். (௯௯)

மந்த்ராத்மகஸ்வரூப புஷ்பத்தைப் பரதேவதைக்கு ஸமர்ப்பித்தலே புஷ்பாஞ்ஜலியெனப்படும்.

மனனம் செய்பவர்களைச் சோகஸாகரத்தினின்றும் கடக்கச்செய்வது யாதோ அதற்கு மந்த்ரமென்றுபெயர். அது ஜீவப்பிரஹ்மைக்கியபோதக மஹாவாக்கியமேயாகும். பிரஹ்மவித்யையாகும் விருக்ஷத்திற்குப் புஷ்பங்கள் வடிவமாயுள்ளவை ஆத்மகோசரவ்ருத்திகளேயாகும். இவற்றின் பலபூதமானது பிரஹ்மாத்மைக்கியாபரோக்ஷஞானமேயாகும். ஆதலின், ஜீவப்பிரஹ்மைக்கியவடிவ அகண்டாகாரவிருத்தியே புஷ்பமென்றும், புஷ்பாத்மகமாயிருப்பது மந்த்ரமென்றும் ஏற்படுகின்றது.

निरावरणसंविदुद्गमपरास्तभेदोल्लस-
त्पदास्पदचिदेकतावरशरीरिणि स्वैरिणि ।
रसायनतराङ्गिणीरुचितरङ्गसंचारिणि
प्रकामपरिपूरणि प्रसृत एष पुष्पाञ्जलिः ॥

"அவித்யோபாதியற்ற கேவல ஸம்வித்ஸ்வரூபமாயும், பேதங்களெல்லாம் ஒழிந்தவிடத்தில் ஸ்புரிக்கும் சின்மாத்திரஸ்வரூபிணியாயும், தன்மஹிமையில் விளங்குபவளாயும், பிரஹ்மாநந்தஸாகரத்தின் அலைகள் போன்று விளங்குபவளாயும், மஹாப்பிரகாசஸ்வரூப சிவத்தின் விமர்சவடிவமாயும், ஸகலகாமனுவடிவ மோக்ஷத்தையருள்பவளாயுமுள்ள பிரஹ்மாபின்ன கூடஸ்தஸ்வரூபிணியே! உனக்கு இந்த புஷ்பாஞ்சலியை ஸமர்ப்பிக்கிறேன்" என்பது மேலே உதாஹரித்த ஶ்லோகத்தின் தாத்பர்யமாம்.

இதை விமர்சித்துப் பார்ப்போமாயின், ஜீவப்பிரஹ்மைக்கிய அகண்டாகாரவிருத்திக்கு அத்வைதரூப ஐக்கியம் விஷயமாதல் ஸூசனையாகின்றது. அஞ்ஞானநீக்கமே விருத்தியின் பிரயோஜனமாம். ஆத்மாபின்ன பிரஹ்மம் ஸ்வயம் பிரகாசமாய் விளங்குகின்றது என்றறிதல் அத்தியாவஶ்யமாம்.

குறிப்பு:—இதுமுதல் இனிவருங் கண்டங்களுக்கு ஸாராம்சங்கள் கூறவேண்டிய அவஶ்யமில்லை. ஆதலின் விடப்பட்டன.

ஆறுவது கண்டம் முற்றிற்று.

# ஸபர்யாபத்ததிவாஸனா விமர்சம்.

—:o:—

## ஏழாவது கண்டம்.

### காமகலாத்தியானம் (௧௦௨-௧௦௪)

காமகலேயென்பது சிவசக்திகளின் ஸாமரஸ்யமே யாகும். "ஜீவப்பிரஹ்மைக்கியம்" என்று வேதாந்த சாஸ்திரங் கூறுவது இந்த சிவசக்திஸாமரஸ்யவடிவ காம கலேயையேயாகும். இது अहं என்னும் இரண்டக்ஷரங் கள்கூடிய ஒருபதத்தினுல் குறிப்பிடப்படுகின்றது. "अहमाकाराख्यसिद्धकामकलां" என்னும் அபியுக்த வசனமும்,

अहमित्येकमद्वैतं यत्प्रकाशात्मविभ्रमः ।
अकारः सर्ववर्णाग्र्यः प्रकाशः परमः शिवः ॥
हकारोऽन्त्यः कलारूपो विमर्शाख्यः प्रकीर्तितः ।
अनयोः सामरस्यं यत् परस्मिन्नहमि स्फुटम् ॥

என்னும் ஸங்கேதபத்ததி வசனமும் இங்கே விமர்சிக்கப் படுதல் அத்தியாவசியம். இதன் தாத்பர்யமாவது:— அஹம் என்பது ஒரொப்பற்ற அத்விதீயவஸ்துவென்றும், எல்லா அக்ஷரங்களிலும் முதலாவதாகிய अ காரமே பிரகாசவடிவ நிஷ்களபரசிவம் அல்லது காமனென்றும், கடைசி எழுத்தாகிய ह காரமே விமர்சவடிவ சித்சக்தி அல்லது கலேயென்றும், இவ்விரண்டக்ஷரங்களின் ஸாம

ரஸ்யமே (ஐக்கியமே) **अहं** என்னும காமகலையென்றும் வஸித்திக்கின்றதென்பதாம்.

**अशिरस्कं हकारान्तमशेषाकारसंस्थितम् ।**

**अजस्रमुच्चरन्तं स्वं तमात्मानमुपास्महे ॥**

என்னும் ஶ்ருதிப்பிரமாணத்தின்படி **अहं** என்பதே ஸர்வப்பிரபஞ்சவடிவமாயும் ஆத்மஸ்வரூபமாயும் விளங்குகின்றதென்றேற்படுகின்றது.

இத்தகைய நித்தியஸித்தமும் பரமோத்க்ருஷ்டமானதுமாகிய அஹம் என்னும் காமகலையைச் சிலசாஸ்திரங்கள், மந்தாதிகாரிகளின் ஸுபோதத்தின் பொருட்டு, **ईँ** என்னும் அக்ஷரத்தினல் குறிப்பிடுகின்றன. **ईँ** காரமானது ஶ்ருதிகளிலும் உபநிஷத்துக்களிலும் பிரணவத்திற்குச் சமமாகப் பிரதிபாதிக்கப்பட்டுள்ளது. எங்ஙனம் பிரணவமானது நான்கு அவயவங்களோடுகூடி விளங்குகின்றதோ அங்ஙனமே **ईँ** காரமும் ரக்த, சுக்ல, மிஶ்ர, ஸம்வித்தென்னும் நான்கு பிந்துக்களோடுகூடி விளங்குகின்றது.

**ईकारोर्ध्वगतो बिन्दुः मुखं भानुरधोगतौ ।**

**स्तनौ दहनशीतांशू योनिर्हार्धकळा भवेत् ॥**

என்னும் அபியுக்தவசனம் ஈண்டறியத்தக்கது. இதன் தாத்பர்யமாவது :—

**स्वान्तर्गतानन्ताक्षरराशिमहामन्त्रमयी पूर्णाहंतामयी प्रकाशानन्दसारा बिन्दुत्रयसमष्टिभूतदिव्याक्षररूपिणी कामकला नाम महात्रिपुरसुन्दरी परमयोगिभिः महामाहेश्वरैः अनिशमनुस्मर्तव्येति ॥**

"தனக்குள் அடங்கியுள்ள அநந்தமான(கணக்கற்ற) அக்ஷர

க்கூட்டங்களின் வடிவமாயும், பூர்ணாஹந்தாஸ்வரூபமாயும், பிரகாச ஆநந்தகனமாயும், பிந்துத்ரயஸமஷ்டிவடிவ திவ்யாக்ஷரமான ஈ காரஸ்வரூபமாயும் உள்ள காமகலையென்னும் மஹாத்ரிபுரஸுந்தரியானவள் மஹாமாஹேஶ்வரர்களாலும், மஹாயோகிகளாலும் ஸதா அநுஸந்தானம் செய்தற்குரியவளாம்" என்னும் பிரமாணத்தின்படி ஈ என்பது காமகலையென்று ஸித்திக்கின்றது. இது மூன்று பிந்துக்களின் ஸமஷ்டிவடிவினதாகும். அவற்றுள் மேலேயுள்ளது ஸூர்யபிந்துவடிவ முகமென்றும், அதற்குக் கீழேயுள்ளவை அக்கினி-ஸோமர்களின்வடிவ ஸ்தனங்களென்றும், யோநியா (காரணமா) னது ஹார்த்தகலையென்றும் பாவிக்கத்தக்கது என்பதாகும். இந்தவிதமான பாவனை ஸ்தூலமாம்.

காமகலாத்தியானம் இரண்டுவகை. ஒன்று ஸ்தூலம்; மற்றொன்று ஸூக்ஷ்மமாம்.

अग्रबिन्दुपरिकल्पिताननां मध्यबिन्दुरचितस्तनद्वयीम् ।
नादबिन्दुरशनागुणास्पदां नौमि ते परशिवे परां कलाम् ॥
मिहिरबिन्दुमुखीं तदधोलसच्छशिहुताशनबिन्दुयुगस्तनीम् ।
सहपरार्धकलारशनास्पदां भजति नित्यमिमां परदेवताम् ॥

मुखं बिन्दुं कृत्वा कुचयुगमधस्तस्य तदधो
हरार्धं ध्यायेद्यो हरमहिषि ते मन्मथकलाम् ।

இவை முதலியன ஸ்தூல காமகலாத்தியானத்தைக் குறிப்பிடுவனவாகும். ஈ காரத்தில் (மிஶ்ர, ரக்த, சுக்ல) பிந்துத்ரயங்களைக் கற்பித்து அவற்றை முக, குசமண்டல, யோநி ஸ்தானங்களாகத் தியானித்துத் தன்னோடு அபேதமாய்ப்

பாவித்தல் ஸ்தூலத்தியானமாமென்பது திரண்டபொருளாம். பிரகாசவிமர்ஶவடிவ अ கார ह காரங்களின் சேர்க்கையாகும் அஹந்தாஸ்வரூபமாகவும்,

मय्येव सकलं जातं मयि सर्वं प्रतिष्ठितम् ।
मयि सर्वं लयं याति तद्ब्रह्माद्वयमस्म्यहम् ॥

என்னும் கைவல்யோபநிஷத்தின் பிரமாணத்தின்படி "பூர்ணாஹந்தாவடிவ என்ஸ்வரூபத்தினின்றே எல்லாம் பிறந்தன; என்னிடத்திலேயே எல்லாம் நிலைபெற்று விளங்குகின்றன; என்னிடத்திலேயே எல்லாம் லயத்தை யடைகின்றன. ஆதலின் பூர்ணாஹந்தாஸ்வரூப (காமகலாத்மக) பிரஹ்மமே நான்" என்பதாகவும் அநுஸந்தானம் செய்வது ஸூக்ஷ்மகாமகலாத்தியானமாகும்.

இத்தகைய ஸூக்ஷ்மத் தியானமே இந்நூலில் விமர்சிக்கத்தக்கதாகும்.

ஸூக்ஷ்மகாமகலாத்தியானம் சாஸ்திரங்களில் கீழே குறிப்பிட்டபடி பிரதிபாதிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:—

प्रत्यभिज्ञायां :—

सर्वदा त्वन्तरानन्दः सर्वतत्वौघनिर्भरः ।
शिवश्चिदानन्दघनः परमाक्षरविग्रहः ॥
स्वात्मैव सर्वजन्तूनामेक एव महेश्वरः ।
चित्स्वरूपोऽहमित्येवमखण्डामर्शबृंहितः ॥

स्वच्छन्दसंग्रहे विज्ञानभैरवभट्टारक :—

नात्र कालः कलाभावो नैकता न च देवता ।
सुनिर्वाणं परं शुद्धं रुद्रवक्त्रं तदुच्यते ॥

शिवशक्तिरिति ख्यातं निर्विकल्पं निरञ्जनम् ।
पश्यातीतं वरारोहे वाङ्मनोऽतीतमद्भुतम् ॥
अनिष्कळं च सकळं नीरूपं निर्विकल्पकम् ।
निर्द्वन्द्वं परमं तत्त्वं शिवाख्यं परमं पदम् ॥

अमृतानन्दयोगी च—

बैन्दवे परमाकाशे सच्चिदानन्दलक्षणे ।
निष्प्रपञ्चे निराभासे निर्विकल्पे निरामये ॥
अनुत्तरचमत्कारपरामर्शपवित्रिते ।
निरुत्तरमहाशून्ये शून्यशून्यान्तवर्जिते ॥
स्त्रीपुंनपुंसकाख्याभिः कल्पनाभिरकल्पिते ।
आदिमध्यान्तनिर्मुक्ते भावपञ्चकभासिते ॥
सर्वोपमानरहिते प्रकाशानुभवात्मके ॥

चिदानन्दवासनायां—

चतुरण्डमहारत्नमण्डितं विश्वविग्रहम् ।
क्षित्यादिशिवपर्यन्तं व्याप्यावस्थाचतुष्टयम् ॥
पिण्डं विभाव्य तन्मध्ये सर्वातीतघनां पराम् ।
तुर्यातीतां चिदानन्दरससारामनुत्तमाम् ॥
तत्रापि स्वेच्छयोपात्तजागरादिदशां पराम् ।
अशेषसंविदामन्तर्मुखविश्रान्तिरूपिणीम् ॥
अनन्तकोटिचन्द्रार्कसंनिभां षोडशाधिकाम् ।

स्वान्तर्गतैकतापन्नषट्त्रिंशत्तत्वसंचयाम् ॥
सर्वोत्तीर्णां महाबिन्दुरूपामाराधयाम्यहम् ॥

இவற்றைச் சிறிது ஊன்றி விமர்சிப்போமாயின், காம கலாத்தியானமென்பது ஸர்வாத்மபாவஸ்வரூப पूर्णोऽहं என்னும் அநுஸந்தானமேயாமென்று புலப்படாமற்போகாது. இந்த பூர்ணோஹம்பாவனையே அத்வைதஸ்திதியாகும். ஸகலசாஸ்திரங்களுக்கும் இதுதான் மஹாபலரூபமானது. உபாஸ்தியின் பரமப்பிரயோஜனமும் இந்நிலையேயாகும்.

तामीकाराक्षरोद्धारां सारात्सारां परात्पराम् ।
प्रणमामि महादेवीं परमानन्दरूपिणीम् ॥
वन्दे तां अहं अक्षय्यां क्षकाराक्षररूपिणीम् ।

என்பன காமகலையின் இரண்டுஸ்வரூபங்களையும் அதாவது ईं காரமே காமகலையென்றும், अहं என்பதே காமகலையென்றும் ஸித்தாந்தம் செய்கின்றன.

ईकारस्य बिन्दुविसर्गात्मनः शिवशक्त्योः अकारहकारयोः सामरस्यरूपत्वात् ।

(தந்த்ரராஜம்—மனோரமாவியாக்கியானம்)

பிந்து (·) விஸர்க்கம் (:) என்னும் மூன்றுபிந்துக்களின் ஸமஷ்டிவடிவினதான ईं காரமானது, பிரகாசவிமர்சாத்மக சிவசக்திஸ்வரூப अ கார ह காரங்களின் ஸாமரஸ்ய வடிவமாய் இருக்கின்றது. ஆதலின் ஸாரங்களுக்கெல்லாம் ஸாரமானது.

कारणभूतयोः बिन्दुविसर्जनीययोः ऐक्यरूपस्य ईकारस्य स्वात्मत्वेन भावनायां परमानन्दानुभव इति ॥

ஜகத்காரணமாகும் சிவசக்திகளின் ஸாமரஸ்யவடிவ ஈகார த்தைத் தனக்கபேதமாய் அநுஸந்தானம் செய்வதால் பரமாநந்தாநுபவவடிவமோக்ஷம் ஸித்திக்கின்றது.

இங்ஙனம் காமகலையின் ஸ்வரூபம், பிரகாரங்கள், தியானிக்கும் விதம், தியானத்தின் பிரயோஜனம் முதலி யன சுருக்கமாய்க் கூறப்பட்டன.

குறிப்பு:—ஸபர்யாபத்ததியில் **कामकला** என்பதை மந்த்ராத்மகமாய்ப்பாவித்து, அதிலுள்ள வர்ணகங்களை,

क् + अ + अ = का
म् + अ = म
क् + अ = क
ल् + अ + अ = ला

வெனப்பிரித்து அக்ஷரார்த்தவடிவ பாவார்த்தவிமர்சம் செய்யப்பட்டுள்ளது. அந்த அர்த்தத்தையும் இங்கே யறிதல் காமகலாநுஸந்தான புஷ்டிக்கு அத்தியாவசியமா மென அறியத்தக்கது.

ஏழாவது கண்டம் முற்றிற்று.

# ஸபர்யாபத்ததிவாஸஞ விமர்சம்

——:o:——

## எட்டாவது கண்டம்.

### ஹோமம். (௧௦௪, ௧௧௫-௧௩௨)

ஹோமமென்னும் பதம் "ஹு" தாதுவினிடமாகப் பிறந்து, (தன்னிடத்திலுள்ளதை) தியாகம் செய்தல் அல்லது தானம் செய்தல் என்னும் அர்த்தமுடைய தாகும்.

பூஜாமண்டபத்திற்கு ஈஸான்யபாகத்தில் ஹோமஞ் செய்தற்கு ஸ்தண்டிலம் ஏற்படுத்தவேண்டுமென்று பத்ததி கூறுகின்றது. இங்ஙனம் ஒரு திக்கைக் குறிப்பிட்ட தற்கு ஏதாகிலும் ஒரு தாத்பர்யமிருந்தே தீரவேண்டும். அஃதாவது:—

ஜ்யோத்ஸ்நாலோகமென்னும் சித்சந்த்ரமண்டலத்தி லுள்ள ஸஹஸ்ராரமானது நூற்றிருபத்தைந்து சிறிய இதழ்களோடுகூடிய பெரிய எட்டிதழ்க்கமலமாக விளங்கு கின்றதென்பது உபநிஷத் ஸித்தாந்தமாம். இக்கமல த்தின் கர்ணிகையில் ஹம்ஸமென்னும் ஆத்மஸ்வரூபம் விளங்கும். இது உபாதியோடுகூடி ஜீவாத்மாவாய்த்தோன் றுகின்றது. இந்த ஜீவன் தன்மனோவ்ருத்தியோடுகூடி இந்த எட்டுத்தளங்களிலும், கேஸரங்களிலும், கர்ணிகை யிலும் ஸஞ்சாரம் செய்கின்றனன். இங்ஙனம் பூர்வதளம்,

ஆக்னேயதளம் முதலிய எட்டுத்தளங்களிலும் ஸஞ்சாரம் செய்யும்போது பின்னபின்னமான மனோவ்ருத்திகள் ஏற்படுகின்றன. ஈசான்யதளத்தில் ஸஞ்சரிக்கும்போது தானங்கள் தியாகங்கள் முதலிய நற்கருமங்களைச் செய்யவேண்டுமென்னும் எண்ணமுண்டாகும். இவ்விஷயம் ஹம்ஸோபநிஷத்தில் கீழ்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

**तस्याष्टधा वृत्तिर्भवति, पूर्वदळे पुण्ये मतिः * * * ईशान्ये द्रव्यदानं त्यागबुद्धिश्च, मध्ये वैराग्यं ।**

இதேவிஷயம் நாரதபரிவ்ராஜகோபநிஷத்திலும் கூறப்பட்டிருக்கின்றது; ஆனால் அதன்படி ஈசான்யதிக்கில் ஸஞ்சரிக்கும்போது தத்துவஞானமுண்டாகின்றதென்றேற்படுகின்றது. அது வருமாறு:—"**प्राग्दळे पुण्यवृत्तिः** * * * "**ईशान्ये ज्ञानं, कर्णिकायां वैराग्यं, केसरेष्वात्मचिन्ता**". ஒருபிரமாணரீதியாய் தியாகமென்பதும், மற்றொரு பிரமாணரீதியாய் ஞானமென்பதும் ஏற்படினும் இரண்டும் ஒன்றேயாகும். அத்தியாஸநிவ்ருத்தியே அதிஷ்டானத்தின் ஞானமல்லவா?

முன்னர் யாகமந்திரப்பிரவேசகண்டத்தில், யாகமந்திரமாவது அதிஸூக்ஷ்மவிமர்ஶத்தில் சுத்தாந்தக்கரணமேயாமென்று கூறப்பட்டிருப்பதால், யாகமந்திரத்தின் ஈசான்யபாகமானது தியாகவ்ருத்தியோடுகூடிய அந்தக்கரணவ்ருத்தியைக் குறிப்பிடுகின்றதென்பது பொருத்தமுடையதாகின்றது. ஆகவே தியாகம்செய்தல் என்னும் அர்த்தத்தோடுகூடிய ஹோமத்திற்குரிய இடம் பூஜாமண்டபத்தின் ஈசான்யதிக்கேயாகும்.

எதைத் தியாகம் செய்தல்? எனின், தன்னுடைய உடைமைகளையெல்லாம் தியாகஞ்செய்தல் வேண்டும்;

அன்றியும், "உடைமைகளையுடையவன் நான்" என்னும் அஹங்காரத்தையும் தியாகம் செய்தல் வேண்டுமென்பது ஞானசாஸ்திர ஸித்தாந்தமாம். ஆகவே அஹம்மமதைகளே தியாகம் செய்தற்குரிய சிறந்த பொருள்களாம்.

எங்கே தியாகம்செய்தல்வேண்டும்? ஆத்மஸ்வரூப சிதக்கினியில் தியாகம் (ஹோமம்) செய்தல்வேண்டும். ஏனெனின் அஹந்தையும் மமதையும், அவித்தையால் ஆத்மாவினிடத்தில் கற்பிக்கப்பட்டவை. இக்கற்பனைக்கு அத்தியாரோபமென்று பெயர். தானல்லாத ஸ்தூலஸூக்ஷ்ம காரணதேஹங்களையும், அந்நமயாதிபஞ்சகோசங்களையும் "தான்" என நினைப்பது அஹங்காரமென்றும், தனக்கு (ஆத்மாவிற்கு) எந்தவகையிலும் ஸம்பந்தப்படாத ஆந்தரபாஹ்யவஸ்துக்களில் "தனது" என்னும் நினைப்பே மமகாரமென்றும் சாஸ்திரங்கள் கூறும். யான், எனது என்னும் இம்மயக்கவுணர்ச்சியே பந்தமாம். இவற்றை ஞானாக்கினியில் ஹோமம் செய்து பஸ்மமாக்கவேண்டும்.

ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुतेऽर्जुन ।

என்னும் கீதாவசனம் இங்கு அறியத்தக்கது.

परांहंतामये सर्वज्ञानदीपविजृम्भिते ।
संविदग्नौ हुनेद्देवि प्रपञ्चहविरुत्कटम् ॥

என்று ஞானார்ணவம் கூறுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. இதன்படி ஞானாக்கினியாகும் பராஹந்தா (அஹம் பதலக்ஷ்ய ஆத்ம) ஸ்வரூபத்தில் ஹோமம் செய்தற்குரிய ஹவிஸ் (திரவியம்) பிரபஞ்சமேயாமென்றேற்படுகின்றது. ஸவிகல்பத்தோடு அதாவது ஸங்கல்பம் விகல்பம் இவற்றோடு கூடிய மனமே பிரபஞ்சமாமென்பது ஞானவாஸிஷ்டம் முதலிய பிரமாணக்கிரந்தங்களால் ஏற்படுகின்றது.

ஆதலின், ஸ்வ-ஸ்வாமி-ஸம்பந்தரூப பிரபஞ்ச அத்தியாஸ காரணமான மனமே ஆத்மஸ்வரூப ஸம்விதக்னியில் ஹோமம் செய்தற்குரிய திரவியமாமென்பது திரண்டபொருளாம்.

तावदग्नौ न होतव्यं तत्तत्तन्त्रोदितं यथा ।
यावदात्ममहावह्नौ मनः पूर्णाहुतिं हुनेत् ॥

யோ-ஹ்ரு--5--40.

எதுவரையில் ஆத்மாவாகும் (தேசகாலவஸ்துபரிச்சேதமற்ற) பெருநெருப்பில் (பிரபஞ்சமென்னும்) மனம் பூர்ணாஹுதி செய்யப்படவில்லையோ, அதுவரையில் விதியுக்தமான பாஹ்யஹோமம் செய்யப்பட்டதாக ஏற்படாது; ஆத்மாக்கினியில் மனம் ஆஹுதிசெய்யப்பட்டதாமாயின் பாஹ்யஹோமமும் ஞானஹோமமேயாகும். இது

अन्तर्निरन्तरमनिन्धनमेधमाने
मोहान्धकारपरिपन्थिनि संविदग्नौ ।
कस्मिंश्चिदद्भुतमरीचिविकासभूमौ
विश्वं जुहोमि वसुधादिशिवावसानम् ॥

என்னும் பிரமாணத்தால் நன்கு விளங்குகின்றது.

மனோவிகல்பரூபவிருத்திகள் எதுவரையில் உண்டாய்க்கொண்டிருக்குமோ அதுவரையில் அவற்றைப் பிரவிலாபனத்தினால் ஒழித்து "இனி மனத்தில் விகல்பவிருத்தியெழுதற்குக் காரணமான வாஸனையொன்றுமில்லை" யென்றேற்படும் வாஸனாக்ஷயமே மனோநாசஸ்வரூப பூர்ணாஹுதியாகும்.

இதேவிஷயந்தான் தந்த்ரராஜத்திலும்,

होमो विश्वविकल्पानामात्मन्यस्तमयो मतः ।

என்று கூறப்பட்டிருக்கின்றது. இதன்பொருள் :—பிரபஞ்ச ஸம்பந்தமான பேத எண்ணங்களெல்லாம் ஆத்மஸ்வரூபத்தில் லயம் செய்வதே ஹோமமாகுமென்பதாம்.

**अहं, त्वं, अस्ति, नास्ति, कर्तव्यं, अकर्तव्यं, उपासितव्यं इति विकल्पानाम् आत्मनि विलापनं होमः ।**

என்று பாவநோபநிஷத்தும் கூறுகின்றது; இதுவும் மேற்கூறிய அர்த்தத்தையே வலிவுறுத்துகின்றது.

அன்றியும்,

**पुण्यपापे हविर्देवि कृत्याकृत्यौ हविःप्रिये ।**
**संकल्पश्च विकल्पश्च धर्माधर्मौ हविस्तथा ॥**
**जुहुयात्परमेशानि आत्माग्नौ मनसा स्रुचा ।**

என்று ஞானார்ணவம் ஞானஹோமபடலம் கூறுகின்றது. இதன் பொருள் :—புண்ணியபாபங்கள், செய்யத்தக்கன செய்யத்தகாதன, ஸங்கல்பவிகல்பங்கள், தர்மாதர்மங்களென்னும் துவந்துவங்களாகும் ஹவிஸ்ஸை ஆத்மாவாகுஞ் சிதக்னியில் மனமென்னுங் கரண்டியால் ஹோமஞ் செய்தல் வேண்டுமென்பதே. இங்ஙனம் செய்யப்படுமேயாயின்,

**निष्प्रपञ्चो यदा देवि जायते मन्त्रवित्तमः ।**
**सदा सच्चिन्मयः साक्षात्केवलं ब्रह्मसाधकः ॥**

என்னும் ஞானார்ணவப் பிரமாணத்தின்படி பிராபஞ்சிகமான பேத எண்ணங்கள் ஒழியின், அதனால் (வாஸனாக்ஷயத்தால்) மனோநாசமுண்டாகின்றது; வாஸனாக்ஷய மனோநாசங்களால் ஸதா ஸச்சிதாநந்த கேவல பிரஹ்மஸ்வரூபத்தை யபரோக்ஷமாய் அறியும் நிலை (தத்துவஞானம்) ஏற்படுகின்றது.

ஸ்ரீலலிதோபாக்கியானத்தில், "ஸர்வஸம்ஹாரயாக மென்னும் மஹாயாகத்தில் ஸச்சிதாநந்தஸ்வரூபலலிதாம்பாள் ஆவிர்ப்பவித்தனள்" என்று கூறப்பட்டிருக்கின்றது. அஹம்பதலக்ஷ்யார்த்தவடிவ லலிதையின் ஆவிர்ப்பாவமே தான் மேற்கூறிய தத்துவஞானமாமென்றறியத்தக்கது.

நான்காவது கண்டத்தின் இறுதியில், ஆத்மபாத்ர ஸ்வீகாரப் பிரகரணத்தில் ஆந்தரஹோமம் விமர்சிக்கப் பட்டுள்ளது. அவற்றையும் இங்கே தாரணம் செய்தல் அத்யாவஶ்யமாம்.

**आर्द्रं ज्वलति**—என்னும் ஶ்ருதியானது ஹோமம் செய்வதற்குரிய திரவியத்தைக் குறிப்பிடுகின்றது.

இதன் தாத்பர்யமாவது:—அதிஷ்டானசேதனமாய் விளங்கும் ஜலம் பிரகாசிக்கின்றது; அவ்வதிஷ்டான ஜ்யோதியே நான். ஸ்வயம்பிரகாசமாய் விளங்கும் பிரஹ்ம ஜ்யோதியே நான். ஜீவனைப் பிரமித்த நானே பிரஹ்மமாயிருக்கின்றேன்; ஆதலின் நானே நான். இத்தகைய ஜலரூபமாய் விளங்கும் என்னைச் சிதக்கினியில் ஹோமம் செய்கின்றேன் என்பதாம்.

இதனால் ஜீவபாவத்தை யொழிப்பதே மஹாயாக மென்றேற்படுகின்றதல்லவா?

எட்டாவது கண்டம் முற்றிற்று.

# ஸபர்யாபத்ததிவாஸனு விமர்சம்.

——:o:——

## ஒன்பதாவது கண்டம்.

### பலிதானம் முதல் ஹவிஸ்ப்ரதிபத்திவரையில் (௧௦௪--௧௧௧)

### பலிதானம். (௧௦௪--௧௦௫)

பலிதானமென்பது ஒருபொருளை ஒருதேவதைக்கு அர்ப்பணம் செய்வதாகும்.

இங்ஙனம் கூறின், நிவேதனத்தையும் பலியென்று கூறவேண்டிவரும். நிவேதனத்தைப் பலியென்று கூறுவதில்லை. ஏனெனில்,

> यज्ञशिष्टाशिनःसन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
> यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ॥

என்னும் பகவத்கீதாபிரமாணத்தினால் நைவேத்ய சேஷத்தை ஸாதகன் அவஸ்யம் கிரஹித்தல்வேண்டுமென்றேற்படுகின்றது. யக்ஞசிஷ்டத்தை ஸ்வீகரித்தவன் ஸர்வ அநர்த்தங்களினின்றும் விடுபட்டுப் பிரஹ்மஸ்வரூபமேயாகின்றான். ஆதலின் நிவேதனத்தில் உபாஸகனுக்குக் கிராஹ்யமான ஒரு அம்சம் இருக்கின்றது. இத்தகைய கிராஹ்யமான அம்சம் பலியில் இல்லை. இதுதான் பலிக்கும் நிவேதனத்திற்கும் உள்ள பேதம்.

பலிதானமானது ஞானயாகமாகும் ஸ்ரீவித்யாஸபர்யைக்கு விக்கினங்களைச் செய்யும் பூதங்களின்பொருட்டுச்

செய்யப்படுவதாகும். பேதத்தோற்றங்களே ஞானயாகத்தின் விக்கினங்களாமென்று முன் இரண்டாவது கண்டத்தில் **விக்னோத்ஸாரணப்** பிரகரணத்தில் கூறப்பட்டுள்ளது.

பேதத் தோற்றத்தை யுண்டுபண்ணுவது முன் இல்லாமலிருந்து ஆகந்துகமாய்த்தோன்றிய அஞ்ஞானமேயாகும். "**बलिदेव्यः स्वमायाः स्युः**" என்னும் தந்த்ரராஜம் 35-வது அத். 3-வது ஶ்லோகத்தில் **स्वमायाः** என்னும் பதத்திற்கு **अतस्मिन् तद्बुद्धिं जनयित्वा उन्मार्गप्रवर्तिकाः शक्तयः** என்று ஸ்ரீ ஸுபகாநந்தநாதர் மனோரமா வியாக்கியானத்தில் பொருள் கூறுகின்றனர். இதன் தாத்பர்யமாவது ஒன்றல்லாத மற்றொன்றில் ஒன்றைத் தோற்றுவித்து ஸன்மார்க்கத்திற்கு மாறான வழியில் பிரவ்ருத்திக்கச்செய்யும் சக்திகள் என்பதாகும். பாம்பல்லாத கயிற்றில் பாம்பைத்தோற்றுவித்து, பயகம்பனாதிகளை யுண்டுபண்ணும் சக்திக்கு மாயை அல்லது அக்ஞானமென்று பெயர். இதுதான் பூதமெனப்படும். இதன்பொருட்டுச் செய்யப்படுவதுதான் பலிதானமாகும்.

"**ते नश्यन्तु शिवाज्ञया**" சிவாக்ஞையால் ஞானத்திற்குத் தடையாயுள்ள பூதங்கள் ஒழியட்டுமென்று நாம் திடமாய்ப் பாவித்திருந்தாலும் அப்பூதங்கள் பாதிதாநுவ்ருத்தியால் தோற்றிக்கொண்டேதானிருக்கும். பேய்த்தேரில் ஜலம் இல்லவேயில்லையென்று உணர்ந்தாலும் ஜலத்தோற்றம் நிவ்ருத்தியாதலில்லை; ஜலம் தோன்றிக்கொண்டேதான் இருக்கும். இதற்குத்தான் பாதிதாநுவ்ருத்தியென்று பெயர்.

அத்தியாஸம் இரண்டுவகை. ஒன்று ஸோபாதிகம்; மற்றொன்று நிருபாதிகம். கானலில் நீர் தோன்றுவது ஸோபாதிக அத்தியாஸமென்றும், கயிற்றில் பாம்பு தோன்றுவது நிருபாதிக அத்தியாஸமென்றும் சாஸ்திரம் கூறு

கின்றது. அதிஷ்டானத்தின் ஞானத்திற்குப் பின்னரும் அத்தியாஸம் தோன்றுவது உபாதியினுல்தான் என்றறிதல் அவசியம். ஜீவன்முக்தபுருஷனுக்குப் பிரபஞ்சத்தோற்றம் உபாதியாலாயது. எங்ஙனம் கானல்ஜலப் பிராந்திக்கு உபாதிகள் ஸூர்யகிரணங்கள், மணல்வெளி, பார்ப்பவனது கண்கள் முதலியனவாமோ, அங்ஙனமே, பிரபஞ்ச அத்தியாஸத்திற்குக் கார்யகரணஸங்காதவடிவ சரீரமே உபாதியாம். இச்சரீரம் முக்தனுக்குப் பிராரப்தநாசபரியந்தம் இருக்கும். இங்ஙனம் கூறின் முக்தபுருஷனுக்குப் பிராரப்தம் நாசமாகவில்லையா? என்னும் ஆசங்கை நிகழக்கூடும். ஞானிக்குப் பிராரப்தமே இல்லை. எந்தக்ஷணத்தில் தத்துவஞானத்தினுல் சரீரத்தில் தானென்னும் அத்தியாஸம் நாசமாயதோ, அந்த க்ஷணத்திலேயே பிராரப்தவடிவகர்மமும் நாசமாயது. “**ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुतेऽर्जुन**” என்னும் கீதாவசனம் இங்கறிதற்பாலது. இதரர்களுடைய திருஷ்டிக்குப் பிராரப்தசேஷம் முக்தர்களுக் கிருப்பதுபோல் விளங்குகின்றது.

**शश्वन्नश्वरमेव दृश्यमखिलं निश्चित्य वाचा गुरो-**
**र्नित्यं ब्रह्म निरन्तरं विमृशता निर्व्याजशान्तात्मना ।**
**भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके**
**प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनीषा मम ॥**

என்னும் மநீஷாபஞ்சகப் பிரமாணத்தின்படி ஞானியானவன் ஸர்வநாமரூபாத்மக த்ருசியப்பிரபஞ்சத்தையும் ஞானுக்கினியால் எரித்துப் பிராரப்தத்தின்பொருட்டுத் தனது சரீரத்தை யர்ப்பணம் செய்கின்றுனென்றேற்படுகின்றது. ஆதலின் சரீரமே பிராரப்தசேஷமாகும். சரீரமுள்ளவரையில் பிரபஞ்சத்தோற்றமுண்டு. பிரபஞ்சத்தோற்றத்

திற்குச் சரீரமே உபாதியாகுமென்று முன்கூறப்பட்டிருக்கின்றது.

முக்தனுக்கு ஞானமேற்படுவதற்கு முன் எந்தப் பிரபஞ்சத்தோற்றம் ஞானலாபத்திற்குத் தடையாயிருந்ததோ, அது ஞானலாபத்திற்குப் பின்னர் உண்மையில் தடையேயல்ல. தோற்றம் விக்ஷேபசக்தியாலேற்படுகின்றது. அஞ்ஞானத்திற்கு ஆவரணம், விக்ஷேபமென இரண்டு சக்திகளுள. ஆவரணஸஹிதவிக்ஷேபந்தான் பந்தகாரணமாகின்றது. ஆவரணரஹிதவிக்ஷேபம் பந்தகாரணமாவதில்லை. ஜீவன்முக்தனுக்குப் பிரபஞ்சத்தோற்றம் ஆவரணரஹிதவிக்ஷேபத்தினாலாயது. அவனது ஆவரணம் ஆத்மஞானத்தால் முன்னரே நாசமாயிற்றன்றோ? பிரபஞ்சத்தோற்றத்திற்கும் அத்தோற்றத்திற்கு உபாதியாயுள்ள கார்யகரணஸங்காதரூப சரீரத்திற்கும் காரணமாயுள்ளது மனமேயாகும். ஆதலின் மனமே பூதமாம். இதன்பொருட்டுத்தான் பலிதானம் செய்தல்வேண்டும். இவ்விஷயம் மிகவும் ரஹஸ்யமானது.

"बलिपात्रे निवेदनसामग्रीः किंचित्किंचिदादाय" என்று பத்ததிகூறுவதை விமர்சிக்கின், தேவதையின்பொருட்டு நிவேதித்தவஸ்துக்களின் அக்ஞாம்சங்களான நாமரூபங்களே பலிதானஞ் செய்தற்குரியனவாகுமென்று புலப்படுகின்றது. ஆத்மாபின்ன சித்சக்தியோடு அபேதப்படுவன அஸ்திபாதிபிரியங்களேயாகும். நாமரூப ஜடாம்சங்கள் சேதனத்தோடு ஐக்கியமாவதில்லையல்லவா? ஆதலின் நாமரூபாம்சங்களே பலிதானமாமென்று கூறப்பட்டன. அகண்டாகாரவ்ருத்தியே வ்யாபகமண்டலமாகும்.

**ॐ-ह्रीं**—என்னும் பிரகாசவிமர்ஶப் பிரணவங்களால் நாமரூபநாட்டத்தை யொழித்து, அவற்றை விக்கினகாரி

களான பூதங்களுக்குத் தந்து, அப்பூதங்களைத்தன்னிட மிருந்து துறத்துதல்வேண்டும். **हुं-फट्-स्वाहा**—என்னும் பல்லவங்கள் துறத்துதலைக் குறிப்பனவாகும்.

இங்ஙனம் பலிதானம் செய்தபின்னர், பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்யவேண்டுமென்று பத்ததி கூறுகின்றது.

பிரதக்ஷிணம்:—விஷயங்களில் பிரவ்ருத்தித்தோடும் அந்தக்கரணவிருத்திகளுக்கு விஷயமாகும் நாமரூப ஜடத் தன்மையை நீக்கிப் பிரஹ்மத்தில் லயம் செய்தலே பிரதக்ஷிணத்தின் தத்துவமாகும்.

நமஸ்காரம்:—நாமரூபநாட்டம் சிறிதுமின்றிப் பிரஹ்மாகாரமாக நிற்றலே நமஸ்காரத்தின் தத்துவமாம்.

ஜபம்:—ஜபம் மூன்றுவகைப்படும்; அவை நிகதம், உபாம்சு, மானஸிகமெனப்படுவன. இவற்றுள் நிகதம் உரத்து உச்சரித்தலும், உபாம்சு தன்காதுகளுக்கு மாத்திரம் கேட்கும்படி உச்சரித்தலும், மானஸிகம் மனத்தினால் பாவித்தலுமாகும். இவற்றுள் மானஸிகஜபமே உத்தமாதிகாரிகளுக் குரியதாகப் பெரியோர் கூறுவர். ஜபம் வாசிக யக்ஞத்தில் சேர்ந்ததாகும்.

**संयतेन्द्रियसंचारं प्रोच्चरेन्नादमान्तरम् ।**
**एष एव जपः प्रोक्तो न च बाह्यजपो जपः ॥**

(வாமகேஶ்வர தந்த்ரம்—5—37)

**व्याख्यानम्—संयतः निरुद्धः इन्द्रियाणां ज्ञानकर्मेन्द्रियाणां संचारः स्वस्वविषयाभिमुखी प्रवृत्तिः यस्मिन्कर्मणि तद्यथा भवति तथा आन्तरं अन्तरकृत्रिमतया प्रसरन्तं नादं अनाहतं प्रोच्चरेत् । एष एव जपः सर्ववर्णप्रकृतिभूतनादाभ्यासेन**

सर्वमन्त्राणां युगपदेव सिद्धिजनकत्वात् । बाह्यो वैखरीरूपवर्णानुपूर्वी विशेषोच्चारणरूपो जपो न जपः। नाखिलमन्त्रसिद्धिदायकः। तत्तदानुपूर्वीमात्रसिद्धिजनकत्वादिति भावः ।

இதன்பொருள் :—ஞானேந்திரயங்களாலும் கர்மேந்திரியங்களாலும் ஏற்படும் பாஹ்யப் பிரவ்ருத்திகளை நிரோதம் செய்து அந்தரங்கமாய் ஸஹஜமாய்ப் பிரஸரிக்கும் அநாஹத நாதத்தை யநுபவித்தலே மானஸிகஜபமாகும். இந்த நாதம் அக்ஷரஸ்வரூப ஸகலவர்ணங்களுக்கும் மூல காரணமாகும்: அக்ஷரங்கள்தான் ஸர்வமந்த்ரங்களுக்கும் மூலமானவை; ஆதலின் நாதாநுபவமே ஸகலமந்த்ரஸித்தியை யுண்டுபண்ணுவதாகும். எழுத்துக்களை வெளியே உரத்தகுரலோடு உச்சரிப்பதான வைகரீவடிவ ஜபத்தினால் அந்த மந்த்ரமொன்றே ஸித்திக்கும்; நாதாநுபவம்போல் ஸகலமந்த்ரஸித்தி ஏற்படாது. இதைப்பற்றி விசேஷமாய் அறியவிரும்புவோர் வரிவஸ்யாரஹஸ்யம். I. 44. மந்த்ரவிஷயத்தைப் பார்க்கவும்.

ஸ்தோத்திரம் :— (१०५--१०८)

ஸர்வவர்ணாத்மகமான நாதத்தைப் பிரஹ்மத்தில் உபஸம்ஹாரம் செய்தல் ஸ்தோத்திரமாமென்று பாவனோபநிஷத்து கூறுகின்றது.

உபாஸ்யமாகும் சித்சக்தியின் விதிமுகமானதும் நிஷேதமுகமானதுமான லக்ஷணங்களை யநுஸந்தானஞ் செய்வதே ஸ்தோத்திரமாமென்பது பரமரஹஸ்யார்த்தமாகும். பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூபசித்சக்தியைத் தவிற பாரமார்த்திகதசையில் மற்றொன்று இல்லை யாதலின் ஆத்மாநுஸந்தானமே ஸ்தோத்திரமாமென்பதில் என்ன ஆக்ஷேபம்? "को वा वन्द्यो मदन्यतः" என்னும்

பிரமாணம் அறியத்தக்கது. பத்ததியில் गणेशग्रहनक्षत्रयोगिनी-राशिरूपिणीम् என்பது முதல் चतुराज्ञाकोशभूतां नौमि श्रीत्रिपुरामहम् என்பதுவரையுள்ள பன்னிரண்டுஸ்லோகங்கள் ஸ்தோத்திரத்திற்காகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் தாத்விகமான அர்த்தம் நித்யாஷோடசிகார்ணவ மங்கலாசரணத்திலும், தந்த்ரராஜம் 2-வது படலம் 88முதல் 100-வது ஸ்லோகம் வரையிலுங் கூறப்பட்டிருப்பதை ஆங்கறியவும். கிரந்தம் விஸ்தரிக்குமென்னும் பயத்தினால் அவை யிங்கு விமர்சிக்கப்படவில்லை.

ஸுவாஸினீ பூஜை:—(௧௦௮-௧௦௯)

ஜீவதசையோடுள்ள பதியையுடைய ஸ்திரீக்கு ஸுவாஸினீயென்று பெயர். பிரஹ்மம் அல்லது சிவம் அவிநாசியாயும் நித்தியமாயும் இருப்பதால், பிரஹ்மசக்தியாகும் அஹம்பதலக்ஷ்யார்த்த சித்சக்தியொன்றே நித்திய ஸுவாஸினீயாகும். இதரர்கள் கௌணஸுவாஸினிகளே யாவர். முக்கிய ஸுவாஸினியாகும் பரதேவதையைக் கௌணஸுவாஸினிகளிடத்திலும் பாவித்தல் அவசியமென்பதே ஸுவாஸினீ பூஜையின் தத்துவமாம்.

"तद्रूपिणीमेकां शक्तिं संपूज्य" என்று கல்பஸூத்திரம் கூறுகின்றது. एकां शक्तिं என்று ஒருமையில் கூறியது அத்வைதஸ்வரூபத்தைக் குறிப்பதற்காகவேயாகும்.

"सुवासिनी, सुवासिन्यर्चनप्रीता" என்னும் நாமங்கள் பரதேவதைக்கு ஏற்பட்டுள்ளன. இந்நாமங்கள் ஸுவாஸினீ பூஜையை நன்கு ஆதரிக்கின்றனவன்றோ?

அளிபாத்ரதானம்:— அளியென்னும் பதம் மத்யம் அல்லது அம்ருதம் என்னும் அர்த்தத்தையுடையதாகும். விசேஷார்க்கியத்தின் அம்ருதம் பிரஹ்மாண்டவடிவ ஸர்வப் பிரபஞ்சாத்மகமாயும் போக்கிய போக்த்ருவடிவ ஜீவ

ஸ்வரூபமாயும் இருப்பதால் அதனின்றும் எடுத்த அம்ருதத்தால் நிறப்பப்பட்ட அளிபாத்திரமும் அதேஸ்வரூபமுடையதாகும்.

அளிபாத்ரதானமந்த்ரார்த்தம்:—"ஹே ஸுபகையே! ஸ்வயம்பிரகாசஸ்வரூபிணியே!! மாமிசத்தோடுகூடிய இந்த அம்ருதபாத்திரம் உம்பொருட்டுத் தரப்பட்டது; இதை ஸ்வீகரித்துக்கொண்டு காமக்குரோதாதி சத்துருக்களை ஜயித்து நித்தியாநந்தவாழ்வாகும் பெரும்புகழையருள்வாயாக" என்பதாகும்.

காமக்குரோதாதிவிருத்திகள் நாமரூபாத்மக பேதநாட்டத்தாலும், அப்பேதநாட்டம் அஞ்ஞானத்தாலும் ஏற்படுகின்றன. இந்த அஞ்ஞானம் சித்சக்தியாகும் பரதேவதையினிடத்தினின்றும் அத்தியஸ்தமாய்த் தோன்றியதாகும்; ஆதலின் இது அதிஷ்டானமாகும் ஞானத்தில் நாசமாகின்றது. பேதகாரணமாகும் நாமரூபங்களும் மூலாக்ஞானமும் நாசமாகவே நித்தியாநந்தப் பெருவாழ்வாகும் யஶஸ் ஸ்வயமாகவே ஏற்படுகின்றது. ஸுவாஸினீ ஸ்வரூபிணியான தேவி ஸ்வீகரிப்பது நாமரூபாத்மகபேதத்தையே. இங்ஙனம் நாமரூப அம்சங்களைத் தான் ஸ்வீகரித்துக்கொண்டு பரதேவதாஸ்வரூபிணியான ஸுவாஸினி, ஸாதகன் பொருட்டு, எஞ்சிய ஸச்சிதாநந்தங்களைத் திருப்பித்தருவதைக் குறிப்பிடுகின்றது **वत्स तुभ्यं** என்னும் மந்த்ரமாகும். ஸாதகனுக்கும் முமுக்ஷு கோருவது மோக்ஷமேயாகும். முக்திநிலையை யடைதற்குத் தடையாயுள்ள சத்துருக்கள் காமக்குரோதாதி அஞ்ஞானவ்ருத்திகளேயாகும். அக்ஞானவ்ருத்திகள் அகண்டாகாரவ்ருத்திவடிவ பரதேவதையால் நாசமாகின்றனவென்பது சாஸ்திரஸித்தாந்தம். "**पीतशेषं कुलामृतं मया दत्तं**" என்பது பரதேவதை

யின் கூற்று. குளாம்ருதமாகும் போக்கிய, போக்த்ரு, போக, பிரேரிதார (ஈஸ்வர) வடிவ ஸர்வப்பிரபஞ்சத்தையும் பிரஹ்மாபின்ன சித்சக்தியோடு பாகத்தியாகலக்ஷணையால் ஐக்கியம் செய்வதே "**पीतशेष**" மென்பதன் ரஹஸ்யார்த்தமாம்.

### ஸாமயிகபூஜை. (௧0௯)

சிவசக்திஸாமரஸ்யமென்னும் ஜீவப்பிரஹ்மைக்கியாநுஸந்தானபரர்களுக்கு ஸாமயிகரென்றுபெயர். இவர்களைப் பூஜிப்பதாவது இவர்களைத் திருப்திசெய்தலேயாகும். இவர்கள் எதனுல் திருப்தியடைவார்கள்? பிரஹ்மாப்பாஸம் ஒன்றிஞலேதான் என்பது ஸித்தாந்தமான விஷயம்.

**तच्चिन्तनं तत्कथनमन्योन्यं तत्प्रभाषणम् ।**
**एतदेकपरत्वं च ब्रह्माभ्यास इतीरितम् ॥**

என்னும் பிரமாணத்தின்படி, ஸமரஸபாவத்தைப்பற்றி மனனம் செய்வதும், அதைப்பற்றிக் கூறுவதும், ஒருவருக்கொருவர் அதைப்பற்றிச் சம்பாஷிப்பதும், அதைப்பற்றி யேகாக்கிரசித்தத்தோடு நிதித்தியாஸனம் செய்வதும் பிரஹ்மாப்பியாஸமா மென்றேறப்படுகின்றது. ஆகவே ஜீவப் பிரஹ்மைக்கிய ஸாமரஸ்ய நிலையைப்பற்றிச் சம்பாஷிப்பதே ஸாமயிகபூஜையாகும். இப்பூஜைக்குச் சாதனம் விசேஷார்க்யாம்ருதஸ்வரூப அகண்டாகாரவ்ருத்தியேயாகும்.

### தத்துவசோதனம். (௧௧0--௧௧௧)

விசேஷார்க்கியாம்ருத அகண்டாகாரவ்ருத்தியால் அசுத்த, மிஸ்ர, சுத்த தத்துவங்களாகும், ப்ருதிவிமுதல் சிவாந்தமாயுள்ள, முப்பத்தாறு தத்துவங்களையும் சோதித்து

அவற்றுள் அதிஷ்டானமாயுள்ள சிவாபின்ன ஆத்மஸ்வரூப சித்சக்தியை யறிவதே தத்துவசோதனத்தின் பரமரஹஸ்யமாம்.

முப்பத்தாறு தத்துவங்களின் வடிவ பிரபஞ்சமான து ஸம்வித்ஸ்வரூப பரதேவதையினிடத்தில் (கற்பித) மாயையால் தோற்றுவிக்கப்பட்டதென்பது ஸித்தாந்தமன்றோ? ஆதலின் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணசரீரங்களில் முறையே, அசுத்த, மிஶ்ர, சுத்ததத்துவங்களை யொடுக்கி, அவற்றையதிஷ்டான நாட்டத்தால் சோதித்து, ஜீவபாவத்தையும் விட்டுக் கூடஸ்தஸ்வரூபமாய்ப் பிரஹ்மத்தோடு ஐக்கியமாவதே தத்துவசோதனத்தின் பரமதாத்பர்யமாகும்.

இவ்வர்த்தம் தத்துவசோதனம் செய்வதற்கு ஏற்பட்டுள்ள "**आर्द्रं ज्वलति**" என்னும் மந்த்ரத்தினால் நன்கு புலப்படுகின்றது. இம்மந்த்ரத்தின் அர்த்தம், முன் நான்காவது கண்டத்தில் ஆத்மபாத்ரஸ்வீகாரப் பிரகரணத்தில் (127ம் பக்கத்தில்) நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது.

தத்துவசோதனத்தின் பிறகு, பரிபூர்ணஸ்வரூப சிவமே மிஞ்சுகின்றது. பரோக்ஷமாயும் பிரத்தியக்ஷமாயும் விளங்கும் பிரஹ்மாண்டம் பரிபூர்ணஸ்வரூப பிரஹ்மமேயாகும். பிரஹ்மாண்டத்திற்கு அதீதமாய் விளங்குவதும் பிரஹ்மமே: பிரஹ்மத்தின் பரிபூர்ணஸ்வரூபத்தை யறிந்து, என்றால் "அஹம் பிரஹ்மாஸ்மி" யென்னும் அகண்டபாவத்தை யடைந்துள்ள நிலையில் பூர்ணஸ்வரூபமே மிஞ்சுகின்றது. இதுதான் ஸஹஜநிலை. வித்யோபாஸ்தியின் பயன் இதுவேயாகும்.

ஒன்பதாவது கண்டம் முற்றிற்று.

# ஸபர்யாபத்ததிவாஸஞ விமர்சம்.

—:o:—

## பத்தாவது கண்டம்.

### பூஜாஸமர்ப்பணம்--தேவதோத்வாஸனம் (११२)

பூஜாஸமர்ப்பணம்: — பூஜையென்பது நிதித்தியாஸனவடிவமும் ஸவிகல்பஸமாதிவடிவமுமாமென்று முன் கண்டங்களில் பலமுறை கூறப்பட்டிருப்பதோடு, பூமிகையில் பூஜாஸங்கேதத்திலும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றது. நிதித்தியாஸன ஸவிகல்பஸமாதிகள் ஜீவப்பிரஹ்மைக்கியாநுஸந்தானவடிவமாயும், அகண்டாகாரவ்ருத்தியில் விளங்குவனவாயும் இருக்கின்றன. இவ்வகண்டாகாரவ்ருத்தியே விமர்சஸ்வரூபமாகும். இதற்குத்தான் வ்ருத்திஞானமென்று பெயர். இதைப் பரதேவதைக்கு அர்ப்பணம் செய்தல்வேண்டும். அர்ப்பணம் செய்வதெனின் லயிப்பிக்கச்செய்வதாகும். ஹ்ருதயக்கிரந்தியும், ஸர்வஸம்ஶயங்களும், ஸகலகர்மங்களும் நசித்தபின்னர், அகண்டாகாரவ்ருத்திவடிவ நிதித்தியாஸன ஸவிகல்பஸமாதிகளுக்கு யாதொரு பயனுமின்றாதலின், விமர்ஶஞாத்மக சுத்தத்திரிபுடி யொழிந்து ஞேயமாத்திரமாய்ச் சேஷிக்கும். இங்ஙனம் சேஷித்தலே பூஜாஸமர்ப்பணத்தின் தத்துவமாம்.

अज्ञानकलुषं जीवं ज्ञानाभ्यासाद्विनिर्मलम् ।
कृत्वा ज्ञानं स्वयं नश्येज्जलं कतकरेणुवत् ॥ (ஆத்மபோதம்)

"ஜலத்திலுள்ள அழுக்கைத் தேற்றாங்கொட்டை யெங்ஙனம் நீக்கித் தெளிவித்துத் தானும் அவ்வழுக்கோடு அடியில் படிந்துவிடுகின்றதோ, அங்ஙனமே, அகண்டாகார (வ்ருத்தி) ஞானமும் ஜீவபாவத்தை நிவ்ருத்திசெய்து தானும் அடங்கிவிடுகின்றது." என்னும் தாத்பர்யத்தை யுடைய மேற்படி பிரமாணம் இங்கறியத்தக்கது. அன்றியும்,

**ततः प्रोक्तनिदिध्यासनपरिपाकात् प्रोक्ताकारवृत्तेरयत्नेनाऽनुवृत्तिरूपसविकल्पसमाधिर्भवति । अत्र सविकल्पसमाधौ ध्येयध्यात्रादिभेदपरिस्फूर्तिरस्ति । एतस्यैव अभ्यासप्रकर्षेण परिपाके 'एवमहं ध्यायामी'त्यन्तः सूक्ष्माभिमानांशविगलने ध्येयशुद्धचिन्मात्रात्मकस्थितिपरिशेषो निर्विकल्पसमाधिः ।**

என்னும் த்ரிபுராரஹஸ்ய ஞானகாண்ட வியாக்கியான வசனத்தினால் நிதித்தியாஸனத்தின் முதிர்ச்சியே ஸவிகல்பஸமாதியாமென்பதும், ஸவிகல்பஸமாதியிலுள்ள சுத்தத் திரிபுடியில் ஞாதாஞானங்கள் இரண்டும் ஞேயத்தில் லயித்து ஞேயமாத்ரமாய்ச் சேஷிப்பதே நிர்விகல்பஸமாதியாமென்பதும் ஏற்படுகின்றன. இந்நிர்விகல்பஸ்திதியே பூஜாஸமர்ப்பணமாகும்.

தேவதோத்வாஸனம் :—சிவசக்திஸாமரஸ்ய அத்வைதாவஸ்தான ஸஹஜஸ்திதியில், விமர்சத்தின் அவச்யமின்மையின், விமர்சவ்ருத்தியின் லயம் ஏற்படுகின்றது. விமர்சத்தின் லயமே தேவதோத்வாஸனமாகும்; சித்சக்தியாகும் பரதேவதை விமர்சஸ்வரூபிணியல்லவா? கர்மம், பக்தி, வைராக்கியம், குருபஸதனம், லய, மந்த்ர, ஹட யோகாதிகள், வேதாந்தச்ரவணமனனநிதித்தியாஸனாதிகள் வடிவ ஸகல ஆவரணதேவதைகளும் சித்சக்தியில்

லயித்து அச்சித்சக்தியும் மஹாப்பிரகாசத்தில் ஸமரஸப்பட்டு அவாங்மனஸகோசரமாய் விளங்குகின்றது. “எல்லா ஆவரணதேவதைகளையும் பரதேவதையினிடத்தில் லயஞ்செய்து கேசரீமுத்ரையை யியற்றித் தனது ஹ்ருதயத்தில் சேர்ப்பித்தல்வேண்டும்” என்று பத்ததி கூறுகின்றது. ஹ்ருதயந்தான் பரமாத்மாபின்ன சித்சக்தி நியதமாய் விளங்குமாம் ஸ்தானம். இதற்குத் தஹராகாசமென்றும் மற்றொருபெயருண்டு. பாஹ்யத்தில் ஆவாஹநஞ் செய்யப்பட்டது ஹ்ருதயத்திலிருந்தாதலின் உத்வாஸனமும் அங்கேயே செய்தல் அத்தியாவஶ்யமாம்.

‘हृदि विसर्जयेत्’ इति स्वप्रतिष्ठिततया शिवमनुसंदध्यादित्यर्थः । हृदयं हि तस्य नियतं स्थानम् ।

‘ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।’ इति स्मृतेः । ‘हृदयं तद्विजानीयात्’ इत्यारभ्य ‘तस्याः शिखाया मध्ये परमात्मा व्यवस्थितः । स ब्रह्म, स शिवः, स हरिः, सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट्’ इत्यन्तश्रुतेश्च ॥ (सू-सं–I. 4–12)

பத்தாவது கண்டம் முற்றிற்று.

1 प्रथमबुद्धि — मनस् अग्नि तत्व
2) द्वितीयबुद्धि - मायापूर्ण - पृथ्वी
3) नागर खंड — - जल तत्व
4 चतुर्थ - इन्द्राक्षी - वायु "
5 पंचम - मुद्रा योनि - आकाश

# ஷட்பர்யாயபத்ததிவாஸனு விமர்சம்.

—:o:—

பதினோராவது கண்டம்.

சாந்திஸ்தவம்--விசேஷார்க்கிய உத்வாஸனம். (௧௧௩)

சாந்திஸ்தவம்:—சாந்தியென்பதற்கு நித்தியதிருப்தியென்பது பொருளாம். இந்நித்தியதிருப்தியானது ஸர்வகாமாப்தியால் அதாவது ஸர்வகாமனைகளையுமடைந்ததனுல் ஏற்படுவதாகும். "**सोऽश्नुते सर्वान् कामान् सह**" என்னும் பிரமாணத்தின்படி, ஆத்மஞானியொருவனுக்கே ஸர்வகாமனைகளின் அடைவு பொருந்தும்; ஆத்மஞானியொருவனே க்ருதக்ருத்தியன். ஞானிக்கு இனிச்செய்யவேண்டிய கர்மசேஷம் இல்லவேயில்லை. ஆதலின் பிரவ்ருத்திநிவ்ருத்திகளில்லை.

ஆதலின் அவன் நிஸ்தரங்க ஸமுத்திரம்போல் விளங்குவான். இங்ஙனம் விளங்கும் நிலையே சாந்தியென்பதாகும்.

இத்தகைய சாந்தநிலை ஸமஸ்தலோகங்களுக்கும் ஏற்படட்டுமென்று, ஞானி, தனக்குள்ள இயற்கைக் குணங்களான மைத்ரி, கருணை முதலியவற்றுல் பரமேஶ்வரனைப் பிரார்த்திப்பதுதான் சாந்திஸ்தவமாகும். "**लोकाः समस्ताः सुखिनो भवन्तु**" என்பது ஸ்ம்ருதிப்பிரமாணமாம்.

விசேஷார்க்கிய உத்வாஸனம்:—யதார்த்த விசேஷஞானமே விசேஷார்க்கியஸ்வரூபமென்று பாத்ராஸாதன

கண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஞானம் சுத்த மனத்தில்தான் தோன்றும். "सर्वं खल्विदं ब्रह्म" "अहं ब्रह्मास्मि" என்பன சுத்தஸத்வப்பிரதான அந்தக்கரணத்தில் தோன்றும் அகண்டாகாரவ்ருத்தியில் ஸ்புரிப்பனவாகும். இந்நிலைக்குத் துரீயமென்று பெயர். ஸவிகல்பஸமாதியும் இதுவே. இதில் தோன்றும் சுத்தத் திரிபுடியின் நிவ்ருத்தியோடு சித்தம் அத்விதீய சிவத்தில் நிலைத்துநிற்றல் நிர்விகல்பஸமாதியாம். இதுவும் இரண்டுவகைப்படும். ஒன்று அத்வைத பாவனுவடிவம், மற்ருென்று அத்வைத அவஸ்தானவடிவமாம்.

அத்வைத சிவாகாரமாயும், அந்தக்கரணத்தின் அஞ்ஞாதவ்ருத்தியோடுங்கூடினதாயுமுள்ள நிர்விகல்பஸமாதி அத்வைதபாவனுவடிவ நிர்விகல்பஸமாதியெனப்படும்.

பூஜாஸமர்ப்பண—தேவதோத்வாஸனங்களின் தத்துவம் அத்வைதபாவனுவடிவ ஸமாதியேயாகும். அத்வைத பாவனுவடிவ நிர்விகல்பஸமாதியின் அப்பியாஸம் அதிகமாவதால் சிவாகாரவ்ருத்தியும் சாந்தமாகின்றது. இங்ஙனம் சிவாகாரவ்ருத்தியும் சாந்தமாய் வ்ருத்திரஹிதமாகும் நிலைக்கு உபசாந்தநிலையென்று பெயர். இதில்தான் சாந்திஸ்தவமுள்ளது.

சிவாகாரவ்ருத்தி முற்றும் சாந்தமாகி, வ்ருத்திரஹிதமான ஸ்திதிக்கு அத்வைதாவஸ்தானவடிவ நிர்விகல்பஸமாதியென்று பெயர். இந்நிலையில் பழுக்கக்காய்ச்சிய இரும்பின் மேல் தெளித்த ஜலத்திவலை யெங்ஙனம் அவ்விரும்பிலேயே லயத்தை யடைந்துவிடுமோ, அங்ஙனமே, மஹாப்பிரகாசவடிவ சிவத்தில் விமர்ஶவடிவ சிவாகார சித்விருத்தி லயமாகின்றது. இதுதான் விசேஷார்க்கிய உத்வாஸனத்தின் தத்துவமென்று பெரியோர் கூறுவர்.

ब्रह्मैवाहं चिदेवाहमेवं वापि न चिन्त्यते ।
चिन्मात्रेणैव यस्तिष्ठेत् वैदेहीमुक्त एव सः ॥
निश्चयं च परित्यज्याहं ब्रह्मास्मीति निश्चयम् ।
आनन्दभरितः स्वान्तो वैदेहीमुक्त एव सः ॥

"பிரஹ்மமே நான்; சித்தே நான்;" என்னும் அநுஸந்தானத்தையும் விட்டு எவன் சித்தாகவே விளங்குகின்றனோ அவன் விதேஹமுக்தனேயாவன். "பிரஹ்மமே நான்" என்னும் நிச்சயத்தையும் விட்டுப் பரிபூர்ணாநந்தமாக விளங்குபவன் எவனோ அவன் விதேஹமுக்தனே.

(தேஜோபிந்து உபநிஷத்)

यया यया भवेत्पुंसां व्युत्पत्तिः प्रत्यगात्मनि ।
सा सैव प्रक्रियेह स्यात् साध्वी सा च व्यवस्थितिः ॥

(நைஷ்கர்ம்யஸித்தி)

புருஷர்களுக்குள் ஒருவனுக்கு எந்த எந்த பிரக்கிரியையால் பிரத்யகபின்னப் பிரஹ்மத்தில் அபரோக்ஷஞான முண்டாகுமோ அந்த அந்த பிரக்கிரியையே, இங்கு (அத்வைத வேதாந்த ஸித்தாந்தத்தில்) சிரேஷ்டமாம். அதுவே வியவஸ்தையுமாகும்.

கிரந்த ஸமாப்தி.

निर्विशेषे परब्रह्मण्यात्मचित्तस्थिरीकृतिः ।
उपासनमिति प्रोक्ता तद्विना को नु मुच्यते ॥

என்னும் பிரமாணத்தின்படி நிதித்யாஸன ஸவிகல்ப ஸமாதிகளின் வடிவ ஸ்ரீவித்யோபாஸ்தியின் பிரகாரம் ஒருவாறு விமர்சிக்கப்பட்டது.

பதினோராவது கண்டம் முற்றிற்று.

கிரந்தாந்த மங்களாசரணம்.

न शब्दशास्त्रव्युत्पत्तिर्न न्यायनिपुणा मतिः ।
केवलं गुरुपादाब्जस्मृतिरत्र गतिप्रदा ॥

तत्त्वंपदार्थश्रवणादिशिष्टं
ब्रह्मैकमस्मीति विचिन्त्य नित्यम् ।
ऐकात्म्यमासाद्य विनष्टबन्धा
य एव धन्याः पुरुषोत्तमास्ते ॥

आविद्यकाञ्जैवगुणांस्तथान्यान्
मायामयानैशगुणांश्च हित्वा ।
विद्यामयान्स्वीयगुणान्भजन्तः
सद्यो विमुक्ता विबुधोत्तमास्ते ॥

मत्तो नान्यत्पूर्णसमाधावविकल्पे
यज्जीवेशाद्येतदसत्यं जडदृश्यम् ।
संयक् ज्ञानी मन्यत एवं व्यवहारे
प्रारब्धार्थोऽप्यत्र न दैन्यं भजते हि ॥

ज्ञाताज्ञातान्सर्वविकारानपलाप्य
श्रुत्याचार्यप्रोक्तसरण्या भुवि विद्वान् ।
स्वास्थ्यं भेजे निर्विचिकित्सो निर्मानः
सोऽयं धन्यः सर्वशरीरिष्वखिलात्मा ॥

महावाक्यारण्यामथनजनितः स्वात्महुतभुक्
समं विद्यापत्न्या विजनतलशालामपि विशन् ।
परं जेतुं लोकं सकलकरणैरेव सहितः
समाधिं चिद्रूपे यजति खलु विद्वन्मखिवरः ॥

शान्त्या युक्तं गुरुजनभक्तं
लब्ध्वा शिष्यं निजपदसक्तम् ।
कृत्वा लोके स जयति मुख्यः
स्वात्मारामः परहितबुद्धिः ॥

(तत्त्वसारायणे उपासनाकाण्डः)

॥ इति शिवम् ॥

लं - पंचपूजा

मूलं:
ओं ऐं ह्रीं इन्द्राक्षी
वज्रहस्तायै नमः